*the* Secret

# èî£ï£òè|

## ரோன்டா பைர்ன்

நீங்கள் இன்று இருக்கும் இடத்திலிருந்து நீங்கள் கனவிலும் கண்டிராத அளவு செழிப்பான, நிறைவான, மாயாஜாலமான ஒரு வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான ஒரு வரைபடம் உங்கள் கையில் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்: அப்படிப்பட்டதொரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் ஒரு பயணத்தின் ஒவ்வோர் அடியையும் அந்த வரைபடம் விளக்குவதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்; உங்களுடைய மாபெரும் கனவு நனவாவதற்குக் குறுக்கே நிற்கும் தடைகளை எவ்வாறு தகர்த்தெறிவது, சவால்களை எவ்வாறு சமாளிப்பது, சோதனைகளை எவ்வாறு முறியடிப்பது ஆகியவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, உங்கள் பயணத்தில் நீங்கள் வெற்றி வாகை சூடத் தேவையான சக்திமிக்கத் திறமைகளையும் குணநலன்களையும் நீங்கள் ஏற்கனவே வசப்படுத்தியுள்ளீர்கள் என்பதையும் அது உங்களுக்கு எடுத்துரைக்கும்.

உங்கள் கைகளில் அப்படிப்பட்ட ஒரு வரைபடம் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இது உங்கள் வாழ்வின் வரைபடம் — மகத்துவத்திற்கான வரைபடம்.

இப்போது நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பன்னிரண்டு வெற்றிகரமான நபர்கள் இந்த வரைபடத்தைப் பின்பற்றினர். நம்புதற்கரிய தங்களுடைய கதைகளை அவர்கள் நம்முடன் பகிர்ந்து கொள்வதோடு, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மாபெரும் கனவை வாழ்வதற்குத் தேவையான அனைத்தோடும்தான் பிறந்திருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறார்கள். அப்படிச் செய்வதன் மூலம் நாம் நம்முடைய பிறவி நோக்கத்தை அடைந்து, என்றென்றும் நிலைத்திருக்கும் மகிழ்ச்சியில் திளைத்து, இந்த உலகையும் மாற்றுவோம்.

அதற்காகத்தான் நீங்கள் இவ்வுலகில் பிறந்திருக்கிறீர்கள்.




நீங்கள் இன்று இருக்கும் இடத்திலிருந்து நீங்கள் கனவிலும் கண்டிராத அளவு செழிப்பான, நிறைவான, மாயாஜாலமான ஒரு வாழ்க்கையை அடைவதற்குத் தேவையான ஒரு வரைபடம் உங்கள் கையில் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்: அப்படிப்பட்டதொரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் ஒரு பயணத்தின் ஒவ்வோர் அடியையும் அந்த வரைபடம் விளக்குவதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்; உங்களுடைய மாபெரும் கனவு நனவாவதற்குக் குறுக்கே நிற்கும் தடைகளை எவ்வாறு தகர்த்தெறிவது, சவால்களை எவ்வாறு சமாளிப்பது, சோதனைகளை எவ்வாறு முறியடிப்பது ஆகியவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, உங்கள் பயணத்தில் நீங்கள் வெற்றி வாகை சூடத் தேவையான சக்திமிக்கத் திறமைகளையும் குணநலன்களையும் நீங்கள் ஏற்கனவே வசப்படுத்தியுள்ளீர்கள் என்பதையும் அது உங்களுக்கு எடுத்துரைக்கும்.

உங்கள் கைகளில் அப்படிப்பட்ட ஒரு வரைபடம் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இது உங்கள் வாழ்வின் வரைபடம் — மகத்துவத்திற்கான வரைபடம்.

இப்போது நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பன்னிரண்டு வெற்றிகரமான நபர்கள் இந்த வரைபடத்தைப் பின்பற்றினர். நம்புதற்கரிய தங்களுடைய கதைகளை அவர்கள் நம்முடன் பகிர்ந்து கொள்வதோடு, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மாபெரும் கனவை வாழ்வதற்குத் தேவையான அனைத்தோடும்தான் பிறந்திருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறார்கள். அப்படிச் செய்வதன் மூலம் நாம் நம்முடைய பிறவி நோக்கத்தை அடைந்து, என்றென்றும்



நிலைத்திருக்கும் மகிழ்ச்சியில் திளைத்து, இந்த உலகையும் மாற்றுவோம்.
அதற்காகத்தான் நீங்கள் இவ்வுலகில் பிறந்திருக்கிறீர்கள்.

The Secret™

# கதா நாயகன்


The Secret
கதாநாயகன்
ரோன்டா பைர்ன்
MANJUL
மஞ்சுள் பப்ளிஷிங் ஹவுஸ்

*First published in India by*

**Manjul Publishing House Pvt. Ltd.**

• 2nd Floor, Usha Preet Complex,
42 Malviya Nagar, Bhopal 462 003 – India
• 7/32, Ground Floor, Ansari Road, Daryaganj, New Delhi 110 002
Email: manjul@manjulindia.com Website: www.manjulindia.com

*Distribution Centres:*
Ahmedabad, Bengaluru, Bhopal, Kolkata, Chennai,
Hyderabad, Mumbai, New Delhi, Pune

**Tamil** language translation copyright © 2015 by Manjul Publishing House Pvt.Ltd.

This edition first published in 2015

**Hero** by Rhonda Byrne

Copyright © 2013 by Making Good LLC. THE SECRET text mark and The Secret logo are registered trademarks of Creste LLC.
www.thesecret.tv

Published by arrangement with the original publisher, Atria Books, a Division of Simon & Schuster, Inc. All rights reserved.

**ISBN** 978–81–8322–473–4

Translation by PSV Kumarasamy

Artwork concept and art direction by Nic George for Marking Good LLC. Book layout and design by Gozer Media P/L (Australia), www.gozer.com.au , directed by Making Good LLC. Excerpt from ILLUSIONS: THE ADVENTURES OF RELUCTANT MESSIAH by Richard Bach, copyright © 1977 by Richard Bach and Leslie Parrish-Bach. Used by permission of Delacorte Press, an imprint of The Random House Delacorte Press, a division of The Random House LLC. All rights reserved. Excerpts from COPY THIS! by Paul Orfalea, copyright © 2005 by The Orfalea Family Foundation. Used by permission of Workman Publishing Co., Inc., New York. All rights reserved.

The information contained in this book is intended to be educational and not for diagnosis, prescription or treatment of any health disorder or as a substitutefor financial planning. This information should not replace consultation with a competent healthcare professional. The content of this book is intended to be used as an adjunct to a rational and responsible healthcare programme prescribed by a healthcare professional. The author and publisher are in no way liable for any misuse of the material. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrievel system, or transmitted, in any form, or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise) without the prior written permission of the publisher. Any person who does any unauthorized act in relation to this publication may be liable to criminal prosecution and civil claims for damages.

"இப்பூவுலகில் உங்களுடைய பிறவி நோக்கம்
முடிந்துவிட்டதா என்பதைக்
கண்டுபிடிப்பதற்கான ஒரு சோதனை இது.
நீங்கள் இன்னும் உயிரோடு இருந்தால், அது
முடிவடையவில்லை என்று அர்த்தம்."

**ரிச்சர்டு பக்**

இல்யூஷன்ஸ்

எல்லாக் கதாநாயகர்களுக்கும் சமர்ப்பணம்

# நன்றியுரை

ஒவ்வொரு புதிய திட்டமும் ஒரு பயணத்தை உள்ளடக்கியே இருக்கிறது. அப்பயணம் ஒரு யோசனை என்னும் விதையில் இருந்து முளைத்தெழுகிறது. அது இவ்வுலகில் ஒரு படைப்பாக உருவெடுக்கும்வரை அது தனக்கென்று நிர்ணயித்துக் கொண்ட ஒரு பாதையில் பயணிக்கிறது. எதிர்பாராத திருப்பங்கள், ஆச்சரியங்கள், பரவசம் மற்றும் ஆனந்தம் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கும் இப்பயணத்தின் சிலிர்ப்பை நான் வெகுவாக ரசிக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நான் பின்னால் திரும்பிப் பார்க்கும்போது, இத்திட்டம் முழுமையடைவதற்கு முக்கியப் பங்காற்றிய எண்ணற்ற அற்புதமான மனிதர்களுக்கு நான் தலைவணங்குகிறேன். **கதாநாயகன்** எனும் இந்நூலின் உருவாக்கம், துவக்கம் முதல் இறுதிவரை ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக இருந்தது. இச்சிறப்பான புத்தகம் உங்கள் கரங்களில் தவழ்வதைச் சாத்தியமாக்கிய பின்வரும் அசாதாரணமான மனிதர்களுக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்.

**கதாநாயகன்** புத்தகத்தின் பங்களிப்பாளர்கள் உலகின் பல பகுதிகளில் இருந்து வந்தனர். அவர்கள் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் பலருக்கு உத்வேகம் ஊட்டுபவர்களாக விளங்கினர். அவர்களைத் தெரிந்து கொண்டதையும், அவர்களோடு இணைந்து பணியாற்றியதையும் நான் பெருமையாகக் கருதுகிறேன்: லிஸ் முர்ரே, பீட்டர் ஃபோயோ, ஜான் பால் டிஜோரியா, அனஸ்தேசியா சோரே, மைக்கேல் ஆக்டன் ஸ்மித், பீட்டர் பர்வாஷ், மாஸ்டின் கிப், ஜி. எம். ராவ், பீட் கேரல், லைர்டு ஹாமில்டன், லேன் பீச்லீ, மற்றும் பால் ஆர்ஃபாலியா, என்னை நம்பியதற்கும், எந்தத் தயக்கமும் இன்றி உங்கள் பொன்னான நேரத்தை எனக்கு வழங்கியதற்கும், **கதாநாயகன்** ஒரு வெறும் யோசனையாக மட்டுமே இருந்தபோதிலிருந்தே அதன்மீது நம்பிக்கை வைத்ததற்கும் உங்களுக்கு நன்றி.

பங்களித்தவர்களின் அற்புதமான உதவியாளர்கள் வழங்கிய விலைமதிக்க முடியாத உதவிகளுக்கு நன்றி. பங்களிப்பாளர்களின் அறக்கட்டளைகள்

மற்றும் தொண்டு நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்களுக்கும் நன்றி. நீங்கள் **கதாநாயகன்** திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனதற்கும், நீங்கள் செய்து வரும் மாபெரும் பணிகளை இதில் எடுத்துரைக்க அனுமதி அளித்ததற்கும் நன்றி. மாய்ரா—அலெஜான்ட்ரா கார்சியா, லூகா கார்ப், புவனா சக்ரவர்த்தி, ஜெய்மி டாவெர்ன், மேகன் மெக்ராத், மற்றும் தமாரா அஸார் ஆகியோருக்குச் சிறப்பு நன்றிகள்.

இரகசியம் குழு உறுப்பினர்களான ஸ்கை பைர்ன் மற்றும் பால் ஹேரிங்டன் ஆகிய இருவரும் **கதாநாயகன்** திட்டத்தின் கட்டமைப்பை உருவாக்குவதில் என்னோடு நெருக்கமாக இணைந்து பணியாற்றினார்கள். பங்களிப்பாளர்களின் பேச்சுக்களைத் தொகுக்கும் மாபெரும் பணியை அவர்கள் எடுத்துக் கொண்டனர். அதோடு, இதன் உருவாக்கம் முழுவதிலும் படைப்பாற்றலுடன்கூடிய முன்னோக்குகளை அவர்கள் அளித்தனர். ஸ்கையின் ஆழமான புரிதலும், அவரது அபாரமான திருத்தியமைத்தலும் இல்லாமல் இருந்திருந்தால் **கதாநாயகன்** இப்போது இருக்கும் நிலையை அடைந்திருக்காது.

**கதாநாயகன்** திட்டத்தை நிர்வகித்த கிலென்டா பெல், இதன் பங்களிப்பாளர்களைக் **கதாநாயகன்** புத்தகத்திற்காகக் கொண்டு வந்ததோடு, அவர்களுடைய அறக்கட்டளைகளோடு இணைந்து பணியாற்றி அவர்களுடைய பேட்டிகளை ஏற்பாடு செய்தும் கொடுத்தார். **கதாநாயகன்** நூலுக்கு ஏற்றக் கச்சிதமான பங்களிப்பாளர்களைக் கொண்டு வருவதற்காக ஆன்ட்ரியா கெயர் அவரோடு இணைந்து பணியாற்றினார். உங்களுக்கு என் நன்றி.

ஜேன் சைல்டு இரகசியம் வெளியீடுகளுக்குப் பொறுப்பாளராக உள்ளார். உலகெங்கும் பரந்து கிடந்த வெளியீட்டுக் குழு, பட வடிவமைப்புக் குழு, இணையத்தள குழு ஆகியவற்றை **கதாநாயகன்** திட்டத்தின் ஒரு கச்சிதமான படைப்புச் சக்தியாக ஒருங்கிணைக்கும் கடினமான பணியை மேற்கொண்டதற்காகவும், ஊக்குவிப்பு மற்றும் உத்வேகம் அளித்ததற்காகவும் உங்களுக்கு நன்றி.

இரகசியம் குழுவின் கிரியேட்டிவ் இயக்குனர் நிக் ஜார்ஜ். **கதாநாயகன்** புத்தகத்திற்காக நீங்கள் வரைந்து கொடுத்த அற்புதமான ஓவியங்கள் மற்றும் கலை வேலைப்பாடுகளுக்காக உங்களுக்கு நன்றி. உங்களுடைய அற்புதமான படைப்பாற்றலுக்கு ஈடு கொடுக்க வேண்டிய அளவு என் எழுத்தை நான் உயர்த்திக் கொள்ள எனக்கு நீங்கள் உத்வேகம் அளித்தீர்கள். கோசர் மீடியாவில் உள்ள நம்முடைய வடிவமைப்புக் குழுவிலுள்ள ஷாமஸ் ஹோர் மற்றும் அன்னா பையஸுக்கு, உங்களுடைய திறமைக்காகவும் அர்ப்பணிப்பிற்காகவும் மீண்டும் நன்றி.

அட்ரியா புக்ஸ் மற்றும் சைமன் & ஷுஸ்டரில் உள்ள என் அற்புதமான பதிப்பாளர்கள் குழுவிற்கு, எனக்கும் இரகசியம் குழுவிற்கும் என் புத்தகங்களுக்கும் நீங்கள் அளித்து வரும் ஆதவிற்காக என் நன்றி. கேரலைன் ரெய்டி, ஜூடித் கர், டெனிஸ் யூலாவ், மற்றும் டார்லீன் டீலில்லோ ஆகியோருக்கு என் நன்றி. என் தொகுப்பாசிரியர் சாரா பிரான்ஹாமுக்கு அவர் அளித்த வழிகாட்டுதலுக்காக நன்றி. லிசா கீம், ஐலீன் ஆஹேர்ன், பால் ஓல்செவ்ஸ்கி, ஜிம் தீயெல், டேனியலா வெக்ஸ்லர், மற்றும் காபி எடிட்டர்கள் ஐஸோல்டு ஸாயர், கிம்பர்லி கோல்ட்ஸ்டீன் ஆகியோருக்கு என் நன்றி.

இரகசியம் குழுவினரோடு தினமும் இணைந்து வேலை செய்ய நான் ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறேன்: டொனால்டு சைக், லோரி ஷரபோவ், மார்க் ஓ கானர், ஜாஷ் கோல்டு, என் தனிப்பட்ட உதவியாளர் ஜில் நெல்சன், கோரி ஜோஹன்சிங், பீட்டர் பைர்ன், சை லி மற்றும் மார்சி கோல்ட்டன்—கிரில்லி.

கிரீன்பர்க் கிளஸ்கரில் உள்ள எங்களுடைய சட்டக் குழுவினருக்கு நன்றி: போனி எஸ்கனாஸி மற்றும் ஆரன் மோஸ். முங்கர் டோல்ஸைச் சேர்ந்த பிராட் பிரையனுக்கு என் மனமார்ந்த நன்றி. எங்களுடைய பொது மக்கள் தொடர்பு நிறுவனமான எடெல்மேனில் உள்ள லாரா ரீவுக்கும் எங்கள் குழுவிற்கும் நன்றி — நீங்கள் மிகச் சிறப்பானவர்கள்.

என் வேலையில் என்னைத் தொடர்ந்து ஊக்குவித்தும் ஆதரித்தும் வரும் என் நெருங்கிய நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அருகாமையை நான்

பெரிதும் மதிக்கிறேன். அவர்களுக்கு நன்றி. என் அருமையான பெற்றோர்கள் — நீங்கள் அதிஅற்புதமானவர்கள்.

பௌதீக உலகில் நான் அறிந்துள்ளவற்றுக்கு அப்பாலுள்ளவற்றைக் குறித்துக் கேள்வி கேட்க எனக்குக் கற்றுக் கொடுத்த என் மகள் ஹேலிக்கும் அவளுடைய அற்புதப் படைப்பான சவானா பைர்ன்—குரோனினுக்கும் என் நன்றி. எனக்கு அன்பும் ஆதரவும் காட்டி வரும் கெவின் மெக்கெமி, அழகான ஓகு டென், பால் குரோனின் ஆகியோருக்கும், எனக்கு தொடர்ந்து ஆன்மீக வழிகாட்டியாக இருந்து வரும் ஏஞ்சல் மார்ட்டின் வெலாயோஸுக்கும் என் நன்றிகள்.

கடைசியாக, **கதாநாயகன்** நூலுக்கான ஒரு முன்னோக்கு ஒரு நாள் மாலையில் திடீரென்று எனக்குத் தோன்றியது. இப்படிப்பட்ட ஒரு சிறப்பான பணித்திட்டத்தை மேற்கொள்ள என்னை ஊக்குவித்ததற்கும், இப்புவியில் இதைப் படைக்க நான் மேற்கொண்ட பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் என்னை வழிநடத்தியதற்கும் பிரபஞ்சத்திற்கும் பிரபஞ்ச மனத்திற்கும் நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன்.

## உள்ளடக்கம்


முன்னுரை

### பகுதி ஒன்று: கனவு

சாகசத்திற்கான அழைப்பு

சாகசத்திற்கான அழைப்பை நிராகரித்தல்

உங்கள் கனவை அடையாளம் காணுதல்

உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லுதல்

### பகுதி இரண்டு: கதாநாயகன்

நம்பிக்கை

முன்னோக்கு

கதாநாயகனின் மனம்

கதாநாயகனின் இதயம்

கதாநாயகனின் வழி

அர்ப்பணிப்பு

### பகுதி மூன்று: தேடல்

புதிர்ப்பாதை

அவநம்பிக்கையாளர்களும் ஆதரவாளர்களும்

சோதனைகளும் அற்புதங்களும் அடங்கிய பயணப் பாதை

உச்சகட்டச் சோதனை

## பகுதி நான்கு: வெற்றி

வெகுமதி

வாழத் தகுதியான ஒரு வாழ்க்கை

உங்களுக்குள் இருக்கும் கதாநாயகன்

கதாநாயகனில் இடம்பெற்றுள்ளவர்கள்

கதாநாயகனுக்குப் பங்களித்தவர்கள் எழுதிய நூல்கள்



# முன்னுரை

இப்புத்தகம் ஒரு கதையைப் பற்றியது. இக்கதை என் வாழ்க்கையை மாற்றியது. வரலாறு நெடுகிலும் இது எண்ணற்றோருடைய வாழ்க்கையை மாற்றியுள்ளது. இக்கதை காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இக்கதை உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கலாச்சாரத்திலும் இடம்பெற்றுள்ளது என்றாலும் அதன் சாராம்சம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருந்து வந்துள்ளது. இப்பூவலகில் துணிச்சலாக ஒரு பயணத்தை மேற்கொள்ளும் ஒரு கதாநாயகனைப் பற்றியதுதான் இக்கதை.

இதன் பின்புலமாகத் தெரியும் இப்பூவலகு மிகவும் அழகான ஒன்று. அது மாபெரும் ஆழ்கடல்கள், மலைகள், காடுகள், மனத்தைக் கொள்ளை கொள்ளும் கடற்கரைகள், பரந்து விரிந்த சமவெளிகள், அதிஅற்புதமான விலங்குகள் மற்றும் இதரப் படைப்புகளால் நிரம்பி வழிகிறது. அதோடு, இயற்கை எழில் கொஞ்சும் இந்த உலகை வசிப்பிடமாகக் கொண்டிருக்கும் மனிதகுலத்தின் ஆனந்த அனுபவங்களையும் அது கொண்டுள்ளது. ஆனால் அது, கதையின் நாயகன் கண்டுபிடிப்பதுபோல, பல சவால்களையும் உள்ளடக்கி உள்ளது. குழந்தைப்பருவத்தில் இருந்து வாலிபப் பருவம், நடுவயதுப் பருவம், இறுதியில் முதுமைப் பருவம் என்று, வளர்ச்சியில் வலியும் அடங்கியுள்ளது. உடல்ரீதியான சிரமங்கள், ஏழ்மை, துயரம், தவிர்க்க முடியாத இறப்பு ஆகிய அனுபவங்களும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கின்றன.

இன்பமும் துன்பமும் இப்பூவலகில் இணைந்து கிடப்பதற்குக் காரணம், இந்த அழகான உலகம் ஓர் இருண்மை உலகமாக — எதிரெதிரான துருவங்களை உள்ளடக்கிய ஒன்றாக இருப்பதுதான். இங்கு எல்லாவற்றிற்கும் ஒரு நேரெதிர்ப் பக்கம் இருக்கிறது. வெளிச்சம் இருக்கிறது, இருளும் இருக்கிறது, அண்மை மற்றும் சேய்மை, மேல் மற்றும் கீழ், இடது மற்றும் வலது, சூடு மற்றும் குளிர்ச்சி. இவை வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அனுபவிக்கப்படுகின்றன.

நண்பர்களும் இருக்கிறார்கள், பகைவர்களும் இருக்கிறார்கள், காதலில் விழுகிறோம், பின்னர் அது கசக்கிறது, பாதுகாப்பு இருக்கிறது, நிச்சயமின்மையும் இருக்கிறது, செல்வச் செழிப்பும் இருக்கிறது, கொடிய வறுமையும் இருக்கிறது, மகிழ்ச்சியும் இருக்கிறது, துயரமும் இருக்கிறது, ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் நேர்மறையும் இருக்கிறது, எதிர்மறையும் இருக்கிறது. இப்பூவலகில் எல்லாவற்றிற்கும் ஓர் எதிர்ப் பக்கம் இருக்கிறது.

மாபெரும் அன்பு, மாபெரும் மகிழ்ச்சி, மாபெரும் சவால்கள் மற்றும் மாபெரும் துயரங்கள் என்று எல்லாவற்றிற்கும் சமமான வாய்ப்புகள் உள்ள இந்த இடத்திற்கு வர நீங்கள்தான் விரும்பினீர்கள். இந்தப் பேரழகான, அதே சமயம் பெரும் சவால்கள் நிறைந்த இந்த இடத்திற்கு வந்து இந்தச் சாகச அனுபவங்களைப் பெற நீங்கள்தான் தீர்மானித்தீர்கள். உங்களினுள் உறைந்து கிடக்கும் கதாநாயகனைக் கண்டுபிடிக்க முயல்வதைத் தடுத்து நிறுத்தும் அளவுக்குச் சிரமமான எதுவும் கிடையாது என்று நீங்கள்தான் உறுதியாக இருந்தீர்கள். கதாநாயகனின் சாகசப் பயணத்தை மேற்கொள்ள நீங்கள்தான் ஆசைப்பட்டீர்கள் — ஏனெனில் நீங்கள்தான் இக்கதையின் நாயகன்.

கதாநாயனின் பயணத்தை மேற்கொள்ளத் தேவையான சாதனங்களோடுதான் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுடைய ஒவ்வொரு கனவையும் நிறைவேற்றத் தேவையான, நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவாலையும் சமாளிக்க, ஒவ்வொரு சோதனையையும் கடந்து செல்ல, மற்றும் ஒவ்வொரு தடையையும் தகர்த்தெறியத் தேவையான சக்திமிக்கத் திறமைகளோடுதான் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். ஆனால் எல்லைகளோடு உள்ள இந்தப் பௌதீக உலகில் நீங்கள் பிறந்திருப்பதால், உங்கள் மனமும் உங்கள் அக உணர்வும் எல்லைகளை உணர்கின்றன. அதாவது, நீங்கள் உங்களுடைய உண்மையான இயல்பை நினைவு வைத்திருக்க மாட்டீர்கள், உங்களுள் உறைந்திருக்கும் சக்திமிக்கத் திறமைகளை நீங்கள் நினைவு வைத்திருக்க மாட்டீர்கள். இதை நீங்களாகவே கண்டுபிடித்தாக வேண்டும்.

கதாநாயகனின் பயணத்தை முழுமையாக மேற்கொள்ளும்போதுதான், உங்களுக்குள் உறைந்திருக்கும் உச்சகட்ட மனித ஆற்றலை நீங்கள்

வெளிப்படுத்தும்போதுதான், நீங்கள் ஒரு கதாநாயகனாக உருவெடுக்கிறீர்கள். உங்களுடைய சொந்தக் கதாநாயகனின் பயணத்தை மேற்கொள்ளத் துவங்கியிருக்கும் உங்களுக்கு உதவி செய்யும் விதத்தில், உங்கள் இதயத்தை ஒரு புதிய பிறவி நோக்கம் ஆக்கிரமித்துக் கொள்ளும். உங்களுடைய பயணத்திற்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் உங்கள் பயணப் பாதையில் கண்டுபிடித்துக் கொள்வீர்கள்.

நீங்கள் சந்திக்க இருக்கும் நபர்கள் ஏற்கனவே தங்களுடைய கதாநாயகனின் பயணத்தை மேற்கொண்டுவிட்டவர்கள். உலகின் பல பகுதிகளில் இருந்து வந்திருக்கும் அவர்கள் எல்லோரும், நீங்கள் உங்களுடைய சொந்தக் கதாநாயகனின் பயணத்தைத் துவக்க உங்களுக்கு உதவுவதற்காகத் தங்களுடைய கதைகளையும் அனுபவங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## லிஸ் முர்ரே — அமெரிக்காவில் இருந்து



லிஸ் முர்ரே போதைப் பொருட்களுக்கு அடிமையான ஒரு பெற்றோருக்குப் பிறந்து, நியூயார்க் நகரில் வறுமையில் வளர்ந்தவர். லிஸ் பருவ வயதில் இருந்தபோது அவருடைய தாயார் இறந்து போனார். அவருடைய தந்தையும் அவரை விட்டுவிட்டுப் போனபோது, அவர் நடுத்தெருவிற்கு வந்தார். அப்போது அவர் பள்ளிப் படிப்பை முடித்திருக்கவில்லை. அவர் மாடிப்படிகளுக்கு அடியில் இருந்த இடத்தில் படுத்துறங்கினார். உயிர் பிழைத்திருப்பதற்காகக் கடைகளில் உணவுப் பொருட்களைத் திருடினார். ஆனால் அச்சமயத்தில்தான் அவருள் ஒரு மாபெரும் கனவு துளிர்விட்டது. ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதுதான் அக்கனவு. நான்கு வருடங்களில் அவருடைய கனவு நனவாகியது. தன் கதையை

மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டதன் மூலம், மிகச் சிறப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் ஒரு புத்தகத்தின் ஆசிரியராகவும், உலகெங்கிலும் உள்ள மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்கும் ஓர் ஊக்குவிப்புப் பேச்சாளராகவும் அவர் ஆகியுள்ளார்.

## ஜி. எம். ராவ் — இந்தியாவில் இருந்து



ஜி. எம். ராவ் இந்தியாவில் மின்சக்தியோ அல்லது தொலைபேசியோ இல்லாத ஒரு கிராமத்தில் பிறந்தவர். அக்கிராம மக்கள் தங்கள் பொருட்களைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டும். இடைநிலைப் பள்ளித் தேர்வில் முதல் முயற்சியில் தேர்ச்சி அடைந்திராதபோதும், என்றேனும் ஒருநாள் ஒரு நல்ல வீட்டையும் ஒரு நல்ல தொழிலையும் சொந்தமாக்கிக் கொள்ள ராவ் கனவு கண்டார். அதிர்ஷ்டவசமாக, தன் வாழ்வில் குறுக்கிட்டச் சந்தர்ப்பங்கள் குறித்து அவர் திறந்த மனத்துடன் இருந்தார். முதலில் ஒரு சணல் ஆலையைத் துவக்கிய ராவ், மெதுவாகத் தன் தொழில்களை விரிவுபடுத்தினார். இன்று அவருடைய வர்த்தக சாம்ராஜ்யமானது, மின் நிலையங்கள், விமான நிலையங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளை உருவாக்குதல், மற்றும் பெருநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## லைர்டு ஹாமில்டன் — அமெரிக்காவில் இருந்து



லைர்டு ஹாமில்டன் ஹவாய் மாநிலத்தில் கடும் குடும்ப உறவுப் பிரச்சனைகளில் சிக்கியிருந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். தான் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் பாரபட்சமாக நடத்தப்பட்டதாகவும் உணர்ந்த அவர், வெகு விரைவாக வளர வேண்டிய தேவை தனக்கு இருந்ததைப் புரிந்து கொண்டார். அதனால் தன்னை நிரூபித்துக் கொள்ள ஓர் அலைச்சறுக்கு வீரராக உருவாக அவர் விரும்பினார். வேறு எந்த அலைச்சறுக்கு வீரரும் மேற்கொண்டிருக்காத சாதனைகளைச் செய்யவும் அவர் கனவு கண்டார். அவருடைய அதீத சாகச விளையாட்டுக் காரணமாக அவருக்குப் பல காயங்கள் ஏற்பட்டன, எண்ணற்ற எலும்புகள் முறிந்தன, அவர் பல முறை கடலில் தொலைந்தும் போயிருக்கிறார். ஆனாலும் அவர் தன் கனவை நனவாக்கிக் கொண்டார். மனிதனால் எது சாத்தியம் என்ற வரையறைகளைக் கடந்து சென்றுள்ள அவர், உலகிலேயே மிகச் சிறந்த அலைச் சுறுக்கு வீரர்களில் ஒருவராக உருவெடுத்தார்.

## அனஸ்தேசியா சோரே – ருமேனியாவில் இருந்து



பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, அனஸ்தேசியா சோரேயும் அவருடைய குடும்பத்தாரும் ஒரு மேலான வாழ்க்கையைத் தேடி, கம்யூனிச ருமேனியாவில் இருந்து தப்பித்து வெளியேறினர். அவர் அமெரிக்காவிலுள்ள

லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வந்து இறங்கியபோது அவரிடம் சல்லிக்காசுகூடக் கிடையாது, அவருக்கு ஆங்கிலமும் பேசத் தெரியாது. அவர் ஓர் ஒப்பனை நிலையத்தில் தினமும் பதினான்கு மணிநேரம் வேலை செய்தார். தான் செய்து கொண்டிருந்ததை மாற்றாதவரை எதுவுமே மாறாது என்பதை உணர்ந்து கொண்ட அனஸ்தேசியா, மிகப் பிரபலமான பெவர்லி ஹில்ஸ் பகுதியில் தன் சொந்த வியாபாரத்தைத் துவக்க முடிவு செய்தார். புருவங்களைச் சீராக்குவதில் தனக்கென ஒரு தனிப் பாணியை வளர்த்துக் கொண்ட அவர், தன் தொழிலில் உடனடியாக வெற்றி பெற்றார். புருவங்களைச் சீராக்கும் கலையை, படிப்படியாக, ஒரு சர்வதேச வியாபார சாம்ராஜ்யமாக அவர் மாற்றினார்.

## பால் ஆர்ஃபாலியா — அமெரிக்காவில் இருந்து



பால் ஆர்ஃபாலியா தன் பள்ளிப் பருவம் முழுவதும் டிக்ஸ்லெக்சியா என்றழைக்கப்படும் சொற்களைப் புரிந்து கொள்வதில் குறைபாடு, ஏடிஎச்டி என்றழைக்கப்படும் ஒருமித்தக் கவனம் செலுத்துவதில் குறைபாடு ஆகிய குறைபாடுகளால் அவதிப்பட்டார். அவரால் படிக்க முடியவில்லை என்றாலும்கூட, ஐபிஎம் நிறுவனத்தைவிடப் பெரிய நிறுவனம் ஒன்றைத் தான் உருவாக்க வேண்டும் என்று அவர் கனவு கண்டார். படிப்புத் தொடர்பான தன்னுடைய குறைபாட்டை ஈடுகட்டுவதற்கு, தன் சுற்றுப்புறங்களைக் கூர்ந்து கவனிக்கும் திறமையை அவர் தன்னுள் வளர்த்துக் கொண்டார். ஒரு நாள் அவர் ஒரு வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, அவருடைய அத்திறமை அவருக்குக் கை கொடுத்தது. மலிவான விலையில் நகல் எடுப்பதற்கும் அச்சாக்கம் செய்வதற்கும் ஓர் அபரிமிதமான தேவை இருந்ததை அவர்

கண்டுகொண்டார். அச்சிறிய யோசனையில் இருந்துதான் கிங்கோஸ் நிறுவனம் பிறந்தது. அது இறுதியில் பல கோடி பெறுமானமுள்ள ஒரு நிறுவனமாக வளர்ந்தது.

## பீட்டர் பர்வாஷ் – கனடாவில் இருந்து



பீட்டர் பர்வாஷ் ஓர் இளம் பணிச் சறுக்கு ஹாக்கி விளையாட்டு வீரராக இருந்தபோது, ஓர் ஆட்டத்தின்போது இன்னொரு வீரருடன் மோதிக் கீழே விழுந்துவிட்டதில் அவருடைய காலிலிருந்து இடுப்புவரையிலான பகுதி உணர்விழந்து போனது. அவர் அப்படி அந்தப் பனித் தரையில் விழுந்து கிடந்தபோது, அதிலிருந்து மீண்டெழுந்து தன்னால் மீண்டும் நடக்க முடிந்தால், ஹாக்கி விளையாடுவதையே தான் நிறுத்திவிடப் போவதாக அவர் சபதம் செய்தார். ஒரு மணிநேரம் கழித்து அவரால் எழுந்து நிற்க முடிந்தபோது, தான் சபதம் செய்திருந்தபடி, ஹாக்கி விளையாட்டை மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, முழுநேர டென்னிஸ் ஆட்டக்காரராக ஆக அவர் முயன்றார். ஒரு தலைசிறந்த டென்னிஸ் வீரராக அவரால் உருவாக முடியவில்லை என்றாலும், டென்னிஸ் விளையாட்டு உலகிலேயே பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு பயிற்சியாளராக அவர் உருவானார். அதோடு, உலகிலேயே மிகப் பெரிய டென்னிஸ் விளையாட்டு நிர்வாக நிறுவனம் ஒன்றையும் அவர் உருவாக்கினார்.

## மாஸ்டின் கிப் – அமெரிக்காவில் இருந்து



அவர் அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சலீஸ் நகரின் இசைத் துறையில் ஓர் இளநிலை நிர்வாகியாக இருந்தபோது, உலகமே தன் காலடியில் இருந்ததாக அவர் உணர்ந்தார். ஆனால் குடிப் பழக்கமும் போதை மருந்துப் பழக்கமும் மிதமிஞ்சிப் போனபோது, அவருக்கு வாழ்க்கையில் ஒரு பேரிடி விழுந்தது. அவர் வேலையில் இருந்து தூக்கியெறியப்பட்டார். அவருடைய சொத்துக்கள் அனைத்தும் அவரிடமிருந்து ஓடிப் போனபோது, அவருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. மார்ட்டின் ஒரு புதிய அவதாரம் எடுக்கும் முயற்சியில் இறங்கினார். இப்போது அவர் ஒரு பிரபலமான வலைப்பூ எழுத்தாளராக உள்ளார். அவருடைய வலைப்பூத் தளமான 'த டெய்லி லவ்'வும் அவருடைய டுவிட்டர் தளமும் மிக வேகமாக வளர்ந்து பிரம்மாண்டமானவையாக ஆகியுள்ளன.

## பீட் கேரல் — அமெரிக்காவில் இருந்து



பீட் கேரலுக்கு வாழ்க்கையில் ஒரே ஒரு கனவுதான் இருந்தது. தொழில்முறையான ஒரு விளையாட்டு வீரராக ஆவதுதான் அது. ஆனால் தேசியக் கால்பந்துக் குழுவில் சேர்வதற்குத் தேவையான புள்ளிகளை அவர் எடுக்கத் தவறியதால் அக்கனவு சுக்குநூறாகியது. தான் முற்றிலும் யோசித்திருக்காத வழியில் தன் கனவு நனவாவதற்கான சாத்தியம் இருந்தது என்பதை அவர் உணரும்வரை, தான் இனி என்ன செய்யப்

போகிறோம் என்பதறியாது அவர் குழம்பித் தவித்தார். அவர் ஒரு கால்பந்து விளையாட்டுப் பயிற்சியாளராக ஆனார். அவருடைய தொழில்முறைப் பயிற்சி வாழ்க்கையானது ஏற்ற இறக்கங்களால் சூழப்பட்டிருந்தபோதிலும், அமெரிக்கா அதுவரை கண்டிராத உத்வேகமூட்டும் ஒரு பயிற்சியாளராக அவர் உருவெடுத்தார். சமீபத்தில் அவர் சியாட்டில் சீஹாக் அணியின் அந்த ஆண்டிற்கான தேசியக் கால்பந்துப் பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித் — இங்கிலாந்தில் இருந்து



கல்லூரிப் படிப்பை முடித்தப் பிறகு, மைக்கேல் ஆக்டன் ஸ்மித் வேலையில்லாமல் தவித்தார். அதனால் ஒரு வியாபாரத்தைத் துவக்க அவர் முடிவு செய்தார். ஆனால் அவருக்குக் கடன் கொடுத்து உதவ வங்கிகள் மறுத்தன. எனவே அவர் தன் தாயாரிடமிருந்து ஆயிரம் பவுண்டுகளைக் கடன் வாங்கினார். அவருடைய பல முயற்சிகள் தோல்வியடைந்த பிறகு, அவர் கிட்டத்தட்டத் திவாலாகும் நிலைக்கு வந்துவிட்டிருந்தார். ஆனால் தன்னுடைய சமீபத்திய யோசனை மிகச் சிறப்பான ஒன்று என்பதில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய நிறுவனமான மோஷி மான்ஸ்டர்ஸ் இங்கிலாந்தையே கலக்கியது. சிறுவர்களின் பொழுதுபோக்கில் சர்வதேச அளவில் பிரம்மாண்டமான ஒன்றாக அது உருவெடுத்தது.

## லேன் பீச்லீ — ஆஸ்திரேலியாவில் இருந்து



லேன் பீச்லீக்கு ஏழு வயதாக இருந்தபோது அவருடைய தாயார் அகால மரணமடைந்தார். சிறிது காலத்திற்குள்ளாகவே, தான் குழந்தையாக இருந்தபோது தன் தாயாரால் தான் தத்து எடுக்கப்பட்டவள் என்பதை அவர் அறிந்தார். தான் நிராதரவாகக் கைவிடப்பட்டிருந்தோம் என்ற உணர்வில் இருந்து விடுபடுவதற்காக, உலகிற்குத் தன்னை நிரூபித்துக் கொள்வது என்று அவர் முடிவு செய்தார். உலகச் சாதனை புரியும் ஓர் அலைச்சறுக்கு விராங்கனையாக ஆவதன் மூலம் அதைச் சாதிக்க அவர் கனவு கண்டார். லேன் பீச்லீ தன் கனவை நனவாக்கினார். அவர் ஒரே ஒரு முறை உலகச் சாம்பியனாக ஆகவில்லை. மாறாக, ஏழு முறை உலகச் சாம்பியனாக ஆனார். உலகிலேயே மிகச் சிறந்த அலைச்சறுக்கு வீராங்கனையாகவும் அவர் உருவெடுத்தார்.

## ஜான் பால் டிஜோரியா – அமெரிக்காவில் இருந்து



ஜான் பால் டிஜோரியாவின் நோய்வாய்ப்பட்டத் தாயாரால் வேலை செய்து கொண்டே தன் குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள முடியாமல் போனதால், ஜான் பால் டிஜோரியாவும் அவருடைய சகோதரரும்,

தற்காலிகமாகத் தத்தெடுத்துக் கொள்ளும் குடும்பங்களுடன் நான்கரை வருடங்களைக் கழித்தனர். அவர்கள் இருவரும் அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்சலீஸ் நகரின் கிழக்குப் பகுதியில் இருந்த குற்றவாளிக் கும்பல்களோடு சேர்ந்து கொண்டனர். அவருடைய உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஒருவர், ஜான் பால் தன் வாழ்க்கையில் ஒருபோதும் உருப்படப் போவதில்லை என்று அவரிடம் குறிப்பிட்டார். ஜான் பால் தன் இருபதுகளில் இருந்தபோது, அவரும் அவருடைய கைக்குழந்தையும் குடியிருக்க ஒரு வீடு இல்லாததால் ஒரு காரில் வசித்து வந்தனர். வாழ்க்கையை ஓட்டுவதற்காக அவர் காலி பாட்டில்களைச் சேகரித்து, அதன் மூலம் சிறிது பணம் சம்பாதித்தார். அவருடைய ஆசிரியரின் கணிப்பு உண்மையாகிவிடுவதுபோலத்தான் நிலைமை இருந்தது. ஆனால் ஜான் பால் தன் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அடுத்தடுத்து மூன்று வேலைகளில் இருந்து அவர் தூக்கியெறியப்பட்டப் பிறகு, பால் மிட்செலுடன் சேர்ந்து வெறும் 700 டாலர்கள் மூலதனத்துடன் தலைமுடி விற்பனைப் பொருட்கள் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தை அவர் துவக்கினார். இன்று அவர்களுடைய நிறுவனமான ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ், வருடத்திற்கு 1 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான வருவாயை ஈட்டி வருகிறது.

## பீட்டர் ஃபோயோ — அமெரிக்காவில் இருந்து



பீட்டர் ஃபோயோ, அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்த பெற்றோருக்கு மகனாகப் பிறந்தவர். அவருடைய பெற்றோர்கள் கடினமான உழைப்பாளிகள். அவர் குழந்தையாக இருந்தபோது, அலைபேசிகள், சூரிய ஒளியில் செயல்படும் நகரங்கள் போன்ற தொழில்நுட்ப வருங்காலம் குறித்தக் கனவுகளைக்

கண்டு வந்தார். கொஞ்சம் வளர்ந்தவுடன் மிகவும் வெற்றிகரமான மாபெரும் வியாபாரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். லத்தீன் அமெரிக்காவிலேயே மிகப் பெரிய நிர்வாகியாகத் தான் இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். அப்போது யாரைக் கேட்டிருந்தாலும் அது ஒரு பைத்தியக்காரத்தனமான கனவு என்றே கூறியிருந்திருப்பார்கள். ஆனால் பீட்டர் ஃபோயோ தன் முப்பத்து மூன்றாவது வயதில் நெக்ஸ்டெல் கம்யூனிகேஷன்ஸ் மெக்சிகோ என்ற நிறுவனத்தின் தலைவராக ஆனபோது அவருடைய கனவு நனவாகி இருந்தது.

நான் ஆஸ்திரேயாவில் உள்ள ஓர் எளிமையான குடும்பத்தில் பிறந்தவள். துவக்கக் காலங்களில் என்னிடம் மாபெரும் லட்சியங்கள் எதுவும் இருக்கவில்லை. ஏனெனில் என்னால் பெருங்கனவுகள் எதையும் சாதிக்க முடியாது என்று நான் எண்ணியிருந்தேன். 2004ல் நான் ஒரு இரகசியத்தைக் கண்டுபிடித்தபோது, என் வாழ்க்கை என்றென்றைக்குமாக மாறியது. ஒரு மாபெரும் கனவு என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. நான் கண்டுபிடித்த இரகசியத்தை உலகத்தோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அக்கனவு. 2006ல் **இரகசியம்** திரைப்படமும் புத்தகமும் வெளியாயின. அவை இவ்வுலகைக் கொள்ளை கொண்டு, கோடிக்கணக்கானவர்களைச் சென்றடைந்தன.

நான் முன்பு இருந்ததுபோல, நீங்களும் பெரிய கனவுகள் எதுவும் சாத்தியப்படாது என்று நினைத்திருந்ததால், பெரிய கனவுகளைக் காணாமல் இருந்திருந்தால், நீங்கள் இப்போது அடியெடுத்து வைக்க இருக்கும் பயணத்தில், உங்கள் கனவுகள் நனவாவதற்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் கண்டுபிடிப்பீர்கள் — அக்கனவுகள் எவ்வளவு நம்ப முடியாதவையாக இருந்தாலும்கூட.

இது உங்கள் கதை. இது உங்கள் நோக்கம். அதற்காகத்தான் நீங்கள் இப்பூவுலகில் பிறந்திருக்கிறீர்கள். ஒரு கதாநாயகனின் பயணத்தை மேற்கொள்வதற்காகவும் உங்களினுள் உறைந்திருக்கும் கதாநாயகனை வெளிப்படுத்திக் கொள்வதற்காகவும்தான் நீங்கள் இங்கு இருக்கிறீர்கள்.

விலைமதிப்பிட முடியாத ஞானத்தை நீங்கள் இப்போது பெற இருக்கிறீர்கள். உங்களுடைய சக்திமிக்கத் திறமைகளும் அதோடு சேர்ந்து கொள்ளும்போது, உங்கள் கனவு நனவாகும். எப்பாடு பட்டாவது கண்டுபிடித்தாக வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் தேடிக் கொண்டிருக்கும் உண்மையான, நிரந்தரமான மகிழ்ச்சியை உங்களால் கண்டுபிடிக்க முடியும். உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் எங்கு இருந்தாலும் சரி, உங்கள் வயது என்னவாக இருந்தாலும் சரி, உங்கள் கனவுகளைப் பின்தொடர ஒருபோதும் காலதாமதம் ஆகிவிடவில்லை.

## பகுதி ஒன்று

# கனவு




THE CALL

# சாகசத்திற்கான அழைப்பு

## எல்லாச் சூழ்நிலைகளும் எதிராக இருந்தாலும்

யாரும் ஒரு கச்சிதமான வாழ்க்கையோடு பிறப்பதில்லை. அப்படி இருந்திருந்தால், உங்களுக்கு வாழ்க்கையில் எந்த உத்வேகமும் இருக்காது, எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தூண்டுதல் இருக்காது. உங்களுக்குக் கனவுகளே இருக்காது. நீங்கள் எப்படிப்பட்டச் சூழ்நிலையில் பிறந்திருந்தாலும் சரி, உங்களுக்கு வாய்த்த அல்லது வாய்க்காமல் போன கல்வி மற்றும் குடும்பச் சூழல் எதுவாக இருந்தாலும் சரி, உங்களுடைய கனவை நனவாக்கத்தான் நீங்கள் இப்புவிக்கு வந்துள்ளீர்கள். இப்போது நீங்கள் எப்படிப்பட்டச் சூழலில் இருந்தாலும் சரி, உங்கள் கனவை நனவாக்குவதற்குத் தேவையான அனைத்தும் உங்களிடம் உள்ளன.

**அனஸ்தேசியா சோரே**
**நிறுவனர், அனஸ்தேசியா பெவர்லி ஹில்ஸ்**



நான் எதுவுமே இல்லாமல்தான் துவக்கினேன். உண்மையிலேயே கையில் சுத்தமாக எதுவுமே இல்லாமல்தான் துவங்கினேன். எங்களிடம் அப்போது பணம் ஏதும் இருக்கவில்லை. எனக்கு உள்ளூர் மொழியும்

அப்போது தெரியாது. ஒரு மேற்கத்திய நாடு எவ்வாறு இயங்கும் என்பது எனக்குத் துளிக்கூடத் தெரிந்திருக்கவில்லை. அங்குள்ள பொருளாதார அமைப்புக் குறித்தோ அல்லது அம்மக்களின் மனப்போக்குக் குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது. ஒரு காசோலையை எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுகூட எனக்குத் தெரியாது. ஏனெனில் எங்களுடைய நாடான ருமேனியாவில் எங்களிடம் காசோலைகள் இருக்கவில்லை. உண்மையில் நான் அரிச்சுவடியில் இருந்துதான் துவங்கினேன்.

**பால் ஆர்.ஃபாலியா**
**நிறுவனர், கிங்கோஸ்**



இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெறாத குழந்தைகள் மிகக் குறைவாகவே இருப்பார்கள். நான் அவர்களில் ஒருவன். என்னால் அரிச்சுவடியையே படிக்க முடியவில்லை. நான் எப்பொழுதும் பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டேன். என்னை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நான் எனக்குத் தோன்றியதையெல்லாம் செய்தேன்.

கடைசியில், எனக்குப் பதினாறு வயதாக இருந்தபோது பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட்டேன்.

நம்முடைய வாழ்க்கைச் சூழல்கள் எவ்வளவுக்கு எவ்வளவு சிரமமாக இருக்கின்றனவோ, எவ்வளவு தடைக்கற்கள் நம்முடைய வழியில் தூக்கி எறியப்பட்டுள்ளனவோ, அந்த அளவுக்கு அச்சூழல்கள் நம்முடைய கனவுகளை நோக்கி நம்மை உந்தித் தள்ளும் கிரியா ஊக்கிகளாகச் செயல்படும்.

**பீட்டர் ஃபோயோ**

**தலைவர், நெக்ஸ்டெல் கம்யூனிகேஷன்ஸ் மெக்சிகோ**



என் பெற்றோர்கள் அமெரிக்காவில் குடியேறியவர்கள். எதுவுமே இல்லாமல்தான் நாங்கள் எங்கள் வாழ்க்கையைத் துவக்கினோம். என் காற்சட்டை என் கரண்டைக் காலுக்கு மேலே இருந்தது இப்போதுகூட எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என் தந்தை தன் சொந்த நாட்டில் இருந்தபோது ஒரு ஜெனரலாக இருந்தார். ஆனால் நாங்கள் அமெரிக்காவிற்கு வந்து சேர்ந்தபோது, தரையைப் பெருக்கி அள்ளும் வேலைதான் அவருக்குக் கிடைத்தது.

**லைர்டு ஹாமில்டன்**
**அலைச்சறுக்கு வீரர்**



இனரீதியாகப் பதற்றம் நிலவிய ஒரு சூழலில்தான் நான் வளர்ந்தேன். நான் பிறந்த சூழலை வைத்து மக்கள் என்னை வெறுத்தனர்.

"வெற்றிக்குத் தேவையான சாதகமற்ற அனைத்து விஷயங்களும் என்னிடம் இருந்தன."

**லேரி எலிஸன்**
ஆரக்கிள் நிறுவனத்தின் இணை நிறுவனர்

**ஜான் பால் டிஜோரியா**
**இணை நிறுவனர், ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ்**



என் மனைவி என்னைவிட்டுப் பிரிந்து சென்றபோது எனக்கு 23 வயது என் மகனுக்கு இரண்டரை வயது. மூன்று மாதமாக வாடகை கொடுக்காததால், நாங்கள் குடியிருந்த வீட்டிலிருந்து நாங்கள் தூக்கியெறியப்பட்டோம். அதனால் நானும் என் கைக்குழந்தையும் என் காரில் படுத்துத் தூங்கினோம். பழைய பாட்டில்களைச் சேகரித்து அவற்றை விற்று நாங்கள் வாழ்க்கையை ஓட்டினோம்.

அவர் இளைஞனாக இருந்தபோது இருந்த சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், மாபெரும் வெற்றி பெற்றுள்ள ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ் நிறுவனத்தை அவர்தான் உருவாக்கினார் என்பது நம்ப முடியாத ஒன்றாக இருக்கிறது. அவர் வாழ்க்கையைத் துவக்கிய சூழலோடு அவர் இன்று இருக்கும் நிலையை ஒப்பிடவே முடியாது. இப்போது உங்களுக்குள் எந்த அம்சங்கள் இருக்கின்றனவோ, அவற்றைப் பயன்படுத்தியே அவர் அதைச் சாதித்தார்.

**ஜி. எம். ராவ்**

**இயந்திரவியல் பொறியாளர் நிறுவனர் – ஜிஎம்ஆர் குழுமம்**



நான் எதுவுமே இல்லாமல்தான் வாழ்க்கையைத் துவக்கினேன். எங்களுடைய கிராமம் மிகச் சிறியது. அதன் மொத்த மக்கட்தொகையே 5,000 பேர்தான். அங்கு மின்சக்தியோ அல்லது தொலைபேசியோ அப்போது கிடையாது. எங்களிடம் குளிர்ந்த தண்ணீர் ஒரே ஒரு பாட்டில்தான் இருக்கும். அதை நாங்கள் எல்லோரும் பகிர்ந்து கொள்வோம். ஒவ்வொரு மாதமும் பாலும் சீனியும் வாங்க நாங்கள் வரிசையில் நிற்போம்.

நீங்கள் இந்தியாவில் பிறந்திருந்தாலும் சரி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், அல்லது சிங்கப்பூரில் பிறந்திருந்தாலும் சரி, உங்களுடைய துவக்ககாலப் பின்னணி, நீங்கள் எந்த மாதிரியான வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்கள் என்பதை நிர்ணயிக்கப் போவதில்லை. உங்கள் கனவுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து வலிமையும் அனைத்துப் பண்புநலன்களும் உங்களிடம் உள்ளன. உலகமே உங்களுக்கு எதிராகச் சதி செய்வதாகத் தோன்றினாலும், நீங்கள் எதை வேண்டுமானாலும் அடையவும், நீங்கள் யாராக உருவாக வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அந்த நபராக ஆகவும் தேவையான அனைத்தும் உங்களினுள் இருக்கின்றன.

**பீட் கேரல்**

## தேசியக் கால்பந்துப் பயிற்சியாளர், சியாட்டில் சீஹாக் அணி



கல்லூரியில் கால்பந்து விளையாடி முடித்ததும், நான் முதலில் தேசியக் கால்பந்து குழுவைச் சார்ந்த ஏதாவது ஓர் அணியில் சேர்ந்து விளையாட முயற்சித்தேன். பின்னர் உலகக் கால்பந்தாட்டக் குழுவைச் சேர்ந்த அணியில் சேர முயன்றேன். விளையாட்டில் பங்கு கொள்வதற்குக் கடைசி முறையாக எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டபோது, எனக்கு உண்மையிலேயே பேரதிர்ச்சி ஏற்பட்டது. நான் எப்போதும் கால்பந்தாட்டம் தவிர வேறு எதிலுமே நாட்டம் கொள்ளாமல் இருந்ததால், நான் திக்குச் திசை அறியாமல் தவித்தேன். அடுத்து என்ன செய்வது என்ற கேள்வியைத் திடீரென்று நான் எதிர்கொண்டாக வேண்டியிருந்தது.

பனித்தரையில் விளையாடும் ஹாக்கியில் உயிருக்கே உலை வைத்திருக்கக்கூடிய ஒரு விபத்திற்குப் பிறகு, பீட்டர் பர்வாஷ், டென்னிஸ் விளையாடுவதற்காகப் பல நாடுகளுக்குச் சென்றார். அப்போது அவர் பிரபல டென்னிஸ் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் இடம்பெற்றிருக்கவோ அல்லது பந்தய விளையாட்டுகளில் வென்றிருக்கவோ இல்லை. தன் கையில் காசு இல்லாததால், பழைய ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டு அவர் காலம்

தள்ளினார். டென்னிஸ் உலகில் ஏழு வருடங்கள் இருந்த பிறகு, அவர் அதிலிருந்து ஓய்வு பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு எள்ளளவுகூட இல்லாத ஒரு சூழ்நிலைக்குள் அவர் மீண்டும் தள்ளப்பட்டார்.

## பீட்டர் பர்வாஷ்
## டென்னிஸ் பயிற்றுவிப்பாளர், நிறுவனர் – பீட்டர் பர்வாஷ் இன்டர்நேஷனல்



நாங்கள் டென்னிஸ் நிர்வாக நிறுவனம் ஒன்றைத் தோற்றுவிக்க முடிவு செய்தபோது, அக்களத்தில் ஏற்கனவே பதினாறு டென்னிஸ் நிர்வாக நிறுவனங்கள் இருந்தன. அவற்றோடு ஒப்பிடுகையில், பணம், நிதிப் பின்புலம், அத்துறையில் ஏற்கனவே சம்பாதித்து வைத்திருந்த நம்பகத்தன்மை ஆகியவை என்னிடம்தான் மிகக் குறைவாக இருந்தன. எங்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து கொள்ள நாற்காலிகள்கூட இல்லாததால், முதல் ஓரிரு வருடங்களுக்கு நாங்கள் தரையில் அமர்ந்து கொண்டுதான் சந்திப்புக்கூட்டங்களை நடத்தினோம்.

உங்கள் கனவுகள் நனவாகுமா ஆகாதா என்பதை உங்களுக்கு வெளியே உள்ள சூழ்நிலைகள் தீர்மானிப்பது இல்லை. உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதோ, நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்பதோ, உங்களுக்கு யாரைத் தெரிந்திருக்கிறது என்பதோ, உங்களுக்கு எத்தனை வருடங்கள் அனுபவம் இருக்கிறது என்பதோ ஒரு பொருட்டு அல்ல. உங்களினுள் உறைந்திருக்கும் திறமையைக் கண்டுபிடிப்பதும், வெளி உலகில் நீங்கள் சந்திக்கும் அத்தனை இடர்பாடுகளையும் களைந்தெறியும் விதத்தில் அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்வதும் இங்கு முக்கியம் வெற்றி பெற்ற மனிதர்கள் ஒவ்வொருவரும் இதைத்தான் செய்தார்கள். உங்களாலும் அதைச் செய்ய முடியும்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்
## நிறுவனர் — மைன்ட் கேன்டி



டாம் என்ற நண்பர் ஒருவர் எனக்கு உண்டு அவரை நான் பல்கலைக்கழகத்தில் வைத்துச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு தொழிலைத் துவக்க முடிவு செய்தோம். எங்களிடம் கையில் பணம் எதுவும் இருக்கவில்லை. மாறாக, கல்லூரிப் படிப்பிற்காக வாங்கிய கடன்தான் இருந்தது. ஒரு புதிய மருந்தைத் தங்கள் உடல்களில் சோதிக்க முன்வருபவர்களுக்குப் பணம் கொடுக்கப்படும் என்ற விளம்பரத்தைப் பார்த்துவிட்டு,

அதற்கு எங்களை உட்படுத்திக் கொண்டுதான் நாங்கள் எங்கள் தொழிலுக்குத் தேவையான பணத்தைத் தயார்படுத்தினோம். அதற்காக எங்கள் இருவருக்கும் தலா 400 பவுண்டுகள் பணம் கிடைத்தது. இதைக் கேள்விப்பட்ட என் தாயார் நொந்து போனார். ஆனால் என் தாயார் எனக்கு ஆதரவாக இருந்ததற்கு அது ஒரு முக்கியமான காரணம் என்று நான் நினைக்கிறேன். அவர் எனக்கு 1,000 பவுண்டுகள் பணம் கொடுத்தார். டாமின் பெற்றோர் தங்கள் வீட்டில் பழைய சாமான்கள் போட்டு வைத்திருந்த அறையை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள எங்களை அனுமதித்தனர்.

பத்து வருடங்களுக்கு முன்பு நான் தொலைக்காட்சித் துறையில் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்தேன். ஆனால் திடீரென்று அடுக்கடுக்காகப் பல பேரிடிகள் என் வாழ்வில் வந்திறங்கின. ஒருசில மாதங்களுக்கு உள்ளாக என் வாழ்க்கை என் கண் முன்னாலேயே நொறுங்கிச் சரிந்தது. எனக்குக் கடுமையான மனக்கசப்பு ஏற்பட்டது. ஆனால் அக்கணத்தில்தான் என்னுடைய முதல் திரைப்படம் மற்றும் புத்தகத்திற்கு வழிவகுத்த ரகசியத்தை நான் கண்டுகொண்டேன். உங்களுடைய மொத்த வாழ்க்கையும் எரிந்து தரைமட்டமானாலும்கூட, அச்சாம்பலில் இருந்து ஒரு புத்தம்புதிய வாழ்க்கை முளைத்தெழும்.

**மாஸ்டின் கிப்**

**ஊக்குவிப்பு நூலாசிரியர் நிறுவனர் — த டெய்லி லவ்**



நான் முதன்முதலாக ஹாலிவுட்டிற்கு வந்தபோது, ஓர் இசை மேலாளராக ஆக வேண்டும் என்றுதான் விரும்பினேன். அது சரிப்பட்டு வரவில்லை — வந்தோரையெல்லாம் இரு கரம் கூப்பி வரவேற்கும் ஒன்றல்ல ஹாலிவுட் நான் மதுவிற்கும் போதைக்கும் அடிமையானேன். அதற்கு மேலும் கீழே போக முடியாத அதளபாதாளத்தை நான் தொட்டேன். என் முதலீட்டாளர்கள் பின்வாங்கினர், என் தொழிற்கூட்டாளியும் நானும் பிரிந்தோம், என் அறைத் தோழன் நான் அங்கிருந்து மூன்று நாட்களுக்குள் கிளம்ப வேண்டும் என்று கெடு விதித்தான், என் கால் மூட்டில் வாதம் ஏற்பட்டது, என் தோழியும் நானும் பிரிய நேர்ந்தது. இவை அனைத்தும் ஒரு வாரகால இடைவெளிக்குள் நடைபெற்றன. கிட்டத்தட்ட ஒரே வாரத்தில் என் வாழ்க்கை முற்றிலுமாகத் தலைகுப்புறக் கவிழ்ந்தது. அது வலி மிகுந்த ஒரு நீண்ட பயணத்தைத் துவக்கியது. அதற்காக நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன். ஆனால் அதற்காக மீண்டும் ஒரு முறை அப்பயணத்தை அனுபவிக்க நான் துணிய மாட்டேன். அப்போது நான் பயங்கரமான ஒரு

சூறாவளியில் மாட்டிக் கொண்டுவிட்டதாகத்தான் கருதினேன். பிறகு என் மனத்தில் ஒரு மின்னல் வெட்டியது: ஒருவேளை அது ஒரு தெய்வீகச் சூறாவளியாக இருந்தால்?

**லிஸ் முர்ரே**

**ஹார்வர்டு பட்டதாரி, நூலாசிரியர் மற்றும் பேச்சாளர்**



என் வாழ்வில் எல்லாம் இருந்தது. திடீரென்று என் வாழ்வில் இருந்தவை அனைத்தும் மறைந்துவிட்டன. என் தாயார் காலமானார், என் தந்தை என்னை விட்டுவிட்டுப் போய்விட்டார், நான் என் மாமாவின் இருப்பிடத்தில் அடைக்கலம் புகுந்தேன் — என் வாழ்வில் தோன்றிய மிகப் பெரிய தேவதை அவர்தான் — அவரும் திடீரென இறந்துவிட்டார். நான் ஆதரவின்றி நடுத்தெருவில் நின்றேன். முன்பு என்னிடம் இருந்தது எதுவுமே அப்போது என்னிடம் இருக்கவில்லை. வாழ்க்கை இந்த அளவுக்கு மோசமாக மாறும் என்றால், அது சிறப்பாக மாறுவதற்கும் சாத்தியம் இருக்கத்தானே செய்யும் என்று நான் எண்ணியது எனக்கு

நினைவிருக்கிறது. ஏனெனில், சொடுக்குப் போடும் நேரத்தில் மாறிவிடக்கூடிய ஒன்றுதான் வாழ்க்கை

லிஸ்ஸுக்கு இருந்ததைப்போல, வாழ்க்கைச் சூழல்கள் கடுமையானவையாக உருவெடுக்கலாம். ஆனால் அதே சூழல்கள்தான் அவரை நியூயார்க் நகர வீதிகளில் இருந்து விடுவித்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு சென்ற ஒரு தீவிரமான ஆழ்விருப்பத்தை அவருக்குள் விதைத்தது. ஏதேனும் ஒன்றைச் செய்ய வேண்டும் அல்லது யாராவது ஒருவராக ஆக வேண்டும் என்ற கொழுந்துவிட்டு எரியும் ஆசை உங்களுக்குள் கிளர்ந்தெழும்புவதை நீங்கள் கண்டால், மிகக் கடினமான சூழ்நிலைகளையும் தடைகளையும் கடந்து வரத் தேவையான ஒரு மாபெரும் சக்தியை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்று பொருள். உங்கள் கனவுகளை நனவாக்குவதன் மூலம் நீங்கள் உங்களுக்குள் இருக்கும் மகத்துவத்தைக் கண்டுபிடிப்பீர்கள். செல்வச் செழிப்பான ஒரு குடும்பத்தில் பிறப்பதற்குப் பெயர் மகத்துவம் அல்ல. உங்கள் கனவுகளைப் பின்தொடர்ந்து செல்வதும் உங்களுக்குள் உறைந்திருக்கும் கதாநாயகனைக் கண்டுணர்வதும்தான் மகத்துவம்.

## உங்களுடைய பிறவி நோக்கம்

இப்பூவுலகில் இதுவரை பிறந்துள்ளவர்கள் அனைவரும், இனி பிறக்க இருப்பவர்களும், ஏதாவது ஒரு தனித்துவத்துடனோ அல்லது ஒரு சிறப்பான திறமையுடனோதான் இவ்வுலகிற்கு வருகின்றனர். அந்தத் தனித்துவம்தான் உங்களுடைய பிறவி நோக்கம். இது இல்லாமல் எந்த மனிதரும் பிறப்பதில்லை என்றாலும், அதைக் கண்டுபிடிக்காமலேயே அல்லது அதை வாழாமலேயே வாழ்ந்து முடிப்பவர்கள் பலருண்டு.

உங்களுடைய பிறவி நோக்கம் உங்களை உலுக்கும் அளவுக்கு வாழ்க்கையில் வேறு எதுவும் உங்களை உலுக்காது. அதை நீங்கள் மேற்கொள்ளும்போது, அதை நோக்கி நீங்கள் கவர்ந்திழுக்கப்படுவீர்கள், அது குறித்துத் தணியாத வேட்கை கொண்டிருப்பீர்கள், அது உங்களை

ஆனந்தத்தில் குளிப்பாட்டும், அது உங்கள் இதயத்தைத் திக்கமுக்காடச் செய்யும்.

ஒரு வியாபாரத்தில், ஒரு விளையாட்டில், ஒரு வேலையில் அல்லது உங்களுடைய தொழில் வாழ்க்கையில், நீங்கள் மிகப் பெரிதாக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தணியாத தாகத்தை அது உங்களுக்குள் கொழுந்துவிட்டு எரியச் செய்யும். அது உங்களுடைய பொழுதுபோக்குகளில் ஒன்றாகக்கூட இருக்கலாம். உண்மையில் உங்களுடைய பொழுதுபோக்கு உங்கள் பிறவி நோக்கிற்கான ஒரு துப்பாகக்கூட இருக்கலாம். ஏனெனில், அது குறித்து நீங்கள் பெரும் விருப்பம் கொண்டிருப்பீர்கள், அதைப் பின்தொடர நீங்கள் கணிசமான நேரத்தை ஒதுக்கியிருப்பீர்கள்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



நான் சிறுவனாக இருந்த சமயத்திலிருந்தே நான் எப்போதும் நேசித்து வந்தது விளையாட்டுக்களைத்தான். எனக்கு விளையாட மிகவும் பிடிக்கும். அது மனிதர்களுடைய பிரிக்க முடியாத ஓர் அம்சம் என்று நான் நினைக்கிறேன். அதனால் ஒரு விளையாட்டு நிறுவனத்தை நடத்த வேண்டும் என்பதும், விளையாட்டுக்களை வடிவமைப்பதும் மக்களை மகிழ்விப்பதும்தான் என்னுடைய மாபெரும் கனவாக இருந்து வந்துள்ளது.

## பீட் கேரல்



நான் என்னுடைய பதிமூன்றாவது வயதிலிருந்தே பயிற்சி முகாம்கள் போன்றவற்றில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றி வந்திருந்தபோதிலும், வருங்காலத்தில் நான் செய்யவிருந்த ஒன்றோடு அதை நான் ஒருபோதும் தொடர்புபடுத்திப் பார்த்தது இல்லை. நான் சிறிது காலத்திற்குப் பிறகு மீண்டும் படிப்பதற்காகப் பசிபிக் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது, அங்கு ஒரு கால்பந்துப் பயிற்றுவிப்பாளராக ஆனேன். அப்போதுதான் நான் நின்று நிதானமாக, "என்னுடைய விளையாடும் ஆசைக்கு மிக நெருக்கமான ஒன்றாக ஏதேனும் இருக்க முடியும் என்றால் அது இதுவாகத்தான் இருக்க வேண்டும்," என்று நினைத்தேன். அப்போதுதான் நான் தொழில்முறைப் பயிற்றுவிப்பாளர் என்பதை நோக்கி முதல் அடியை எடுத்து வைத்தேன்.

உங்களுக்கு அது ஒருபோதும் நிகழவே போவதில்லை என்று முடிவு கட்டிவிட்டு, அதைப் பற்றி நீங்கள் வெறும் பகற்கனவு மட்டுமே கண்டு கொண்டு இருக்கும் ஒன்றுகூட உங்களுடைய பிறவி நோக்காக இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஒன்றை உங்களுடைய வாழ்க்கையாக ஆக்கிக்

கொள்வது குறித்தச் சிந்தனையே உங்களுக்கு மகிழ்ச்சியையும் பரிபூரணத் திருப்தியையும் அளிக்கும். அக்கனவு எவ்வளவுதான் சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், அதை நிறைவேற்றத்தான் நீங்கள் இங்கு அவதரி0த்திருக்கிறீர்கள்.

## லிஸ் முர்ரே



நான் பசிக் கொடுமையால் பிஸ்கட்டுகளைத் திருடியிருக்கிறேன். நியூயார்க் நகரின் இருண்ட தாழ்வாரங்களில் தனியாகப் படுத்து தூங்கியிருக்கிறேன். அப்போது ஒரு புத்தகப் பையைத் தலைக்கு அடியில் வைத்துக் கொள்வேன். அப்புத்தகப் பையில்தான் என் ஆஸ்தி மொத்தமுமே இருந்தது — என் நாட்குறிப்புகள், என் ஆடைகள், என் அம்மாவின் புகைப்படம். இவற்றை நான் எங்கு சென்றாலும் எடுத்துச் செல்வேன். அப்படி அப்புத்தகப் பையின்மீது நான் தலை வைத்துத் தூங்கும்போது, ஒரு மேலான வாழ்க்கையைக் குறித்துக் கனவு காண்பேன். என் ஒருத்தியின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக மட்டுமல்லாமல், எண்ணற்றப் பிறருடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவும் இந்த

அனுபவம் விரைவாக நிறைவடைந்துவிடும் என்ற ஆழமான உணர்வு என்னில் பொங்கி வழியும்.

உங்களால் அதை நினைவுபடுத்த முடியலாம் அல்லது முடியாமல் போகலாம். ஆனால் உங்கள் வாழ்க்கையில் உங்கள் பிறவி நோக்கிற்கான அறைகூவல் ஏற்கனவே பலமுறை விடப்பட்டிருக்கிறது. வளர்ந்த பிறகு நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள் என்பதற்கான அறைகூவலை நீங்கள் குழந்தையாக இருந்தபோதே கேட்டிருக்கலாம். ஆனால் இந்தச் சமுதாயமோ அல்லது நல்ல நோக்கம் கொண்ட பெற்றோரோ அல்லது ஆசிரியர்களோ, நம்மால் என்ன செய்ய முடியும் அல்லது யாராக ஆக முடியும் என்பது குறித்து நமக்கு எல்லைகள் உண்டு என்று நம்மை நம்ப வைத்து, நாம் நம்முடைய கனவுகளுக்கு முழுக்குப் போடுமாறு செய்துவிடுகின்றனர்.

**பீட்டர் ஃபோயோ**



நான் சிறுவனாக இருந்த சமயத்திலிருந்தே பெரிய கனவுகளைக் கொண்டிருந்தேன். கம்பியில்லாத் தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்படாத காலத்திலேயே, நம் கையில் அப்படிப்பட்டத் தொலைபேசியை வைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்திருக்கிறேன். பெட்ரோல் நிலையத்தில் காசு கொடுத்துப் பெட்ரோலை நிரப்பிக் கொள்வதற்குப் பதிலாக ஓர் அட்டையைக்

கொடுத்துவிட்டு அதைச் செய்தால் எப்படி இருக்கும்? சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் ஆற்றலைக் கொண்டு நகரங்களை இயக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அப்படிப்பட்ட மாபெரும் நிறுவனம் ஒன்றைத் துவக்குவது குறித்தும், ஏராளமாகப் பணம் சம்பாதிப்பது குறித்தும், லத்தீன் அமெரிக்காவிலேயே மிகச் சிறந்த ஒரு நிர்வாகியாக ஆவது குறித்தும் ஒரு முன்னோக்கு என்னிடம் இருந்தது.

உங்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளின் ஊடாக, நீங்கள் படிக்கும், பார்க்கும் அல்லது கேட்கும் ஏதோ ஒன்றின் மூலமாக உங்கள் பிறவி நோக்கம் உங்களுக்குப் புலப்படலாம். திடீரென்று மிகப் பிரகாசமான ஒரு மின்னல் உங்களைத் தாக்கியதுபோல நீங்கள் உணரக்கூடும். அப்போது சர்வசாதாரணமாக இருந்த ஓர் அற்பக் கணம், உங்கள் வாழ்க்கையின் போக்கை நிர்ணயிக்கும் ஒன்றாக மாறும்

## ஜி. எம். ராவ்



இப்பூமியில் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்க்கைக் குறிக்கோள் உள்ளது என்றும், அதை நிறைவேற்றுவது குறித்து நாம் அயராது பாடுபட வேண்டும்

என்றும் என் பள்ளிக் கணித ஆசிரியர் கூறினார். ஏனெனில் அதுதான் உண்மையான சாதனையாக இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். என் பிறவி நோக்கைக் கண்டுபிடித்து, எப்பாடு பட்டாவது அதைச் சாதிக்க வேண்டும் என்ற ஒரு தீவிர வேட்கையை அது என்னில் தோற்றுவித்தது.

**லைர்டு ஹாமில்டன்**



நான் சிறுவனாக இருந்தபோதே என் அப்பா என் அம்மாவை விட்டுவிட்டுப் போய்விட்டார். அதனால் நான் அப்போதிலிருந்தே வளர்ந்த மனிதனாக நடந்து கொள்ள வேண்டியிருந்தது. நான் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க அது என்னை உந்தித் தள்ளியது.

வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு சவாலான சூழ்நிலை, தன் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற கொழுந்துவிட்டு எரியும் ஆசையை லைர்டு ஹாமில்டனிடம் தோற்றுவித்தது. அவருக்குத் தன் பிறவி நோக்கம் வெளிப்பட்டது, அதைச் செயல்படுத்த அவர் முயன்றார். உலகமே வியக்கும் மிகச் சிறந்த அலைச்சறுக்கு வீரராக உருவானதன் மூலமாக அவர் தன்

கனவை நனவாக்கிக் கொண்டதோடு, அதன் மூலம் உலகெங்கும் லட்சக்கணக்கானோரை ஊக்குவிக்கவும் செய்தார்.

லேன் பீச்லீக்கும் தன் பிறவி நோக்கம் அவர் ஒரு சிறுமியாக இருந்தபோது ஒரு சவாலான சூழ்நிலையிலேயே வெளிப்பட்டது. அவருக்கு ஏழு வயதாக இருந்தபோது அவருடைய தாயார் திடீரென்று இறந்து போனார்.அவருடைய மறைவுக்குப் பின்னர், தான் தன் தாயாரால் தத்து எடுக்கப்பட்டவர் என்பது லேன் பீச்லீக்குத் தெரிய வந்தது. அவருடைய உண்மையான அன்னை அவரைப் பெற்றெடுத்தபோது அவருக்கு வயது பதினேழுதான். பாலியல் பலாத்காரத்தின் விளைவாக அவர் லேன் பீச்லீயைக் கருத்தரித்து இருந்தார்.

திடீரென்று லேன் பீச்லீயின் வாழ்வைக் காரிருள் கவ்விக் கொண்டது. ஆனால் தன் வளர்ப்புத் தாயாரைத் திடீரென்று இழந்த அந்தத் துயரச் சம்பவம்தான், ஆஸ்திரேலியாவில் பிறந்த அவரை, உலகிலேயே மிகச் சிறந்த அலைச்சறுக்கு வீராங்கனையாக உருவெடுக்க உந்தித் தள்ளியது.

**லேன் பீச்லீ**
**அலைச்சறுக்குப் போட்டியில் ஏழு முறை உலகச் சாம்பியன் பட்டத்தை வென்றவர்**



நேர்மையாகக் கூற வேண்டும் என்றால், நான் தத்தெடுக்கப்பட்டவள் என்ற உண்மையை நான் தெரிந்து

கொண்டதுதான் நான் ஓர் உலகச் சாம்பியனாக ஆக என்னை உந்தித் தள்ளியது. நான் அலைச்சறுக்கு விளையாட்டைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு, ஏதாவது ஒரு விளையாட்டில் உலகச் சாம்பியனாக ஆக வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். உலகிலேயே சிறந்தவளாக ஆக வேண்டும் என்ற எண்ணம் என்னை ஆட்டிப் படைத்தது. உலகிற்கு நான் யார் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற வெறி என்னிடம் குடி கொண்டிருந்தது.

**பால் ஆர்.ஃபாலியா**



என் வாழ்க்கையில் நான் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எனக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. எனக்கென்று சொந்தமாக ஒரு வியாபாரம் இருக்க வேண்டும். அது எந்த வியாபாரமாக இருந்தாலும் பரவாயில்லை. நான் ஐபிஎம் கட்டடத்தைப் பார்த்துவிட்டு, "நான் இதைவிடப் பெரிய வியாபாரத்தை உருவாக்க விரும்புகிறேன்," என்று நினைத்துக் கொள்வேன்.

சொற்களைப் புரிந்து கொள்வதிலும் ஒருமித்த கவனம் செலுத்துவதிலும் தனக்கு இருந்த குறைபாட்டால் அவதிப்பட்டப் பால் ஆர்ஃபாலியா, எழுதவும் படிக்கவும் மிகவும் சிரமப்பட்டார். ஆனால் அவர் இன்றிருக்கும் நிலையைப் பாருங்கள். ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்தக் கிங்கோஸ் நிறுவனத்தை அவர் தோற்றுவித்தார். அதன் மதிப்புப் பல கோடி டாலர்கள். இருண்மை இயல்பு கொண்ட இவ்வுலகில், அனுகூலமற்ற ஒவ்வொரு சூழலுக்குள்ளும் அதற்கு நேரதிரான அனுகூலமான சூழல் ஒன்று ஒளிந்திருக்கிறது. பால் ஆர்ஃபாலியா தன் அனுகூலமற்ற சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

கம்யூனிச ருமேனியாவில் இருந்து தப்பித்து வெளியேற வேண்டும் என்று அனஸ்தேசியா சோரே கனவு கண்டார். அவர் தன் மகளுடன் அங்கிருந்து வெளியேறுவதற்காக மூன்று வருடங்கள் திட்டமிட்டார். அந்நாட்டிலிருந்து தப்பித்து வெளியேற அவர் போட்டிருந்த திட்டத்தில் பெரும் ஆபத்துக்கள் இருந்தன. அவர் ஒரு வழியாக அமெரிக்காவிற்கு வந்திறங்கியபோது, அவர் இன்னொரு பெரிய தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. அவர் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் தினமும் பதினான்கு மணிநேரம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. அவர் வித்தியாசமாக எதையாவது செய்யாவிட்டால், அவர் வாழ்நாள் இவ்வாறே கழிந்துவிடும்.

## அனஸ்தேசியா சோரே



நான் எதையாவது செய்ய விரும்பினேன். நான் உண்மையில் யார் என்று கண்டுபிடிக்கவும், என் மதிப்பு

என்னவென்று தெரிந்து கொள்ளவும், என்னை நிரூபித்துக் கொள்ளவும் நான் விரும்பினேன். நான் பயப்படவே இல்லை என்று கூற மாட்டேன். ஏனெனில் அப்போது உண்மையிலேயே எனக்கு மிகவும் பயமாகத்தான் இருந்தது. ஆனால், இந்த நாட்டிற்கு வந்ததே இதற்காகத்தானே என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். "இது வாய்ப்புகளின் பூமி. இதை நான் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும். இல்லையெனில் இங்கு வந்ததற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும். ருமேனியாவில் இருந்ததைவிட மோசமான ஒரு வாழ்க்கை வாழ்வதற்காகவா நான் இங்கு வந்தேன்? கிடையவே கிடையாது."

அவர் ருமேனியாவில் மிகவும் கடினமான ஒரு சூழலில் வளர்ந்திருந்ததால், அது அவருடைய குணநலனுக்கு வலு சேர்த்தது. தன்னுடைய சொந்தத் தொழிலைத் துவக்க வேண்டும் என்ற தன் கனவை அடைவதற்கும், தன் வழியில் எதிர்ப்பட்டத் தடைகளைக் கடந்து முன்னேறுவதற்கும் தேவையான மன உறுதியை அது அவருக்கு அளித்தது. அமெரிக்காவில் 1,000 கிளைகளும், உலகில் உள்ள பல நாடுகளில் 600 கிளைகளும் உள்ள ஒரு மாபெரும் நிறுவனமாக அவருடைய வியாபாரம் வளர்ந்தது.

எவருடைய வாழ்க்கையிலும் சந்தர்ப்பங்கள் 100 சதவீதம் எதிர்மறையாக இருப்பதில்லை. ஒவ்வோர் எதிர்மறைச் சூழலுக்குள்ளும் ஒரு நேர்மறைச் சூழல் ஒளிந்துள்ளதால், வெளிப் பார்வைக்கு மோசமானதாகத் தோன்றும் எல்லாச் சூழல்களிலும் நல்ல அம்சங்கள் கண்டிப்பாக ஒளிந்திருக்கும். வாழ்க்கை என்பது உங்களுக்கு நிகழும் எதிர்மறைச் சூழல்களால் நிறைந்தது அல்ல,

அந்தச் சூழல்களில் ஒளிந்திருக்கும் அற்புதமான வாய்ப்புகளை நீங்கள் எப்படிப் பயன்படுத்தப் போகிறீர்கள் என்பதைப் பற்றியதுதான்.

உங்கள் கனவை நிறைவேற்ற பலப்பல வழிகள் இருக்கும்போதுதான் உங்கள் பிறவி நோக்கம் உங்களுக்கு வெளிப்படும். உங்கள் கனவை நிறைவேற்ற ஏதாவது ஒரு சிறிய வழி பிறக்காதவரை உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு கனவு வருவதற்குச் சாத்தியமே இல்லை. மகத்தான வாழ்க்கை ஒன்றிற்கான ஓர் அழைப்புதான் உங்கள் கனவு; உங்களுக்குள் ஒளிந்திருக்கும் கதாநாயகனைக் கண்டுபிடிக்க உங்களுக்கு விடப்படும் அழைப்புதான் அது.

## மாஸ்டின் கிப்



இயற்கை எழில் கொஞ்சும் ஓர் அற்புதமான இடத்தில்தான் நான் வளர்ந்து வந்தேன். என் பெற்றோர் அற்புதமானவர்கள். உலகின் வலிகள் என்னை எட்டாதவாறு அவர்கள் என்னைப் பாதுகாத்து வந்தனர். நான் வெளி உலகிற்குள் நுழைந்து, பிறரிடம் உள்ள வலிகளைப் பார்த்தபோது, அது குறித்து என்னால் ஏதாவது செய்ய முடியும் என்பதை நான் உணர்ந்தேன். அதைத் தவிர வேறு எதையும் என்னால் செய்ய முடியாது என்பது எனக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. அதனால் எண்ணற்ற மக்களைச் சென்றடையும் விதத்தில் பாப்

இசைக் கலாச்சாரத்தையும் ஊக்குவிப்பையும் ஒன்றாகக் கலந்து கொடுக்க வேண்டும் என்பது என் கனவாக ஆகியது.

உங்களுடைய பிறவி நோக்கம் என்ன என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னரும், உங்களுக்குப் பயமாக இருந்த காரணத்தாலோ அல்லது உங்களால் அதைச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லாத காரணத்தாலோ நீங்கள் அதற்குச் செவி சாய்க்க மறுத்தால், எனக்கு நிகழ்ந்ததுபோல நீங்கள் அதை நோக்கி வலுக்கட்டாயமாகத் தள்ளப்படுவீர்கள்.

நான் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றி வந்தபோது, ஒரு நாள் எனக்கென்று சொந்தமாக தொலைக்காட்சித் தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் துவக்க வேண்டும் என்று நான் கனவு கண்டேன். என் வேலையில் எனக்கு நல்ல வருமானம் வந்து கொண்டிருந்ததால் அதைப் பணயம் வைத்து நான் ஒருபோதும் என் கனவைப் பின்தொடர முயற்சித்திருக்க மாட்டேன். நான் என் சொந்தத் தொழிலைத் துவக்க வேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்ட பிறகும், என் வேலை எனும் பாதுகாப்பை என்னால் உதறித் தள்ள முடியாததால், நான் அதைச் சிக்கென்று பிடித்துக் கொண்டேன்.

பின் நான் வேலையில் இருந்து தூக்கியெறியப்பட்டேன். நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். சாப்பாட்டிற்கு என்ன செய்வது? என் மகள்களின் படிப்பிற்கு என்ன செய்வது? விட்டிற்கு வாங்கிய கடனை எவ்வாறு அடைப்பது?

வேறொரு தொலைக்காட்சி நிறுவனத்தில் வேலை தேடிக் கொள்வது என் முன் இருந்த வழிகளில் ஒன்று. நான் ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலைக்குத் திரும்பிச் செல்ல நான் விரும்பவில்லை. இப்போது என்னிடம் இழப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் உணர்ந்தேன். என் வீட்டில் இருந்த ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டு, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்தப் பல திட்டங்களில் நான் மூழ்கினேன். நான் ஒரு

நிகழ்ச்சியைத் தயாரித்து அதை நடுக்கத்துடன் ஒரு தொலைக்காட்சி நிறுவன நிர்வாகிகள் முன் சமர்ப்பித்தேன். அந்த இடத்திலேயே அதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அது ஒளிபரப்பானதும் உடனடியாக மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றது. அது ஒரு நீண்ட தொலைக்காட்சித் தொடராக உருவானது.

வேலையில் இருந்து வெளியேற்றப்பட்டதன் மூலமாக, என் கனவு நனவாவதற்கும் என் பிறவி நோக்கம் நிறைவேறுவதற்கும் வழி பிறந்தது. என்னை வேலையில் இருந்து வெளியேற்றிய நிறுவனத்திற்கு நான் இன்றுவரை நன்றிக்கடன் பட்டுள்ளேன். அது நடைபெறாமல் இருந்திருந்தால், நான் துணிச்சலாக என் கனவைப் பின்தொடர்ந்து செல்ல முயன்றிருக்க மாட்டேன், என் வாழ்க்கையிலேயே மிகவும் திருப்திகரமான, பரவசமான ஒரு பயணத்திற்குத் துணிந்திருக்க மாட்டேன்.


REFUSAL OF THE CALL

# சாகசத்திற்கான அழைப்பை நிராகரித்தல்

## லைர்டு ஹாமில்டன்



> நீங்கள் உங்கள் கனவைப் பின்தொடராமல் இருக்க முடிவு செய்வது ஆபத்தானது. அது ஒரு திருப்தியில்லாத வாழ்க்கைக்குத்தான் வழிவகுக்கும். சாதனைகளற்ற ஒரு வாழ்க்கைக்குத்தான் அது இட்டுச் செல்லும். அங்கு திருப்தி இருக்காது, மகிழ்ச்சி இருக்காது. அது துயரம் நிறைந்த ஒன்றாக இருக்கும்.

உங்களுடைய கனவை நனவாக்க வாழ்க்கை விடுக்கும் அழைப்பை நீங்கள் நிராகரித்தால், திருப்தியற்ற, மகிழ்ச்சியற்ற ஒரு வாழ்க்கையை வாழும் நிலை உருவாகலாம். நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி, உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு பொருட்களைச் சேகரித்து வைத்திருந்தாலும் சரி, உங்கள் இதயம் காட்டும் பாதையில் நீங்கள் நடக்காமல் இருந்தால், உங்கள் வாழ்க்கை இறுதிக் கட்டத்தை நெருங்கும்போது, வருத்தமும் அதிருப்தியும் நிறைந்த உணர்வுதான் உங்களிடம் மிச்சமிருக்கும். இது உங்களுக்கு நிகழாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று உங்கள் வயது என்னவாக இருந்தாலும் சரி, வாழ்வதற்கு ஓர் அபாரமான வாழ்க்கை உங்களுக்காகக்

காத்துக் கொண்டிருக்கிறது. உங்கள் கனவைப் பின்தொடர்வது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதுபோலத் தோன்றலாம். ஆனால் அப்படி நீங்கள் உங்கள் கனவைப் பின்தொடராமல் இருந்தால், உங்கள் வாழ்க்கையின் ஜீவனையே நீங்கள் இழந்துவிடுவீர்கள்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



உங்கள் கனவுகள் நனவாவதற்கு ஒருபோதும் ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பதுதான் மிகப் பெரிய தோல்வியாகும்.

## ஜி. எம். ராவ்



நீங்கள் உங்கள் கனவையோ அல்லது பெருவிருப்பத்தையோ பின்தொடராமல் இருப்பது என்பது, ஒரு கூண்டில் அடைபட்டுள்ளதைப் போன்ற உணர்வை உங்களுக்குக் கொடுக்கும் — அது தங்கக் கூண்டாகவே

இருந்தாலும்கூட. ஆன்மா இல்லாத உடல் அது. அது விரக்திக்கு வழி வகுக்கும், உயிரோட்டம் இல்லாத ஒன்றாக இருக்கும், இருத்தலுக்கான நோக்கம் ஏதுமில்லாத வெறுமையான ஒன்றாக இருக்கும்.

உங்கள் பிறவி நோக்கிற்கான அழைப்பிற்குச் செவி சாய்த்து உங்கள் கனவைப் பின்தொடர்வதுதான் இருப்பதிலேயே எளிய வழி. அதை மறுத்தளிப்பது என்பது கடினமான வழி. ஏனெனில், அப்படிச் செய்வதன் மூலம், நீங்கள் மகிழ்ச்சியற்ற, ஆர்வக் கிளர்ச்சியற்ற, வாழ்வதற்கான அர்த்தமற்ற ஒரு வாழ்க்கையை உங்களுக்கு நீங்களே ஒரு தண்டனையாக விதித்துக் கொள்கிறீர்கள்.

உங்களுடைய தற்போதைய வேலையைத் துவக்கத்தில் நீங்கள் நேசித்திருக்கலாம். ஆனால் காலப்போக்கில் அது சலிப்பூட்டும் ஒன்றாக ஆகியிருக்கக்கூடும். அப்படியிருந்தால், உங்களுடைய தற்போதைய வேலை உங்களுடைய பிறவி நோக்கிற்கான அழைப்பு இல்லை. நீங்கள் இன்னும் ஆழமாகத் தேட வேண்டும். உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்களுடைய கனவை நீங்கள் எங்காவது தொலைத்துவிட்டீர்களா என்பதை நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

**லேன் பீச்லீ**



நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலை உங்கள் இதயத்தின் நரம்புகளை மீட்டாவிட்டால், தினமும் அதிகாலையில் உங்கள் படுக்கையைவிட்டு உங்களைத் துள்ளிக் குதித்து எழுந்திருக்க வைக்காவிட்டால், இவ்வுலகில் ஒரு மனிதன் என்ற முறையில் நீங்கள் உங்கள் பாத்திரத்தை நிறைவு செய்யவில்லை என்றுதான் அதற்குப் பொருள்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



வாழ்க்கை நீண்ட ஒன்றல்ல. அது ஓர் ஒத்திகையும் அல்ல. அதன் பிடரியைப் பிடித்து அழுத்தி, எவ்வளவு விதவிதமான அனுபவங்களை அனுபவிக்க முடியுமோ அவ்வளவையும் அனுபவிக்க வேண்டும், முடிந்த அளவு பலதரப்பட்ட மனிதர்களைச் சந்திக்க வேண்டும். சோபாவில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு, தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு, வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று புலம்பிக் கொண்டிருப்பது வாழ்க்கையல்ல.

## லிஸ் முர்ரே



கிறிஸ்துமஸுக்கு மறுநாள் நாங்கள் எங்கள் அம்மாவைப் புதைத்தோம். அப்போது எனக்குப் பதினாறு வயது. ஒரு நல்ல இறுதிச் சடங்கை நடத்தத் தேவையான பணம் எங்களிடம் இல்லை. அதனால் ஒரு சாதாரண மரத்தில் செய்யப்பட்ட ஒரு மரப்பெட்டிக்குள் வைத்து அவர் புதைக்கப்பட்டார். அதன் ஒரு முனையில் "தலை" என்றும் மறுமுனையில் "கால்" என்றும் எழுதப்பட்டிருந்தது. அது ஒரு கொடுமையான விஷயம். நாங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்தாலும், எங்களுக்கு இடையேயான உறவு மிகவும் அற்புதமாக இருந்தது. என் அம்மா என் கட்டிலின் கீழே உட்கார்ந்து கொண்டு, தன் கனவுகளைப் பற்றி என்னிடம் கூறுவார். குடியை விட்டுவிட வேண்டும், ஒரு வீட்டை வாங்க வேண்டும், மேம்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற தன் ஆசையை அவர் என்னோடு பகிர்ந்து கொள்வார். இந்த உரையாடல்கள் அனைத்தும், இவற்றையெல்லாம் என்றேனும் ஒருநாள் தான் செய்யவிருந்ததாகவும், ஆனால் அக்கணத்தில் அதைத் தன்னால் செய்ய இயலாது

என்றும் அவர் கூறுவதோடு முடியும். சிறிது காலத்திற்குப் பின்னால் தான் அதைச் செய்யப் போவதாக அவருடைய பேச்சு அமைந்திருக்கும். அதேபோல, நானும் என் வாழ்க்கையில் விஷயங்களைப் பிற்பாடு செய்து கொள்வேன் என்று எனக்கு நானே சொல்லியபடி வாழ்ந்து கொண்டிருந்ததை ஒரு கட்டத்தில் நான் உணர்ந்தேன்.

"என் கனவுகளை நிறைவேற்ற எனக்கு நிறைய கால அவகாசம் இருக்கிறது," என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது உண்மையல்ல. வாழ்க்கை நீண்ட ஒன்றல்ல. இப்போதுள்ள நிலவரப்படி, நம் ஆயுள் 24,869 நாட்கள் மட்டும்தான். நம்மில் ஒருசிலர் கொஞ்சம் கூடுதலான நாட்களையும், ஒருசிலர் குறைவான நாட்களையும் வாழக்கூடும். எப்படி இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே நீங்கள் உயிர்வாழப் போகிறீர்கள் என்பது உறுதி. அதனால் கனவுகளைத் தள்ளிப் போடுவதற்கு உங்களுக்குக் கால அவகாசம் கிடையாது. ஒன்று இக்கணத்தில் அதைச் செய்ய வேண்டும், இல்லையென்றால் அது ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. அதை இப்போது செய்யாமல் நீங்கள் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தால், அதை நீங்கள் ஒருக்காலும் செய்யப் போவதில்லை. அதற்கான முகூர்த்த வேளை இக்கணம்தான்!

"'என்றாவது ஒரு நாள்' என்பது ஒரு நோய். அது உங்கள் கனவுகளை உங்கள் கல்லறையில் உங்களோடு சேர்த்துப் புதைப்பதற்குத்தான் வழி வகுக்கும்."

**டிமோத்தி ஃபெர்ரிஸ்**

த ஃபோர் அவர் வொர்க்வீக் என்ற நூலின் ஆசிரியர்

உங்கள் கனவை உங்களுக்காக வேறு எவரும் நனவாக்கப் போவதில்லை என்பதை உணர்ந்து கொள்வதே ஒரு பெரிய விஷயம்தான். உங்கள் மேலதிகாரியாலோ அல்லது உங்கள் நண்பர்கள், தொழிற்கூட்டாளிகள், குடும்ப

உறுப்பினர்கள், அல்லது குழந்தைகளாலோ உங்களுக்காக உங்கள் வாழ்க்கையை வாழ முடியாது. உங்களை மகிழ்ச்சிப்படுத்துகின்ற, உங்களைத் திருப்திப்படுத்துகின்ற ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததே. உங்களுக்காக அதை வேறு எவராலும் செய்ய முடியாது.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



ஒருவர் செய்ய வேண்டியதிலேயே மிக முக்கியமான காரியம் தங்கள் நடவடிக்கைகளுக்குத் தாங்களே பொறுப்பேற்றுக் கொள்வதுதான். உங்களுடைய வளர்ப்பையோ, அல்லது உங்களிடம் பணம் இல்லாததையோ, அல்லது இது இல்லை அது இல்லை என்று கூறுவதையோ சுட்டிக்காட்டி அதன்மீது பழி போடுவது மிகவும் சுலபம். ஆனால் அதை நிறுத்திவிட்டு, "கடைசியில் என்னைத் தவிர என் வாழ்க்கைக்கு வேறு யாரும் பொறுப்புக் கிடையாது," என்று நீங்கள் கூறத் துவங்கினால், செய்யப்பட வேண்டியவற்றை நாம்தான் செய்தாக வேண்டும் என்ற உணர்தலை நோக்கி ஒரு முக்கியமான அடியை நீங்கள் எடுத்து வைப்பீர்கள். நீங்கள் உங்கள் மனப்போக்கை மாற்றிக் கொள்ள

வேண்டியிருக்கும். நீங்கள் உங்கள் வேலையை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும். நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் மாற்ற வேண்டியிருக்கும்.

**லிஸ் முர்ரே**



நாம் குழந்தைகளாக இருந்தபோது, வளர்ந்தவர்கள் தோல்வியடைந்த காரியங்களில் நாம் ஈடுபட்டோம். எல்லாமே புதியதாகவும் பரவசப்படுத்துவதாகவும் இருந்தது. அதே சமயம், அனைத்தும் சாத்தியம் என்ற நம்பிக்கையும் இருந்தது. பின் ஏதோ ஒன்று நிகழ்ந்தது. நாம் தோல்வியடையத் துவங்கினோம், விரக்தியடையத் துவங்கினோம், ஏமாற்றமடையத் துவங்கினோம். நாம் நலிவுறத் துவங்கினோம். விஷயங்களில் தீவிரம் அடையத் துவங்கினோம். ஆனால் ஒவ்வொரு நாள் காலையிலும் நீங்கள் கண்விழித்தபோது, "நான் விரும்புவதை நான் துரத்திச் சென்றிருந்தால் என்னவாயிருக்கும்? நான் என் கனவுகளைப் பின்தொடர்ந்து சென்றிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்?" என்ற கேள்வியை உங்களை நீங்களே

கேட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் அலாரக் கடிகாரத்தை நிறுத்திவிட்டுத் துள்ளிக் குதித்துப் படுக்கையைவிட்டு எழுந்து உங்கள் கனவுகளுக்குப் பின்னால் ஓடிப் போயிருப்பீர்கள். அந்த மாயாஜாலத்தை உங்கள் வாழ்க்கையில் மீண்டும் கொண்டுவருவதற்காக . . . நிகழவிருந்த சாத்தியக்கூற்றிற்காக நீங்கள் வாழ முயற்சித்திருப்பீர்கள்.

நீங்கள் தோற்கக்கூடும் என்று நீங்கள் நினைத்ததால், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் விரும்பும் விஷயங்களின் பின்னால் செல்ல நீங்கள் அஞ்சியிருக்கக்கூடும். ஒரு கனவை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்தும் உங்களின் கைக்கெட்டும் தூரத்தில் இல்லாமல் உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு கனவு தோன்றுவதற்குச் சாத்தியமே இல்லை என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

**லைர்டு ஹாமில்டன்**



மக்கள் நிறைய விஷயங்களைச் செய்யத் துணிவதைத் தோல்வி குறித்த பயம் தடுத்துவிடுகிறது. நம்முடைய முன்னேற்றத்திற்கு மிகப் பெரிய முட்டுக்கட்டையே

நாம்தான் என்று என் அம்மா அடிக்கடிக் கூறுவார்கள். அதாவது, நாம்தான் நம்மையே தடுத்துக் கொள்கிறோம்.

நடைமுறைப்படுத்தத்தக்க யோசனைகள் அனைத்தும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன, புதிய யோசனைகளுக்கு அல்லது புதிய சந்தர்ப்பங்களுக்கு இங்கு இடமில்லை என்ற ரீதியில் சிந்திப்பது, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாமல் நம்மைத் தடுத்துவிடுகிறது. நல்ல வாய்ப்புகள் இல்லை என்று நீங்கள் நினைத்தால், பால் ஆர்ஃபாலியா எவ்வளவு சுலபமாக ஓர் அற்புதமான வாய்ப்பைக் கண்டுபிடித்தார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

பால் ஆர்ஃபாலியா ஒரு நூலகத்தில் நகலெடுப்பதற்காக வரிசையில் காத்திருந்தபோது, மற்றவர்கள் பார்க்காத ஒரு வாய்ப்பைக் கண்டுபிடித்தார். "இங்கு ஒரு நீண்ட வரிசை இருக்கிறது என்றால் மற்ற இடங்களிலும் இதேபோல ஒரு நீண்ட வரிசை இருக்கத்தானே செய்யும்?" என்று அவர் தனக்குத் தானே கேட்டுக் கொண்டார். அப்படி அவர் கூர்ந்து கவனித்ததில் இருந்து பிறந்ததுதான் கிங்கோஸ் கடைக்கான யோசனை.

**பால் ஆர்ஃபாலியா**



என்னிடம் உள்ள ஒரு நல்ல குணத்தைப் பற்றி நான் குறிப்பிட வேண்டுமென்றால் நிகழ்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் அறிந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

நீங்கள் நிகழ்காலக் கணத்தில் இல்லாமல் இருந்தால், உங்களைக் கடந்து செல்லும் சந்தர்ப்பங்களை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள இயலாது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



வெற்றி பெற்றுள்ள மனிதர்களைப் பார்த்துவிட்டு, பெரும்பாலான மக்கள் தங்கள் தோள்களைக் குலுக்கிவிட்டு, "அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்," என்று கூறுவார்கள். ஆனால் வாழ்க்கையில் உங்களுடைய அதிர்ஷ்டத்தை நீங்கள்தான் தோற்றுவித்துக் கொள்கிறீர்கள். சந்தர்ப்பங்கள் வரும்போது தயாராக இருக்கும் நீங்கள் அதன்மீது தாவி ஏறிக் கொள்கிறீர்கள்.

**அனஸ்தேசியா சோரே**



ஒவ்வொரு நாளும் நம் ஒவ்வொருவர் முன்னாலும் சந்தர்ப்பங்கள் தோன்றிக் கொண்டேதான் இருக்கின்றன. அது ஒரு ரயில் நிலையத்தில் இருப்பதைப் போன்றது. அங்குள்ள மக்களின் முன்னால் ரயில்கள் வந்து நிற்கின்றன. ஆனால் அவர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டு இருக்கின்றனர். அதனால் ரயிலைத் தவற விட்டுவிடுகின்றனர். சந்தர்ப்பங்கள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றன.

**ஜி. எம். ராவ்**



ஒரு மிகப் பெரிய காரியத்தைச் சாதிக்க உங்களுக்கு ஒரு மிகப் பெரிய கனவு தேவையில்லை. வாழ்க்கையின் வாய்ப்புகளுக்காகத் திறந்த மனத்துடன் காத்திருங்கள்.

"நல்ல வாய்ப்புகள் எல்லாம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுவிட்டன என்று மக்கள் உங்களிடம் கூற முயற்சிப்பர். ஆனால் உண்மையில், உலகம் கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டே இருக்கிறது. அது சந்தர்ப்பங்களை எல்லாத் திசைகளிலும் ஊதித் தள்ளிக் கொண்டே இருக்கிறது. உங்களுடைய சந்தர்ப்பங்கள் உட்பட."

**கென் ஹகுட்டா — டாக்டர் ஃபேடு**

## பாதுகாப்பு எனும் மாயை

வாழ்க்கையில் உங்கள் தேர்ந்தெடுப்புகளில் பணமோ அல்லது பாதுகாப்பு உணர்வோ அதிகாரம் செலுத்தாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையானது தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது; நிறுவனங்கள் கைமாறுகின்றன, திவாலாகின்றன, அல்லது வேறு ஒரு நாட்டுக்கு இடம்பெயர்கின்றன. வேலை வாய்ப்புகள் பறி போகின்றன, அல்லது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து பலரைக் கபளீகரம் செய்துவிடுகிறது. நீங்கள் உங்கள் வேலையை, உங்கள் சேமிப்பை அல்லது உங்கள் வீட்டை இழக்க நேரிடலாம். திருமணங்கள் முறியலாம், நோய்கள் தோன்றலாம், தோன்றும் புதிய சூழல்கள் நீங்கள் பாதுகாப்பு என்று நினைத்திருந்ததை உங்கள் வாசற்கதவு வழியாக வெளியே தூக்கி எறியலாம். நான் என் வாழ்க்கையில் என் கனவுகளைப் பின்தொடர்வதற்குப் பதிலாகப் பாதுகாப்பைத் தேர்ந்தெடுத்தேன். நான் என் வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டபோது, நான் எதைப் பாதுகாப்பு என்று கருதியிருந்தேனோ அது என் மனத்தில் மட்டும்தான் இருந்தது என்பதை உணர்ந்தேன். பாதுகாப்பான சூழல் என்ற ஒன்று கிடையாது என்பதை உணர்ந்திருப்பதுதான் உண்மையான பாதுகாப்பு. ஏனெனில் அப்போதுதான் நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ்வதை உறுதி செய்து கொள்வீர்கள்.

## மாஸ்டின் கிப்



உங்கள் குடும்பத்தாரும் உங்கள் நண்பர்களும் உங்களை ஆழமாக நேசித்தாலும், வாழ்க்கையில் உங்களுக்கு மிகச் சிறப்பானவை மட்டுமே கிடைக்க வேண்டும் என்று விரும்பினாலும்கூட, அவர்கள் மிகமிக வித்தியாசமானவர்களாக இல்லாதபட்சத்தில், பொருளாதாரரீதியாகப் பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் உள்ள பாதையையே நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



நல்ல ஊதியம் தரும் ஒரு வேலை மற்றும் அது தரும் பாதுகாப்புணர்வில் இருந்து குறுகிய காலத்திற்கு விலகியிருப்பது வலி ஏற்படுத்தினாலும், நீங்கள் வாழ வேண்டிய ஆண்டுகள் நிறையவே இருக்கின்றன. நீங்கள் நேசிக்கும் ஒன்றைக் கண்டுபிடிப்பதற்காக, அது குறைவான பாதுகாப்பைக் கொண்டிருந்தாலும், அதற்காகக் குறுகியகால வலியை அனுபவிப்பதில் தவறே கிடையாது. ஏனெனில் நீங்கள் ஆழமாக நேசிக்கும் வேலையை

நீங்கள் செய்யும்போது, நீங்கள் அதில் கண்டிப்பாகப் பல தளங்களில் வெற்றி பெற்றே தீருவீர்கள்.

**ஜி. எம். ராவ்**



உங்களிடம் பணம் இல்லாமல் இருக்கும் நிலை நீங்கள் நேசிக்கும் ஒன்றைச் செய்வதிலிருந்து உங்களைத் தடுத்துவிட அனுமதிக்காதீர்கள். நீங்கள் அதில் கைதேர்ந்தவராக ஆகும்போது, உங்களுக்குத் தேவைப்படும் செல்வச் செழிப்பும் பாதுகாப்பும் கண்டிப்பாக உங்களை வந்தடையும். துவக்கம் ஒருவேளை சிறியதாக இருக்கலாம். ஆனால் நீங்கள் செய்யும் ஒன்றில் நீங்கள் கச்சிதமானவராக ஆகும்போது, மற்ற எல்லாம் உங்களை வந்தடையும்.

பாதுகாப்பு உணர்வு எனும் பொறிக்குள் மாட்டிக் கொள்வது யாருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம். ஏராளமாகப் பணம் சம்பாதிக்கும் பலர் தங்களுக்குப் பிடிக்காத வேலைக்குள் உழன்று கொண்டிருக்கின்றனர். அவர்களைவிடக் குறைவான பணம் சம்பாதிக்கும் நபர்களைப்போலவே அவர்களும் மகிழ்ச்சியற்றும் திருப்தியற்றும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

## லைர்டு ஹாமில்டன்



உங்களைப் பொறுத்தவரை பணம் என்றால் என்ன? நிறையப் பணத்தை ஈட்டுவதுதான் உங்களுடைய லட்சியம் என்றால், அது உங்களை ஆட்சி செய்யத் துவங்கிவிடும். அது உங்கள் நடவடிக்கைகள்மீது ஆதிக்கம் செலுத்தும், உங்களைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்.

பௌதீகப் பொருட்கள் அற்புதமானவை என்பதில் சந்தேகம் இல்லை. அவற்றை அனுபவிப்பது இப்பூவுலகில் வசிப்பதில் உள்ள ஆனந்தங்களில் ஒன்று. ஆனால் பௌதீகப் பொருட்களைச் சேர்ப்பதுதான் வாழ்க்கையின் லட்சியம் என்ற தவறான சிந்தனைக்குள் சமுதாயம் நம்மைத் தள்ளியுள்ளது. பௌதீகப் பொருட்கள்தான் வாழ்க்கையின் நோக்கம் என்றால் அவை நமக்கு உண்மையான மகிழ்ச்சி, திருப்தி, மனநிறைவு ஆகியவற்றை அளிக்க வேண்டும், நமக்கு வேறு எதுவும் தேவைப்படக்கூடாது. ஒரு பொருளைக் கைவசப்படுத்தும்போது நமக்குக் கிடைக்கும் இன்பமும் திருப்தியும் நிரந்தரமாக நிலைத்திருக்க வேண்டும்.

பௌதீகப் பொருட்களைச் சேகரிப்பதுதான் நம் வாழ்வின் நோக்கமாக இருந்தால், நாம் இப்பூலகைவிட்டுச் செல்லும்போது அவற்றையும் நம்மோடு எடுத்து செல்ல நம்மால் முடியும். காலையில் நீங்கள் உங்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து, உங்கள் எதிர்வீடு காணாமல் போயிருப்பதைப் பார்ப்பீர்கள். ஏனெனில் அந்த வீட்டில் வாழ்ந்த முதியவர் முந்தைய இரவில் இறந்து போனபோது அதைத் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டிருப்பார். நாம்

உண்மையில் யார் என்பதை, நாம் சொந்தமாக்கிக் கொண்டுள்ள பௌதீகப் பொருட்கள் நிர்ணயிப்பது இல்லை. இவ்வுலகில் நாம் வாழும்போது அவை நமக்கு இன்பம் அளிப்பவையாக இருந்தாலும், நம் வாழ்வின் உண்மையான நோக்கம் அவையல்ல.

**லேன் பீச்லீ**



அது கடினமாக இருந்தது, மிகவும் சவாலாக ந்தது, நான் ஏராளமானவற்றைத் தியாகம் செய்ய வேண்டி இருந்தது. ஆனால் அந்தத் தியாகங்களை நான் விரும்பித் தேர்ந்தெடுத்து இருந்தேன். ஏனெனில் ஓர் உலகச் சாம்பியனாக ஆக வேண்டும் என்ற என் கனவு, பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் எனக்கு முக்கியமானதாக இருந்தது.

நம் எல்லோருக்கும் உணவு, உடை, மற்றும் உறைவிடம் கண்டிப்பாகத் தேவை. ஆனால் அவற்றை மட்டும் துரத்திச் செல்வது உண்மையான மனநிறைவான ஒரு வாழ்க்கையை வாழ நமக்கிருக்கும் சுதந்திரத்தைப் பறித்துவிடுகிறது. உங்கள் கனவுகளைப் பின்தொடர்வதற்குப் பதிலாக, பௌதீகப் பொருட்களைச் சேகரிப்பதை உங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகவும், பொருளாதாரப் பாதுகாப்பை முன்னுரிமையாகவும் ஆக்கிக்

கொள்ளாதீர்கள். இதில் உள்ள முரண்பாடு என்னவென்றால், நீங்கள் உங்கள் கனவுகளைப் பின்தொடர்ந்து செல்லும்போது, பௌதீகச் செல்வங்களும் ஒரு செழிப்பான, நிறைவான வாழ்க்கையும் உங்கள் வசமாகும்.

அதோடு, பணத்தால் ஒருபோதும் வாங்க முடியாதவற்றையும் நீங்கள் பெறுவீர்கள். மாபெரும் சாதனை புரிந்த உணர்வு, மன நிறைவு, பரிபூரண திருப்தி ஆகியவைதான் அவை. நீங்கள் எப்போதும் மேலும் மேலும் எதையாவது செய்ய ஆசைப்பட்டுக் கொண்டுதான் இருப்பீர்கள் என்பதையும் உங்கள் கனவுகளை மேலும் மேலும் கட்டி எழுப்பிக் கொண்டுதான் இருப்பீர்கள் என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஆனால் ஒரு கதாநாயகனின் பயணத்தை நீங்கள் மேற்கொள்ளும்போது கிடைக்கும் பரிபூரண மன நிறைவை நீங்கள் அனுபவிக்கும்போது, இதைச் செய்யத்தான் நாம் இப்புவியில் பிறந்தோம் என்பதில் உங்களுக்கு எள்ளளவும் சந்தேகம் இருக்காது. உங்களுடைய பிறவி நோக்கத்தை நிறைவேற்றுவதன் விளைவாக உங்களுக்குள் நீங்கள் கைவசப்படுத்துபவற்றைத்தான் நீங்கள் இவ்வுலகைவிட்டுப் போகும்போது உங்களுடன் கொண்டு செல்வீர்கள்.

வாழ்க்கையின் முடிவுக்கு வந்து நின்று கொண்டு, நீங்கள் செய்யாமல் விட்டுவிட்ட அனைத்து விஷயங்களையும் பற்றிப் பின்வருத்தம் கொள்ளாதீர்கள். உங்கள் வாழ்க்கை விலைமதிக்க முடியாதது. நீங்கள் உங்களை விற்றுவிட்டால், நீங்கள் எந்த மகிழ்ச்சியைத் தேடித் தவிக்கின்றீர்களோ, அந்த மகிழ்ச்சியை உங்களால் கைவசப்படுத்த முடியாது. ஏனெனில் உண்மையான மகிழ்ச்சியானது, உங்கள் கனவுகள் முழுமையாக நிறைவேறுவதில் அடங்கியுள்ளது. நீங்கள் உங்கள் வாழ்க்கையின் முடிவில் நின்று கொண்டிருக்கும்போது, உங்களிடம் பின்வருத்தம் ஏதும் இல்லாமல் இருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கும்போது மாபெரும் திருப்தி உங்கள் மனத்தில் நிறைந்திருந்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

## லிஸ் முர்ரே



"உங்கள் இசை உங்களுக்குள் உயிர்த்துடிப்புடன் இருக்கும் போதே இறந்துவிடாதீர்கள்," என்ற கூற்றை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இரவில் தலையணையில் தங்களுடைய தலையைச் சாய்க்கும்போது பலர் கனவுகளைக் காண்கின்றனர். ஆனால் அந்தக் குரலுக்கு நீங்கள் செவி சாய்க்காவிட்டால், அது எங்கேயும் போய்விடுவதில்லை. உங்களுக்குள் உறைந்திருக்கின்ற ஓர் ஆற்றல் அது. அந்த ஆற்றலை உங்களால் அப்புறப்படுத்த முடியாது. அது உங்களின் ஓர் அங்கம். நீங்கள் உங்கள் தலையைத் தலையணையில் சாய்க்கும்போது, இவ்வுலகில் ஏதாவது ஒன்றை நீங்கள் சாதிக்க வேண்டும் என்ற ஓர் அழைப்பு உங்களுக்கு வரும்போது அதை நீங்கள் உதாசீனப்படுத்தினால், அக்கனவு உங்களுக்குள்ளேயே பூட்டி வைக்கப்பட்டுவிடுகிறது. என்னைப் பொறுத்தவரை அதுதான் மிகக் கொடுமையான விஷயம் . . . அடங்காத இசையோடு அடக்கம் செய்யப்படுவது.

என் தோழி ஒருவர் வெகுகாலம் தொலைக்காட்சித் துறையின் நிர்வாகப் பிரிவில் வேலை பார்த்து வந்தார். நிறுவனத்தில் மாற்றங்கள் ஏற்பட்டபோது

அவருடைய வேலை பறி போனது. தான் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அவர் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். திரைப்படங்களை இயக்குவதுதான் அது. அவர் தன் கனவு வாழ்க்கையை வாழ்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளத் துவங்கினார். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஒரு திரைப்பட இயக்குனராகத் தன் புதிய வாழ்க்கையை அவர் துவக்கவிருந்த நேரத்தில், முன்பு அவர் வேலை பார்த்து வந்த அதே தொலைக்காட்சி நிர்வாகத் துறையில் நல்ல சம்பளத்தோடு வேறொரு வேலை அவரைத் தேடி வந்தது. அவர் அந்த வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவருடைய கனவும், புத்தம்புதிய வாழ்க்கையைத் துவக்குவதற்கான ஒரு வாய்ப்பும் கை நழுவிப் போயின.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



நான் என் அந்திக் காலத்தில் ஒரு மருத்துவமனையில் படுத்துக் கொண்டு, என் வாழ்க்கையைப் பின்னோக்கித் திரும்பிப் பார்த்து, விஷயங்களை நான் வேறு விதமாகச் செய்திருக்கலாமே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்க விரும்பவில்லை.

## அனஸ்தேசியா சோரே



இழப்பதற்கு உங்களிடம் என்ன இருக்கிறது? நீங்கள் கண்டிப்பாக முயற்சி செய்து பார்க்கத்தான் வேண்டும். இல்லையெனில் அதை உங்களால் செய்திருக்க முடியும் என்ற அறிதல் இல்லாமலேயே நீங்கள் ஒரு வாழ்க்கையை வாழ்ந்து முடித்திருப்பீர்கள். அது மன வேதனை ஏற்படுத்தும் ஒன்று ... என்னைப் அது பயங்கர வலி ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கும்.

**பால் ஆர்ஃபாலியா**



கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே மாணவர்கள் தங்கள் வியாபாரத்தைத் தொடங்கிவிட வேண்டும் என்று நான் அவர்களிடம் எப்போதும் கூறுகிறேன். என்ன பெரிதாகக் குடி முழுகிப் போய்விடும்? வேண்டுமானால் உங்களுடைய பெற்றோர் வீட்டில் மீண்டும் போய்

அடைக்கலம் புகுந்து கொள்ளலாம். அது அனுபவம் பற்றியது அல்ல — துணிந்து களத்தில் குதித்து உங்களுடைய சொந்த வியாபாரத்தைத் துவக்குங்கள்.

**மாஸ்டின் கிப்**



பெரும்பாலானவர்கள் அந்த ஒரு முக்கியமான முடிவில் ஈடுபட மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் அந்த அளவுக்கு வலியை அனுபவித்துக் கொண்டிருக்கவில்லை. வாழ்க்கையே வெறுத்துப் போய், மிதமிஞ்சிய வெறுப்பு ஏற்பட்டு, "என்னால் இதற்கு மேல் தாங்கிக் கொள்ள முடியாது," என்ற நிலை ஏற்படும்போதுதான், வழக்கமாக அவர்கள் செயலில் இறங்குவர்.

**பால் ஆர்.ஃபாலியா**



உங்களுக்குப் பிடிக்காத ஒரு வேலையிலோ அல்லது ஒரு தொழிலிலோ நீங்கள் மாட்டிக் கொண்டாலும், உங்களுக்கு உண்மையான திருப்தியை அளிக்கக்கூடிய ஒன்றை நீங்கள் அடைவதற்கான வாய்ப்பு நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் அதிகமாகத்தான் இருக்கிறது.

உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, உங்களால் இதற்கு மேல் தாங்க முடியாது என்ற நிலை உருவாகும்வரை காத்திருக்காதீர்கள். உங்கள் வாழ்க்கையை இக்கணமே மாற்றுங்கள்! உண்மையான மகிழ்ச்சி மற்றும் திருப்தியைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். பாதுகாப்பு என்ற சங்கிலி உங்கள் கழுத்தை இறுக நெறித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்பட்டிருந்தாலோ அல்லது உங்களுடைய பொறுப்புகள் காரணமாக உங்களால் மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நீங்கள் நினைத்திருந்தாலோ கவலைப்படாதீர்கள். எதற்குமே காலம் கடந்துவிடவில்லை — உங்கள் கனவுகளைப் பின்தொடர எப்போதுமே எல்லையற்ற வழிகள் இருக்கின்றன. அது நீங்கள் நினைப்பதைவிடச் சுலபமானதுதான்.


FINDING YOUR DREAM

# உங்கள் கனவை அடையாளம் காணுதல்

**பீட்டர் ஃபோயோ**



என் வாழ்க்கையை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? — மனிதலத்தின் மாபெரும் விரக்தி இதுதான்.

**லேன் பீச்லீ**



உங்களுக்கு என்ன வேண்டும்? உங்கள் இதயத்தின்மீது கை வைத்து, உங்களுக்கு என்ன வேண்டும் என்று

கேளுங்கள். உங்கள் எண்ணத்தில் முதலில் உதிப்பதுதான் சரியான பதிலாக இருக்கும்.

உங்களைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள், மற்றும் முடிவான தீர்மானங்களை விட்டொழிக்க முயலுங்கள். ஏனெனில் அவைதாம் உங்கள் கனவை உங்கள் கண்களில் இருந்து மறைக்கின்றன. உங்களை ஒருபோதும் வேறு எவருடனும் ஒப்பிடாதீர்கள். ஏனெனில் இவ்வுலகில் உள்ள வேறு எவரிடமும் இல்லாத ஆற்றல் உங்களுக்குள் உறைந்திருக்கிறது. உங்களால் ஒரு நிலைக்கு மேல் சாதிக்க முடியாது என்று உங்களுடைய எண்ணங்களுக்குக் கைவிலங்கிடும் பழக்கத்தை அறவே ஒழித்துக் கட்டுங்கள், மனத்தின் சன்னல்களை அகலத் திறந்து வையுங்கள். உங்கள் வாழ்க்கை முழுவதும் இப்படி உங்களைப் பற்றி நீங்கள் சேர்த்து வைத்துள்ள தகவல்களை ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டு, காலையில் ஒரு புத்தம்புதிய நபராக விழித்தெழுவீர்களேயானால், எல்லா வகையான சந்தர்ப்பங்களும் சாத்தியக்கூறுகளும் உங்கள் வாழ்வை நிரப்ப ஓடோடி வரும்.

**லேன் பீச்லீ**



மக்கள் விஷயங்களைத் தங்களுக்கு வெளியே தேடுகின்றனர். ஆனால் ஒருமுறை உங்களுக்குள் சென்று

பார்த்துவிட்டீர்களேயானால், உங்களுக்கு எல்லாம் தெரிந்துவிடும்.

## ஜான் பால் டிஜோரியா



நமக்கு என்ன வேண்டும் என்பது எல்லா நேரத்திலும் நமக்குத் தெரியாமல் போகலாம், ஆனால் நமக்கு என்ன வேண்டாம் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியும். உங்களுக்கு என்ன வேண்டாம் என்பது குறித்துச் சிந்திப்பதையும் அது குறித்து நடவடிக்கை எடுப்பதையும் நிறுத்துங்கள். நீங்கள் மேற்கொண்டிருக்கும் ரயில் பயணம் மோசமானதாக இருந்தால் எப்படி அதிலிருந்து இறங்கிவிடுவீர்களோ அதைப் போன்றதுதான் இது. அந்த ரயிலில் இருந்து இறங்காவிட்டால் உங்களால் வேறு எந்த அனுபவத்தையும் பெற முடியாது. ஆனால் இறங்கிவிடுவது என்பது வேறு நல்ல அனுபவங்கள் உங்களை வந்தடைய நீங்கள் தயாராக இருக்கிறீர்கள் என்பதை அறிவிக்கும்.

## மாஸ்டின் கிப்



பேரானந்தமாக நீங்கள் உணரும் கணங்களை நினைத்துப் பாருங்கள். அப்போது நேரம் போவதே உங்களுக்குத் தெரியாது, நீங்கள் உண்மையிலேயே மிகவும் ஊக்குவிக்கப்பட்டு இருப்பதுபோல உணர்வீர்கள். "எப்போது நான் வெகுவாக ஊக்குவிக்கப்பட்டேன்? எப்போது நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன்?" என்று எண்ணிப் பாருங்கள். அப்படிப்பட்டக் கணங்கள் உங்கள் வாழ்வில் மிக அபூர்வமாகவே இருந்தாலும், அவைதான் உங்கள் கனவுகளுக்குக் கட்டியம் கூறுபவை.

**ஜி. எம். ராவ்**



தங்கள் வருங்காலம் குறித்து யோசிக்கத் துவங்கிய உடனேயே ஒரு சிலருக்குத் தங்களுடைய மாபெரும் கனவுகள் குறித்தப் பொறி தட்டும்.

உங்களால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றால் நீங்கள் எதைச் செய்வீர்கள்? பணம் ஒரு பிரச்சனையே இல்லை என்றால் நீங்கள் எந்தக் காரியத்தில் இறங்குவீர்கள்? வெற்றி உறுதி என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டால், நீங்கள் எந்த நடவடிக்கையில் குதிப்பீர்கள்? உங்கள் பிறவி நோக்கம் எது என்ற கேள்வியை நீங்கள் கேட்டால், பிரபஞ்சம் அதற்கான விடையை உங்களுக்கு அனுப்பும். அது உங்களுடைய வெளிமனத்தில் இருந்து வருவதில்லை. அப்படி இருந்திருந்தால் அதை நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். அந்தப் பதில் பிரபஞ்ச மனத்தில் இருந்து வருகின்றது.

## லேன் பீச்லீ



நம்மில் பெரும்பாலானோர் நம்முடைய கனவு என்ன, நம்முடைய பிறவி நோக்கம் என்ன என்பதை அறியாமலேயே வாழ்க்கையை ஓட்டிவிடுகிறோம். ஏனெனில் அக்கேள்வியைக் கேட்க நாம் நேரம் ஒதுக்குவது இல்லை. மக்கள் தாங்கள் நேசிக்கும் விஷயத்தைக் கண்டறிவதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்வது மிகவும் இன்றியமையாதது. அப்படிச் செய்யாவிட்டால் நீங்கள் சுக்கான் இல்லாத மரக்கலம்போல ஆகிவிடுவீர்கள்.

எந்தவொரு கேள்வியைக் கேட்பதற்கு முன்பும் நீங்கள் உங்கள் மனத்தை ஆசுவாசப்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். பிறகு, "என் பிறவி நோக்கம் என்ன?" அல்லது "நான் என்ன செய்ய வேண்டும்?" அல்லது "இவ்வுலகில் நான் ஏன் பிறந்துள்ளேன்?" போன்ற ஏதேனும் ஒரு கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். இக்கேள்விக்கு உங்களுடைய மனத்தில் இருந்து பதிலைப் பெற முயற்சிக்காதீர்கள். அக்கேள்வி அப்படியே தொங்கிக் கொண்டிருக்கட்டும். ஒரு நிமிடம் அமைதியாக இருங்கள், உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதன்மீது கவனத்தைக் குவியுங்கள். பிறகு, அன்றைய தினம் நீங்கள் எதைச் செய்ய உந்தப்பட்டுள்ளீர்கள் என்பதைக் கவனமாக ஆராயுங்கள்.

உங்கள் கேள்விக்கான விடை உங்கள் மனத்தில் திடீரென்று ஒரு மின்னல்போலப் பளிச்சிடும். பெரும்பாலான சமயங்களில் நீங்கள் வேறு ஏதாவது ஒன்றில் ஒட்டுமொத்தக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கும்போது அது நிகழும். உங்களுக்குக் கிடைக்கும் பதிலை ஆராயாதீர்கள், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதில் கவனம் செலுத்துங்கள்.

## லைர்டு ஹாமில்டன்



உங்களையே ஆழ்ந்து கவனிப்பது, உங்களுக்குள் சென்று கவனமாகக் கேட்பது, சலனமில்லாமல் அமர்ந்திருப்பது ஆகியவற்றைப் பற்றியது இது. ஒரு காட்டிற்குள் செல்லுங்கள் அல்லது கடலுக்குள் செல்லுங்கள். உங்கள்

உட்குரலைச் செவிமடுக்க உதவக்கூடிய ஏதேனும் ஓரிடத்திற்குச் செல்லுங்கள். உங்கள் ஆழ்மனமே உங்களுக்குப் பதிலளிக்கும். அது உங்களிடமே இருக்கிறது, எப்போதும் உங்களிடமே இருந்து வந்துள்ளது. ஆனால் அதை நீங்கள் உங்களுக்குள் எங்கோ அடியாழத்தில் புதைத்து வைத்துவிட்டீர்கள்.

**ஜான் பால் டிஜோரியா**



பிரபஞ்சம் குறித்து நீங்கள் திறந்த மனத்துடன் இருந்தால், அது கண்டிப்பாக உங்களை நோக்கி வரும்.

பல கோடி பெறுமானமுள்ள வியாபாரம் ஒன்றைத் துவக்கி நடத்த வேண்டும் என்ற விருப்பம் தனக்கு இருந்ததை சாரா பிளேக்லீ என்ற பெண்மணி அறிந்திருந்தார். அவருக்கு அது மட்டும்தான் தெரிந்திருந்தது. அதனால், பல கோடி பெறுமானமுள்ள ஒரு யோசனை தனக்கு வேண்டும் என்று அவர் கேட்டார். ஒரு நாள் அவர் உடை மாற்றிக் கொண்டிருந்தபோது, திடீரென்று அவருக்கு ஒரு புதுவிதமான பெண்கள் உள்ளாடை குறித்துப் பிரமாதமான ஒரு யோசனை உதித்தது. அந்த யோசனையில் இருந்து உருவானதுதான் ஸ்பேன்ஸ்க் — இன்று அது பல கோடி பெறுமானமுள்ள ஒரு சர்வதேச வியாபார நிறுவனமாக உள்ளது.

**பீட்டர் பர்வாஷ்**



உண்மையான தொழில்முனைவோரின் பாதையில் பயணிப்பது மற்றொரு வழியாகும். "இக்கணத்தில் உலகிற்கு என்ன வேண்டும், அதற்கு என்ன தேவைப்படுக்கிறது?" என்ற கேள்வியைக் கேட்பதுதான் அது.

**மாஸ்டின் கிப்**



"மக்களிடம் இருக்கும் ஒரு பிரச்சனையை என்னால் எப்படித் தீர்த்து வைக்க முடியும்?" இக்கேள்வியைக் கேட்டுவிட்டு, அது நீங்கள் பெருவிருப்பம் கொண்டிருக்கும் விஷயத்தோடு பொருந்துகிறதா என்பதைக் கண்டுபிடிப்பதுதான் வெற்றிக்கான திறவுகோல். அது

உணர்ச்சிரீதியாக, பொருளாதாரரீதியாக மற்றும் ஆன்மீகரீதியாக ஆசீர்வதிக்கப்பட்ட ஓரிடம்.

**பால் ஆர்.ஃபாலியா**



கிங்கோஸ் ஒரு கேள்வியுடன்தான் துவக்கப்பட்டது. நீங்கள் கேள்விகள் கேட்பதை நிறுத்திவிட்டிருந்தால், கேள்விகள் கேட்பதை மீண்டும் துவக்குங்கள்.

கிங்கோஸைத் துவக்கிய பால் ஆர்.ஃபாலியாவைப்போல, ஸ்பேன்ஸ்க்கைத் தோற்றுவித்த சாரா பிளேக்லீயைப்போல, தொழில்முனைவோர் கேள்விகளைக் கேட்கின்றனர். அப்படித்தான் கச்சிதமான ஒரு யோசனை, கச்சிதமான ஒரு சமயத்தில் அவர்களுக்குக் கிடைக்கிறது. அச்சமயத்தில் துல்லியமாக அதுதான் உலகின் தேவையாகவும் இருக்கிறது. வெறுமனே ஒரு கேள்வியைக் கேட்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு யோசனை உதிக்கிறது. அந்த யோசனையிலிருந்து அவர்கள் ஒரு வெற்றிகரமான நிறுவனத்தை உருவாக்கிவிடுகின்றனர்.

ஏதாவது ஒரு கேள்வி கேட்பதற்கான தேவை உங்களுக்கு ஏற்பட்டால், உங்களுக்குத் தேவையான தகவல்களைக் கேளுங்கள், யோசனைகளைக் கேளுங்கள், தீர்வுகளைக் கேளுங்கள், முடிவுகள் எடுப்பதற்கான பாதையைக் காட்டுமாறு கேளுங்கள். அதற்கான பதிலைப் பிரபஞ்ச மனம் உங்களுக்கு அனுப்பி வைக்கும். அது ஒரு மின்னல்போல உங்கள் மனத்தில் பளிச்சிடும்.

அள்ள அள்ளக் குறையாத இந்த அபரிமிதமான வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள உங்களுக்கு இருக்கும் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## பீட்டர் பர்வாஷ்



எந்தத் திசையில் போவது என்பதைக் கண்டுபிடிப்பதற்கான இன்னோரு வழி இது; இரண்டு வெற்றுத் தாள்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்றில் நீங்கள் எதில் சிறப்பாகச் செயல்படுகிறீர்கள் என்பதைக் குறித்து எழுதிக் கொள்ளுங்கள். மற்றொரு காகிதத்தில், நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதை எழுதிக் கொள்ளுங்கள். இரண்டு காகிதங்களிலும் உள்ளவை ஒன்றோடு ஒன்று பொருந்துகின்றனவா என்று பாருங்கள்.

## மாஸ்டின் கிப்



நீங்கள் பயணிக்கத் திட்டமிட்டிருக்கின்ற பாதையில் ஏற்கனவே பயணித்தவர்களைக் கண்டுபிடியுங்கள் அல்லது அந்தப் பாதையில் திரும்பி வந்து கொண்டிருப்பவர்களைக் கேளுங்கள். "நீங்கள் எப்படி அதைச் சாதித்தீர்கள்?" என்று அவர்களிடம் கேளுங்கள். நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்து கொண்டிருக்கும் மக்கள் இருக்கும் சுற்றுச்சூழலில் நீங்களும் இருங்கள். புத்தகங்கள், டிவிடிக்கள் போன்றவற்றிலிருந்து உங்களை ஊக்குவிக்கும் தகவல்களைப் பெற்று, அவற்றில் உங்களை மூழ்கடித்துக் கொள்ளுங்கள். அப்படிச் செய்யும்போது நீங்கள் உலகின் மாபெரும் சிந்தனையாளர்களின் எண்ணங்களை சுவாசிக்கத் தலைப்படுவீர்கள்.

**லேன் பீச்லீ**



உங்களிடம் தெளிவு இருக்க வேண்டும். தெளிவுதான் சக்தி. உங்களுக்கு என்ன தேவை என்பதைக்

கண்டுபிடிக்கப் போதுமான நேரத்தைச் செலவிடுங்கள். அப்படிச் செய்தால், அதை நோக்கி உங்களால் அடியெடுத்து வைக்க முடியும். ஆனால் உங்களுக்கு என்ன வேண்டும் என்பது உங்களுக்கே தெரியாமல் இருந்தால், வாழ்க்கை எதை உங்களுக்குக் கொடுக்கிறதோ அதோடு நீங்கள் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்மீது ஆதிக்கம் செலுத்த நான் ஒருபோதும் அனுமதித்தது இல்லை.

## ஜான் பால் டிஜோரியா



நீங்கள் கனவு கண்டு கொண்டிருந்து, ஆனால் அது கைகூடி வருவது தொடர்பாக எதுவும் நிகழாமல் இருந்தால், நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதை வார்த்தைகளில் வடியுங்கள். நீங்கள் காலையில் எழுந்திருக்கும்போது அதன் முகத்தில் கண்விழியுங்கள். நீங்கள் அதில் உங்கள் கவனத்தைக் குவிக்கும்போது, உங்கள் மனம் ஏதோ ஒரு வழியில் அத்திசை நோக்கி உங்களை நகர்த்தும். உங்கள் மனம் எதை உருவாக்கி நம்புகிறதோ, அதை அது சாதிக்கும். உங்கள் மனத்தில்

நீங்கள் எதை அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அது நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும்.

**பீட் கேரல்**



இது ராக்கெட் அறிவியல் அல்ல. நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் அல்லது என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என்பது குறித்த அறிவுப்பூர்வமான தீர்மானம்தான் அது என்பது வெளிப்படை. நம்முடைய முன்னோக்குதான் பிரபஞ்ச சக்தியை முடுக்கிவிட்டு, நாம் எதை உருவாக்க விரும்புகிறோமோ அதை உருவாக்க உதவுகிறது.

உங்கள் கனவு என்ன என்பது உங்களுக்குத் தற்போது தெரியாமல் இருந்தால்கூட, உங்கள் கனவின் நனவாக்கத்தை விரைவுபடுத்தும் ஒரு செயலில் நீங்கள் இறங்கலாம்: நீங்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அதை உங்களால் முடிந்த அளவு மிகச் சிறப்பாகச் செய்வதுதான் அது. இறுதியாக, நீங்கள் வேறு என்ன வேலை பார்க்கப் போகிறீர்கள் என்பது உங்களுக்கு இச்சமயத்தில் தெரியாமல் இருந்தால்கூட, நீங்கள் தற்போது பார்த்து வருகின்ற வேலையில் உங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்துங்கள், அதற்காக உயிரைக் கொடுத்து உழையுங்கள். அப்படிச் செய்யும்போது நீங்கள் உங்களுடயை தற்போதைய

வேலையைவிடப் பெரிதாக வளர்ந்துவிடுவீர்கள். நீங்கள் எந்த வேலை குறித்துக் கனவு காண்கிறீர்களோ அந்த வேலைக்கு இட்டுச் செல்லும் ராஜபாட்டைக்கான வழி காலப்போக்கில் உங்களுக்குப் புலப்படும்.

## லைர்டு ஹாமில்டன்



நீங்கள் என்ன வேலையைச் செய்தாலும் அதை உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற பண்புநலனை என் தாயார் என் மனத்தில் ஆழமாகப் பதிய வைத்தார். நீங்கள் தெருக்களைச் சுத்தம் செய்பவராக இருந்தாலும், அந்த வேலையை உங்களால் முடிந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

## ஜான் பால் டிஜோரியா



என்னைப் பொறுத்தவரை, வெற்றி என்பது உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதை வைத்து

நிர்ணயிக்கப்படும் ஒன்றல்ல. மாறாக, நீங்கள் செய்து கொண்டிருக்கும் ஒரு காரியத்தை நீங்கள் எவ்வளவு சிறப்பாகச் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது. நீங்கள் ஒரு துப்புரவுத் தொழிலாளியாக இருந்தாலும் சரி, ஒரு நொழிலதிபராக இருந்தாலும் சரி, அல்லது ஒரு விமானியாக இருந்தாலும் சரி, நீங்கள் எவ்வளவு வெற்றிகரமாக இருக்கிறீர்கள் என்பது நீங்கள் உங்கள் வேலையை எவ்வளவு சிறப்பாகச் செய்கிறீர்கள் என்பதை வைத்துத்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது.

## பெரிய கனவுகளும் குட்டிக் கனவுகளும்

### அனஸ்தேசியா சோரே



சிறிய கனவுகளைக் காண்பதில் தப்பில்லை. தங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லாவற்றையும் பணயம் வைக்கத் துணிபவர்களுக்குத்தான் பெரிய கனவுகள் பொருத்தமாக இருக்கும். குட்டிக் கனவுகள் இருக்கின்றன, மாபெரும் கனவுகள் இருக்கின்றன, கிறுக்குத்தனமான கனவுகளும் இருக்கின்றன. கிறுக்குத்தனமான

கனவுகளைக் காண்பதற்கு ஒருவிதமான மனநிலை தேவை.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



பெரும்பாலான மக்களிடம் பெரிய கனவுகள் இருப்பதில்லை. அவர்களிடம் அதற்கான துணிச்சல் இருப்பதில்லை. செய்யப்பட வேண்டியவை எல்லாம் ஏற்கனவே பிற மக்களால் செய்யப்பட்டுவிட்டதாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால் பெருங்கனவுகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதுதான் வாழ்க்கையைப் பரவசமான ஒன்றாக ஆக்குகிறது. உங்களிடம் பெரிய கனவுகளே இல்லாதபோது பெரிய விஷயங்கள் சாத்தியமாவதற்கு வாய்ப்பே இல்லை.

**அனஸ்தேசியா சோரே**



ஒன்றைப் பெறுவதற்குத் தாங்கள் எந்த அளவுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மக்கள்.அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. வாழ்க்கையில் உள்ள எல்லாமே வங்கிக் கணக்கைப் போன்றது. நீங்கள் அதில் போடுவதைத்தான் உங்களால் எடுக்க முடியும். கொஞ்சமாகப் போட்டுவிட்டு அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள். அது நடக்கவே நடக்காது.

ஒருவர் ஒரு மாபெரும் கனவோடு தன் வாழ்க்கையைத் துவக்கலாம். வேறு ஒருவர் மிகச் சிறிய ஒரு கனவோடு துவக்கலாம். அது காலப்போக்கில் அவர்களுடயை கற்பனையையும் மிஞ்சி ஒரு மாபெரும் கனவாக விசுவரூபம் எடுக்கக்கூடும். நம்மால் எந்த அளவிலான கனவைக் கையாள முடியுமோ, அந்த அளவிலான கனவையே வாழ்க்கை நமக்கு அளிப்பதுபோலத் தோன்றுகிறது.

**ஜி. எம். ராவ்**



புதிர்க்கட்டத்தில் உள்ள சிதறு துண்டுகளைப்போல, சிறிய கனவுகள், பெரிய கனவுகளுக்கு இட்டுச் செல்லும். முதலில் கனவு காண்பது என்பதே சிரமமான ஒன்றாக

இருக்கக்கூடும். மகாத்மா காந்தி ஒரு மாபெரும் கனவோடு துவக்கவில்லை என்பதை நினைவில் வைத்திருப்பது நல்லது. தான் செய்ய விரும்பியவற்றின் எல்லைகளை அவர் விரிவுபடுத்திக் கொண்டே இருந்தார். கடைசியில் ஒரு மாபெரும் விஷயம் நிகழ்ந்தது.

நீங்கள் உங்களுடைய பெருங்கனவைக் கண்டுபிடித்து, அது நனவாகும்பட்சத்தில், நீங்கள் கொண்டிருக்கும் சிறிய சிறிய கனவுகளும் கண்டிப்பாக நனவாகும். நான் என் இருபதுகளில் இருந்தபோது, வேறொரு நாட்டில் வாழ வேண்டும் என்பது என் கனவுகளில் ஒன்றாக இருந்தது. நமக்குப் பரிச்சயமில்லாத ஒரு நாட்டில் வாழும்போது நாம் எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும் சாகசங்களையும் நான் விரும்பினேன். அதோடு, வேறுபட்டக் கலாச்சார அனுபவங்களை அனுபவிக்கவும் நான் ஆசைப்பட்டேன். என்னுடைய **இரகசியம்** திரைப்படக் கனவு நனவானபோது, என் பணி காரணமாக நான் ஆஸ்திரேலியாவில் இருந்து அமெரிக்காவிற்குக் குடிபெயர நேர்ந்தது. என் பெருங்கனவு நனவாகியபோது, நான் ஓரமாக ஒதுக்கி வைத்திருந்த சிறிய கனவும் அதோடு சேர்த்து நனவாகியது. கனவுகள் ஒன்றோடொன்று தம்மைப் பின்னிப் பிணைத்துக் கொள்கின்றன. அதனால் ஒரு கனவு நனவாகும்போது மற்றவையும் நனவாகிவிடுகின்றன.

நீங்கள் உங்கள் கனவை ஏற்கனவே கண்டுபிடித்திருந்தாலும் சரி, அல்லது அது என்னவென்று உங்களுக்குத் துளிகூட யோசனை இல்லாமல் இருந்தாலும் சரி, நீங்கள் ஒரே ஓர் எளிய அறிவுரையைப் பின்பற்றினால், அது உங்கள் கனவின் நனவாக்கத்திற்குக் கண்டிப்பாக இட்டுச் செல்லும்.


FOLLOW YOUR BLISS

# உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லுதல்

ஜோசப் கேம்பெல் சர்வதேச அளவில் பெரிதும் மதிக்கப்படுகின்ற ஒரு தொன்மவியலாளர். அவர் தன் படைப்புகளின் மூலம் சிறப்பாக வாழ்வதற்கான மிக அருமையானதொரு வாழ்க்கைத் தத்துவத்தை நமக்கு அளித்துச் சென்றுள்ளார்:

"பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள்."

இந்த மூன்று வார்த்தைகளும் உங்கள் வாழ்க்கையை வழிநடத்திச் செல்லும் திசைகாட்டியாக விளங்கட்டும். ஒவ்வொரு கணத்திலும் நீங்கள் எந்தத் திசையை நோக்கி நடைபோட வேண்டும் என்பதை அவை உங்களுக்கு எடுத்துச் சொல்லும், நீங்கள் மிகவும் நேசிக்கும் ஒன்றை நீங்கள் செய்யும்போது, உங்கள் கனவுகளை உங்களோடு பிணைக்கும் சங்கிலியாக அது விளங்குகிறது. நீங்கள் உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லும்போது, உங்களால் உங்கள் கனவுகளை நனவாக்க முடியும், நீங்கள் ஏன் இவ்வுலகில் பிறந்தீர்கள் என்பதற்கான காரணத்தையும் உங்களால் கண்டுபிடிக்க முடியும்.

தான் ஒரு தொழில்முனைவோராக ஆக வேண்டும் என்ற விருப்பம் நிக் உட்மேனுக்கு இருந்தபோதிலும், எந்தத் துறையில் என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர் ஆஸ்திரேலியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் தன் நண்பர்களோடு சென்றிருந்தார். அங்கு தனக்குப் பேரானந்தத்தை அளித்த அலைச்சறுக்கு விளையாட்டில் அவர் ஈடுபட்டிருந்தபோது, தானும் தன் நண்பர்களும் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் சாகசத்தை அப்படியே படம் பிடிக்க ஒரு கேமரா இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தார். அந்த ஒரு சிறிய யோசனை கோபுரோ

கேமராவைக் கண்டுபிடிப்பதற்கு வித்திட்டது. அது நிக் உட்மேனை உலகிலுள்ள இளம் கோடீஸ்வரர்களில் ஒருவராக ஆக்கியது.

## பேரானந்தம் பேரானந்தத்திற்கு இட்டுச் செல்லும்

உங்களுக்குப் பேரானந்தம் அளிக்கும் விஷயத்தை நீங்கள் பின்பற்றிச் செல்லும்போது, நீங்கள் நேசிக்கும் விஷயத்தை நீங்கள் செய்து கொண்டிருக்கும்போது, உங்களிடமிருந்து ஒரு சக்திமிக்க குணாம்சம் வெளிப்படும். அது மேலும் அதிகமான பேரானந்தத்தை உங்களை நோக்கிக் கவர்ந்திழுக்கும். நீங்கள் பேரானந்தத்தில் திளைத்திருக்கும்போது, உங்களால் உங்கள் கனவை இன்னும் பார்க்க முடியாவிட்டாலும்கூட, நீங்கள் அதை நோக்கிய பாதையில்தான் பீடுநடை போட்டுக் கொண்டிருப்பீர்கள்.

**லேன் பீச்லீ**



தினமும் உங்களை நல்ல மனநிலையில் வைத்திருக்கும் ஒன்றைச் செய்வதைத் தேர்ந்தெடுங்கள். எவ்வளவு பேர் அதைச் செய்கின்றனர்? தங்களுக்கு எது நல்ல உணர்வை ஏற்படுத்துகிறது என்பதை எவ்வளவு பேர் உணர்ந்து, அதைச் செய்யத் தினமும் நேரம் ஒதுக்குகின்றனர்?

உங்களை நல்ல உணர்வில் திளைக்கச் செய்யும் காரியத்தில் தினமும் ஈடுபட நீங்கள் தீர்மானிக்கும்போது, நீங்கள் உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்கிறீர்கள். அது ஒரு பூங்கா அல்லது ஒரு தோட்டத்தில் ஒரு பெஞ்சு மேல் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்காரும் ஓர் எளிய நடவடிக்கையாகக்கூட இருக்கலாம். அல்லது ஓட்டமும் நடையுமாக ஒரு காபியைக் குடிப்பதற்குப் பதிலாக, உங்களுக்குப் பிடித்தக் காபியை வாங்கி ஆசுவாசமாக அமர்ந்து குடிப்பதாக இருக்கலாம். அது மிகவும் அற்பமான ஒரு விஷயமாகத் தோன்றினாலும், உங்களுக்குப் பேரானந்தத்தை அளிக்கும் ஏதாவது ஒன்றை நீங்கள் தினமும் செய்து வாருங்கள். மிக விரைவிலேயே, உங்களுக்குப் பேரானந்தத்தை அளிக்கும் இன்னும் பல செயல்களில் ஈடுபட நீங்கள் ஊக்குவிக்கப்படுவீர்கள். விரைவில் அந்தப் பேரானந்தத் தொகுப்பு உங்களை உங்கள் கனவிற்கு இட்டுச் செல்லும், நீங்கள் மேம்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

## பீட்டர் ஃபோயோ




இதைப் பல முறை மீண்டும் மீண்டும் கேட்டு இது உங்களுக்குப் புளித்துப் போயிருக்கும். ஆனால், வாழ்க்கையைப் பரிபூரணமாக வாழ்வது மிக மிக முக்கியமானது என்பதில் நான் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டுள்ளேன்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



நம்முடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அடுத்து நம்முடைய வேலைதான் நம் வாழ்வின் மிக முக்கியமான அம்சம். அதில்தான் நீங்கள் உங்களுடைய பெரும்பாலான நேரத்தைச் செலவழிக்கிறீர்கள். அதனால் அது சுவாரசியமான ஒன்றாக இருக்க வேண்டும், அது குறித்து நீங்கள் பெரும் விருப்பம் கொண்டிருக்க வேண்டும், அது குறித்து நீங்கள் அக்கறை கொண்டிருக்க வேண்டும்.

## ஜான் பால் டிஜோரியா



நான் செய்து கொண்டிருப்பதை நான் நேசிக்கிறேன். இல்லையெனில் அதை நான் செய்து கொண்டிருக்க மாட்டேன்.

## ஜி. எம். ராவ்



பணமும் பாதுகாப்பும் எல்லோருக்கும் முக்கியமானவை. நீங்கள் செய்து கொண்டிருக்கும் விஷயம் குறித்துப் பெருவிருப்பமும் தனிப்பட்ட மன நிறைவும் அதைவிட முக்கியமானவை. அதனால்தான் கனவு காண வேண்டியது முக்கியமாகிறது.

நீங்கள் ஒரு முழுநேர வேலையில் இருந்தால், ஆண்டொன்றுக்குக் கிட்டத்தட்ட 250 நாட்களை நீங்கள் அதில் செலவிடுவீர்கள். அது கிட்டத்தட்ட ஒரு வருடத்தில் மூன்றில் இரண்டு பங்கு. உங்கள் வேலை உங்களுக்குப் பரவசத்தை ஏற்படுத்தாவிட்டால், உங்கள் இதயத்திற்கு இதமளிக்காவிட்டால், நீங்கள் உங்கள் வாழ்நாளில் பெரும்பகுதியை வீணாக்குகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

"உங்கள் வேலை உங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை விழுங்கப் போகிறது. அதில் உங்களுக்கு உண்மையிலேயே மன நிறைவு கிடைக்க வேண்டும் என்றால், நீங்கள் மகத்தானது என்று நம்பும் ஒரு வேலையைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். மகத்தான வேலையைச் செய்வதற்கான ஒரே வழி, நீங்கள் தற்போது செய்யும் வேலையை நேசிப்பதுதான். அதை நீங்கள் இன்னும் கண்டுபிடித்திருக்கவில்லை என்றால், அதைத் தேடிக் கண்டுபிடிக்கும்வரை ஓயாதீர்கள்."

**ஸ்டீவ் ஜாப்ஸ்**

ஆப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவனர்

நீங்கள் முழுநேரமும் வீட்டில் இருந்து குழந்தைகளை வளர்த்து வருபவராக இருந்தால், உங்கள் வாழ்வின் பொன்னான இக்கணங்கள், நீங்கள் மனதார நேசிக்கும் விஷயங்களைச் செய்வதை உள்ளடக்கியதாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அதை அடிக்கடிச் செய்து வாருங்கள். நான் முழுநேரமும் வீட்டில் இருந்து என் குழந்தைகளை வளர்த்து வந்தபோது, ஏன் படைப்பாற்றலுக்கு எனக்கு ஒரு வடிகால் தேவைப்பட்டது. அதனால் நான் சமையலில் மூழ்கினேன். நான் சமையல் புத்தகங்களை வாங்கினேன், சமையல் வகுப்புகளில் கலந்து கொண்டேன். நான் கேள்விப்பட்ட, பார்த்த அனைத்து விதமான சமையல் முறைகளிலும் மூழ்கி முத்தெடுக்கும்வரை அதைத் தொடர்ந்து செய்து வந்தேன். சமையல் என்னுடைய பேரானந்தமாக ஆகியது. நான் மீண்டும் தொலைக்காட்சியில் என் வேலைக்குத் திரும்பிச் சென்றபோது, நான் தயாரித்த முதல் நிகழ்ச்சி சமையல் தொடர்பானதுதான். சமையலில் எனக்கு இருந்த ஈடுபாடு காரணமாக அந்த நிகழ்ச்சி மிகப் பெரிய வெற்றி பெற்றது. அதோடு, என் தொழில் வாழ்க்கையும் வெற்றியடைந்தது.

## ஜான் பால் டிஜோரியா



நீங்கள் பெருவிருப்பம் கொண்டிருந்து, நீங்கள் செய்யும் வேலையை நீங்கள் நேசிக்கும்போது, அது நீங்கள் வலுக்கட்டாயமாகச் செய்ய வேண்டிய ஒன்றாக இல்லாமல் நீங்களாக விருப்பப்பட்டுச் செய்யும் ஒன்றாக

இருக்கும்போது, நீங்கள் அதை எப்போதும் மிகச் சிறப்பாகவே செய்வீர்கள். ஏனெனில், நீங்கள் அதை அன்போடு செய்கிறீர்கள்.

நம்மில் பெரும்பாலானோர், ஏதோ ஒரு காரணத்தினால், நம்முடைய பேரானந்தத்தையும் நம்முடைய வேலையையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டோம். நாம் தினசரி செய்து வரும் வேலையை இப்போது நாம் நேசிப்பதில்லை. ஆனால் வாழ்க்கை அப்படி இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பலர் தங்களுக்குப் பிடித்தமான வேலையைச் செய்து கொண்டு பேரானந்தத்துடன் இருக்கிறார்கள் என்பதால், அது உங்களுக்கும் சாத்தியம்தான். உங்களுக்குப் பிடித்தமான வேலை எது என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஏனெனில் உங்களுடைய பேரானந்தம் அதோடு தொடர்புடையது. அதனால் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்களுடைய பேரானந்தத்தை நீங்கள் பின்பற்ற வேண்டியது மட்டும்தான். அது உங்களுடைய கனவு வாழ்க்கைக்கு உங்களைக் கூட்டிச் செல்லும்.

## ஜி. எம். ராவ்



நான் வேலை பார்த்தாக வேண்டும் என்பதற்காக நான் வேலை பார்ப்பதில்லை. நான் பார்க்கும் வேலை எனக்கு மகிழ்ச்சியூட்டுவதால்தான் நான் அதைச் செய்து வருகிறேன். என்னைப் பொறுத்தவரை, செய்யும் தொழிலே

தெய்வம். அது மகிழ்ச்சியையும் மன நிறைவையும் எனக்கு மட்டுமல்லாது என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கும் கொடுக்கிறது.

**லிஸ் முர்ரே**



"நான் வேலக்குப் போகிறேன்," என்று நான் ஒருபோதும் சொன்னதில்லை.

"நான் வேலைக்குப் போகிறேன்," என்று ஒருபோதும் சொல்லத் தேவையற்ற எந்த ஒரு வேலையை உங்களால் கற்பனை செய்ய முடியும்? உங்களுடைய வேலை உங்களுடைய தனித்துவமான திறமைக்கோ அல்லது உங்களுடைய ஆழ்விருப்பத்திற்கோ தீனி போடுவதாக இருக்க வேண்டும். உங்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டாலும் கொடுக்கப்படாவிட்டாலும் நீங்கள் செய்யத் தயாராக இருக்கும் ஒரு வேலையாக அது இருக்க வேண்டும்.

**லிஸ் முர்ரே**



நான் செய்யும் வேலையை நான் ரசிக்க வேண்டும். அது எனக்கு சுவாரசியம் ஊட்டாவிட்டால், அது ஒரு மாயாஜாலம்போல எனக்குப் படாவிட்டால், அதில் என்னால் தொடர்ந்து இருக்க முடியாது. நான் சிறுமியாக இருந்தபோது கிறிஸ்துமஸ் தினத்தன்று காலையில் எவ்வளவு உற்சாகமாகத் துள்ளி எழுவேனோ, அதுபோல உற்சாகமாகத் துள்ளியெழ வைக்கின்ற ஒரு வேலையைச் செய்யவே நான் விரும்புகிறேன். நான் ஏதோ ஒன்றைக் குறித்து பயந்தாலோ அல்லது ஏதோ ஒன்று முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்பினாலோ, ஏதோ ஒன்று மாற வேண்டும் என்பதற்கான அறிகுறி அது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



என்னுடைய நிறுவனமான மைன்ட் கேன்டியில், தங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளாத, தங்கள் வேலையில் குதூகலத்தை அனுபவிக்க முடிகின்ற நபர்களுடன் வேலை செய்வதையே நாங்கள் பெரிதும் விரும்புகிறோம். இவை எதுவுமே வாழ்வா சாவா பிரச்சனை இல்லை. ஆனால் சிலர் அவ்வாறு நினைக்க

விரும்பக்கூடும். வேலையில் நீங்கள் குதூகலத்தை அனுபவிக்கும்போது, வாழ்க்கையை நீங்கள் ரசித்து அனுபவிப்பீர்கள், நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

"நான் பெரும் செல்வத்தைக் குவிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் என் வாழ்க்கையைத் துவக்கவில்லை. வாழ்க்கை சவால்மிக்க ஒன்றாக இருக்க வேண்டும், அது சுவாரசியமாக இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்பினேன் — இப்போதும் அதைத்தான் விரும்புகிறேன் . . . ஆனால் வேலையில் நான் குதூகலமாக இருந்தால், பணம் தானாகவே வந்து குவியும் என்பதை நான் கண்டுபிடித்துள்ளேன்."

**ரிச்சர்டு பிரான்சன்**
தொழில்முனைவர்/மாபெரும் தொழிலதிபர்

## உங்களுக்கு உஜ்மைலாக இருங்கள்

உங்கள் வேலை உங்களுக்குப் பேரானந்தம் தரும் ஒன்றாக அமைந்தால், நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நீங்கள் நேசிக்கும் வேலையைச் செய்வதற்குப் பதிலாக, நீங்கள் செய்தே ஆக வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்ற ஒரு வேலையை நீங்கள் செய்வது, நீங்கள் ஒரு பொய்யான வாழ்க்கையை வாழ்கிறீர்கள் என்று பொருள்படும். எண்ணற்ற அருமையான மனிதர்கள், நல்லெண்ணம் கொண்ட பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும், சமுதாயத்தாலும், நண்பர்களாலும் அல்லது தங்கள் கூட்டாளிகளாலும் தங்கள்மீது திணிக்கப்பட்ட ஒரு பரிதாபமான வாழ்க்கையைக் கடனே என்று வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இன்று உலகெங்கும் அதிகரித்து வரும் மனநோய்க்கு, மக்களிடம் நிலவும் இப்படிப்பட்ட அவல நிலைதான் காரணம். உங்களைப் பற்றிப் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பது குறித்துக் கவலைப்படாமல், உங்களுடைய பேரானந்தத்தை நீங்கள் பின்தொடர்ந்தால், நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**ஜான் பால் டிஜோரியா**



சாதாரணமாக நடைமுறையில் இல்லாத அல்லது பலருக்கு உடன்பாடு இல்லாத நிறைய விஷயங்களைச் செய்ய ஒருவர் விரும்பக்கூடும். ஆனால் அது உங்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் என்றால், கண்ணை மூடிக் கொண்டு அதைச் செய்யக் கிளம்பிவிடுங்கள். நீங்கள் உங்களுக்கு உண்மையாக நடந்து கொள்வதில் பல வெகுமதிகள் அடங்கியுள்ளன.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



நான் கல்லூரிப் படிப்பை உதறிவிட்டு, புத்திசாலித்தனமாக ஒரு வங்கி வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். ஆனால் வெகு விரைவிலேயே அது எனக்கு ஒத்து வராது என்பதைப் புரிந்து கொண்டேன். அது என் ஆன்மாவோடு

பேசவில்லை. கிட்டத்தட்ட எந்த வேலையைச் செய்வதற்கும் நான் தகுதியானவன் அல்ல என்பதை நான் உணர்ந்து கொண்டேன். நான் கல்லூரிப் படிப்பை உதறிவிட்டு, புத்திசாலித்தனமாக ஒரு வங்கி வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். ஆனால் வெகு விரைவிலேயே அது எனக்கு ஒத்து வராது என்பதைப் புரிந்து கொண்டேன். அது என் ஆன்மாவோடு பேசவில்லை. கிட்டத்தட்ட எந்த வேலையைச் செய்வதற்கும் நான் தகுதியானவன் அல்ல என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

## ஜி. எம். ராவ் நாம்



நாம் ஒரு கனவைப் பின்தொடர்ந்து செல்லும்போது, குடும்பத்தினர், நண்பர்கள், நிறுவனத்தின் பங்குதாரர்கள் என்று பல திசைகளில் இருந்தும் இழுக்கப்படுவோம். என் வாழ்வில் அது போன்ற எண்ணற்றச் சந்தர்ப்பங்களை நான் சந்தித்துள்ளேன். உதாரணமாக, நானும் என் சகோதரர்களும் கூட்டாகச் சேர்ந்து எங்கள் குடும்பத் தொழிலை நடத்தி வந்தோம். ஆனால் அவர்களுடைய

விரும்பங்கள் வேறு மாதிரியாக இருந்ததால், நான் அதிலிருந்து விலகி என்னுடைய கனவுகளைப் பின்தொடர்ந்து செல்ல முடிவு செய்தேன்.

தன் சொந்தக் கனவுகளைப் பின்தொடர்ந்து செல்லத் தேவையான துணிச்சல் ஜி. எம். ராவிடம் இருந்தது. அவர் எப்படிப்பட்டச் சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார் என்று பாருங்கள். விமான நிலையங்கள், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள் போன்றவற்றை அவர் கட்டியெழுப்பியிருக்கிறார், நகரங்களை நிர்மாணித்திருக்கிறார். அவர் தன் நாட்டை உயர்த்தியதோடு, லட்சக்கணக்கானோரின் வாழ்க்கை மேம்பாடு அடையவும் உதவியுள்ளார். அவர் தன் சொந்தப் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்ல முடிவு செய்ததுதான் அவை எல்லாவற்றிற்கும் காரணம்.

நீங்கள் நேசிக்கும் ஒன்றைச் செய்வதற்கும், பெரும்பான்மையான மக்களுக்கு எதிராகச் செல்வதற்கும் துணிச்சல் தேவை. எல்லோரையும் திருப்திப்படுத்த முயல்வதை நீங்கள் முதலில் நிறுத்த வேண்டும். அவரவர்கள் அவரவர்களைத் திருப்திப்படுத்திக் கொள்ளட்டும். அது உங்கள் வேலையல்ல. இது உங்கள் வாழ்க்கை. நீங்கள் உங்கள் இதயம் கூறுவதற்குச் செவிமடுங்கள். உங்களுக்கென்று தனித்துவமான ஏதாவது ஒரு திறமை உங்களிடம் கண்டிப்பாக இருக்கும். அதை வெளிக் கொணர வேண்டியது மட்டும்தான் உங்கள் வேலை.

> "நீங்கள் வெகுவாக விரும்பும் ஒரு வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பிடிக்காத வேலைகளை நீங்கள் தொடர்ந்து செய்து வந்தால், உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்றுதான் அர்த்தம். அது உங்களுடைய சுயவிபரக் குறிப்பை மேம்படுத்த உதவும் என்று நீங்கள் நினைத்திருக்கலாம். வயதான பிறகு திருமண வாழ்க்கையை அனுபவிப்பதற்காக இளமையைச் சேமித்து வைப்பதைப் போன்றது அது."

**வாரன் பஃபே**

தொழிலதிபர் மற்றும் முதலீட்டாளர்

**அனஸ்தேசியா சோரே**



உங்கள் வாழ்க்கையை நன்றாக அலசி ஆராயுங்கள். நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்களோ அங்கே நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக நீங்கள் கருதினால், அது உங்களுக்கு நல்லது. நீங்கள் மகிழ்ச்சியாக இல்லையெனில், தீவிரமாக அலசுங்கள். "எது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்? நான் ஒரு வேலையில் இருக்கிறேன். ஆனாலும் மகிழ்ச்சியற்று இருக்கிறேன்." அப்படியானால் வேலையை மாற்றுங்கள்.

நீங்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது என்று முடிவு செய்துவிட்டீர்கள், ஆனால் அதை எப்படிச் செய்வது என்று உங்களுக்குத் தெரியவில்லை என்றால் நீங்கள் முதலில் செய்ய வேண்டிய காரியம் உங்களுடைய பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்வதாகத்தான் இருக்க வேண்டும்.

**அனஸ்தேசியா சோரே**



நீங்கள் ஒரு கணக்கராக இருக்கிறீர்கள். சுத்தமாக மகிழ்ச்சியற்று இருக்கிறீர்கள். ஒருவேளை உங்களுக்குச் சமையலில் விருப்பம் இருக்கலாம். அப்படியென்றால் ஒரு சமையற்காரராக ஆகுங்கள். ஆனால் நீங்கள் பார்த்து வரும் வேலையை உடனடியாக விட்டுவிடாதீர்கள். ஏனெனில் உங்களுக்கு மாதாந்திரச் செலவுகள் இருக்கும். ஆனால் ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். "நான் இதைப் பகுதிநேர வேலையாகச் செய்யப் போகிறேன்." உங்களுக்கு ஒரு திட்டம் இருக்க வேண்டும். நான் சம்பாதித்த ஒவ்வொரு சல்லிக் காசையும் நான் என் கனவைப் பின்தொடரவே பயன்படுத்தினேன். உங்களுடைய மாதாந்திரச் செலவுகளை ஈடுகட்டத் தேவையான பணம் உங்களுக்குத் தொடர்ந்து கிடைக்காவிட்டால், அதனால் ஏற்படும் மன உளைச்சல் உங்கள் கனவுகளை நிர்மூலமாக்கிவிடும்.

அனஸ்தேசியாவுக்கு ஒரு குடும்பம் இருந்தது. எனவே, தான் துவக்கவிருந்த வியாபாரம் குறித்து இரண்டு வருடங்களாகத் தீவிரமாகத் திட்டமிட்டுவிட்டுத்தான் அவர் அதில் குதித்தார். இன்று ஓர் உலகளாவிய நிறுவனம் அவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அவர் தன் கனவு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆனால் அனஸ்தேசியா சரியான

திட்டம் ஒன்றை உருவாக்கித் தன் பேரானந்தத்தைப் பின்தொடர்ந்து செல்லாமல் இருந்திருந்தால், இன்றுகூட வேறொருவரின் அழகு நிலையத்தில் தினமும் பதினான்கு மணிநேரம் உழைத்துக் கொண்டிருந்திருப்பார்.

உங்களுடைய பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்ல உங்களுக்கு ஏராளமான வழிகள் இருக்கின்றன. நீங்கள் எதைச் செய்ய விரும்புகிறீர்களோ, அது குறித்த ஓர் இலவசப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிலுங்கள். நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்து முடித்துள்ளவர்களைப் பற்றிய புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளை வாங்கிப் படியுங்கள். உங்களை அத்துறைக்குள் நுழைத்துக் கொள்வதற்கு எந்த வகையான வேலையை உங்களால் பெற முடியும் என்பதைக் கண்டுபிடியுங்கள். இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், வலைப்பூவில் எழுதுங்கள், ஆராய்ச்சியில் ஈடுபடுங்கள். உலகமே உங்கள் விரல் நுனியில்தான் இருக்கிறது. முன்பு எப்போதையும்விட இன்று சந்தர்ப்பங்கள் அதிகமாகக் குவிந்து கிடக்கின்றன. நீங்கள் எதைச் செய்ய விரும்புகிறீர்களோ, அதன்மீது உங்களால் முடிந்த அளவுக்கு ஒருமித்தக் கவனம் செலுத்துங்கள்.

## லைர்டு ஹாமில்டன்



நீங்கள் இப்போது இருக்கும் நிலையிலிருந்து நீங்கள் விரும்பும் ஒன்றைச் செய்யும் நிலைக்கு எவ்வாறு செல்வது? நீங்கள் விரும்பும் ஒன்றைச் செய்வது உங்கள் கையைக் கடிக்காமல் இருப்பதற்காக வேறு ஏதாவது ஒன்றையும் கூடவே செய்து வாருங்கள். திடீரென்று,

நீங்கள் நேசிக்கும் அந்த வேலையை நீங்கள் செய்து கொண்டிருப்பதையும், அந்த வேலை நீங்கள் வாழ்க்கை நடத்தத் தேவையான பணத்தை உங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதையும் நீங்கள் உணர்வீர்கள். அந்த மாற்றம் நீங்கள் கற்பனை செய்துள்ளதைவிட மிக விரைவாகவே நடக்கும்.

**மாஸ்டின் கிப்**



உங்களுக்கு வேறு பொறுப்புகள் இருந்தால், நீங்கள் விரும்பும் வேலையை ஒரு துணைத் தொழிலாகத் துவக்கி, அதைப் படிப்படியாக உருவாக்கிக் கொள்ளலாம். இறுதியில் ஒருநாள், நீங்கள் அதில் முழுமையாகக் குதித்துவிடலாம்.

"உங்கள் பேரானந்தத்தைப் பின்தொடர்ந்து செல்லுங்கள். முன்பு வெறும் சுவர்கள் இருந்த இடத்தில் பிரபஞ்சம் இப்போது கதவுகளைத் திறக்கும்."

**ஜோசப் கேம்பெல்**
தொன்மவியலாளர்

நீங்கள் இக்கணமே உங்கள் பேரானந்தத்தைப் பின்தொடர்ந்து செல்லலாம். ஏனெனில், உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு காலகட்டத்தில் நீங்கள்

வெகுவாக விரும்பிய ஒன்றை, நீங்கள் இன்னும் செய்யாமல் இருக்கக்கூடும். நடனம், பாட்டு, அலைச்சறுக்கு, மலையேற்றம் போன்றவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உந்துதல் உங்களுக்கு ஏற்பட்டுள்ளதா ? நடிப்பது, தோட்டம் போடுவது, ஓவியங்கள் வரைவது, ஆடைகளை வடிவமைப்பது, வீடுகளின் உட்புறத்தை வடிவமைப்பது போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கும் பயிற்சி வகுப்புகளில் சேர வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டுள்ளதா? அல்லது ஏதாவது ஒரு குறிப்பிட்ட இசையைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்து அந்த இசைக் கருவியை மீட்ட வேண்டும் என்று நீங்கள் ஏங்கியதுண்டா? ஏதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டை நோக்கி நீங்கள் கவரப்பட்டது உண்டா? அல்லது ஒரு குறிப்பிட்ட மொழி பேசப்படுவதைக் கேட்டு உங்கள் இதயம் ஆனந்தத்தால் குதித்தது உண்டா? சிறு வயதில் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று வெகுவாக ஆசைப்பட்டு, வளர்ந்த பிறகு வாழ்க்கையை ஓட்டுவதற்காக அந்தக் கனவை நீங்கள் தொலைத்தது உண்டா? எப்போதுமே எதைச் செய்ய நீங்கள் மிகவும் விரும்பி வந்துள்ளீர்கள்?

பெரும்பாலான மக்கள் இந்த உந்துதலை அலட்சியம் செய்துவிடுகின்றனர் அல்லது அதன்மேல் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிடுகின்றனர். அது ஒன்றும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்றோ அல்லது தங்களுடைய வாழ்க்கையில் அது பொருந்தாது என்றோ அவர்கள் முடிவு கட்டிவிடுவதுதான் அதற்குக் காரணம். ஆனால், குறிப்பிட்ட ஒன்றைச் செய்வதற்கு உங்களுக்கு ஏற்படும் அந்த உந்துதல், நீங்கள் உங்களுடைய பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்று பிரபஞ்சம் உங்களுக்கு விடுக்கும் அழைப்புதான். அந்தக் குறிப்பிட்ட விஷயம் நிச்சயமாக உங்கள் கனவுகளுக்கான பாதையோடு பிணைக்கப்பட்டுள்ளது. இப்புவியில் உங்கள் கண்ணோட்டத்திலிருந்து உங்களால் அந்தத் தொடர்பைக் காண முடியாது. ஆனால் உங்களை உங்கள் கனவுகளை நோக்கி அழைத்துச் செல்லவிருக்கின்ற பாதை அதுதான் என்பதைப் பிரபஞ்சத்தால் துல்லியமாகப் பார்க்க முடியும்.

## உங்கள் இதயதைச் சுண்டி இழுக்கும் அந்த விஷயம்

நீங்கள் எதை நோக்கிக் கவர்ந்திழுக்கப்படுகிறீர்கள்? எது உங்களை ஆட்டுவிக்கிறது? எதைச் செய்வதை நீங்கள் எப்போதும் விரும்பி வந்திருக்கிறீர்கள்? அந்த உந்துதலைப் பின்பற்றிச் செல்லுங்கள், உங்களுடைய பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள். அதற்கும் உங்கள் கனவிற்கும் தொடர்பு இருப்பதாக நீங்கள் கருதாவிட்டாலும், அதுதான் உங்கள் கனவைப் பிணைக்கும் இணைப்புச் சங்கிலியாக இருக்கப் போகிறது — என் மகளுக்கு நிகழ்ந்ததைப்போல.

என் மகள் புத்தகங்களை வாசிக்கக் கற்றுக் கொண்ட நாளிலிருந்தே, தான் வளர்ந்ததும் ஓர் எழுத்தாளராக ஆகப் போவதாகக் கூறி வந்தாள். எழுதுவதோடு கூடவே, வேறு இரண்டு விஷயங்களிலும் அவளுக்குப் பெரும் ஈடுபாடு இருந்தது: ஒன்று, இயற்கையோடு இருப்பது, மற்றொன்று குதிரையேற்றம். தான் வளர்ந்து பெரியவளாகும்வரை அவள் இந்த மூன்று விஷயங்களிலும் சம அளவு ஈடுபாடு காட்டி வந்தாள். ஆனால் அமெரிக்காவிற்கு அவள் இடம்பெயர்ந்தபோது அவள் தன் குதிரைகளை விட்டுவிட்டு வர நேர்ந்தது.

நாடுவிட்டு நாடு இடம்பெயர்ந்ததில், எழுத்தாளராக ஆக வேண்டும் என்ற அவளுடைய வாழ்க்கைக் கனவு கிடப்பில் போடப்பட்டது. அதற்குப் பதிலாக, இன்னொரு கனவு அவளை ஆட்கொண்டது — கச்சிதமான ஒருவரை வாழ்க்கைத் துணைவராக அடைந்து ஒரு குடும்பத்தை உருவாக்குவதுதான் அது. தன் வாழ்க்கைத் துணைவரிடம் என்னென்ன குணநலன்களெல்லாம் இருக்க வேண்டும் என்று அவள் ஒரு பட்டியலிட்டாள். ஆனால் ஒருசில மாதங்களுக்கு அந்தக் கனவு நாயகன் அவள் கண்களில் தென்படவேயில்லை.

பின் அவள் தன் பேரானந்தத்தைப் பின்தொடர்ந்து செல்ல முடிவு செய்தாள். குதிரையேற்றப் பயிற்சி வகுப்புகளில் அவள் கலந்து கொண்டாள், மீண்டும் எழுதத் துவங்கினாள், இயற்கை எழில் சூழ்ந்த ஓரிடத்தில் ஒரு வீட்டை வாங்கினாள். அவளுடைய சிறிய வீட்டில் ஏகப்பட்ட வேலைகள் செய்யப்பட

வேண்டியிருந்தன. ஆனால் அந்த வீடு இயற்கையால் சூழப்பட்டு இருந்ததால், அவள் பேரானந்தத்தோடு அதில் வசித்து வந்தாள்.

என் மகள் தன் பேரானந்தத்தைப் பின்பற்றிச் சென்றபோது இதுதான் நிகழ்ந்தது. குதிரையேற்ற பயிற்சியின்போது, அவளுக்கு ஒரு புதிய குதிரை கொடுக்கப்பட்டது. அவள் அதில் ஏறி அமர்ந்ததும் அவளும் அக்குதிரையும் இரண்டறக் கலந்தனர். அவள் தன் கனவுக் குதிரையைக் கண்டுகொண்டாள். தவணை முறையில் அக்குதிரையை வாங்கிக் கொள்ளவும் அவளுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. குழந்தைகள் புத்தகம் ஒன்றிற்கான கதைக் கரு அவளுக்குத் தோன்றியது. விரைவில் அவள் தன் முதல் புத்தகத்தை எழுதி முடித்தாள். இப்போது அவளிடம் தன்னுடைய கனவுக் குதிரை இருந்தது, அவள் ஒரு புத்தகத்தை எழுதி முடித்திருந்தாள், இயற்கை எழில் கொஞ்சும் ஓர் இடத்தில் அவள் வசித்து வந்தாள்.

பேரானந்தம் சூழ்ந்திருந்த அக்காலகட்டத்தில்தான் என் மகள் தன் கச்சிதமான வாழ்க்கைத் துணைவரைச் சந்தித்தாள்.

கச்சிதமான வாழ்க்கைத் துணைவர் வேண்டும் என்ற அவளுடைய கனவு கைகூடி வந்த இரண்டு மாதத்திற்குள், ஒரு நூலாசிரியராக ஆக வேண்டும் என்ற அவளுடைய நீண்டகாலக் கனவும் நிறைவேறியது; ஒரு முக்கியப் பதிப்பாளர் அவளுடைய புத்தகத்தைப் பிரசுரிக்க முன்வந்தார். இவை போதாதென்று, அவளுடைய வீட்டில் செய்யப்பட வேண்டியிருந்த வேலைகளுக்கும் அப்போதே தீர்வு கிடைத்தது — ஏனெனில் அவளுடைய வாழ்க்கைத் துணைவர் ஒரு கட்டடக் கலைஞரின் மகன்!

உங்களால் எல்லாவற்றையும் பெற முடியும். உங்கள் பேரானந்தத்திற்கும் உங்கள் கனவிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று நீங்கள் நினைத்தாலும், அதை நீங்கள் மனப்பூர்வமாகப் பின்தொடர்ந்து செல்லுங்கள். ஒட்டுமொத்தப் பாதையையும் உங்களால் பார்க்க முடியாவிட்டாலும், உங்களுடைய பேரானந்தம்தான் உங்களுடைய அனைத்துக் கனவுகளுக்கும் உங்களை இட்டுச் செல்லும் பிணைப்புச் சங்கிலியாகச் செயல்படும்.



## பகுதி இரண்டு

# கதாநாயகன்


BELIEF

# நம்பிக்கை

**லேன் பீச்லீ**



வாழ்க்கையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்றால் உங்களால் அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கைதான் நான் பல முறை உலகச் சாம்பியனாக ஆவதற்கு வழி வகுத்தது.

**லைர்டு ஹாமில்டன்**



எல்லா விஷயங்களும் சாத்தியம் என்று நீங்கள் நம்ப வேண்டும் — உங்களால் முடியும் என்ற நம்பிக்கை

உங்களுக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

உங்கள்மீதான உங்கள் நம்பிக்கைதான் ஒரு கதாநாயகனுக்கு இருக்க வேண்டிய சக்திவாய்ந்த திறன்களில் ஒன்று. அந்த நம்பிக்கை, கடினமான, சவாலான சூழ்நிலைகளின் ஊடாக நீங்கள் வெற்றிகரமாகப் பயணிக்கவும், இறுதியில் உங்கள் கனவை நனவாக்கவும் வழி வகுக்கும்.

பீட் கேரல், தெற்குக் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் சேர்ந்த புதிதில், ஒரு திறமையான இளம் கால்பந்து வீரருக்குப் பயிற்சி அளித்தார். அந்தக் கால்பந்தாட்ட வீரரிடம் இருந்த திறமை வீணாகிக் கொண்டிருந்தது. எதிர்மறையான சுயபேச்சு அவரிடம் அதிகமாக இருந்ததுதான் அந்த ஆட்டக்காரரிடம் இருந்த பிரச்சனை. சில சமயங்களில் அது அவருடைய திறமையை மிகவும் பாதித்தது. தான் தவறுகள் செய்யவிருந்ததாக அந்த வீரர் முன்கூட்டியே எதிர்பார்த்ததைத் தெரிந்து கொண்ட பீட் கேரல், அந்த வீரரின் எதிர்மறையான சுயபேச்சை அவரிடமிருந்து முற்றிலுமாகக் களைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பீட் கேரல் சரியான சமயத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதால், அந்த விளையாட்டு வீரர் தன்மீது நம்பிக்கை கொள்ளத் துவங்கினார். இரண்டு பருவங்களுக்குப் பிறகு, அனைத்துக் கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்துப் போட்டிகளில், சிறந்த காலபந்தாட்ட வீரருக்கான ஹயிஸ்மன் கோப்பையை அவர் வென்றார். பின்னர் அவர் தேசியக் கால்பந்தாட்டக் குழுவில் மிகச் சிறந்த ஆட்டக்காரராக ஜொலித்தார். அதன் மிகச் சிறந்த வீரர் என்ற பெருமையையும் அவர் அடைந்தார். அவருடைய பெயர் கார்சன் பாமர்.

## பீட் கேரல்



ஒரு பயிற்றுவிப்பாளர் என்ற முறையில், தங்களுடைய சொந்த நம்பிக்கைகள் மற்றும் எண்ணங்களின் சக்தியை எண்ணற்ற ஆட்டக்காரர்களுக்கு நான் புரிய வைத்துள்ளேன். ஒருவர் தன்மீது எவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்துள்ளார் என்பதற்கான சிறந்த அளவீடு அவருடைய கயபேச்சுதான். ஒருவர் தன் கனவுகளை அடைவதற்கு நேர்மறையான சுயபேச்சு ஒரு முக்கியக் காரணி என்பதை நான் அழுத்தம் திருத்தமாக எப்போதுமே கூறி வந்துள்ளேன்.

**அனஸ்தேசியா சோரே**



நான் மக்களுக்கு விடுக்கும் செய்தி இதுதான்: கையில் சல்லிக்காக இல்லாமல், இங்கு பேசப்படும் மொழி தெரியாமல் இங்கு வந்திறங்கிய என்னாலேயே இவ்வளவு தூரம் முன்னேற முடிந்துள்ளது என்றால், அதை

எவரொருவராலும் சாதிக்க முடியும். நீங்கள் உங்கள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும், அவ்வளவுதான்.

ஆனால் உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தால்?

உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கை இல்லாமல் இருப்பதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். உங்கள் சிந்தனையின் மூலம் தவறுதலாக நீங்கள் உங்கள்மீது நம்பிக்கையின்மையை வளர்த்துக் கொண்டீர்கள், எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, அதுதான் உண்மை என்று நீங்கள் நம்பத் துவங்கிவிட்டீர்கள். நீங்கள் பிறக்கும்போது உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கை இருந்தது. இன்று அது உங்களிடம் காணப்படாவிட்டால், மற்றவர்கள் உங்களைப் பற்றிக் கூறிய விஷயங்களை நீங்கள் உண்மையென்று நம்பத் துவங்கியதுதான் அதற்குக் காரணம். அதாவது, உங்களைப் பற்றிய எதிர்மறை எண்ணங்களை நீங்களே உங்களுக்குள் வளர்த்துக் கொண்டீர்கள் — உங்கள் சுயபேச்சின் வாயிலாக அதை நீங்கள் செய்தீர்கள்.

## மாஸ்டின் கிப்



தங்களால் முடியாது என்று மக்கள் நம்புவதுதான் அவர்களுடைய வெற்றிக்குக் குறுக்கே நிற்கும் முதல் காரணியாகும். ஒன்று சாத்தியமில்லை என்று நீங்கள் நம்பினால் அது முழுக்க முழுக்க உண்மையாகத்தான்

இருக்கும். ஒட்டுமொத்தப் பிரபஞ்சமும் உங்களுக்கு எதிராகச் செயல்படும். பிரபஞ்சம் ஒரு மோசமான இடம் என்பது அதற்குக் காரணமல்ல, மாறாக, நீங்கள் அப்படித்தான் பிரபஞ்சத்துடன் உறவாடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய குறைவான சுயமதிப்பிற்கும், ஒரு விஷயம் ஏன் சாத்தியமில்லை என்பதற்குமான அத்தாட்சியை மட்டுமே நீங்கள் தேடுவீர்கள்.

நம்பிக்கையின்மையைக் களைவது மிகவும் சுலபம். முதலில் உங்களைப் பற்றி நீங்கள் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கு நேரெதிரான எண்ணங்களைச் சிந்திக்கத் துவங்குங்கள்: உங்களால் முடியும் என்றும், அதற்குத் தேவையான அனைத்தும் உங்களுக்குள் இருக்கிறது என்றும் சிந்திக்கத் துவங்குங்கள். உங்களிடம் சக்திமிக்கத் திறமைகள் இருக்கின்றன என்பதையும், காலமும் வேளையும் கூடி வரும்போது அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது துல்லியமாக உங்களுக்குத் தெரிய வரும் என்பதையும் உங்களுக்கு நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். ஒரு நேரத்தில் ஓரடி எடுத்து வைக்க வேண்டியது மட்டும்தான் உங்கள் வேலை என்பதையும் உங்களுக்கு நீங்களே நினைவூட்டிக் கொள்ளுங்கள்.

## உங்கள் ஆழ்மனம்

உங்கள் கனவை உங்களால் நனவாக்க முடியும் என்று நீங்கள் சிந்திக்கும்போது, நீங்கள் உங்கள் ஆழ்மனத்தின் நிரல்களில் ஒன்றில் மாற்றத்தை ஏற்படுத்துகிறீர்கள். உங்கள் ஆழ்மனம் ஒரு கணினியைப் போன்றது. அதில் ஒரே சமயத்தில் பல நிரல்கள் ஓடிக் கொண்டிருக்கும். அவை அனைத்தும் உங்களால் ஏற்றப்பட்டவைதான். ஒன்று, அவை உங்களுடைய எண்ணங்களால் உருவாக்கப்பட்டிருக்கும், அல்லது உங்களைப்

பற்றிப் பிறர் கொண்டிருக்கும் எண்ணங்களை நீங்கள் ஏற்றுக் கொண்டதால் அவை உருவாக்கப்பட்டிருக்கும். இதை உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் செய்து கொண்டே இருக்கிறீர்கள்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



நீங்களே உங்கள்மீது நம்பிக்கை வைக்காவிட்டால் — உங்களால் ஒன்றைச் சாதிக்க முடியும் என்று நீங்கள் நம்பாவிட்டால் — வேறு யாரும் அதை உங்களுக்காகச் செய்யப் போவதில்லை.

உங்கள் ஆழ்மனத்தில் உள்ள அனைத்து நிரல்களும் உங்கள் எண்ணத்தால் உருவாக்கப்பட்டவையே. எனவே, வேறோர் எண்ணத்தால் மட்டுமே பழைய நிரலை அழித்துவிட்டு, அதனிடத்தில் ஒரு புதிய நிரலை உருவாக்க முடியும்.

உங்களால் எல்லாவற்றையுமே சாதிக்க முடியும் என்ற எண்ணத்தை நீங்கள் முதலில் உருவாக்கிக் கொள்ள முயலும்போது, உங்கள் ஆழ்மனத்தில் இருக்கும் "தடுப்புச் சுவர்" அதைத் தடுத்துவிடும். அப்புதிய எண்ணங்கள் உண்மையானவை அல்ல என்று அது கூறும். ஆனால் உங்களால் முடியும் என்ற எண்ணத்தை நீங்கள் மீண்டும் மீண்டும் உங்கள் ஆழ்மனத்தில் விதைக்கும்போது, இறுதியில் அது ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவிக்கும். அப்போது நீங்கள் உங்கள் நிரலை மாற்றியிருப்பீர்கள்.

## லேன் பீச்லீ



## உண்மையிலேயே விரும்பும்பட்சத்தில், எவரொருவராலும் சுயநம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடியும்.

பலப்பல வருடங்களாக — கிட்டத்தட்ட உங்கள் வாழ்க்கை முழுவதும் — உங்கள்மீது நீங்கள் நம்பிக்கைக் கொள்ளாமல் இருந்திருந்தும்கூட, ஒருமித்தக் கவனத்துடன்கூடிய முயற்சியைக் கொண்டு மிகக் குறுகிய காலத்திலேயே உங்களால் உங்கள்மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடியும் என்பது ஆச்சரியமான விஷயம்.

இரவில் நீங்கள் தூங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நேரம்தான் உங்கள் ஆழ்மனத்தின் நிரல்களை மாற்றச் சரியான நேரம். நீங்கள் பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாக இருக்கும் அந்த நேரத்தில், உங்களால் எதையும் செய்ய முடியும், உங்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தை உங்கள் ஆழ்மனத்தில் நீங்கள் விதைத்தால், அது ஆழ்மனத்தை முடுக்கிவிடும். நீங்கள் கண்ணயர்வதற்கு முந்தைய கடைசி எண்ணம் "உங்கள் மீதான நம்பிக்கை" என்ற எண்ணமாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஏனெனில், உங்களுடைய கடைசி எண்ணம் ஆழ்மனத்தின் தடுப்புச் சுவரைத் தாண்டிச் சென்று, அதில் பதிவாகிவிடும். ஓர் எண்ணம் ஆழ்மனத்தின் தடுப்புச் சுவரைத் தாண்டிச் சென்றுவிட்டால், ஆழ்மனம் அதை உண்மை என்று ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

நம்பிக்கை என்னும் புதிய நிரல் உங்கள் ஆழ்மனத்தில் பதிவானவுடன், அது அதனைச் செயல்படுத்தத் துவங்கிவிடும், நீங்கள் உங்கள்மீது கொண்டுள்ள

நம்பிக்கை உண்மை என்பதை நிரூபிக்கப் புறப்பட்டுவிடும். உங்கள்மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் உங்கள் வாழ்வில் திடீரென்று தோன்றுவர். அல்லது உங்கள் வாழ்வில் ஏற்கனவே இடம்பெற்றிருக்கும் நபர்களிடம் இருந்து உங்களுக்குப் புதிய ஆதரவு கிடைக்கும். உங்கள் சுயநம்பிக்கையை அதிகரிக்கின்ற, உங்கள் திறமைகளை நிரூபிக்கின்ற புதிய நடவடிக்கைகளை எடுக்க அல்லது செயல்பாடுகளை மேற்கொள்ள நீங்கள் தூண்டப்படுவீர்கள்.

உங்கள் ஆழ்மனத்தில் எதை நீங்கள் நிலைப்படுத்தியிருக்கிறீர்களோ, அதுதான் உங்கள் வாழ்வில் நிகழும். ஏனெனில் உங்கள் ஆழ்மனத்தில் ஒரு புதிய நிரல் பதிவாகும்போது, அது பிரபஞ்ச மனத்திற்கு உடனடியாக அனுப்பப்பட்டுவிடுகிறது. பிரபஞ்சத்திற்குச் சமிக்கைகள் கிடைத்தவுடன், அது உங்களுடன் இணைந்து செயலாற்றி, நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதை நீங்கள் சாதிப்பதை உறுதி செய்யும் "ஒரு மனிதனின் மனம் எதை உருவாக்கி நம்புகிறதோ அதை அவன் அடைந்தே தீருவான்." என்று ஏன் கூறப்படுகிறது என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

## ஜி. எம். ராவ்



சமுதாயத்திற்கு மதிப்புமிக்க ஒன்றை வழங்க வேண்டும் என்ற என் முன்னோக்கில் நான் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தேன். என் வாழ்க்கையையே புரட்டிப் போட்டிருக்கக்கூடிய இரண்டு மாபெரும் பின்னடைவுகள் எனக்கு ஏற்பட்டும்கூட, நான் தாக்குப்பிடித்ததற்குக்

காரணம், என் மதிப்பீடுகளும் முழுமையான அர்ப்பணிப்பும், என்னை நிபந்தனையற்று ஆதரித்தப் பிரபஞ்சத்தின் திட்டத்தோடு கச்சிதமாகப் பொருந்தியிருந்ததுதான். என் மனத்தில் எந்தவொரு சந்தேகமும் ஒருபோதும் துளிர்விடவில்லை.

**லைர்டு ஹாமில்டன்**



என் கனவை என்னால் அடைய முடியும் என்று நான் மனதார நம்பினேன். நான் சாதித்தவற்றை அப்படிப்பட்ட நம்பிக்கை இல்லாமல் என்னால் அடைந்திருக்க முடியாது. ஆனால் எனக்கு ஒருபோதும் சந்தேகமே எழவில்லை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில், சந்தேகம் உங்கள்மீது தன் பிடியை இறுக்கிக் கொள்வதற்காக உங்கள் அருகே எப்போதும் வட்டமிட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் நான் சந்தேகத்தை ஆரத் தழுவிக் கொள்ளவில்லை.

உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கை இருக்கிறது என்பதால், உங்கள் கனவை நனவாக்கத் தேவையான திறமை உங்களிடம் இருக்கிறதா என்ற சந்தேகம் உங்களுக்கு ஒருபோதும் தோன்றாது என்று அர்த்தமில்லை. அப்படிப்பட்டக் கணங்களில், நீங்கள் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கையின்மீது மட்டும் உங்கள் கவனத்தைக் குவியுங்கள். ஏனெனில், அப்போது நீங்கள் உங்களுடைய ஒட்டுமொத்தப் பயணத்தையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தால், அது உங்கள் தலையைக் கிறுகிறுக்கச் செய்யும். மாறாக, அடுத்து எடுத்து வைக்க வேண்டிய ஒரு சிறிய அடியை உங்களால் எடுத்து வைக்க முடியும் என்று நம்புவது உங்களுக்கு எளிதாக இருக்கும். கதாநாயகனின் பயணத்தில் உங்களால் ஒரு சமயத்தில் ஒரே ஓர் அடியைத்தான் எடுத்து வைக்க முடியும். வெற்றி பெற்றவர்கள் அனைவரும் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்துத்தான் தங்களுடைய இலக்கை அடைந்துள்ளனர்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது உங்களுடைய நம்பிக்கை வலுவானதாக இருக்கும். நீங்கள் களைப்புற்று இருக்கும்போதோ, ஊக்கமிழந்து இருக்கும்போதோ, அல்லது உங்கள் சக்தி உங்களிடமிருந்து வடிந்து போயிருக்கும்போதோதான் சந்தேகப் பேய் உங்களை ஆட்டிப் படைக்கும். எல்லோருக்குமே அப்படிப்பட்டக் கணங்கள் இருக்கும். அக்கணங்களில் உங்களுக்குள் ஏற்படும் உணர்வு தற்காலிகமானதுதான் என்றும், அது விரைவில் மறைந்துவிடும் என்றும் உங்களுக்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்ல வேண்டியதற்கான முக்கியக் காரணம் இதுதான். ஏனெனில், அப்படிச் செய்யும்போது, நீங்கள் மகிழ்ச்சியாக உணர்வீர்கள், அதன் விளைவாக உங்களுடைய நம்பிக்கையும் வலுப் பெறும்.

**ஜி. எம். ராவ்**



நீங்கள் உங்கள் கனவுகளில் நம்பிக்கையை முதலீடு செய்ய வேண்டும். நீங்கள் விரும்புவது, உங்களுக்கு நிகழப் போகும் மிகச் சிறப்பான விஷயங்களில் ஒன்று என்று நம்பிக்கையோடு இருங்கள். அந்த நம்பிக்கை இல்லாமல் நீங்கள் எது செய்தாலும், அது அரைகுறை மனத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற உறுதியற்ற, முழு முயற்சியற்ற, நிலையற்ற நடவடிக்கையாகத்தான் இருக்கும். பல சமயங்களில், இந்த நம்பிக்கையின்மைக்கு, தோல்வி குறித்த பயம் ஒரு முக்கியக் காரணமாக விளங்குகிறது.

**மாஸ்டின் கிப்**



நான் மனது வைத்தால் என்னால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும் என்று என் தாயார் என்னிடம் கூறினார்.

நான் அவர் கூறியதை அப்படியே நம்பினேன். எனவே, ஏதாவது ஒன்றில் நான் முழு மனத்துடன் ஈடுபட்டால், ஏதோ மிகப் பெரிய விஷயம் நிகழும் என்று முதலிலிருந்தே நான் அறிந்திருந்தேன்.

**லைர்டு ஹாமில்டன்**



என்னால் தண்ணீரில் நடக்க முடியும் என்று என் தாயார் நம்பினார். அவருக்கு என் இலக்கைவிட என்மீது அசாத்திய நம்பிக்கை இருந்தது. நான் என்மீது நம்பிக்கைக் கொள்ளத் தேவையான வலிமையை அது எனக்குக் கொடுத்தது. உங்கள்மீது நம்பிக்கை வைத்துள்ள யாராவது ஒருவர் உங்களுக்கு இருந்தால் அவரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அவருடைய அருகாமைதான் உங்களுக்குத் தேவை.

**அனஸ்தேசியா சோரே**



ஒரு சிறு விஷயம் உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும். எனக்கு இது நன்றாக நினைவிருக்கிறது. எனக்கு அப்போது ஆறு வயது. நான் என் பெற்றோரின் தையற்கடையில் இருந்தேன். என் தாயார் என்னிடம், "நான் எப்போதும் உன்னைக் கூட்டிச் செல்கின்ற அந்தக் கடை உனக்கு நினைவிருக்கிறதா? அங்கு என்ன வாங்க வேண்டும் என்று ஒரு காகிதத்தில் உனக்கு எழுதித் தருகிறேன். பணமும் தருகிறேன். நீ பேருந்தில் போய் வா. அந்தக் கடை இங்கிருந்து ஆறாவது நிறுத்தத்தில் இருக்கிறது. இறங்குவது முன், அது சரியான நிறுத்தம்தானா என்று ஓட்டுனரிடம் கேட்டுக் கொள்," என்று கூறினார். நான் அவரிடம், "அம்மா, எனக்கு ஆறு வயதுதான் ஆகிறது. எனக்குத் தெரியாது . . ." என்று ஆரம்பித்தேன். அவர் என்னை இடைமறித்து, "இல்லையில்லை. நீ மிகவும் புத்திசாலி. உன்னால் நிச்சயமாக முடியும்," என்று கூறினார். எனக்குக் கொஞ்சம் பயமாக இருந்தாலும் என் மனத்தை எது ஆக்கிரமித்து இருந்தது தெரியுமா? நான் புத்திசாலி என்றும், என்னால் முடியும் என்றும் என் தாயார் கூறினார். அவர் அப்படிக் கூறினால், நான்

உண்மையிலேயே புத்திசாலிதான் என்ற எண்ணம்தான் என் மனத்தில் இருந்தது. அவர் எழுதிக் கொடுத்தப் பொருட்களை வாங்கிவிட்டு நான் வெற்றிகரமாகத் திரும்பியபோது அவருடைய முகத்தில் அரும்பியிருந்த புன்னகையை என்னால் ஒருநாளும் மறக்க முடியாது. "நீ புத்திசாலி என்றும், உன்னால் செய்ய முடியும் என்றும் நான் அப்போதே கூறினேன், இல்லையா? உன்னைக் கண்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்," என்று அவர் என்னிடம் கூறினார்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



உங்களை ஆதரிக்கும் பெற்றோர் உங்களுக்கு இருந்தால் சுயநம்பிக்கையை வளர்த்துக் கொள்வது எளிது. ஆனால் அப்படிப்பட்டப் பெற்றோர் இல்லையென்றால், அது சாத்தியமற்றது என்று அர்த்தமல்ல.

உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கை ஏற்படச் செய்யாத பெற்றோர் உங்களுக்கு வாய்த்திருந்தாலும், உங்களுடைய குழந்தைப்பருவத்தில், உங்கள்மீது நம்பிக்கை வைத்த வேறு யாரேனும் ஒருவர் உங்கள் வாழ்வில் இருந்திருப்பார்கள். அது உங்களுடைய பாட்டியாகவோ அல்லது

தாத்தாவாகவோ, அல்லது வேறு ஓர் உறவினர், ஒரு நண்பர், ஓர் ஆசிரியர் அல்லது உங்கள் உடன்பிறப்பாகவோ இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில், உங்கள் வாழ்வில் நிச்சயமாக அப்படி ஒருவர் இருந்திருப்பார். அந்த நபர் இப்போது உயிரோடு இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, இப்போது உங்களுக்குத் தேவைப்படும் அனைத்து ஆதரவும் உங்கள் வசம் இருக்கிறது.

நீங்கள் உங்கள் கனவைப் பின்தொடர்ந்து செல்லத் தீர்மானித்தவுடன், பிரபஞ்சம் உங்களுக்குத் தன் ஆதரவை நல்கும். உங்களுடைய கனவு நனவாகத் தேவையான சூழ்நிலைகள், ஆட்பலம், மற்றும் பிற அனைத்து விஷயங்களையும் அது உங்களுக்கு வழங்கும். பிரபஞ்சத்தின் சக்தியை வசப்படுத்துவதற்கான வழி, உங்கள் ஆழ்மனத்தை நம்பிக்கைக் கொள்ளச் செய்து, அதை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதுதான்.

## லைர்டு ஹாமில்டன்



உங்களுடைய நோக்கம் அல்லது இலக்கில் நீங்கள் உங்கள் கவனத்தைக் குவித்தால், விஷயங்கள் தாமாகவே நடக்கும் என்றும், நீங்கள் முழு முயற்சியுடன் இதில் ஈடுபடுவதால் எல்லாம் கைகூடி வரும் என்றும் நம்புங்கள்.

## மாஸ்டின் கிப்



உங்களுக்கு உத்வேகமூட்டுகின்ற நபர்களின் பெயர்களை ஒரு பட்டியலிடுங்கள். பிறகு, அவர்களிடம் உள்ள எது உங்களை உத்வேகப்படுத்துகிறது என்பதையும் எழுதிக் கொள்ளுங்கள். அவர்களுடைய விடாமுயற்சியா? அவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதா? அவர்களுடைய வங்கிக் கணக்கில் இருக்கும் பணமா? அவர்களுடைய வணிகச் சின்னமா? அவர்கள் இவ்வுலகிற்காகச் செய்த விஷயங்களா? பிறகு, அவர்களிடம் உள்ள எந்த விஷயம் உங்களை உத்வேகப்படுத்துகிறதோ, அது உண்மையிலேயே உங்களின் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

**லிஸ் முர்ரே**



நாம் அனுபவங்களின் மூலம் கற்றுக் கொள்கிறோம். எனவே, உங்களைப் புதிய சூழ்நிலைகளுக்கு ஆட்படுத்திக்

கொண்டு, புதிய அனுபவங்களைப் பெறுவதன் மூலம் உங்களால் உங்கள் சுயமதிப்பை வளர்த்துக் கொள்ள முடியும், உங்கள் நம்பிக்கையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். உங்களால் முன்பு செய்ய முடியாதவற்றை இப்போது உங்களால் செய்ய முடியும். ஏனெனில், முன்பு அது குறித்த அனுபவம் உங்கள் வாழ்வில் இடம்பெற்றிருக்கவில்லை. புதிய அனுபவங்கள் புதிய நம்பிக்கைகளுக்கு வழி வகுக்கும்.

கதாநாயகனின் பயணத்தை நீங்கள் மேற்கொள்ளும்போது, உங்களிடம் ஒளிந்திருக்கும் திறமையை நீங்களாகவே கண்டுபிடிப்பதால், நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும், நீங்கள் பெறும் ஒவ்வோர் அனுபவமும் உங்களுடைய நம்பிக்கையை அதிகரிக்கும், அதற்கு வலு சேர்க்கும்.

உங்கள் கனவின்மீது நம்பிக்கை வையுங்கள், உங்கள்மீது நம்பிக்கை வையுங்கள். ஏனெனில் நீங்கள் ஒரு கதாநாயகன். உங்களுக்குள் உறைந்திருக்கும் கதாநாயகன், உங்களால் உங்கள் கனவை நனவாக்க முடியும் என்பதில் வெறும் நம்பிக்கை மட்டும் வைத்திருக்கவில்லை — அதை நீங்கள் கண்டிப்பாகச் சாதிப்பீர்கள் என்பதை அவன் அறிந்திருக்கிறான்!


VISION

# முன்னோக்கு

**மாஸ்டின் கிப்**



பைபிள் இதை மிக அருமையாக எடுத்துரைக்கிறது: முன்னோக்கு இல்லையென்றால் மக்கள் அழிந்து போவார்கள்.

**லைர்டு ஹாமில்டன்**



நான் கொண்டிருந்த ஒவ்வொரு யோசனையையும், நான் சாதித்த ஒவ்வொரு விஷயத்தையும் நான் முதலில் என் மனக்கண்ணில் பார்த்தேன். மக்கள் அதை மனக்காட்சிப்படைப்பு என்று அழைக்கிறார்கள். உங்களால் உங்கள் மனத்தில் பார்க்க முடியும் என்று கூறுவதற்கான

இன்னொரு வழிதான் அது. உங்கள் மனத்தில் பார்க்க முடியாத ஒன்றைக் குறித்து உங்களால் கனவு காண முடியாது. நீங்கள் முதலில் உங்கள் மனத்தில் பார்க்காத ஒன்றை எப்படி உங்களால் உங்கள் வாழ்வில் மெய்யாக்க முடியும்?

தங்கள் கனவு குறித்த ஒரு முன்னோக்கை உருவாக்கிக் கொள்வதன் சக்தியை விளையாட்டு வீரர்களும் தடகள வீரர்களும் நன்றாகவே அறிவார்கள். ஒலிம்பிக்கில் தாங்கள் தங்கப் பதக்கம் வெல்லும் காட்சியைக் கடந்த நான்கு வருடங்களாகத் தங்கள் மனத்தில் காட்சிப்படுத்தி வந்திருந்ததாக ஒருவர் மாற்றி ஒருவர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பொதுவாக, விளையாட்டு வீரர்கள், தாங்கள் சாதிக்க விரும்பும் விஷயங்களைத் தங்கள் மனத்தில் காட்சிப்படுத்துவதைத் தங்கள் பயிற்சியின் ஒரு பகுதியாகவே ஆக்கிக் கொண்டுள்ளனர். தங்களிடம் ஒரு குறிப்பிட்டத் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

**லேன் பீச்லீ**



ஒரு விளையாட்டு வீராங்கனை என்ற முறையில் மனக்காட்சிப்படுத்துதலில் நான் நீண்ட நேரங்களைச்

செலவழித்துள்ளேன். நமக்குத் தேவையான விளைவை ஏற்படுத்திக் கொள்ள மனக்காட்சிப்படைப்பு உத்தியைப் பயன்படுத்திக் கொள்வது விளையாட்டு வீரராக இருப்பதில் உள்ள மாபெரும் அனுகூலங்களில் ஒன்று.

**பீட் கேரல்**



நாங்கள் என்னவாக ஆக விரும்புகிறோமோ அதுவாக ஆவதற்கு மனக்காட்சிப்படைப்பை நாங்கள் எப்போதும் பயன்படுத்தி வருகிறோம். நீங்கள் எதுவாக ஆக விரும்புகிறீர்களோ அதை உங்கள் மனத்தில் காட்சியாகப் பார்க்கும் திறனுக்கு ஓர் ஆற்றல் இருக்கிறது. நீங்கள் எங்கு போக விரும்புகிறீர்களோ அதை முதலில் உங்கள் மனத்தில் காட்சிப்படுத்தாமல் அங்கு உங்களால் எவ்வாறு சென்றடைய முடியும்? நீங்கள் அங்கு எப்போது வந்தடைந்தீர்கள் என்பதுகூட உங்களுக்குத் தெரியாமல் போய்விடும்.

"இரவில் நான் கண்ணயர்வதற்குச் சற்று முன்பாக, நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பது துல்லியமாக

எனக்குத் தெரிகின்ற நிலைவரை நான் மனக்காட்சிப்படுத்துகிறேன்: நீச்சல் குளத்திற்குள் குதித்தல், மிதத்தல், நீச்சல் அடித்தல், கரணம் போடுதல், மறு முனையை அடைந்து வேகமாகத் திரும்புதல், மீண்டும் திரும்பி நீந்தி வருதல் என்று எல்லாவற்றையும் நான் என் மனக்கண்ணில் பார்க்கிறேன். நான் என் போட்டியில் எத்தனை முறை மேலும் கீழுமாக நீந்த வேண்டுமோ அத்தனை முறை அதைக் காட்சிப்படுத்துகிறேன்."

**மைக்கேல் ஃபெல்ப்ஸ்**
ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற நீச்சல் வீரர்

நாம் எதை விரும்புகிறோமோ அதை அடையத் தேவையான ஒரு சக்திமிக்கச் செயல்முறையை விளையாட்டு உலகம் பயன்படுத்தி வருகிறது — நாம் விரும்பும் விளைவுகளை நம் மனத்தில் காட்சிப்படுத்திப் பார்ப்பதுதான் அது. இந்த உத்தி விளையாட்டுத் துறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், இதே உத்தியைத் தங்கள் வாழ்வில் பயன்படுத்தித் தங்களாலும் வெற்றி பெற முடியும் என்பது பொதுவாக மக்களுக்குத் தெரிந்திருப்பதில்லை.

## லேன் பீச்லீ



ஒரே ஒரு விளைவை மட்டுமே நான் மனக்காட்சிப்படுத்திப் பார்த்தேன். நான் வெற்றி மேடையின்மீது நின்று கொண்டு, ஷேம்பெயின் மழையில் குளித்துக் கொண்டு, வெற்றிக் கோப்பையைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் காட்சிதான் அது. அது மட்டும்தான் எனக்கு முக்கியமாகப் பட்டது.

நீங்கள் விரும்பும் இறுதி விளைவு குறித்தக் காட்சியை ஒரு படமாக உங்கள் மனத்தில் உருவாக்குவதுதான் எல்லாவற்றையும்விட முக்கியம். உங்கள் கனவை நீங்கள் எவ்வாறு சாதிக்கப் போகிறீர்கள் என்பது குறித்தப் பிற விஷயங்களை உங்கள் மனத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, உங்கள் கனவின் இறுதி விளைவை மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும். லேன் பீச்லீ, ஷேம்பெயின் மழையில் குளித்துக் கொண்டு, வெற்றி மேடையில் தான் நிற்பது போன்ற ஒரு காட்சியைத் தன் மனத்தில் பார்த்தார். ஏனெனில் அவரைப் பொறுத்தவரை, அவர் விரும்பிய விளைவை — ஓர் உலகச் சாம்பியனாக ஆக வேண்டும் என்ற கனவை — அக்காட்சி மிகவும் தெள்ளத் தெளிவாகப் பிரதிபலித்தது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



படம் வரைவது, கிறுக்குவது, கோட்டோவியம் வரைவது ஆகியவை எனக்கு மிகவும் பிடிக்கும். நான் மணிக்கணக்காகப் பல நோட்டுப் புத்தகங்களில் வரைந்து தள்ளுவேன். நான் எதைச் சாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேனோ, அதைத்தான் நான் கிறுக்கிக் கொண்டிருப்பேன்.

நீங்கள் உங்கள் கனவு குறித்த விஷயங்களை வரைந்து தள்ளிக் கொண்டிருக்கும்போது, உங்கள் மனம் அந்தப் படங்களிலிருந்து உடனடியாக ஒரு காட்சியை உருவாக்குகிறது. உங்கள் கனவு குறித்த விஷயங்களை நீங்கள் வார்த்தைகளாக வடிக்கும்போதும் உங்கள் மனம் தன்னிச்சையாக அது குறித்தக் காட்சிகளைச் சித்தரித்துக் கொள்கிறது. எப்படிப் பார்த்தாலும் நீங்கள் மனக்காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

என் வாழ்வில் நான் அதுவரை ஈடுபட்டிருக்காத ஒரு காரியத்தில் ஈடுபடும்போது, நான் விரும்பும் விளைவை மனக்காட்சிப்படுத்தாமல் அக்காரியத்தில் நான் ஒருபோதும் இறங்குவதில்லை. நான் அக்காட்சியை என் மனத்தில் ஒரு படம்போல ஓட்டுவேன். நான் விரும்பும் விளைவு ஏற்கனவே நிகழ்ந்துவிட்டதுபோலப் பரவசமாக உணர்வேன். ஒருவர் தன் வாழ்வில் தான் விரும்பும் விஷயங்களை உருவாக்கிக் கொள்வதற்கான ஓர் ஆற்றல்மிக்க வழியான இது, பரவலாக அறியப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. உங்களுடைய ஆழ்மனம் படங்களைப் பெரிதும் விரும்புவதால், நீங்கள்

உங்கள் ஆழ்மனத்தில் ஒரு படத்தை நிலைப்படுத்தும்போது, அதை உங்கள் வாழ்வில் நிஜமாக்கித் தருவதைத் தவிர அதற்கு வேறு வழி கிடையாது.

## ஜி. எம். ராவ்



என் கனவு எப்போதும் என் மனத்தில் இருந்தது. முதலிலிருந்தே நான் என் கனவோடு வாழ்ந்து வந்திருந்தேன். அது எப்போதும் என்னுள் உயிர்த்துடிப்புடன் இருப்பதை நான் உறுதி செய்து கொண்டேன். அக்கனவு ஒரு சிறு யோசனையாக முளைவிட்டுக் கொண்டிருந்தபோதே, அது தொடர்பான நடவடிக்கைகளில் நான் இறங்கினேன். என் கனவு ஏற்கனவே நனவாகிவிட்டது என்ற எண்ணத்திலிருந்துதான் என் செயல் நடவடிக்கைகள் முளைத்தெழுந்தன. என்னுடைய அச்செயல் நடவடிக்கைகளிலிருந்து விளைவுகள் வெடித்துக் கிளம்பியதை என்னால் பார்க்க முடிந்தது.

"வெற்றி இருமுறை பெறப்படுகிறது. முதல் முறை மனத்திலும், இரண்டாவது முறை நிஜ உலகிலும் அது நிகழ்கிறது."

**அஸிம் பிரேம்ஜி**
கோடீஸ்வரத் தொழிலதிபர்

**பீட்டர் ஃபோயோ**




என் வாழ்வில் நான் சாதித்துள்ள அனைத்தும் நான் படித்துள்ள விஷயங்களாலோ அல்லது நான் கடினமாக உழைத்ததாலோ நடைபெறவில்லை. என் மனக்காட்சிப்படைப்பாலும் நான் ஏற்கனவே என் கனவை அடைந்துவிட்டேன் என்ற அறிதலாலும்தான் நான் அவற்றைச் சாதித்தேன்.

**இரகசியம்** திரைப்படத்தை நான் உருவாக்கிக் கொண்டிருந்தபோது, நான் விரும்பிய விளைவை ஒவ்வொரு நாளும் எண்ணற்ற முறை என் மனத்தில் காட்சிப்படுத்தினேன். அவ்விளைவு ஏற்கனவே நிகழ்ந்துவிட்டதுபோலத் தெள்ளத் தெளிவாக என் மனத்தில் நான் பார்த்தேன். **இரகசியம்** திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றதற்கு என் மனக்காட்சிப்படைப்பு ஒரு சக்திமிக்கக் காரணியாக அமைந்தது என்பதில் எனக்குத் துளிகூடச் சந்தேகமில்லை.

**பீட்டர் ஃபோயோ**



நீங்கள் மனக்காட்சிப்படைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, நீங்கள் ஒரு புளுகுமூட்டை என்று மக்கள் முடிவு கட்டிவிடுகின்றனர். ஏனெனில், "அது கண்டிப்பாகச் சாத்தியமில்லை," என்று அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் அது சாத்தியம்தான். முழுக்க முழுக்கச் சாத்தியம்தான். ஏனெனில் உங்களால் ஒரு விஷயத்தைக் குறித்துச் சிந்திக்க முடிந்தால் அது கண்டிப்பாக நிகழும்.

உங்கள் கனவின் நனவாக்கத்தை உங்கள் மனத்தில் காட்சிப்படுத்தி, உங்கள் கனவு ஏற்கனவே நிறைவேறிவிட்டதுபோல உணர்வதில் நீங்கள் கைதேர்ந்தவராக ஆகும்போது, உங்கள் கதாநாயகனின் பயணத்தில் நீங்கள் அடைய விரும்புகின்ற பிற சிறிய இலக்குகளை அடைவதற்கும், நீங்கள் எடுத்து வைக்க விரும்புகின்ற அடிகளை எடுப்பதற்கும் அதே உத்தியை உங்களால் பயன்படுத்திக் கொள்ள முடியும். இறுதி விளைவை மட்டுமே நீங்கள் மனக்காட்சிப்படுத்தினாலும்கூட, நீங்கள் ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு வழியில் அங்கு சென்றடைவதை உங்கள் முன்னோக்கு உறுதி செய்துவிடும்.

**லிஸ் முர்ரே**



என் பாடங்கள் அனைத்திலும் முதன்மை நிலையான 'ஏ' நிலையைப் பெற வேண்டும் என்பது என் இலக்காக இருந்தது. அதனால் நான் என் பள்ளி அலுவலகத்திற்குச் சென்று என் மதிப்பெண் சான்றிதழை அச்சிட்டுத் தருமாறு கேட்டேன். அதற்கு அவர்கள், "நீ இப்போதுதானே பள்ளியில் சேர்ந்திருக்கிறாய். அதற்குள் எப்படி மதிப்பெண் சான்றிதழ் கிடைக்கும்?" என்று கேட்டனர். அதற்கு நான் அவர்களிடம், "எனக்கு வெற்றுச் சான்றிதழ் வேண்டும்," என்று கூறினேன். அவர்கள் என் பெயரை மட்டும் குறிப்பிட்டு ஒரு வெற்றுச் சான்றிதழை அச்சிட்டுக் கொடுத்தனர். நான் மாடிப்படியில் உட்கார்ந்து, நான் பெற விரும்பிய மதிப்பெண்களை அச்சான்றிதழில் நிரப்பினேன். என் மதிப்பெண்கள் ஏற்கனவே எதிர்காலத்தில் நிஜமாகியிருப்பதுபோல நான் உணர்ந்தேன். நான் வெறுமனே அந்த இடத்தைச் சென்றடைய வேண்டும், அவ்வளவுதான். நான் வீட்டுப் பாடங்களைச் செய்து கொண்டிருந்தபோது, என் பாடங்களில் நான் 'ஏ' நிலையைப் பெற்றிருந்ததாக நான் குறித்து வைத்திருந்த அச்சான்றிதழை என் பார்வையில் படும்படி என் கண் முன்னால் வைத்துக் கொண்டேன். அது ஏற்கனவே

எங்கோ நிஜமாகிவிட்டது போன்ற உணர்வுடன் நான் படித்தேன்.

உங்கள் வாழ்வில் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று நீங்கள் விரும்பும் எந்தவொரு காரியத்திற்கும் மனக்காட்சிப்படைப்பை உங்களால் பயன்படுத்த முடியும். எழுத்துப்பூர்வமான தேர்வுகள், நேர்முகத் தேர்வுகள், சந்திப்புக்கூட்டங்கள், குரல் பதிவுகள், முன்வரைவுகள், சொற்பொழிவுகள், உங்கள் மாமனார்—மாமியாருடனான சந்திப்புகள், நீங்கள் மேற்கொள்ள விரும்பும் பயணங்கள் போன்றவற்றின் முடிவுகளை நீங்கள் மனக்காட்சிப்படுத்தலாம். உங்கள் நிறுவன வரலாற்றில் யாருக்கும் இதுவரை கொடுக்கப்பட்டிராத மிகப் பெரிய ஊதிய உயர்வை உங்கள் மேலதிகாரி உங்களுக்குக் கொடுப்பதாகவும் நீங்கள் மனக்காட்சிப்படுத்தலாம்.

இந்த வருடக் கடைசியில் நீங்கள் எந்த நிலையில் இருக்க விரும்புகிறீர்கள் என்று உங்கள் மனத்தில் காட்சிப்படுத்திப் பாருங்கள். ஒவ்வொரு புதுவருடப் பிறப்பன்றும் ஒரு வருடாந்திர மனக்காட்சிப்படைப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதோடு, ஐந்து ஆண்டுகள் கழித்து நீங்கள் எங்கே இருக்க விரும்புகிறீர்கள் என்பது குறித்த ஒரு மனக்காட்சிப்படைப்பையும் உருவாக்கிக் கொள்ளுங்கள். பின்னர், உங்கள் வாழ்க்கை உங்களை எங்கு அழைத்துச் செல்கின்றது என்று பாருங்கள்!

> "நீங்கள் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை மனத்தில் காட்சிப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். அது குறித்து மிகவும் தெளிவாக இருங்கள். இன்னும் ஒருசில வருடங்களில் நீங்கள் எங்கு இருக்கப் போகிறீர்கள் என்பது குறித்த ஒரு புகைப்படத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்."

**சாரா பிளேக்லீ**

ஸ்பேன்ஸ்க் நிறுவனத்தின் நிறுவனர்

## ஜான் பால் டிஜோரியா



நான் காலையில் எழுந்தவுடன், எதுவும் செய்யாமல் அப்படியே இருப்பேன். அதாவது, தொலைக்காட்சியின் பக்கம் போக மாட்டேன், காபி போட்டுக் குடிக்க எழுந்திருக்க மாட்டேன். எதுவும் செய்யாமல் அப்படியே படுக்கையின்மீது வெறுமனே அமர்ந்திருப்பேன். அப்போது எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க வேண்டியிருக்காது, எந்தவொரு தொலைபேசி அழைப்பையும் விடுக்க வேண்டியிருக்காது. ஓர் ஐந்து நிமிடங்கள், நான் என் மனத்தை வெறுமைப்படுத்திவிட்டு, நான் அக்கணத்தில் அந்த இடத்தில் இருக்க முயற்சிப்பேன். இப்படிச் செய்வதால், அன்று முழுவதும் உங்கள் மனம் குழப்பமின்றி இருக்கும். நீங்கள் சாதிக்க வேண்டிய ஒரு கனவு உங்களிடம் இருந்தால், கடைசி ஓரிரு நிமிடங்கள் அதைப் பற்றிச் சிறிது சிந்தியுங்கள். அதை நீங்கள் ஏன் சாதிக்க விரும்புகிறீர்கள், அதை எவ்வளவு தூரம் நீங்கள் விரும்புகிறீர்கள், அதை நெருங்குவதற்கு உங்களால்

என்னென்ன விஷயங்களைச் செய்ய முடியும் போன்றவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள்.

ஒரு நாளின் பதற்றம் தொடங்குவதற்கு முன்பாக அதை நீங்கள் நிறுத்தி, உங்கள் மனத்தை ஆசுவாசமான ஒரு நிலைக்குக் கொண்டு செல்லும்போது, உங்கள் கனவு குறித்தக் காட்சிகள் நேராக உங்கள் ஆழ்மனத்தில் சென்று பதிவாகிவிடும். உங்கள் கணினியில் உள்ள ஒரு நிரலைப் புதிய தகவல்களால் புதுப்பித்துக் கொள்வதைப் போன்றது இது. உங்கள் கணினி வேறு பல நிரல்களை ஓட்டிக் கொண்டிருக்கும்போது, புதிய தகவல்களை நிறுவுவது முடியாத காரியம். அதேபோல, உங்கள் மனம் பல்வேறு விஷயங்களில் ஈடுபட்டு இருந்தால், உங்கள் முன்னோக்குக் குறித்தக் காட்சியை உங்கள் ஆழ்மனத்தால் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் உங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்வதன் மூலம் உங்கள் மனத்தின் இயக்கத்தை நீங்கள் நிறுத்தும்போது, உங்கள் முன்னோக்கை உங்களால் வெற்றிகரமாக உங்கள் ஆழ்மனத்தில் பதிவு செய்துவிட முடியும்.

மனக்காட்சிப்படைப்பை நீங்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்தும்போது, திடீரென்று எப்படி உங்களுக்கு எல்லாக் காரியங்களும் கைகூடி வருகின்றன, ஒரு சூப்பர்மேன்போல எப்படி அனைத்தும் உங்களுக்குச் சாத்தியமாகின்றன என்று உங்களைச் சுற்றி இருப்பவர்கள் தங்கள் மூக்கின்மேல் விரலை வைப்பார்கள். ஆனால், நீங்கள் பிறக்கும்போதே உங்களுடன் ஒட்டிப் பிறந்த ஓர் எளிய, ஆனால் சக்திமிக்கத் திறமையை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும். இத்திறமை இந்த உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனிடமும் இருக்கிறது என்பதுதான் இதன் சிறப்பு.


THE MIND OF A HERO

# கதாநாயகனின் மனம்

**பீட்டர் பர்வாஷ்**



காலையில் கண் விழித்ததும் நீங்கள் ஒரே ஒரு முக்கியமான தீர்மானத்தைத்தான் எடுக்க வேண்டும்; அது நீங்கள் என்ன உடை அணியப் போகிறீர்கள் என்பதைப் பற்றியதோ அல்லது உங்கள் தலைமுடியை நீங்கள் எவ்வாறு அலங்கரித்துக் கொள்ளப் போகிறீர்கள் என்பதைப் பற்றியதோ அல்ல. இன்று நீங்கள் நல்ல மனப்போக்குடன் இருக்கப் போகிறீர்களா அல்லது மோசமான மனப்போக்குடன் இருக்கப் போகிறீர்களா என்ற தீர்மானம்தான் அது. ஏனெனில், நேர்மறையான மனப்போக்கு மிக மிக இன்றியமையாதது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



## இயல்பாகவே நான் ஒரு நன்னம்பிக்கையாளனாக இருப்பது எனக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். அது எனக்கு ஏராளமாக உதவியுள்ளது.

ஒவ்வொரு மனிதனும் மிக அதிகமாகப் போராடிக் கொண்டிருப்பது தன்னுடைய மனப்போக்குக் குறித்துத்தான். நீங்கள் மோசமான மனநிலையுடன் இருந்தால், உங்கள் வெற்றிக்கு நீங்களே முட்டுக்கட்டை இட்டுக் கொண்டிருப்பீர்கள், பரிதாபமாக உணர்வீர்கள். ஆனால் நேர்மறையான மனப்போக்கை நீங்கள் தேர்ந்தெடுத்தால், வாழ்க்கையை நீங்கள் ஒரு நன்னம்பிக்கையாளனின் கண்ணோட்டத்தில் பார்ப்பீர்கள். உங்கள் மனப்போக்கு நீங்களே உருவாக்கிக் கொள்ளும் ஒன்றுதான். அது உங்களுடைய சக்திமிக்கக் கருவியாக இருக்கலாம் அல்லது உங்கள் காலை வாரிவிடக்கூடிய ஓர் அம்சமாக இருக்கலாம்.

**லேன் பீச்லீ**



உங்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கைப் போக்குகள் மாற வேண்டும் என்று நீங்கள் ஆசைப்பட்டால், உங்களுடைய சிந்தனைக்குக் கடிவாளம் போடும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

உங்கள் சிந்தனைதான் உங்கள் மனப்போக்கை நிர்ணயிக்கிறது. எனவே, உங்களுடைய மனப்போக்கை மாற்ற நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை உங்களுடைய சிந்தனைப் போக்கை மாற்றப் பொறுப்பேற்றுக் கொள்வதுதான். நீங்கள் சிந்திக்கும் எண்ணங்கள்தான் நீங்கள் பரிதாபமாக உணர்வதற்குக் காரணம் என்பதை உணர்ந்து, அதை நீங்கள் ஏற்றுக் கொண்டால், நீங்கள் சிந்திக்கும் எண்ணங்களை நீங்கள் நிச்சயமாக மாற்றிக் கொள்வீர்கள்.

ஒவ்வொரு நாளும் உங்களால் முடிந்த அளவுக்கு நல்ல விஷயங்களை நீங்கள் தேடிக் கண்டுபிடித்தால் நீங்கள் கனவு காண்கின்ற வாழ்க்கையை உங்களுக்குத் தருவதற்கு யாரேனும் முன்வந்தால், கண்ணிமைக்கும் நேரத்திற்குள் நீங்கள் அதைச் செய்துவிடுவீர்கள். உண்மையில், நீங்கள் கனவு காணும் வாழ்க்கையைப் பெறுவதற்கான வழி அதுதான்.

**பீட் கேரல்**



நேர்மறையாகச் சிந்திப்பதும் நன்னம்பிக்கையோடு வாழ்வதும்தான் வெற்றிகரமாகத் திகழ்வதற்கும் நீங்கள் விரும்பும் அனைத்தையும் அடைவதற்குமான சிறந்த வழி என்பதை என் வாழ்வில் நான் கண்டுகொண்டுள்ளேன்.

வெளியுலகச் சூழல்கள் உங்கள் மனப்போக்கை நிர்ணயிப்பதற்கு நீங்கள் அனுமதித்தால், நீங்கள் பிரச்சனைக்குள் சிக்கிக் கொள்வீர்கள், ஏனெனில், நீங்கள் நன்னம்பிக்கை மனப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்றால், உங்களைச் சுற்றி இருக்கும் ஒவ்வொரு சூழலும் கச்சிதமாக இருக்க வேண்டும் என்று ஆகிவிடும். ஆனால் உங்களால் எல்லாச் சூழல்களையும் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியாது. அதோடு, உங்களைச் சுற்றி இருக்கும் மனிதர்கள் எல்லாச் சமயங்களிலும் கச்சிதமாக நடந்து கொள்பவர்களாகவும் இருந்தாக வேண்டியிருக்கும். ஆனால் உங்களைத் தவிர வேறு எவரையும் உங்களால் கட்டுப்படுத்த முடியாது. அதாவது, நீங்கள் நேர்மறையாகவும் நன்னம்பிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டுமானால், இவ்வுலகில் உள்ள எழுநூறு கோடி மக்களும் நீங்கள் விரும்பும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் எப்படிப்பட்ட மனப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க நீங்கள் உங்களுடைய புறச் சூழலைச் சார்ந்திருக்க முடியாது. அப்படி நீங்கள் செயல்பட்டால், நீங்கள் எப்போதும் எதிர்மறையான மனப்போக்கைக் கொண்டிருப்பதற்கு ஏதுவான ஒரு சூழலையோ அல்லது ஒரு நபரையோ எப்போதும் கண்டுபிடிப்பீர்கள். உங்களுடைய மனப்போக்கு உங்களுடைய சக்திவாய்ந்த ஒரு கருவியாக உருவெடுக்க வேண்டுமென்றால், அதை நீங்கள் உங்களுக்கு உள்ளேயிருந்து கட்டுப்படுத்த வேண்டும்.

**மாஸ்டின் கிப்**



மிக மோசமான காலகட்டங்களில்கூட நான் நன்னம்பிக்கையாளனாகவே இருந்து வந்துள்ளேன்.

**பீட்டர் பர்வாஷ்**



எல்லாவற்றிற்கும் ஒரு நேர்மறைப் பக்கமும் ஓர் எதிர்மறைப் பக்கமும் இருக்கின்றன. இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு சூழலிலும் அவை இரண்டும் இடம்பெற்றிருப்பதை நீங்கள் காணலாம். விஷயங்களை முதலில் ஒரு நேர்மறையான கண்ணோட்டத்தில் பார்க்க முடிகின்ற ஒரு நபர்தான் வெற்றியடைவார்.

நன்னம்பிக்கையாளராகவோ அல்லது எதிர்மறையாளராகவோ இருப்பதைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் உங்களுக்கு இருக்கிறது. பழைய ஆடைகளைக் களைந்து எறிவதுபோல உங்களுடைய வேண்டாத மனப்போக்கைக் களைந்து எறிந்துவிட்டுப் புத்தம்புதிய மனப்போக்கை

உங்களால் ஒவ்வொரு நாளும் அணிந்து கொள்ள முடியும். அது அவ்வளவு சுலபம்.

## ஏதோ நல்ல காரியம் ஒன்று இப்போது நடக்கவிருக்கிறது

**பீட் கேரல்**



ஏதோ நல்ல காரியம் ஒன்று இப்போது நடக்கவிருக்கிறது என்று என் தாயார் எப்போதும் கூறி வந்தார். முதலில் அதை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நிலைமை எவ்வளவுதான் மோசமாக இருந்தாலும், வாழ்க்கை எவ்வளவுதான் சிரமமானதாக இருந்தாலும், நல்ல காரியம் ஒன்று நடக்கவிருக்கிறது என்ற நிலையான நன்னம்பிக்கை எண்ணத்துடனேயே நான் என் வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன். அது என் தாயார் எனக்குக் கொடுத்தப் பரிசு. அது என்னை நேர்மறையாளனாகவும் விஷயங்களை எப்போதும் நன்னம்பிக்கை மனப்போக்குடன் அணுகுபவனாகவும் வைத்திருக்கிறது. நான் என் வாழ்க்கையை அந்த எண்ணத்துடன் வாழ்வதற்கு நான் மிகவும் அதிர்ஷ்டம் செய்திருக்கிறேன்.

இவ்வுலகின் இருண்மை இயல்பு காரணமாக இங்கு நேர்மறை அனுபவங்களும் இருக்கும், எதிர்மறை அனுபவங்களும் இருக்கும். ஆனால் நீங்கள் விடாப்பிடியாக நல்லதையே எப்போதும் தேடிக் கொண்டிருந்தால், வெளிப்புறச் சூழல் எப்படி இருந்தாலும், நீங்கள் நேர்மறை மனப்போக்கையே எப்போதும் கொண்டிருப்பதை நீங்கள் தேர்ந்தெடுத்தால், நீங்கள் வெற்றி பெறுவீர்கள். எப்போதும் நேர்மறையான மனப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நினைவுபடுத்த, பீட் கேரலின் தாயாரின் வார்த்தைகளைவிடப் பொருத்தமான ஒன்றை நம்மால் கண்டுபிடிக்க இயலாது. "நல்ல காரியம் ஒன்று இப்போது நடக்கவிருக்கிறது." ஒரு நல்ல காரியம் இப்போது நடக்கவிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருந்தால், உங்களுடைய நன்னம்பிக்கை மனப்போக்கு ஒருபோதும் நீண்டகாலம் தடுமாறாது.

## ஜி. எம். ராவ்



### நிலைமை படுமோசமாக இருந்தபோதுகூட, நேர்மறையாகச் சிந்திக்க எனக்கு என் ஆன்மீகம் உதவியது.

மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும் மக்கள், நடக்கக்கூடிய நல்ல விஷயங்களைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கின்றனர், மகிழ்ச்சியாக இருப்பது பற்றியும், பணத்தைப் பெற்றிருப்பது பற்றியும், ஒரு செழிப்பான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை உருவாக்குவதைப் பற்றியும் சிந்திக்கின்றனர். அவற்றுக்கு நேரெதிரானவற்றைப் பற்றி அவர்கள் அவ்வளவாகச் சிந்திப்பதில்லை.

## ஜி. எம். ராவ்



நல்ல வசதியான பின்புலத்தையும் சிறந்த கல்வித் தகுதியையும் சமூகத்தில் நல்ல அந்தஸ்தையும் கொண்ட பலர், தங்களுடைய எதிர்மறை மனப்போக்குகளின் காரணமாகத் தங்கள் வாழ்வில் வெற்றி பெறாமல் போயுள்ளதை நான் பார்த்திருக்கிறேன். எதிர்மறையான மனப்போக்கு ஒருவரைக் கீழே இழுத்துத் தள்ளிவிடும்.

வாழ்க்கைக் குறித்து ஓர் எதிர்மறையான மனப்போக்கைக் கொண்டிருப்பவர்கள் பரிதாபகரமான வாழ்க்கையையே வாழ்வர். எல்லாவற்றைக் குறித்தும் எதிர்மறையான மனப்போக்கைக் கொண்டிருக்கும் யாராவது ஒருவரை நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாகச் சந்தித்திருப்போம். நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நபருடன் இருக்கும்போது, அவர் உங்களுடைய மகிழ்ச்சியையும் உங்களுடைய ஆற்றலையும் உங்களிடமிருந்து உறிஞ்சிவிடுவதை நீங்கள் உணர்ந்திருக்கக்கூடும். எதிர்மறை மனப்போக்கு உங்களுக்கு அதைத்தான் கொண்டுவரும்.

## அனஸ்தேசியா சோரே



நீங்கள் ஓர் எதிர்மறையாளராக இருந்து, எல்லா நேரமும் மனச்சோர்வுடன் இருந்தால், அது உங்கள் கனவைக் கண்டிப்பாகச் சாகடித்துவிடும்.

அதே சமயத்தில், எப்போதும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கைக் குறித்து நேர்மறையான மனப்போக்குடனும் இருக்கும் யாரேனும் ஒருவரையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் அவருடன் இருக்கும்போது மிகப் பிரமாதமாக உணர்வீர்கள், ஜீவனுடன் இருப்பீர்கள். நேர்மறைச் சிந்தனை உங்களுக்கு இம்மாதிரியான விஷயங்களைத்தான் கொண்டு வரும்.

தன் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் ஓர் அவநம்பிக்கையாளரையாவது உங்களால் காட்ட முடியுமா? அது இயலாத காரியம். அவர்கள் விரும்பிய அனைத்தும் அவர்களிடம் இருந்தாலும்கூட, குவளை பாதி நிறைந்திருப்பதாகத்தான் அவர்களின் கண்களுக்குத் தோன்றும்!

**பீட்டர் பர்வாஷ்**



இரண்டு பேர் அருகருகே வசித்து வருகிறார்கள். ஒருவன் காலையில் கண் விழித்தவுடன், தன் வீட்டுச் சன்னல் கதவைத் திறந்து, "கடவுளே, காலை வணக்கம்," என்று கூறுகிறான். அவனுக்கு அடுத்த வீட்டில் இருக்கும் அவநம்பிக்கையாளன், "அடக் கடவுளே, இன்னொரு பொழுது விடிந்துவிட்டதா?" என்று புலம்புகிறான்.

குற்றம் சாட்டுவதும் புகார் செய்வதும் ஒருவருடைய வாழ்க்கையை வெற்றிகரமானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் ஆக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். புலம்புவதும் விமர்சிப்பதும் ஒருவருடைய கனவை நனவாக்கி, அவரை என்றென்றைக்கும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

## பீட் கேரல்



புலம்பக்கூடாது, குறைகூறக்கூடாது, மற்றும் சாக்குப்போக்குகளைக் கூறக்கூடாது என்பது எங்களுடைய பயிற்சி வகுப்புகளில் நாங்கள் எப்போதும் செயல்படுத்துகின்ற கண்டிப்பான விதிகளில் ஒன்று. அவை ஆதரவளிக்கும் எண்ணங்கள் கிடையாது. நாம் போக

விரும்பும் இடத்திற்குப் போய்ச் சேர அவை ஒருக்காலும் நமக்கு உதவப் போவதில்லை.

சூப்பர்மேன் புலம்புவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இன்டியானா ஜோன்ஸ் குறைகூறி நீங்கள் கண்டிருக்கிறீர்களா? ஜேம்ஸ் பான்ட் தன் பிரச்சனைக்குப் பிறரைக் குற்றம் சாட்டி நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இது போன்ற குணாதிசயங்களை இப்படிப்பட்டத் திரைப்படக் கதாநாயகர்கள் ஒருபோதும் வெளிப்படுத்த மாட்டார்கள். ஏனெனில் அப்படிச் செய்தால், அவர்கள் உங்கள் கண்முன் மிகவும் சிறுத்துப் போய்விடுவார்கள், அவர்களை நீங்கள் கதாநாயகர்களாகக் கருத மாட்டீர்கள். ஏதோ தவறாகப் போயுள்ளதைப் பார்வையாளர்கள் உள்ளுணர்வுரீதியாகக் கண்டுகொள்வார்கள். இப்படிப்பட்ட ஓர் எதிர்மறையாளனால் எப்படி ஒரு கதாநாயகனாக இருக்க முடியும் என்று அவர்கள் நினைப்பார்கள். அப்படி இருக்க முடியாது என்பதுதான் அதற்கான விடை

நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்வதற்காக இங்கு வந்தோமோ, அந்த வாழ்க்கையை நாம் வாழாமல் இருக்கும்போது, அடுத்தவர்மீது பழி போடுவது, மனக்கசப்பு அடைவது, புலம்புவது, குறை கூறுவது போன்ற சாக்குப்போக்குகளை நாம் கூறுகிறோம்.

## லிஸ் முர்ரே



நாம் மனக்கசப்பு அடைந்திருக்கும் நேரங்களில் நாம் கோபத்தில் குதிக்கிறோம், அடுத்தவர்கள்மீது பழி

போடுகிறோம், ஒன்றைப் பெறுவது நம் உரிமை என்று வாதிடுகிறோம். கோபம், பழி போடுதல், உரிமை கோருதல் ஆகியவை ஒன்றுவிட்டச் சகோதரர்கள் என்று நான் நினைக்கிறேன். அவை, உங்களிடம் இருந்திருக்க வேண்டிய, ஆனால் இப்போது உங்களிடம் இல்லாத ஒன்றைப் பற்றியதும், யார் அதை உங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றியதும்தான். எவரும் எனக்கு நன்றிக்கடன் பட்டிருக்கவில்லை என்ற நினைப்பிலேயே நான் வளர்ந்தேன். உங்களிடம் உள்ளவற்றைக் குறித்து நீங்கள் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். ஏனெனில், இவை எல்லாமே கணப் பொழுதில் உங்களைவிட்டுப் போய்விடக்கூடியவையே என்பதை நீங்கள் புரிந்து வைத்திருப்பது நல்லது. இப்படிப்பட்ட மனப்போக்கு மேலானது.

நம்மைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் எப்போது பார்த்தாலும் புலம்பிக் கொண்டும் குறைகூறிக் கொண்டும் விமர்சித்துக் கொண்டும் வெறுப்படைந்து கொண்டும் இருப்பதால், அது ஒன்றும் பெரிய குற்றமல்ல என்றும், அது நம்மைப் பாதிக்காது என்றும் நாம் தவறாகப் புரிந்து கொள்கிறோம். ஆனால் இந்த எதிர்மறை உணர்ச்சிகள் உங்களைக் கீழே இழுத்துத் தள்ளிக் குழி தோண்டிப் புதைத்துவிடும். நீங்கள் உங்கள் சக்தி அனைத்தையும் இழந்து, விரக்தியடைந்து திரிய இவை வழி வகுத்துவிடும். நீங்கள் விரும்பும் மகிழ்ச்சியை இந்த உணர்ச்சிகள் ஒருபோதும் உங்களுக்குக் கொடுக்காது. இவற்றில் ஒன்றுகூட உங்களுடைய கனவுகளை நோக்கி உங்களைக் கூட்டிச் செல்லாது. உங்களைப் போன்ற ஒரு கதாநாயகனுக்கு அவை பொருத்தமாக இருக்காது.

**லைர்டு ஹாமில்டன்**



நீங்கள் எல்லா நேரமும் சிரித்துக் கொண்டும், களிப்புடனும், கவலையற்றும், கச்சிதத்துடனும் இருப்பது சாத்தியமற்றது. பொறாமை இருக்கும், போட்டி இருக்கும். சமயங்களில் இது போன்ற எதிர்மறை உணர்வுகளால் நீங்கள் அலைக்கழிக்கப்படுவீர்கள். இது மனித இயல்பு. ஆனால் அது ஆழமாக வேர்விட்டு வளர நீங்கள் இடமளிக்கிறீர்களா? அல்லது அவற்றை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிந்துவிட்டு, அந்த இடத்தில் நேர்மறையான எண்ணங்களை விதைக்கிறீர்களா? உங்களுடைய பெரும்பாலான நேரங்களில் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எப்படிப்பட்டச் சிந்தனைகள் உங்கள் தலைக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றன? எப்படிப்பட்ட வார்த்தைகளை உங்கள் வாய் உதிர்த்துக் கொண்டிருக்கிறது? அதற்கு ஏற்பத்தான் உங்களுக்குப் பலன் கிடைக்கும்.

நீங்கள் ஒரு நேர்மறையான, நன்னம்பிக்கையான மனப்போக்கைக் கொண்டவராக இருந்தால், உங்களுக்கு ஒருபோதும் மனச்சோர்வு ஏற்படாது என்று அர்த்தமாகிவிடாது. சில நாட்கள் நீங்கள் உற்சாகமிழந்து இருக்கத்தான்

செய்வீர்கள். ஆனால் இது அப்படிப்பட்ட நாட்களைப் பற்றியது அல்ல. மாறாக, உங்களுடைய பொன்னான 248 நாட்களில், உங்களுடைய நேர்மறையான, நன்னம்பிக்கையான மனப்போக்கால் எத்தனை நாட்களை நீங்கள் மகிழ்ச்சியாகக் கழிக்கிறீர்கள் என்பதைப் பற்றியதுதான் இது.

## பீட் கேரல்



ஒவ்வொரு நாளும், அமைதிப்படுத்தப்பட்ட மனத்துடன் இயங்க முயற்சி செய்யுங்கள். எப்போதுமே அலைபாய்ந்து கொண்டிருக்கின்ற, நீங்கள் இதற்குத் தகுதியானவரா என்று உங்களை எடை போட்டுக் கொண்டிருக்கின்ற மனத்துடன் செயல்படாதீர்கள். "என்னால் இதைச் சமாளிக்க முடியும் என்று தோன்றவில்லை," "இது என் சக்திக்கு மீறியது, "இதை நான் இதற்கு முன்பு ஒருபோதும் செய்தது இல்லை," "முன்பு இந்த இடத்தில் வைத்துத்தான் நான் தடுமாறினேன்," போன்ற எதிர்மறை எண்ணங்கள், உங்களால் முடியும் என்ற மனநிலையிலிருந்து உங்களுடைய கவனத்தைத் திசை திருப்ப வல்லவை. இந்த எண்ணங்களை நாம் நம்முடனேயே சுமந்து திரிவதால், நம்மால் எவ்வளவு முடியுமோ அந்த அளவு திறமையாக நாம் இயங்க மாட்டோம்.

**லேன் பீச்லீ**



நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பது குறித்து விழிப்புடன் இருங்கள். ஏனெனில், நீங்கள் சில சமயங்களில் எதிர்மறையாக உணரக்கூடும், சுரத்தில்லாமல் இருக்கக்கூடும், அல்லது தோற்கடிக்கப்பட்டுள்ளதாகக் கருதக்கூடும். ஆனால் அப்போது நீங்கள் செய்யக்கூடிய முக்கியமான காரியம், அந்த உணர்வுகளை அங்கீகரிப்பதும் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வதும்தான். இந்த உணர்வுகள் உங்களுடைய சிந்தனைப் போக்கால்தான் ஏற்பட்டன என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், உங்களுடைய தற்போதைய சூழலை மாற்றுவதற்காக, உங்களால் வித்தியாசமாக எதையாவது செய்ய முடியும்.

நீங்கள் சுரத்தில்லாமல் இருந்தால், உங்களை நல்லவிதமாக உணரச் செய்து, உங்களுக்குள் உற்சாகத்தைத் தோற்றுவிக்கக்கூடிய ஏதாவது ஒரு காரியத்தில் ஈடுபடுங்கள். அக்கணத்தில் உங்களை உற்சாகத்தில்

மூழ்கடிக்கக்கூடிய மிகச் சிறந்த காரியம் எதுவாக இருக்கும் என்று யோசித்து அதில் ஈடுபடுங்கள்.

### லேன் பீச்லீ



என்னை நேர்மையாகவும் மகிழ்ச்சியாகவும் உணரச் செய்வதற்கு, முதலில், நான் மிகவும் நேசிக்கும் ஏதாவது ஒன்றைச் செய்து, எனக்குள் ஒரு திருப்தியுணர்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதனால்தான் நான் ஒவ்வொரு நாளும் அலைச்சறுக்கு விளையாடச் செல்கிறேன். அது என் மகிழ்ச்சியைத் தூண்டுவதோடு, எனக்குத் திருப்தியையும் அளிக்கிறது.

ஒரு கதாநாயகனின் மனம் ஒரு நேர்மறையான மனம் ஒரு கதாநாயகனின் மனப்போக்கு எப்போதும் தொடர்ந்து நன்னம்பிக்கையுடனேயே இருக்கும். நேர்மறையான மனமும் நன்னம்பிக்கை மனப்போக்கும் கைகோர்த்துக் கொள்ளும்போது, உங்கள் கனவுகளை நனவாக்கவல்ல ஒரு சக்திமிக்கக் கருவியாக அவை உருவெடுக்கின்றன. ஏனெனில், உங்கள் எண்ணங்களும் உங்கள் மனப்போக்கும்தான் உங்களுடைய வாழ்க்கையாகின்றன !


THE HEART OF A HERO

# கதாநாயகனின் இதயம்

**துணிச்சல்**

**லைர்டு ஹாமில்டன்**



நம்முள் எப்போதும் தொடர்ந்து இருக்கும் ஓர் உணர்ச்சி பயம்தான். அது நம்முடைய பரிணாம வளர்ச்சியோடு தொடர்புடையது.

**லிஸ் முர்ரே**



பயத்தை உங்களால் ஒருபோதும் விட்டொழிக்க முடியாது. ஏனெனில், பயம் என்பது உடல்ரீதியான ஒரு செயல்விடை யாராவது ஒருவரை ஏதாவது ஓர் இயந்திரத்துடன் பிணைத்துப் பாருங்கள். பய உணர்ச்சி உடனடியாக அங்கு தலை தூக்குவதை உங்களால் பார்க்க முடியும். உங்களிடம் பயம் என்ற செயல்விடை எப்போதுமே இருக்கும்.

நாம் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பல விதங்களில் வேறுபட்டிருந்தாலும், அடிப்படையில் நாம் அனைவரும் மனிதர்களே. அதனால், பயம், நிச்சயமின்மை, சந்தேகம், மகிழ்ச்சி, பெருவிருப்பம், நம்பிக்கை போன்ற பலதரப்பட்ட மனித உணர்ச்சிகள் நம் ஒவ்வொருவரையும் ஆட்டுவிக்கின்றன. உங்கள் கதாநாயகனின் பயணத்தின் வெவ்வேறு காலகட்டங்களில், இந்த உணர்ச்சிகள் ஒவ்வொன்றையும் நீங்கள் அனுபவிப்பீர்கள். ஒருவர் வெற்றிப் பெற்றுள்ளதால், பயம், சந்தேகம், நிச்சயமின்மை போன்ற உணர்ச்சிகளை அவர் அனுபவிக்கவே இல்லை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. பயம் உங்களுக்கு எப்படியோ, வெற்றி பெற்றுள்ளவர்களுக்கும் அது அப்படியே, சந்தேகம் உங்களுக்கு எப்படியோ, அவர்களுக்கும் அது அப்படியே. ஆனால் இத்தகைய உணர்ச்சிகள் தங்களை ஆட்கொண்டு இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் கனவுகளைப் பின்தொடரத் தீர்மானித்தனர். தங்களுடைய பயங்கள் தாங்கள் தங்கள் கனவுகளைச் சாதிப்பதைத் தடுத்து நிறுத்த அவர்கள் அனுமதிக்கவில்லை.

## மாஸ்டின் கிப்



உங்கள் கனவு பெரியதாக இருந்தாலும் சரி அல்லது சிறியதாக இருந்தாலும் சரி, அது உங்களுடைய சௌகரிய நிலைக்கு வெளியேதான் இருக்கிறது. சௌகரிய நிலைக்கு வெளியே காலடி எடுத்து வைக்க வேண்டும் என்ற எண்ணமே பயத்தைத் தூண்டிவிடும். ஆனால் மனித வளர்ச்சியிலேயே மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள ஒரு விஷயம் பயம்தான். உயிரியல்ரீதியாகப் பார்த்தால், பயம் என்பது நம் பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்ட ஒன்று. அது சுயபாதுகாப்பின் வெளிப்பாடு.

மனிதர்கள் என்ற முறையில் நாம் இரண்டு விதமான பயங்களை அனுபவிக்கிறோம். ஆனால், நாம் உயிர் பிழைத்திருப்பதற்கு உதவும் உடல்ரீதியான பயமானது, மனரீதியான பயத்திலிருந்து வேறுபட்டது என்பதை நாம் புரிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியம்.

மனரீதியான பயம் என்பது, நாம் உயிர் பிழைத்திருப்பதற்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லாமல் இருக்கும்போது, நம் மனத்தில் நாமாகவே உருவாக்கிக் கொள்ளும் ஒன்று. நீங்கள் ஒரு முக்கியமான தேர்வை எழுதியபோது இதை நீங்கள் அனுபவித்திருக்கக்கூடும், குறிப்பாக அத்தேர்வு உங்கள் வருங்காலத்தை நிர்ணயிக்கவிருந்த ஒன்றாக இருந்தபட்சத்தில். உங்களுடைய ஓட்டுனர் உரிமத்திற்கான சோதனைக்கு நீங்கள் உட்படுத்தப்பட்டபோதும் நீங்கள் மனரீதியான பயத்தை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் பள்ளியில்

விளையாட்டுப் போட்டியில் நீங்கள் கலந்து கொண்டிருந்தால், நீங்கள் அந்த பயத்தை அனுபவித்து இருப்பீர்கள். அல்லது ஒரு பெரிய கூட்டத்தின் முன்னால் பேச அழைக்கப்பட்டிருந்தாலும் அந்த பயத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். மேற்கூறப்பட்டச் சூழ்நிலைகளில் எதுவொன்றிலும் உங்கள் உயிருக்கு எந்த அச்சுறுத்தலும் இருக்கவில்லை. நீங்கள் உணர்ந்த பயம் மனரீதியானது. அது உங்கள் மனத்தால் உருவாக்கப்பட்ட ஒன்று. நம்மில் பெரும்பாலானவர்கள் நம்முடைய கதாநாயகனின் பயணத்தில் இந்த மனரீதியான பயத்தை எதிர்கொள்வோம். ஆனால் ஆபத்துக்கள் நிறைந்த விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் இந்த இரண்டு விதமான பயத்தையும் எதிர்கொள்ளக்கூடும்.

## லைர்டு ஹாமில்டன்



"நீங்கள் தைரியசாலி" என்று என்னிடம் ஏராளமானவர்கள் கூறுவர். ஆனால் அது உண்மையல்ல. நான்தான் மிக அதிகமாகப் பயப்படுகின்றவன். மிகப் பெரிய அலைகளைக் கண்டு நான் பெரிதும் பயப்படுகிறேன். ஆனால் நடைமுறை யதார்த்தத்தைவிட உங்கள் கற்பனையின் சக்தி பெரியது. நீங்கள் எந்த விஷயம் குறித்து பயப்படுகிறீர்களோ, அந்த விஷயத்திற்கு உங்களை ஆட்படுத்திக் கொள்வதுதான் அந்த விஷயம் உங்களுக்குப் பழக்கமாவதற்கும், நீங்கள் அதை நெருக்கமாக அறிந்து கொள்வதற்குமான சிறந்த வழி. அப்போது, அந்தப் பயம் உங்கள்மீது கொண்டிருந்த ஆக்கிரமிப்புச் சக்தி திடீரென்று காணாமல் போய்விடும்.

மாயாஜாலத் திரைப்படங்களில் வரும் கதாநாயகன் ஒரு டிராகனையோ அல்லது மூர்க்கமான பெரிய விலங்கு ஒன்றையோ எதிர்கொள்வான். அவன் தன் லட்சியத்தை அடைய வேண்டும் என்றால் அதைக் கொல்ல வேண்டும்.

நம் வாழ்க்கையில் நமக்கும் லட்சியங்கள் என்ற கனவுகள் இருக்கின்றன. நம்முடைய மனத்தில் தோன்றும் பயங்களும் சந்தேங்களும்தான் மூர்க்கமான பெரிய விலங்குகள். நாம் நம்முடைய கனவுகளை அடைய வேண்டும் என்றால் அப்படங்களில் வருவது போன்றே, நாமும் அவற்றை ஒழித்துக்கட்ட வேண்டும்.

உங்களுடைய சௌகரிய எல்லைக்கு வெளியே உள்ள ஒரு செயலைச் செய்ய முயற்சிப்பதே பயமெனும் மூர்க்க விலங்கை ஒழித்துக்கட்டப் போதுமானது.

## மாஸ்டின் கிப்



பயமே இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்றால், நீங்கள் உங்கள் சௌகரிய வட்டத்தைவிட்டு ஒருபோதும் வெளியே வரத் தேவையில்லை. ஆனால் நீங்கள் வளர வேண்டும் என்றால் — இறுதியில் வளர்ச்சி ஒன்றுதான் உங்களை மகிழ்விக்கும் — நீங்கள் தொடர்ந்து உங்களுடைய சௌகரிய வட்டத்தைவிட்டு வெளியேற வேண்டியிருக்கும். அதாவது, உங்களுக்கு பயம் இருக்கிறது என்றால், அது ஒரு நல்ல விஷயம்தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

பயத்தைப் பொருட்படுத்தாமல் நீங்கள் உங்களுடைய சௌகரிய வட்டத்தைவிட்டு வெளியேற முயற்சிக்கும்போது, பயம் உங்கள்மீது

கொண்டுள்ள தன் பிடிமானத்தை இழக்கிறது. அப்போது உங்கள் துணிச்சல் வலுப் பெறுகிறது.

துணிச்சலைக் குறிக்கின்ற 'கரேஜ்' என்ற ஆங்கில வார்த்தை, "இதயம்" என்று பொருள்படும் ஒரு பிரெஞ்சு வார்த்தையில் இருந்து வந்துள்ளது. உங்களுக்கு பய உணர்ச்சி இருந்தாலும், நீங்கள் அதை மீறிச் செயல்படும்போது, உங்களுடைய இதயத்திலிருந்து துணிச்சல் பீறிட்டுக் கிளம்பும். இப்படித்தான் நீங்கள் துணிச்சலை வளர்த்துக் கொள்கிறீர்கள். முதலில் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, பின்னர் நீங்கள் செயலில் இறங்க வேண்டும் என்று பொதுவாகக் கூறப்படுவது தவறு. பயத்துடன் இருக்கும்போது நீங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இருந்துதான் துணிச்சல் பிறக்கிறது. துணிச்சலை நீங்கள் வளர்த்துக் கொள்ளும்போது, முன்பு உங்களுக்கு பயம் ஏற்படுத்தியதாக நீங்கள் நினைத்த விஷயங்கள் இப்போது உங்களைப் பயமுறுத்துவது இல்லை.

**லேன் பீச்லீ**



ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொள்ள உங்களுக்குத் துணிச்சல் இருந்து, பின் அந்த இலக்கை நோக்கிப் பயணப்பட்டு அதை அடைய நீங்கள் உறுதியாக இருக்கும்போது, நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்களுடைய சௌகரிய வட்டத்தைவிட்டு வெளியேறுவீர்கள். எனவே

நீங்கள் உங்களுடைய சௌகரிய எல்லையைவிட்டு ஆர்வத்தோடும் துணிச்சலோடும் வெளியேறுவது, வெற்றிக்குத் தேவையான இன்றியமையாத அம்சங்களில் ஒன்றாகும்.

### மாஸ்டின் கிப்



'ஃபீல் த ஃபியர் அன்ட் டு இட் எனிவே' என்றோர் அருமையான புத்தகம் உள்ளது. நான் அப்புத்தகத்தின் தலைப்பைப் படித்தேன். அதை மட்டும்தான் நான் படித்தேன். அப்புத்தகத்தின் மீதியைப் படிக்க வேண்டிய தேவை எனக்கு இல்லாமல் போய்விட்டது. ஏனெனில், எனக்கு அப்புத்தகம் கூற வந்த கருத்து நன்றாகப் புரிந்துவிட்டது. அது மிகச் சிறந்த அறிவுரைகளில் ஒன்று.

### மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



பல விஷயங்கள் இப்போதும் என்னைப் பயமுறுத்துகின்றன. பலநூறு பேருக்கு முன்னால் பேசுவதற்கு எனக்குப் பயமாக

இருக்கிறது. நான் மதிக்கும் ஒரு நபரை முதன்முதலாகச் சந்திக்கும்போது பயமாக இருக்கிறது. பயத்தை ஏற்படுத்துகின்ற அப்படிப்பட்டச் சூழ்நிலைகளுக்குள் உங்களை வலுக்கட்டாயமாகத் திணித்துக் கொள்வதன் மூலம்தான் உண்மையிலேயே உங்களால் முன்னேறிச் செல்ல முடியும், வளர்ச்சி அடைய முடியும், உங்கள் உச்சகட்டக் கனவுகளை நோக்கி அடியெடுத்து வைக்க முடியும். "உங்களுக்குக் கிலி ஏற்படுத்தும் ஏதாவது ஒரு காரியத்தைத் தினமும் செய்யுங்கள்," என்று கூறியது எலினார் ரூஸ்வெல்ட்தானே? எனக்கு அந்தத் தத்துவம் மிகவும் பிடிக்கும்.

முன்கூட்டியே உங்களைத் தயார்படுத்திக் கொள்வது பயத்தின் தீவிரத்தை வெகுவாகக் குறைக்கிறது. உங்களுடைய தேர்வுக்கு அல்லது சொற்பொழிவிற்கு முன்னால் நீங்கள் எவ்வளவு அதிகச் சிறப்பாக உங்களைத் தயார்படுத்தியிருக்கிறீர்களோ, அவ்வளவு குறைவான பயமே உங்களுக்கு இருக்கும் என்பதை உங்களால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் ஒரு காரியம் குறித்த விளைவை மனக்காட்சிப்படுத்துவதன் மூலம் அக்காரியத்திற்கு உங்கள் மனத்தை நீங்கள் முன்கூட்டியே தயார்படுத்தும்போது, உங்கள் பயம் இன்னும் வெகுவாகக் குறையும். நீங்கள் பயம் கொண்டுள்ள செயலை நீங்கள் செய்யத் துவங்கும்போதே, பயம் உங்களிடமிருந்து உடனடியாக மறைவதையும் நீங்கள் கண்டுபிடித்திருக்கக்கூடும். இது என் வாழ்வில் மீண்டும் மீண்டும் நிகழ்வதை நான் கவனித்திருக்கிறேன். ஒன்றைச் செய்வதைவிட அதைச் செய்ய வேண்டும் என்ற பயம்தான் உண்மையில் மோசமானது. நீங்கள் மனக்காட்சிபடைப்பைக் கடைபிடிக்கும்போது, இறுதி விளைவுகள் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் காட்சிப்படுத்தியிருந்தீர்களோ அவை கச்சிதமாக அப்படியே இருக்கும்.

## துணிந்து இறங்குதல்

**இரகசியம்** திரைப்படத்தை நாங்கள் தயாரித்துக் கொண்டிருந்தபோது, நான் என் தொழில்வாழ்க்கை, என் நிறுவனம், என் வீடு, நான் சம்பாதித்து வைத்திருந்த என் நற்பெயர் மற்றும் எல்லாவற்றையும் அதற்காகப் பணயம் வைத்தேன். ஆனால் தேவையில்லாமல் வம்பை விலை கொடுத்து வாங்குவதாக நான் ஒருபோதும் நினைக்கவில்லை. என் கனவு நனவாகும் என்பதை நான் நன்றாகவே அறிந்திருந்தேன்.

**ஜி. எம். ராவ்**



என் கனவை நனவாக்குவதற்காக நான் எல்லாவற்றையும் பணயம் வைத்தேன். என்னிடம் இருந்த அனைத்தையும்விட அந்த முதலீடு இருபத்தைந்து மடங்கு அதிகமாக இருந்தது. ஆனால் என் கனவை நான் சாதிக்காமல் போய்விடுவேன் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை, அபரிமிதம் என்ற கண்ணோட்டத்தில் இருந்தே நான் எப்போதும் இயங்கி வந்துள்ளேன்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித**



ஆபத்து இருந்தாலும் துணிந்து காரியத்தில் இறங்குவது முக்கியம், கண்மூடித்தனமான துணிச்சலைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. ஒரு செயலில் விளைவு எப்படி இருக்கும் என்று தெரியாதிருக்கும்போது, அது வேலை செய்யாது என்று பயப்படுவதற்குப் பதிலாக, துணிந்து அதில் இறங்குவதைப் பற்றித்தான் நான் கூறுகிறேன். ஆபத்து இருந்தாலும் துணிந்து சிறிய காரியங்களில் இறங்க வேண்டும் என்பது என் வியாபாரத் தத்துவம், ஒன்று வேலை செய்தால் நாங்கள் அதை அதிகமாகச் செய்கிறோம். அது வேலை செய்யாவிட்டால், மீசையில் ஒட்டிக் கொண்டிருக்கும் மண்ணைத் துடைத்துவிட்டு, மீண்டும் முதலில் இருந்து துவக்குகிறோம்.

**அனஸ்தேசியா சோரே**



பயம் கண்டிப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆபத்தான காரியங்களில் துணிச்சலாக இறங்குபவள் நான். நீங்கள் ஆபத்தான காரியங்களில் துணிச்சலாக இறங்காவிட்டால், ஒன்று, உங்க பலம் எது என்று உங்களுக்குத் தெரியாமலேயே போய்விடும். இரண்டாவது, நீங்கள் ஒருபோதும் வளரவே மாட்டீர்கள்.

உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில் பல சமயங்களில் ஆபத்தான காரியங்களில் குதிக்க உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். நீங்கள் மேற்கொள்ள வேண்டிய சரியான நடவடிக்கை அதுதான் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் பயத்தை அனுபவித்தாலும் துணிந்து அதைச் செய்யுங்கள். அதே சமயம், உங்களுக்குப் பயம் இருந்து, அந்த நடவடிக்கை சரியானதுதானா என்ற சந்தேகமும் இருந்தால் — எந்தத் திசையில் போக வேண்டும் என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியாதவரை — அதில் இறங்காதீர்கள். சந்தேகம் முளைத்தால் செயலில் இறங்காதீர்கள்.

## பீட் கேரல்



நான் தெற்குக் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் இருந்த ஒன்பது வருடங்களும் என் வாழ்வின் பொன்னான வருடங்கள், நாங்கள் அவ்வருடங்களில் ஏராளமான வெற்றிகளைக் குவித்தோம், பல சாதனைகளைப்

படைத்தோம். அப்போது தேசியக் கால்பந்தாட்டக் குழுவிற்குச் செல்ல எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. நான் துணிந்து அதை ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் நான் இங்கு பல சாதனைகளைப் புரிந்திருந்தேன், எல்லாமே பிரமாதமாகச் சென்று கொண்டிருந்தது; ஆனால் என்னைத் தேடி வந்த அபூர்வமான வாய்ப்பு மாபெரும் சவால்களை உள்ளடக்கியிருந்தது.

## நன்றியுள்ள இதயம்

### ஜி. எம். ராவ்



நீங்கள் உங்கள் கனவை அடைவதற்கான திறவுகோல் நன்றியுணர்வுதான் — ஏற்கனவே ஒருவரிடம் இருப்பவை குறித்தும், இனி வரவிருப்பவை குறித்தும் உள்ள நன்றியுணர்வு அது. நேர்மறைச் சிந்தனையை நோக்கிய முதல் அடி அதுதான். "உலகில் உள்ள அனைத்தும் செம்மையாக உள்ளன," என்ற உணர்வு அது. அது பிரபஞ்சத்திடமிருந்து ஆசீர்வாதங்களை நாம் பெறுவதற்கு வழி வகுக்கும்.

கதாநாயகனின் பயணத்தில் நன்றியுணர்விற்கு ஒரு முக்கிய இடம் இருக்கிறது. அது ஓர் ஆரவாரமற்ற, அமைதியான, ஆனால் சக்திமிக்கக் குணநலன். உங்களுடைய கதாநாயகனின் பயணத்தை இலகுவாக்கவும், அதை விரைவுபடுத்தவும் அதுதான் சிறந்த வழி. அதோடு, மிகச் சிறப்பான சந்தர்ப்பங்கள் உங்கள் மடியில் வந்து விழுவதற்கும் நன்றியுணர்வு மிகவும் இன்றியமையாதது.

**லேன் பீச்லீ**



நன்றியுணர்வில் நான் பெரும் நம்பிக்கைக் கொண்டுள்ளேன். ஏனெனில் அது எல்லாவற்றையும் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க வழி வகுப்பதோடு, நீங்கள் நிகழ்காலக் கணத்தில் இருக்கவும் உதவுகிறது. நீங்கள் நன்றியுணர்வுடன் இருந்தால், பிரபஞ்சம் நீங்கள் தொடர்ந்து மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் என்பதுதான் இதிலுள்ள வியத்தகு அம்சம்.

**அனஸ்தேசியா சோரே**



காலையில் எழுந்தவுடன் உங்கள் வாழ்வில் உள்ள ஆசீர்வாதங்களைப் பட்டியலிடுங்கள். நீங்கள் நலமாக இருப்பதற்காக, உங்களால் நடக்க முடிவதற்காக, உங்களால் பார்க்க முடிவதற்காக, உங்களால் சுவாசிக்க முடிவதற்காக நன்றியுணர்வுடன் இருங்கள்.

சவால்கள், தடைகள், பிரச்சனைகள் போன்ற எதிர்மறைச் சூழ்நிலைகளை நன்றியுணர்வின் மூலமாக ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட முடியும். நீங்கள் ஒரு பிரச்சனையை எதிர்கொள்ளும்போதோ, எப்படிப் போவது என்று திசை தெரியாமல் முழித்துக் கொண்டிருக்கும்போதோ, ஓர் இக்கட்டிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியாமல் தவிக்கும்போதோ நன்றியுணர்வு உங்கள் உதவிக்கு ஓடோடி வந்து அனைத்தையும் தீர்த்துக் கொடுக்கும். நன்றியுணர்வு என்பது, பிரபஞ்சம், நீங்கள் எல்லாத் தடைகளையும் சுலபமாகக் கடந்து செல்ல உங்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு ஒன்றை வழங்குவதைப் போன்றது. அதுவரை உங்கள் வழியை மறித்துக் கொண்டு நின்று கொண்டிருந்த தடைக்கற்கள் மாயாஜாலமாக விலகுவதை நீங்கள் பார்ப்பீர்கள். அல்லது உங்கள் பிரச்சனைக்கான தீர்வு திடீரென்று உங்கள்முன் தோன்றுவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

**பீட்டர் ஃபோயோ**



நீங்கள் மேற்கொள்ளும் எல்லாவற்றிலும் நன்றியுணர்வுதான் முன்னிலையில் இருக்க வேண்டும். முதலில், நீங்கள் இப்புவியில் பிறந்திருப்பதற்காக மிகவும் நன்றியுடன் இருக்க வேண்டும். உங்கள் வாழ்வில் ஏதேனும் நேர்மறையான விஷயங்கள் இடம்பெற்றிருந்தால், அவற்றைக் குறித்து நீங்கள் நன்றியுணர்வு கொள்ளுங்கள், அப்போது அவை பல மடங்கு பெருகும். நீங்கள் அதிக அளவு நன்றியுணர்வுடன் இருந்தால், அதிகமான விஷயங்கள் பெருகும். உங்களுக்கு உகந்ததாக இல்லாத சூழ்நிலைகள், மக்கள், நிகழ்வுகள் எல்லாம் மாயமாய் மறைந்து போகும். நீங்கள் அதிக அளவு நன்றிப்பெருக்குடன் இருக்கும்போது, உங்களுக்குச் சாதகமாக இல்லாத விஷயங்கள் மிக விரைவாக மறைந்து போவதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இதை என் வாழ்வில் பல தளங்களில் எண்ணற்ற முறை நான் பார்திருக்கிறேன்

உங்கள் பயணத்தின் துவக்கத்திலிருந்தே நன்றிப்பெருக்கால் விம்மிக் கொண்டிருக்கும் இதயத்துடன் நீங்கள் இருந்தால், உங்கள் பயணம் இலகுவாக இருக்கும், எதிரே தோன்றும் சிக்கல்களும் பகலவனைக் கண்ட

பனியென உருகி ஓடிவிடும். நன்றியுணர்வு இல்லாவிட்டால், உங்கள் கனவு ஒரு மாயாஜாலமான முறையில் நனவாவதற்கு உங்களுக்கு உதவுவதற்காக, பிரபஞ்சம் சரியான நபர்களையும் கச்சிதமான சூழ்நிலைகளையும் உங்கள் கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்தத் தலைப்படுகின்ற ஓர் அபூர்வமான வாய்ப்பை நீங்கள் இழந்துவிடுகிறீர்கள். மிக மோசமானதொரு பயணம்தான் உங்களுக்கு வாய்க்கும். அதோடு, நன்றி பொங்கி வழியும் ஓர் இதயத்தோடு வரக்கூடிய பேரானந்த உணர்வையும் நீங்கள் இழந்துவிடுவீர்கள்.

**மாஸ்டின் கிப்**



நன்றியுணர்வு பற்றிய மிகச் சிறந்த விஷயம் என்னவென்றால், அது உங்களை உங்களுக்குள்ளிருந்து வெளியே விடுவிக்கிறது என்பதுதான். உங்களிடம் ஏற்கனவே இருப்பவற்றின்மீது நீங்கள் கவனம் செலுத்துவீர்கள், உங்களுடைய ஆசீர்வாதங்களின்மீது கவனம் செலுத்துவீர்கள், பிறரிடம் கவனம் செலுத்துவீர்கள். அவற்றிலிருந்துதான் உங்களுக்கு உண்மையான திருப்தி கிடைக்கும். நீங்கள் நன்றியுணர்வு கொள்ளும்போது நீங்கள் உங்கள்மீது கவனம் செலுத்துவது கிடையாது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



அதற்கு நேரெதிரானதும் உண்மை. பிரச்சனைகள், சிக்கல்கள் என்று எதிர்மறை விஷயங்களிலேயே நீங்கள் உழன்று கொண்டிருந்தால், நீங்கள் மேன்மேலும் கீழ்நோக்கிய சுழற்சிக்குள் போய்விடுவீர்கள். நீங்கள் இன்னும் அதிகமாகப் பதற்றம் அடைவீர்கள், மனக்கவலை கொள்வீர்கள், மகிழ்ச்சியற்று இருப்பீர்கள்.

**மாஸ்டின் கிப்**



மனநிறைவுக்கு நன்றியுணர்வு இன்றியமையாதது. "வெற்றிகரமாக" இருக்கின்ற, ஆனால் அதே சமயத்தில் துளிகூட நன்றியுணர்வு இல்லாமல் இருக்கின்ற பலரை எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை எனக்கு வேண்டாம்.

**பீட்டர் ஃபோயோ**



நன்றியுணர்வு என்பது ஒரு மனநிலை என்று நான் நம்புகிறேன், அது தொடர்ச்சியாகக் கடைபிடிக்கப்பட்டு வர வேண்டும். இதை நான் நம்ப மட்டும் செய்யவில்லை — அதை உறுதியாக அறிந்தும் உள்ளேன். இது முழுக்க முழுக்க உண்மை என்பதையும் நான் அறிவேன். நான் நன்றியுணர்வுடன் இல்லாதிருந்த சந்தர்ப்பங்களில், வித்தியாசத்தை என்னால் நன்றாகவே பார்க்க முடிந்தது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



ஏதாவது ஒரு நாளில் நான் சுரத்து இல்லாமல் இருந்தாலோ அல்லது அந்த நாள் மோசமாக இருந்தாலோ, அந்நாளின் முடிவில் நான் நிதானமாக உட்கார்ந்து, — என்னுடைய உடல் ஆரோக்கியம், என் நண்பர்கள், என் குடும்பம் — என்று நான் எதற்கெல்லாம்

நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்று நினைத்துப் பார்ப்பேன். உடனடியாக மனநிலை சிறப்பாக மாறும். இதைப் பெருவாரியான வெற்றியாளர்கள் புரிந்து வைத்துள்ளனர் என்று நான் நினைக்கிறேன்.

நாங்கள் **இரகசியம்** திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது, ஒவ்வொரு நாள் கலையிலும் கண் விழித்ததும், பத்துப் பதினைந்து நிமிடங்களாகவது நன்றியுணர்வில் திளைக்காமல் படுக்கையைவிட்டு நான் இறங்க மாட்டேன்.

**பீட்டர் ஃபோயோ**




என் கணினியின் உள்ளே நுழைவதற்காக உள்ள ரகசிய வார்த்தைகூட, என் வாழ்வில் இருக்கும் அனைத்து விஷயங்கள் குறித்தும் நான் எவ்வளவு தூரம் மகிழ்ச்சியாகவும் நன்றியுணர்வுடனும் இருக்கிறேன் என்பதை ஒவ்வொரு நாளும் எனக்கு நினைவுபடுத்தும்.

**பீட்டர் பர்வாஷ்**



என் தாயாரிடமிருந்து நான் கற்றுக் கொண்ட விஷயங்களில் முக்கியமானது இதுதான். எனக்கு ஐந்து வயதாக இருந்த சமயத்திலிருந்தே, ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் தினத்தன்று, எனக்குப் பரிசு கொடுத்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்து ஒரு குறிப்பை எழுதி முடிக்காமல் நான் வெளியே போய் விளையாட என் தாயார் என்னை அனுமதிக்க மாட்டார். இன்றுகூட நான் ஒவ்வொரு நாளும் யாராவது ஒருவருக்கு நன்றி தெரிவித்து என் கைப்பட ஒரு குறிப்பு எழுதத் தவறுவதில்லை.

**லேன் பீச்லீ**



ஒரு மாதத்திற்கு முன்பு நான் நூஸா என்ற இடத்தில் அலைச்சறுக்கில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அலைகள்

மிக அழகாக இருந்தன, கடல்நீர் வெதுவெதுப்பாகவும் மிருதுவாகவும் இருந்தது. இந்த ஒட்டுமொத்த அனுபவமும் என் மனத்திற்கு இதமளிப்பதாக இருந்தது. நான் அதை வெகுவாக ரசித்தேன். என் இதயத்திலிருந்து பொங்கி வழிந்த நன்றிப்பெருக்குடன் நான் அப்படியே நின்றுவிட்டேன். பிறகு, நான் கடலைப் பார்த்து, "இது மிகவும் குதூகலமூட்டுவதாக இருக்கிறது," என்று நினைத்தேன். திடீரென்று எங்கிருந்தோ ஓர் அலை வந்தது. என் அருகே வேறு யாரும் இல்லாததால் நான் அதில் ஏறிச் சறுக்க உந்தப்பட்டேன். நான் அதனோடு பயணித்து அதில் ஏறிச் சறுக்கினேன். என் வாழ்நாளிலேயே மிக நீளமான, மிகச் சிறப்பான அலை அதுதான். அது முடிவடைந்ததும் நான் அக்கடலை அமைதியாகப் பார்த்து, "நன்றி" என்று கூறினேன்.

உங்கள் வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மாற்றக்கூடிய சக்தி நன்றியுணர்விற்கு உண்டு என்பதை உங்கள் இதயத்தை நீங்கள் நன்றியுணர்வால் நிரப்பிக் கொள்ளாதவரை உங்களால் அறிந்து கொள்ள முடியாது. நன்றியுணர்வின் சக்தியை அறிந்தவர்கள் அதன் புகழைப் பாடச் சளைக்க மாட்டார்கள். எல்லோரும் அதைக் காதுகொடுத்துக் கேட்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் அதைச் செய்வார்கள்.

**லிஸ் முர்ரே**



என் தாயாரின் இறுதிச் சடங்கு முடிவடைந்த பிறகு நான் என் நண்பனின் வீட்டிற்குச் சென்று அவர்களுடயை வரவேற்பறையில் அமர்ந்தேன். என் நண்பன் பாபி, தன் தாயார் அன்றிரவு சமைத்திருந்த இறைச்சிக் கறி கருகிப் போயிருந்ததாகக் குறைகூறத் துவங்கினான். என்னுடைய இன்னொரு தோழி தன் மேலதிகாரியைப் பற்றிப் புலம்பிக் கொண்டிருந்தாள். மற்றொருத்தி, தான் பள்ளியிலிருந்து நின்றுவிட்டது குறித்துத் தன்னைத் தானே நொந்து கொண்டிருந்தாள். நான் அவர்களைப் பார்த்துவிட்டு, என் தாயாரைப் பற்றியும் அவரை ஒரு மரப்பெட்டியில் போட்டு நாங்கள் புதைத்ததைப் பற்றியும் யோசித்தேன். பின் என்னை நானே கூர்ந்து கவனித்தேன். நாங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பதை நான் உணரத் தலைப்பட்டேன். உண்மையிலயே நாங்கள் எவ்வளவு தூரம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருந்தோம் என்பதை நான் உணர்ந்தேன். உடல்ரீதியாக நாங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருந்தோம். நாங்கள் உயிர்த்துடிப்புடன் இருந்தோம். உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பொருளும் உங்களிடம் இல்லாமல் போயிருப்பதற்கு அனைத்து வாய்ப்புகளும் உள்ளன என்பதை உணர்ந்திருப்பதுதான் நன்றியுணர்வு என்று நான் நம்புகிறேன். அனைத்தும் என் கவனத்திற்கு வரத் துவங்கின. நான் என்னுடைய செல்வச் செழிப்பைப் பார்த்தேன். என்னிடம் நல்ல உடல் ஆரோக்கியம், இளமை ஆகியவை இருந்ததோடு, அருமையான நண்பர்களும் எனக்குக் கிடைத்திருந்தனர். நாங்கள் கச்சிதமானவர்கள் அல்லர், ஆனால் நாங்கள் ஒருவரையொருவர் நேசித்தோம் பல நாட்கள் நான் அவர்களுடைய வீடுகளில் படுத்து உறங்கியதுண்டு. பல நாட்கள் பூங்காக்களிலும் நான் படுத்து உறங்கியதுண்டு என்றாலும், அது வாழ்வா சாவா பிரச்சனையாக இருக்கவில்லை. இவ்வுலகில் உள்ள பலர் எவ்வளவு சிரமப்படுகின்றனர் என்பதோடு ஒப்பிடும்போது, என்னுடைய வறுமை ஒன்றுமே இல்லை.

வசிப்பதற்கு எனக்கு ஓர் இடம் இல்லாமல் இருக்கலாம், சாப்பிடுவதற்கு எனக்கு வழி இல்லாமல் இருக்கலாம், ஆனாலும் பல வழிகளில் நான் ஆசீர்வதிக்கப்பட்டு இருந்தேன் என்பதை நான் உணர்ந்தேன்.

## உள்ளுணர்வு

### பீட்டர் பர்வாஷ்



உலகில் உள்ள தலைவர்களைப் பற்றி ஆராய்வதில் நான் ஆறு வருடங்களைச் செலவிட்டேன். அவர்களில் 999 சதவீதத்தினர், தர்க்க அறிவைக் காட்டிலும் உள்ளுணர்வே மேலானது என்று கூறினர். தர்க்க அறிவு என்பது நீங்கள் கற்றுக் கொண்டுள்ள ஒன்று. நீங்கள் உண்மையில் யார் என்பதுதான் உள்ளுணர்வு. உங்களால் நடைமுறைக்கு ஏற்பச் செயல்பட முடியாது அல்லது தர்க்க அறிவையும் பொது அறிவையும் உங்களால் பயன்படுத்த முடியாது என்று இதற்கு அர்த்தமில்லை. ஆனால் முதலில் தோன்றும் உணர்ச்சிகள் மிக மிக முக்கியமானவை.

"உங்கள் இதயம் கூறுவதையும் உள்ளுணர்வு தெரிவிப்பதையும் பின்பற்றிச் செல்லத் துணியுங்கள். நீங்கள் உண்மையில் யாராக ஆக விரும்புகிறீர்கள் என்பதை அவை எப்படியோ அறிந்துள்ளன."

**ஸ்டீவ் ஜாப்ஸ்**
ஆப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவனர்

## மாஸ்டின் கிப்



உங்கள் கனவை நனவாக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அற்புதமான கருவிதான் உள்ளுணர்வு. உங்கள் உள்ளுணர்வை நீங்கள் நம்பாவிட்டால், நீங்கள் மீண்டும் மீண்டும் கீழே விழ வேண்டியிருக்கும்.

உள்ளுணர்வு என்பது மின்னலெனத் தோன்றும் ஓர் அறிவு. அதை நாம் பெறும்போது, நம்மிடம் ஒரு தீவிரமான உணர்ச்சி தோன்றும். ஒரு குறிப்பிட்ட வழியில் செல்ல வேண்டும் என்ற உந்துதல் நமக்கு ஏற்படும். சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட வழியில் செல்லக்கூடாது என்ற உந்துதலும் ஏற்படும். அந்த உணர்வு எப்போதும் உடனடியானதாகவும் வலுவானதாகவும் இருந்தாலும், தங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அற்புதமான தகவல்மீது சந்தேகம் கொண்டு, மக்கள் தங்கள் வெளிமனத்தின் பேச்சைக் கேட்டு அத்தகவலை உதாசீனப்படுத்திவிடுகின்றனர்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



உள்ளுணர்வை நான் பெரிதாக நம்புகிறேன். அது பகுத்தறிவிற்குப் புறம்பானது என்று கூறி, பலர் அதைத் தீவிரமாக எடுத்துக் கொள்வதில்லை. நம் வெளிமனம் கிரகித்துக் கொள்வதைவிட நம் ஆழ்மனம் அதிகமான விஷயங்களைக் கிரகித்துக் கொள்கிறது என்பதால் அதில் ஏதோ சிறப்பம்சம் உள்ளது என்று நான் நம்புகிறேன். நம் ஆழ்மனம் நம்மிடம் பேசும் மொழிகளில் உள்ளுணர்வும் ஒன்று. ஏதாவது ஒரு சூழ்நிலை பற்றியோ அல்லது யாராவது ஒருவரைப் பற்றியோ உங்களுக்கு ஓர் உணர்வு தோன்றினால், அதற்குச் செவிசாய்ப்பது நல்லது. என்னைப் பொறுத்தவரை, அது சரியில்லாமல் போன சமயங்களைவிட, சரியாக இருந்த நேரங்கள் மிக மிக அதிகம்.

உள்ளுணர்வு என்றால் என்ன, அது எங்கிருந்து வருகிறது என்பதை அறிவியல் இன்னும் கண்டுபிடிக்கவில்லை. உள்ளுணர்வு என்பது பிரபஞ்ச மனம் என்று அழைக்கப்படுகின்ற ஓர் உயர்ந்த விழிப்புணர்வு நிலையிலிருந்து வருகின்ற அறிவு என்று பண்டைய போதனைகள் கூறுகின்றன. அந்த அறிவு சில அதிர்வுகள் மூலமாக நம் ஆழ்மனத்திற்கு அனுப்பப்படுகிறது. ஆழ்மனம் அந்த அதிர்வுகளை நம் மூளைக்கு அனுப்புகிறது. மூளை அவற்றை நம் உடலில் உள்ள குறிப்பிட்ட என்டாக்ரின் சுரப்பிகளுக்கு அனுப்புகின்றது. அச்சுரப்பிகள்

அந்த அறிவை நாம் புரிந்து கொள்ளும் விதத்தில் நமக்குக் கொடுக்கின்றன. நமக்கு ஓர் உள்ளுணர்வுத் தூண்டுதல் ஏற்படும்போது, அது நம் வயிற்றிலோ அல்லது இதயத்தைச் சுற்றியோ ஒரு தூண்டுதலாக வருவதற்கு இதுதான் காரணம்.

சுருக்கமாகக் கூறினால், உங்கள் உள்ளுணர்வு என்பது பிரபஞ்சத்தில் இருந்து வரும் தகவல் பிரபஞ்ச மனத்தால் வருங்காலத்தையும் பார்க்க முடியும் என்பதால், ஒரு குறிப்பிட்டப் பாதையைப் பின்பற்றுமாறு அது உங்களை ஊக்குவிக்கிறது. உங்களுக்கு உள்ளுணர்வு தோன்றும்போது அதை அலட்சியம் செய்யாதீர்கள். புறச் சான்றுகள் எவ்வளவுதான் அதற்கு எதிராக இருந்தாலும், உள்ளுணர்வின்மீது முழுமையாக நம்பிக்கை வையுங்கள். ஏனெனில் பிரபஞ்சம் நீங்கள் போக வேண்டிய பாதையை அறியும்.

## ஜான் பால் டிஜோரியா



மக்களை நான் வேலைக்குத் தேர்ந்தெடுக்கும்போது உள்ளுணர்வைக் கொண்டே தேர்ந்தெடுக்கிறேன். நான் அவர்களைக் குறித்து எவ்வாறு உணர்கிறேன் என்பதுதான் அது. ஒரு வியாபாரச் சூழலில், குறிப்பிட்ட ஒருவருடன் நான் வியாபாரத் தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க நான் உள்ளுணர்வையே சார்ந்திருக்கிறேன். ஏனெனில் நம் ஆன்மாவால் அதை உணர முடியும்.

## லேன் பீச்லீ



நம் உள்ளுணர்வின் சக்தியை நாம் குறைவாக எடை போட்டுவிடுகிறோம். நாம் நம் உள்ளுணர்வின்மீது நம்பிக்கை வைக்கத் தவறிவிடுகிறோம். நான் என் வாழ்வில் செய்த பெருந்தவறுகள் எல்லாம், என் உள்ளுணர்வை நான் மதிக்காமல் போனதாலும், அல்லது அதைக் கேள்வி கேட்டதாலும் நிகழ்ந்தவையே. அதன்மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்வது மிகவும் முக்கியம்.

பெரும்பாலான மக்கள் செய்துள்ளதைப்போலவே நீங்களும் உங்களை அறியாமலேயே உங்கள் உள்ளுணர்வைப் பயன்படுத்திக் கொள்வதை நிறுத்தியிருக்கக்கூடும். ஆனால் உங்களுடைய உள்ளுணர்வுச் சக்தியை உங்களால் மீண்டும் விழித்தெழச் செய்ய முடியும். அதைப் பயன்படுத்துவதன் மூலமாக மட்டுமே அதை நம்மால் பலப்படுத்த முடியும். வெற்றியாளர்கள் தங்கள் உள்ளுணர்வுக்குப் பெரும் முக்கியத்துவம் கொடுப்பதற்கு இதுதான் காரணம். அவர்கள் தங்கள் உள்ளுணர்வை நம்பினர், அதைப் பின்பற்றினர், அதன்மீது நடவடிக்கை எடுத்தனர். அவர்கள் அப்படிச் செயல்பட்டதால், அவர்களுடைய உள்ளுணர்வுரீதியான திறன்களும் பெரிய அளவில்

அதிகரித்தன. பெரும்பாலான வெற்றியாளர்கள் தாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானத்தையும் உள்ளுணர்வின் அடிப்படையிலேயே எடுக்கின்றனர்.

## லைர்டு ஹாமில்டன்



எனக்கு உள்ளுணர்வு ஏற்படும்போதெல்லாம் நான் அதன்படி நடந்து கொள்கிறேன். அதன்மீது நடவடிக்கை எடுக்க எடுக்க, அதில் நீங்கள் கைதேர்ந்தவராக ஆகிவிடுகிறீர்கள் என்பது சுவாரசியமான விஷயம். வாழ்க்கைக்குத் தேவையான அத்திறனை உங்களால் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

உங்கள் உள்ளுணர்வை நம்புவது, அதை அடிக்கடிப் பயன்படுத்துவது ஆகியவை தவிர, அதை மேம்படுத்த வேறு ஒரு சுலபமான வழியும் இருக்கிறது. கேள்விகள் கேட்பதுதான் அது!

நீங்கள் கேள்விகள் கேட்கும்போது, உங்கள் பதிலை உங்கள் உள்ளுணர்வின் மூலம் நீங்கள் "பெறுவீர்கள்." எந்தக் கேள்விகளுக்கான பதில்களை உங்களால் சுலபமாகப் பார்க்க முடியுமோ, அந்த வகையான எளிய கேள்விகளை முதலில் கேளுங்கள். "அந்த நபர் எப்போது வருவார்?" அல்லது, "ஒருவர் இன்று எந்த நிறத்தில் ஆடை அணிவார்?" என்று கேளுங்கள். உங்களுடைய அலைபேசியில் ஓர் அழைப்பு வரும்போது, அதை

எடுக்காமலேயே, "அது யாரிடமிருந்து வரும் அழைப்பு?" என்று கேளுங்கள். சமயங்களில் உங்களுடைய மனமே அதற்கான விடையைக் கொடுக்க முயலும். ஆனால் நீங்கள் கேள்விகள் கேட்கும்போது உங்கள் மனத்தைச் சலனமின்றி வைத்திருந்தால், அது விடைகளைப் பெறும் நிலைக்குத் தள்ளப்படும். தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால், இறுதியில் உங்களை அழைப்பவர் பெயர் உங்கள் மனத்தில் பளிச்சிடும்.

உங்களுக்கான பதில்கள் பிரபஞ்ச மனத்திடமிருந்து எப்படி உங்களுக்கு அனுப்பப்படுகின்றனவோ, அதேபோல உங்கள் கேள்விகளும் பிரபஞ்ச மனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. உலகிற்குத் தற்போது தேவைப்படும் கச்சிதமான யோசனை எது என்ற கேள்வியைத் தொழில்முனைவோர் கேட்கும்போது, உலகிற்கு அக்கணத்தில் துல்லியமாகத் தேவைப்படுகின்ற ஒரு யோசனை அவர்களுக்கு எப்படிக் கிடைக்கிறது என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்!

நீங்கள் உங்கள் உள்ளுணர்வுச் சக்தியை மேம்படுத்தும்போது, உங்களுக்கு மேலும் மேலும் உள்ளுணர்வுரீதியான உத்வேகங்கள் வரத் துவங்கும். அவை மிகச் சரியாக இருப்பதை நீங்கள் காணும்போது, மற்ற பிற வெற்றியாளர்களைப்போல நீங்களும் உங்கள் உள்ளுணர்வின்மீது அதிக நம்பிக்கை வைக்கத் துவங்குவீர்கள். அது உங்களுடைய சக்திமிக்கத் திறன்களில் ஒன்றாக ஆகிவிடும்.


THE WAY OF THE HERO

# கதாநாயகனின் வழி

## பொன் விதி

### லைர்டு ஹாமில்டன்



நீங்கள் என் தாயாரிடம், "நான் இந்தப் பத்திரிகையின் அட்டையில் இடம்பெற்றுள்ளேன்," என்றோ, "நான் இந்தச் சாதனை புரிந்துள்ளேன்," என்றோ கூறினால், அதற்கு அவர், "அதெல்லாம் சரிதான், மக்களை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்பார்.

### பீட்டர் ஃபோயோ



மற்றவர்கள் உங்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவ்வாறே நீங்களும் பிறரை நடத்துங்கள். இதைத்தான் பைபிளும் கூறியுள்ளது.

நம் செயல்பாடுகளின் விளைவு நேர்மறையாக இருந்தாலும் சரி, எதிர்மறையாக இருந்தாலும் சரி, அந்த அனுபவம் நமக்குக் கிடைக்காவிட்டால், நம்மால் ஒருபோதும் எதையும் கற்றுக் கொள்ள முடியாது, நம்மால் ஒருபோதும் வளர்ச்சியடையவும் முடியாது. சூடான இரும்பைத் தொட்டாலோ, வேலை நேரத்தில் தூங்கினாலோ, அல்லது நீங்கள் உங்கள் தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்தாவிட்டாலோ ஒரு பின்விளைவு இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், நாம் அனுபவிக்கின்ற மிகப் பெரிய பின்விளைவுகள் அனைத்தும் நாம் பிறரை நடத்துகின்ற விதத்தினால் ஏற்படுபவையே என்பதைப் பெரும்பாலான மக்கள் அறிந்திருப்பதில்லை.

**பீட் கேரல்**



நாம் பிறரை எவ்வாறு நடத்துகிறோம் என்பது வாழ்க்கையில் மிக மிக முக்கியமானது. ஒவ்வொருவரும் மரியாதையோடு நடத்தப்பட வேண்டும் என்பது எங்களுடைய பயிற்சிகளில் கடைபிடிக்கப்படும் கொள்கைகளில் ஒன்று. உங்களைச் சுற்றி இருப்பவர்களை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதைக் கணக்கில்

எடுத்துக் கொள்வது ஒரு நல்ல பழக்கம். உங்கள் வாழ்வில் நீங்கள் எந்த இடத்தைச் சென்றடைய விரும்புகிறீர்களோ, அந்த இடத்தை நீங்கள் அடைவதற்கான மிகச் சிறந்த வழி அது.

**ஜான் பால் டிஜோரியா**



நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களிடம் இங்கிதமில்லாமல் நடந்து கொள்வது நல்லதல்ல. பல சமயங்களில், நீங்கள் ஒரு நல்ல மனிதர் என்று நீங்கள் உங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கக்கூடும், ஆனால் அது உண்மையல்ல. அடுத்தவர்களைப் புண்படுத்தும் விதமாக நடந்து கொள்ளாதீர்கள். அது உங்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். அது ஒரு பொன் விதி — மற்றவர்கள் உங்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவ்வாறே நீங்களும் பிறரை நடத்துங்கள்.

"முக்கியமானவராக இருந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் இங்கிதமானவராக இருப்பது அதைவிட முக்கியமானது."

**ரோஜர் ஃபெடரர்**
டென்னிஸ் சாம்பியன்

அடுத்தவரை நீங்கள் மிக மோசமாக நடத்தினால், உண்மையான மகிழ்ச்சியை உங்களால் ஒருபோதும் கண்டுபிடிக்க முடியாது. நாம் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டவர்கள். நாம் அனவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பிரபஞ்சம் நம் அனைவருக்குமானது. நாம் வேறொருவருக்குத் தீங்கிழைத்தால், நாம் பிரபஞ்சத்திற்குத்தான் தீங்கிழைக்கிறோம். அது தவறு . . . இமாலயத் தவறு!

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



ஒருவர் செய்ய வேண்டிய சரியான விஷயம் இதுதான் என்று தோன்றுகிறது — வாழ்க்கையை வாழ்வதற்கான சரியான வழி இதுதான், தயவு செய்து, நன்றி ஆகிய வார்த்தைகளைக் கூறுவது, பிறரை மதிப்பது, உங்களால் முடிந்த அளவுக்குப் பிறருக்கு ஆதரவளிப்பது. இது மிக மிக முக்கியம்.

## ஜான் பால் டிஜோரியா



அடுத்து, வதந்திகளைப் பரப்பாதீர்கள். ஒரு விஷயத்தைப் பற்றிய எல்லா உண்மைகளும் உங்களுக்குத் தெரியாது. வெளியுலகிற்கு அனுப்புவதற்குரிய ஒரு நல்ல அதிர்வு அதுவல்ல. நேர்மறையான அதிர்வுகளை அனுப்புங்கள். நீங்கள் எதிர்மறையான அதிர்வுகளை அனுப்பினால், அது உங்களையும் உங்களைச் சுற்றி இருக்கும் அனைத்தையும் மட்டுப்படுத்தும், இழுத்துப் பிடிக்கும்.

நீங்கள் ஒரு நபருக்குப் பரிசு கொடுத்து, அதைப் பெற்றுக் கொண்ட நபர் அதற்கு நன்றி தெரிவிக்கவில்லை என்றாலோ, உங்களுடைய நற்செயலைப் பாராட்டவில்லை என்றாலோ, அடுத்த முறை நீங்கள் அவருக்கு எதுவும் கொடுக்க மாட்டீர்கள். அதேபோல, பிறரிடம் நாம் நாகரீகமற்றோ, நன்றியுணர்வின்றியோ, அல்லது கீழ்த்தரமாகவோ நடந்து கொண்டால், வாழ்க்கையின் நல்ல வெகுமதிகள், "அதிர்ஷ்ட வாய்ப்புகள்," அல்லது அருமையான சந்தர்ப்பங்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். அதே சமயம், உங்கள் சூழல்கள் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் அடுத்தவரை நன்றாக நடத்தினால், பதிலுக்குப் பிரபஞ்சம் உங்களிடம் அன்பை வெளிப்படுத்தும். வாழ்க்கை நம் ஒவ்வொருவருக்கும் இந்த எளிய முறையில்தான் நிகழ்கிறது.

**லைர்டு ஹாமில்டன்**



இது ஓர் அற்புதமான விஷயம் நீங்கள் எந்த அளவுக்குக் கொடுக்கிறீர்களோ, எந்த அளவுக்குப் பெருந்தன்மையுடன் இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு உங்களுக்கும் கொடுக்கப்படும், உங்களிடம் பெருந்தன்மை காட்டப்படும். நீங்கள் இதை மக்களிடம் கூறினால், இது மிக மிக எளிய யோசனையாக இருப்பதால், இதைப் புரிந்து கொள்ள அவர்கள் தடுமாறுவார்கள்.

**லேன் பீச்லீ**



நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு தேர்ந்தெடுப்பும், நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் பின்விளைவுகளையும் பிறர்மீது தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

**பால் ஆர்.ஃபாலியா**



நான் கர்மாவில் நம்பிக்கைக் கொண்டுள்ளேன். நீங்கள் வெளியுலகிற்கு எதை அனுப்புகிறீர்களோ, அது மீண்டும் உங்களிடமே திரும்பி வரும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நல்ல விஷயங்களையே செய்யுங்கள். உங்கள் வரிகளை எப்போதும் ஒழுங்காகச் செலுத்திவிடுங்கள்.

"நியூட்டனின் மூன்றாவது விதி அல்லது கர்மா — அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள் — அதை நான் பல வருடங்களாக அனுபவப்பூர்வமாக அறிந்து வந்துள்ளேன். நான் அதைக் காரண காரிய விதி என்று அழைக்கிறேன். நீங்கள் இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கும் ஆற்றல் உங்களிடமே திரும்பி வரும். அதாவது, தினை விதைப்பவன் தினை அறுப்பான். ஒரு மாங்கொட்டையை ஊன்றிவிட்டு அதிலிருந்து ஒரு பலா மரம் முளைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நீங்கள் என்ன செய்கிறீர்கள், எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்ற விதையில் இருந்துதான் உங்கள் வாழ்க்கையின் நிகழ்வுகள் உருவாகின்றன.

**டாம் ஷேட்யாக்**
திரைப்பட இயக்குநர்

## பீட்டர் பர்வாஷ்



"எனக்குக் கர்மாவில் நம்பிக்கை இல்லை," என்று பலர் கூறுகின்றனர். நீங்கள் அதை நம்புகிறீர்களா இல்லையா என்பது இங்கு கேள்வியல்ல. அது எப்படியும் நிகழத்தான் போகிறது.

கதாநாயகனின் பயணத்தில் நீங்கள் வெகுதூரம் வந்திருக்கும்போது, நீங்கள் மேலும் வளர்கிறீர்கள், உங்கள் மனம் மேலும் விசாலமடைகிறது. உங்கள் மனம் விசாலமடையும்போது, நீங்கள் முன்பு ஒருபோதும் பார்த்திராத, அன்றாட வாழ்விற்கு அப்பாலுள்ள விஷயங்களை நீங்கள் பார்க்கத் துவங்குவீர்கள். நீங்கள் ஒரு நல்ல காரியத்தை அல்லது அன்பான செயலை மேற்கொண்டால், உங்கள் வாழ்வில் அற்புதமான விஷயங்கள் நிகழ்வதை நீங்கள் பார்ப்பீர்கள். அதேபோல, நீங்கள் மோசமான முறையில் நடந்து கொண்டால், மோசமான விஷயங்கள் உங்கள் வாழ்வில் நிகழ்வதையும் நீங்கள் பார்க்க நேரிடும். உங்களுடைய மற்றும் உங்களைச் சுற்றி இருப்பவர்களுடைய செயல்களின் விளைவுகளைக் கூர்ந்து கவனித்து வருவதன் மூலம், வாழ்க்கை எப்படி இயங்குகிறது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். செயல்முறைகளை உங்களால் பார்க்க முடியும், உள் இயக்கங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியும், வாழ்க்கையின் சுரங்களை உங்களால் அளவிட முடியும். முன்பு உங்களால் பார்க்க முடியாமல் இருந்த விஷயங்களை இப்போது உங்களால் தெளிவாகப் பார்க்க முடியும்.

## லைர்டு ஹாமில்டன்



நான் உடனடிக் கர்மா என்று அழைக்கும் ஒன்றால் நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். நான் ஏதேனும் மோசமான ஒன்றைச் செய்தால், வெளியே போகும்போது என் கால் விரல்கள் எதன்மீதாவது இடிபடும் அல்லது என் தலை எதன்மீதாவது மோதும். என் எதிர்மறைத் தன்மைக்கு எனக்கு உடனடியாகத் தண்டனை வழங்கப்பட்டுவிடும். நான் நேர்மறையாக இருக்கவும் நல்ல விஷயங்களை மட்டுமே பேசவும் அது எனக்கு நினைவுபடுத்துகிறது. பல முறை நான் கடலில் அலைகளின்மீது சறுக்கிக் கொண்டிருக்கும்போது, எதிர்மறையான ஒன்றை யாரிடமாவது கூறினாலோ அல்லது எதிர்மறையான ஒரு காரியத்தை யாருக்காவது செய்தாலோ, அடுத்தக் கணம் ஒரு பேரலை வந்து என்னைத் துவம்சம் செய்துவிடும். பின் நான் நேர்மறையான சிந்தனையுடனும் இங்கிதத்துடனும் பெருந்தன்மையுடனும் மீண்டும் கடலுக்குள் நுழைவேன். இப்போது கடல் அன்னை என்னை வாரி அணைத்துக் கொள்வாள். பிரமாதமான அலைச்சறுக்கு வாய்ப்புகள் எனக்குக் கிடைக்கும்.

## ஜி. எம். ராவ்



நான் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது வெறுமனே பணம் சம்பாதிப்பதற்காக மட்டுமல்ல, சமுதாயத்தின்மீது ஒரு நிரந்தரமான தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம், என் கர்மா என்ற முறையில் என்ற ஓர் உயர்ந்த குறிக்கோளை நான் நிறைவேற்றியாக வேண்டும் என்று நான் நம்புகிறேன். வியாபாரம் என்பது சமுதாயத்திற்குச் செய்யப்படுகின்ற ஒரு சேவை. ஒரு வியாபாரம் சமுதாயத்திற்கு எவ்வளவு மதிப்பை வழங்குகிறதோ, அந்த அளவுக்கு அந்த வியாபாரம் செழிப்புறும்.

நீங்கள் வேறொருவரைப் பற்றி மட்டமாகப் பேசும்போது நீங்கள் மகிழ்ச்சியாக உணர்வதில்லை என்பது உங்களுக்கே தெரியும். உங்களுடைய அந்த நடத்தை, உங்களுக்குள் இருக்கும் கதாநாயகனின் குணாம்சத்தோடு பொருந்தவில்லை என்பதை உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மோசமான உணர்வு உங்களுக்குத் தெரிவிக்கும். அதோடு, அது உங்களுடைய உடல்நலம், மனநலம் மற்றும் மகிழ்ச்சியின்மீதும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

## அனஸ்தேசியா சோரே



மற்றவர்களைக் காயப்படுத்தும் செயல்களை நான் செய்ய விரும்பாததற்கு ஒரு காரணம் உள்ளது — அது நான்தான். ஏனெனில் அது என்னை அரித்துத் தின்றுவிடும், என் மனநிலையைப் பெரிதும் பாதிக்கும். எனவே அது தேவையில்லாத ஒன்று. என்னால் காயப்பட்டுள்ளவர்களைவிட நான் அதிகக் காயம் அடைவேன். என்னால் நல்ல விஷயங்களைச் செய்ய முடியும் என்றால் நான் அதைச் செய்வேன். அதற்குப் பதிலீடாக நான் எதையும் எதிர்பார்க்க மாட்டேன்.

"அன்பை வெளிப்படுத்தும் ஒரு காரியத்தை நீங்கள் செய்யும்போது, நேர்மறை ஆற்றலை நீங்கள் வெளிப்படுத்தும்போது, நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். மனிதர்களுக்கு இப்படித்தான் நிகழ்கிறது. கர்மாவிற்கு இலக்கு என்று ஒன்று இருந்தால் — நேர்மறையான ஆற்றலை வெளிப்படுத்தி நேர்மறை ஆற்றலைத் திரும்பப் பெறுவதாக அது இருக்காது. நேர்மறை ஆற்றலை வெளிப்படுத்தி, உங்கள் வாழ்க்கையைக் குறித்து நேர்மறையாக உணர்வதுதான் அந்த இலக்காக இருக்கும். இந்த இலக்கை அடைவதை நோக்கித்தான் நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். அதனால்தான் ஒரு தனிநபர்ப் புரட்சி உண்மையான புரட்சியாக விளங்குகிறது."

**டாம் ஷேட்யாக்**

திரைப்பட இயக்குனர்

**அடக்கம்**

**லேன் பீச்லீ**



நீங்கள் கதாநாயகனின் பயணத்தில் ஈடுபட்டிருந்தால், எளிமையாகவும் அடக்கமாகவும் இருத்தல் மிகவும் அவசியம்.

**பீட்டர் பர்வாஷ்**



மனப்பூர்வமாக அடக்கமாக இருங்கள். ஏனெனில், நீங்கள் அடக்கமாக இருந்தால், அடுத்தவர்கள் பேசுவதைக் காது கொடுத்துக் கேட்பீர்கள். நீங்கள் காது கொடுத்துக் கேட்டால், கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் கற்றுக்

கொண்டால், உங்களால் பிறருக்குக் கற்றுக் கொடுக்க முடியும்.

**மாஸ்டின் கிப்**



ஒருவன் மேன்மேலும் உயரும்போது, அவன் அதிக அடக்கமாக இருக்க வேண்டும் என்று என் ஆசிரியர் எனக்கு அறிவுறுத்தினார். எவரொருவரும் அணுகக்கூடிய ஒருவராக இருப்பதே அடக்கம் என்றும் அவர் கூறினார்.இன்று நீங்கள் வெற்றிகரமாக இருப்பதாலோ, அல்லது இன்று உங்களுடைய புத்தகம் விற்பனையில் கொடிகட்டிப் பறப்பதாலோ, வெற்றி தொடரும் என்று உத்தரவாதமில்லை.

**பால் ஆர்.ஃபாலியா**



> ஒருவர் வீழ்ச்சி அடைவதற்கான மிகப் பெரிய காரணம், அவருடைய கடந்தகால வெற்றி அவருக்குத் தலைக்கணத்தை ஏற்படுத்துவதுதான் என்று என் தந்தை எப்போதுமே கூறுவார்.

நாம் ஒரு கதாநாயகனின் வழியில் பயணிக்கப் போகிறோமா இல்லையா என்பது நம் நடத்தையாலும், நாம் பிறரை நடத்தும் விதத்தாலுமே தீர்மானிக்கப்படுகிறது. கதாநாயகன் அன்பானவன், அடக்கமானவன். அதனால் கதாநாயகனின் வழி அன்பாலும் அடக்கத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது. நம் நடத்தை, நம் கனவை நனவாக்கும் பாதைக்கு நம்மை அழைத்துச் செல்லும் படிக்கட்டுகளாக இருக்கும், அல்லது அதற்கு நேரெதிர்த் திசையில் நம்மை அழைத்துச் செல்லும் ஒன்றாக இருக்கும். எதைத் தேர்வு செய்யப் போகிறோம் என்பது நம் கையில்தான் உள்ளது.


COMMITMENT

# அர்ப்பணிப்பு

## அனஸ்தேசியா சோரே



ஒரு கதவு மூடியிருந்தால்கூட அதை நான் சத்தமாகத் தட்டுவேன், அதை உடைக்கக்கூடச் செய்வேன், அல்லது அங்கிருக்கும் சன்னல் வழியாகப் புகுந்து உள்ளே நுழைவேன். அந்த அளவு அர்ப்பணிப்பும் தீவிர விருப்பமும் கொண்டவள் நான். அது எப்படியாவது நிகழ்வதை நான் உறுதி செய்து கொள்வேன்.

ஒரு விஷயத்தை நீங்கள் தீவிரமாக விரும்பினால், நீங்கள் தானாகவே அதற்கு உங்கள் அர்ப்பணிப்பை வழங்குவீர்கள். அது குறித்து நீங்கள் சிந்திக்கக்கூட வேண்டியிருக்காது. நீங்கள் அப்படியே அதற்குள் குதித்துவிடுவீர்கள். ஒரு திரைப்படத்தைப் பார்த்தே ஆக வேண்டும் என்பதில் நீங்கள் தீவிரமாக இருந்தால், ஒரு திரையரங்கிற்குச் சென்று அதைப் பார்ப்பதற்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்வதற்கு உங்களுக்கு எந்த முயற்சியும் தேவைப்படாது. நீங்கள் தலைகால் புரியாமல் ஒருவர்மீது காதலில் விழும்போது,

உங்களாலேயே உங்களைத் தடுக்க முடியாத அளவுக்கு, அந்த நபரைப் பார்ப்பது குறித்து நீங்கள் அர்ப்பணிப்புடன் இருப்பீர்கள்.

## லைர்டு ஹாமில்டன்



கடலில் விளையாடும் விளையாட்டுக்களை மேற்கொள்வதில் அர்ப்பணிப்பு என்பது கண்டிப்பாக இருக்கும். ஓர் அலையில் உங்களால் அரைகுறையாகச் சவாரி செய்ய முடியாது. ஒன்று, நீங்கள் அதில் முழு முயற்சியுடன் சறுக்கிச் செல்ல வேண்டும், அல்லது அந்த அலையை விட்டுவிட வேண்டும். ஒவ்வோர் அலையும் ஒவ்வொரு சவாரியும் ஒரு நம்பிக்கை, ஓர் அர்ப்பணிப்பு. நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு அதில் குதிக்க வேண்டும்.

அர்ப்பணிப்பு என்றால் என்னவென்று லைர்டு ஹாமில்டனுக்கு நன்றாகவே தெரியும். உங்கள் அர்ப்பணிப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கு உங்களுக்கு உத்வேகம் தேவைப்பட்டால், லைர்டு ஹாமில்டன், தஹிட்டியின் தென்மேற்குக் கரையோரம் உள்ள தியாஹூப்போ என்ற இடத்தில் உலகத்திலேயே மிக பயங்கரமான அலையில் சறுக்கி வருவதைக் காட்டும் வீடியோவைப் பாருங்கள்.

உலகிலேயே கனமான அலைகளுக்குப் பெயர் போனது தியாஹூப்போ. அங்கு தொடர்ச்சியாக 21 அடி (6.4 மீட்டர்கள்) உயரச் சுருள் அலைகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அவை ஒவ்வொன்றின் அகலமும் ஒரு கட்டடத்தின் அளவு தடிமனாக இருக்கும். அந்த அலைகள், ஆழமற்ற இடத்தில் இருக்கும் கூரிய பவளப் பாறைகளின்மீது வந்து மோதி உடையும். கடலில் செல்லும் அதிவேக மோட்டார் பைக்கான ஜெட் ஸ்கீயின் பின்னால் கயிறு மூலம் சறுக்கிச் சென்று, உச்சகட்ட வேகத்தில் அதிலிருந்து விடுபடுவதன் மூலம்தான் அந்த அலைகளில் சறுக்கி வர முடியும்.

ஜெட் ஸ்கீயின் பின்னால் தான் பிடித்திருந்த கயிற்றை விட்டபோதுதான் லைர்டு ஹாமில்டன் தனக்குப் பின்னால் இருந்த அந்த பிரம்மாண்டமான பேரலையின் விசுவரூபத்தைக் கண்டார். அதில் பயணிக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்ய அவருக்குக் கணப்பொழுது அவகாசமே கிடைத்தது. அவர் துணிந்து அந்தப் பேரலையில் சறுக்கி வர முடிவு செய்தார். அப்படி முடிவு செய்யாமல் இருந்திருந்தால், அந்த அலை அவரை அங்கிருந்த பவளப் பாறைகளின்மீது அடித்து மோதியிருக்கும். அவர் கண்டிப்பாக உயிர் பிழைத்திருக்க மாட்டார். ஆனால் அதில் துணிந்து குதித்ததன் மூலம், மனிதனால் எது சாத்தியம் என்ற எல்லையைக் கடந்து, அலைச்சறுக்கு விளையாட்டில் ஒரு புதிய வரலாற்றைப் படைத்தார்.

## லிஸ் முர்ரே



நீங்கள் என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறீர்களோ அதைச் செய்வதற்குத் தற்போது உங்கள் வசம் இருக்கும் வளவசதிகள் போதுமானது என்று தீர்மானிப்பதில் ஆத்ம

திருப்தி இருக்கிறது. ஏதாவது ஓர் அம்சம் குறைவாக இருக்கிறது என்று நீங்கள் காத்திருந்தால், நீங்கள் தொடர்ந்து காத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். "இதைச் செய்ய வேண்டுமென்றால், எனக்கு இது வேண்டும், எனக்கு அது வேண்டும்," என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால், நீங்கள் சரியான சமயத்திற்காகக் காத்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆனால் சரியான சமயம் என்ற ஒன்று கிடையவே கிடையாது.

சரியான சமயம் ஒருபோதும் எதிர்காலத்தில் இல்லை. அது இப்போதுதான் இருக்கிறது. உங்களுடைய முழுமையான அர்ப்பணிப்புதான் உங்கள் கனவிற்கான கதவுகளைத் திறந்துவிடும். அது வேறு எந்த வழியிலும் நிகழாது. நீங்கள் அர்ப்பணிப்பை வழங்காதவரை அங்கு தடுப்புச்சுவர்களை மட்டுமே நீங்கள் பார்ப்பீர்கள்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



நீங்கள் உங்களை உண்மையிலேயே முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இதை அரைகுறையான மனத்துடன் உங்களால் செய்ய

முடியாது. உங்களுடைய அர்ப்பணிப்பு முழுமையாக இருக்கும் பட்சத்தில், உங்கள் உடலில் உள்ள ஒவ்வொரு தசை நாரும், உங்கள் ஆழ்மனம் மற்றும் வெளிமனமும், நீங்கள் விழித்திருந்தாலும் சரி, தூங்கிக் கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் எதைச் சாதிக்க முயன்று கொண்டிருக்கிறீர்களோ அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கும். அதுதான் அனைத்து வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறது.

**லைர்டு ஹாமில்டன்**



நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும்போது, சூழ்நிலைகள் உங்களுக்காகவே உருவாகும். "நான் புத்திசாலி, நான் இதைப் பற்றி முன்பே சிந்தித்தேன்," என்று ஒருவர் கூற விரும்பக்கூடும். ஆனால் எவரும் அந்த அளவு புத்திசாலி இல்லை. நீங்கள் சாத்தியம் என்று நம்பிய விஷயங்களுக்கு நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டதால்தான், அந்த விஷயங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டன.

**லேன் பீச்லீ**



திடீரென்று உங்களுக்குத் தேவையான வழிகாட்டிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். பிரபஞ்சம் சகல வசதிகளையும் உங்களுக்கு அள்ளி வழங்குகிறது. மாணவர் தயாராக இருக்கும்போது, ஆசான் தோன்றுவார் என்ற கூற்றில் உள்ளதுபோலவே விஷயங்கள் நடக்கும்.

**மாஸ்டின் கிப்**



உங்கள் கனவிற்கு நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டால், கதவுகள் தாமாகவே திறக்கும். கதவுகள் அங்கு ஏற்கனவே இருந்து வந்துள்ளன என்றும், நீங்கள் உங்களை முழுமையாக

அர்ப்பணிக்கும்போது அவை உங்களுடைய கண்களுக்குத் தென்படுகின்றன என்றும் நான் நம்புகிறேன்.

**ஜி. எம். ராவ்**



என் அர்ப்பணிப்பு ஓர் உத்தரவாதமாக ஆனபோது, கதவுகள் திறந்தன. தில்லி விமான நிலையக் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தத்தைப் பெற நாங்கள் விண்ணப்பித்திருந்த சம்பவத்தை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலகிலேயே சிறந்த விமான நிலையத்தை உருவாக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். அது எங்கள் கனவாக இருந்தது. அத்திட்டம், உலகின் சிறந்த விமான நிலையக் கட்டுமான நிறுவனங்களைக் கவர்ந்திழுத்தது. அந்த ஏலத் திட்டம் மிகவும் சிக்கலான ஒன்றாகவும் மிக விரிவான ஒன்றாகவும் இருந்தது. நாங்கள் மிகச் சிறந்த வல்லுனர்களுடன் இணைந்து ஒரு சிறந்த அணியாக உருவானோம். உலகின் மிக நவீனமான விமான நிலையங்கள் பலவற்றுக்கு நாங்கள் விஜயம் செய்து, அவர்களிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டோம். எதிர்ப்பட்ட

அனைத்துத் தடைகளையும் கடந்து, தொழில்நுட்பரீதியாகத் தகுதி பெற்றிருந்த ஒரே நிறுவனமாக நாங்கள் அங்கு தனித்துவத்துடன் திகழ்ந்தோம். ஆனால் எங்கள் பயணம் அத்துடன் முடிந்துவிடவில்லை. அந்த விண்ணப்பச் செயல்முறை பல சட்டரீதியான சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதனால் ஏற்பட்டக் காலதாமதங்கள், ஏற்கனவே இருந்த கால நெருக்கடியை இன்னும் மோசமாக்கின. உலகிலேயே ஐந்தாவது பெரிய விமான நிலையமாக அது இருந்தது. நாங்கள் ஐம்பத்தெட்டுத் துறைகளுடன் ஒத்துழைக்க வேண்டியிருந்தது. ஆனால் நாங்கள் அந்தப் பணித்திட்டத்தைத் துவக்கிய உடனேயே எல்லாம் அதனதன் இடத்தில் சரியாகப் பொருந்தத் துவங்கியது. கிட்டத்தட்ட 2.5 பில்லியன் டாலர்கள் நிதியுதவி ஏற்பாடு செய்யப்பட்டது. இருபத்து ஏழு நாடுகளைச் சேர்ந்த 40,000க்கும் மேற்பட்டத் தொழிலாளர்களும் பொறியாளர்களும் இப்பணித்திட்டத்தில் பங்கு கொண்டனர். இத்திட்டம் முப்பத்து ஏழு மாதங்களில் நிறைவேறியது. அது ஓர் உலகச் சாதனை. உலகிலேயே சிறந்த ஒரு விமான நிலையத்தை உருவாக்க வேண்டும் என்ற எங்களுடைய அர்ப்பணிப்பை மெச்சி, பிரபஞ்சம் எங்களுக்குத் தன் ஆசீர்வாதத்தை வழங்கியது. நாங்கள் எங்கள் இலக்கை அடைவதற்காக அது எங்கள் பாதையைச் சீராக்கியது. இன்று உலகில் இருக்கும் 199

விமான நிலையங்களில் எங்களுடையது நான்காவது இடத்தில் இருக்கிறது.

பிறர் தங்களுடைய கனவைப் பின்தொடர்ந்து செல்வதை நாம் பார்க்கும்போது, அதைச் செய்ய அவர்களுக்குச் சில சலுகைகள் கிடைத்திருக்கும் என்ற தவறான கருத்து நமக்கு ஏற்படுகிறது. ஆனால் உண்மையில், விஷயம் இதற்கு நேரெதிர் வழியில் நடக்கிறது. கதாநாயகனின் பயணத்தில் குதிக்க உங்களை நீங்கள் அர்ப்பணித்துக் கொள்ளத் தீர்மானிக்கும்போதுதான், உங்களுக்குச் சலுகைகள் கிடைக்கத் துவங்குகின்றன. நீங்கள் உங்கள் கனவை முழுமூச்சாகப் பின்தொடர முடிவு செய்யும்போது, உங்கள் கனவுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் இருக்கும் அனைத்து நபர்களையும் பிரபஞ்சம் அழைத்து வந்து, உங்களுக்குத் தேவைப்படும் விஷயங்களை, தேவைப்படும் நேரத்தில் உங்களுக்கு வழங்க அவர்களுக்கு உத்தரவிட்டதுபோலச் செயல்கள் நடக்கும்.

## உங்கள் அர்ப்பணிப்பும் பிரபஞ்சமும்

என் மகளின் தோழனுக்கு ஓர் உத்தரவாதமான, பாதுகாப்பான வேலை இருந்தது. பதினைந்து வருடங்கள் தன் வேலையில் கடினமாக உழைத்தால், படிப்படியாக உயர்ந்து அந்நிறுவனத்தில் மேல்மட்ட நிலையைத் தன்னால் அடைய முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் அந்த வேலை அவனுக்குத் துளிகூடப் பேரானந்தத்தை அளிக்கவில்லை. ஆனாலும் அவன் உண்மையிலேயே கடினமாக உழைத்தான். உலகில் தனக்கு மிகவும் பிடித்த விஷயமான அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபடுவதற்காக மட்டுமே அவன் அவ்வளவு கடினமாக உழைத்தான். எனவே அந்த இளைஞன் தன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான முடிவை எடுத்தான். அவன் தன் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்வதென்று தீர்மானித்தான்.

தன் பெருநிறுவன வேலையை விட்டுவிட்டு, அலைச்சறுக்குப் பலகைகளை வடிவமைத்துச் சீராக்கும் தன் கனவைச் செயல்படுத்துவதற்குப் பல

மாதங்களாகத் திட்டமிட்டான். தான் முன்பே அறிவித்திருந்த தினத்தில் அவன் தன் வேலையைவிட்டு விலகினான். தன் கையில் வெறுமனே ஒரு கனவுடனும், அதன்மீதான அர்ப்பணிப்புடனும் மட்டுமே துவக்கிய அவனுக்கு, பிரபஞ்சம் கீழ்க்கண்ட வழிகளில் உதவி செய்தது.

ஒரு வெற்றிகரமான உள்ளூர் வடிவமைப்பாளர், தான் அலைச்சறுக்குப் பலகைகளை வடிவமைத்துச் சீராக்கியபோது உடனிருந்து பார்ப்பதற்கு அந்த இளைஞனுக்கு அனுமதி அளித்தார். மற்றொரு வடிவமைப்பாளர், அவனுக்குத் தேவையான வடிவமைப்புப் பாடங்களை இலவசமாகவே கற்றுக் கொடுத்தார். வடிவமைப்பிற்குத் தேவையான சில கருவிகளை எப்படி உருவாக்குவது என்பதையும் அவர் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். அது ஏராளமான பணத்தைச் சேமிக்க அவனுக்கு உதவியது. அவனுடைய புதிய தொழிலுக்குத் தேவைப்பட்ட வணிகச் சின்னத்தை, ஒரு கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் இலவசமாகவே வடிவமைத்துக் கொடுத்தார். அவன் வாங்க வேண்டியிருந்த சில கச்சாப் பொருட்களை மொத்த விலையில் அவனுக்குக் கொடுக்க உள்ளூர்க் கடை ஒன்று முன்வந்தது. அவன் தன் வடிவமைப்புக் கூடத்தை உருவாக்க அவனுடயை அப்பா சில கருவிகள், விளக்குகள் போன்றவற்றைக் கொடுத்து உதவினார். அவன் தன் வடிவமைப்புக் கூடத்தை அமைக்கவிருந்த இடத்தை இன்னொருவர் அவனுக்கு வாடகை இல்லாமல் இலவசமாகக் கொடுத்தார். அந்த இடம், கலிஃபோர்னியா கடற்கரையில் கடலைப் பார்த்தபடி இருந்த ஓரிடத்தில் அமைந்த ஓர் அழகான இடம். அவன் போகும் இடங்களிலெல்லாம், தங்களுக்கு ஓர் அலைச்சறுக்குப் பலகையை வடிவமைத்துத் தரும்படி மக்கள் அவனிடம் கேட்கின்றனர்.

இவையெல்லாம் வெறும் இரண்டு வாரங்களுக்குள் நிகழ்ந்தன. நீங்கள் உங்களுடைய கனவிற்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்போது, பிரபஞ்சத்தின் மாயாஜால சக்தியை நீங்கள் ஆணையிட்டு அழைக்கிறீர்கள். நீங்கள் உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லும்போது, "சலுகைகள்" மழையெனக் கொட்டும்.

## மாஸ்டின் கிப்



உங்களுக்கு ஒரு கனவு இருந்தால், மாற்றுத் திட்டம் எதையும் உருவாக்காதீர்கள். உங்களிடம் மாற்றுத் திட்டம் இருந்தால், கண்டிப்பாக அந்த மாற்றுத் திட்டம்தான் கைகூடி வரும் என்று வில் ஸ்மித் கூறியுள்ளார். உங்களிடம் ஒரே ஒரு திட்டம் மட்டும்தான் இருக்க வேண்டும். உங்களுடைய அனைத்து நம்பிக்கையும், உங்களுடைய அனைத்து விருப்பமும், உங்களுடைய அனைத்து ஆற்றலும், உங்களுடைய முழு அர்ப்பணிப்பும் அந்த ஒரு திட்டத்தில்தான் கொட்டப்பட்டிருக்க வேண்டும்.

**லைர்டு ஹாமில்டன்**



உங்களிடம் ஒரு மாற்றுத் திட்டம் இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்களுடைய முதன்மைத் திட்டம் கண்டிப்பாக நிறைவேறும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அந்த மாற்றுத் திட்டத்தை நீங்கள்

ஒருக்காலும் பயன்படுத்தப் போவதில்லை. ஆனால் நீங்கள் அதில் உங்களுடைய கவனத்தைக் குவிக்கத் துவங்கினால், அதுவே உங்களுடைய முதன்மைத் திட்டமாக ஆகிவிடும்.

என்ன நிகழ்ந்தாலும் நீங்கள் நன்றாகத்தான் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையை உங்கள் மனத்தில் வளர்த்துக் கொள்வதன் மூலம் ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டை மட்டும் நீங்கள் மேற்கொண்டால் போதும். ஆனால் நீங்கள் ஒரு மாற்றுத் திட்டத்தைத் தீவிரமாக உருவாக்கினால், உங்கள் ஆழ்மணம் அதை உங்களுக்காக நிஜமாக்கிக் கொடுக்க நீங்கள் அனுமதித்துவிடுவீர்கள். உங்கள் கவனம் முழுவதையும் ஒரே ஒரு திட்டத்திற்குக் கொடுங்கள். அது கண்டிப்பாக நிறைவேறும்.

## மன உறுதி

**லைர்டு ஹாமில்டன்**



நீங்கள் உங்கள் கனவைப் பின்தொடர்வதில் விடாப்பிடியாகவும் சமரசம் செய்து கொள்ளாதவராகவும் இருக்க வேண்டும்.

**ஜி. எம். ராவ்**



நான் ஒரு விஷயத்திற்கு என்னுடைய முழு அர்ப்பணிப்பையும் கொடுத்தவுடன், அதை வெற்றி பெற வைக்கும் மன உறுதி அங்கு பிறந்துவிடுகிறது.

**பீட் கேரல்**



எல்லோரிடமும் ஒரே மாதிரியான மன உறுதி இருக்காது. தடைகள் உங்களை வழி மறித்து நிற்கும்போது, சந்தேகப் பிசாசுகள் உங்களைச் சூழ்ந்திருக்கும்போது, எடுத்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற மன உறுதி எல்லோரிடமும் இருக்காது. ஆனால் அதற்கான ஆற்றல் அவர்களிடம் இருக்கிறது.

நீங்கள் ஒரு குழந்தையாக இருந்தபோது, நடக்க முயற்சிக்கையில் நூற்றுக்கணக்கான முறை கீழே விழுந்தீர்கள். முதல் முறையாக நீங்களாகவே சாப்பிடத் துவங்கியபோது, நீங்கள் உங்கள் உணவை உங்கள் கண்களிலும் கன்னங்களிலும் மூக்கிலும் போட்டீர்கள். அதாவது, வாயைத் தவிர மற்ற

எல்லா இடங்களிலும் போட்டீர்கள். நீங்கள் பேசக் கற்றுக் கொண்டதுகூட ஏகப்பட்டத் தவறுகளைச் செய்து நீங்கள் மேற்கொண்ட ஒரு விஷயம்தான். ஆனால் அதைக் கைவிட்டுவிட வேண்டும் என்று ஒருமுறைகூட நீங்கள் யோசித்தது இல்லை. மன உறுதி உங்களுடைய இயல்பின் ஒரு பகுதி. அது உங்களினுள் உள்ளது. அதை உங்களால் மீண்டும் கண்டுபிடிக்க இயலும்.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



எங்கள் வியாபாரம் தொடர்ந்து நடைபெறுவதற்காக நாங்கள் எல்லா விஷயங்களையும் மிகவும் சிக்கனமாகச் செய்தோம். ஆனால் அது மிகவும் சிரமமாக இருந்தது. வங்கிகள் எங்களுக்குக் கடன் கொடுக்க மறுத்தன. நாங்கள் அதற்கு முன்பு எதையும் செய்திருக்கவில்லை என்பதால் மற்றவர்களும் உதவி செய்ய முன்வரவில்லை. நாங்கள் கையை மடித்துவிட்டுக் கொண்டு களத்தில் இறங்கி வேலை செய்தோம்.

கொழுந்துவிட்டு எரியும் ஓர் ஆசை உங்களுக்கு இருந்தால், அதை நனவாக்கத் தேவையான மன உறுதி உங்களிடம் கண்டிப்பாக இருக்கும். சில வேளைகளில் நீங்கள் சுரத்தில்லாமல் இருக்கக்கூடும். சில வேளைகளில் உங்களுக்கு உங்கள்மீதே சந்தேகம் வரக்கூடும். உங்களால் முடியாது என்றுகூட உங்களுக்குத் தோன்றக்கூடும். ஆனால் கொழுந்துவிட்டு எரியும்

உங்கள் ஆசை, இவற்றைக் கடந்து செல்ல உங்களுக்கு உதவும். கொழுந்துவிட்டு எரியும் அந்த ஆசை மிகவும் ஆற்றல் வாய்ந்தது. எடுத்தக் காரியத்தைக் கைவிட்டுவிடலாமா என்று உங்களுக்குத் தோன்றக்கூடிய தற்காலிக எண்ணங்களை அது முறியடித்துவிடும். அது உங்களுக்குத் தேவையான அர்பணிப்பு உணர்வையும் மனத்திடத்தையும் அளிக்கும். நாங்கள் **இரகசியம்** திரைப்படத்தை உருவாக்கிக் கொண்டிருந்தபோது, நான் கொண்டிருந்த கொழுந்துவிட்டு எரியும் ஆசை தீவிரமாக இருந்ததால், என்னிடம் ஏற்கனவே மன உறுதி குவிந்திருந்ததுபோல நான் உணர்ந்தேன்.

## அனஸ்தேசியா சோரே



எனக்கு ஒரு கடனட்டை தேவைப்பட்டது. நான் வங்கிக்குச் சென்றேன். ஆனால் என்னிடம் கடன் வரலாறு ஏதும் இல்லாததால் அவர்கள் எனக்கு ஒரு கடனட்டையைக் கொடுக்க விரும்பவில்லை. என் தாயாரிடமும் கடன் வரலாறு ஏதும் இருக்கவில்லை. பெவர்லி ஹில்ஸ் பகுதியில் இருந்த வெல்ஸ் ஃபார்கோ வங்கி மேலாளரிடம், நான், "நீங்கள் எனக்கு உதவி செய்யாவிட்டால், என்னால் எப்படி ஒரு கடன் வரலாற்றை உருவாக்க இயலும்?" என்று கேட்டேன். "எனக்கு வெறும் 500 டாலர்களைக் கடனாகக் கொடுங்கள். நான் உங்களிடம் 50 லட்சம் டாலர்களைக்

கேட்கவில்லை. நான் உங்கள் வங்கியில் 1,000 டாலர்களைப் போடுகிறேன். நீங்கள் எனக்கு 500 டாலர்களைக் கொடுங்கள்," என்று கெஞ்சினேன். அதற்கும் அவர் மசிந்து கொடுக்கவில்லை. "நான் உங்கள் வங்கிக்கு எதிரில் என்னைக் கொளுத்திக் கொள்ளப் போகிறேன்," என்று நான் அவரை அச்சுறுத்தினேன். அவர் எனக்கு 500 டாலர்கள் மதிப்புள்ள ஒரு கடனட்டையைக் கொடுத்தார். நான் இன்றும் வெல்ஸ் ஃபார்கோ வங்கியின் வாடிக்கையாளராக இருக்கிறேன்.

உங்கள்மீது நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையிலிருந்தும் மன உறுதி பிறக்கிறது. உங்கள்மீது உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், மன உறுதி இயல்பாகவே உங்களிடம் இருக்கும். பயிற்றுவிப்பாளர்கள் நம்மீது நேர்மறையான தாக்கத்தை எற்படுத்துகின்றனர். ஏனெனில், நம்மால் முடியும் என்று அவர்கள் தொடர்ந்து நம்மிடம் கூறுகின்றனர். அவர்கள் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையால், நாம் நம்மீது நம்பிக்கை வைக்கத் துவங்குகிறோம். நமக்கு நம்மீது நம்பிக்கை ஏற்படும்போது, எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும் என்ற மன உறுதி உருவாகிறது. நீங்களே உங்களுடைய பயிற்றுவிப்பாளராக ஆகலாம்! நேர்மறையான சுயபேச்சின் மூலம் உங்களுக்கு நீங்களே உத்வேகம் அளித்துக் கொள்ள முடியும். உங்களால் முடியும் என்றும், இதைவிட மோசமான கலகட்டங்களில்கூட நீங்கள் பிரமாதமாகச் செயல்பட்டுள்ளீர்கள் என்றும், வெற்றியடையத் தேவையான அனைத்தும் உங்களிடம் இருக்கிறது என்றும், நீங்கள் உங்களுடைய முழு அர்ப்பணிப்பை நல்கியுள்ளீர்கள் என்பதால் உங்களுடைய வெற்றி உங்கள் கையில் இருக்கிறது என்றும், நீங்கள் கண்டிப்பாக ஒரு வெற்றியாளராக ஆவீர்கள் என்றும் உங்களுக்கு நீங்களே கூறிக் கொள்ளுங்கள். நீங்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தையையும் உங்கள் ஆழமனம் கேட்கும். அதனால் நீங்கள் அதைச் செய்து முடிப்பீர்கள்.

**மாஸ்டின் கிப்**



கனவுகள் என்பவை ஒரு விதையைப் போன்றவை. விதையை நடுவதற்குக் காலம் பிடிக்கும். அதை ஒரே இரவில் செய்துவிட முடியாது. அதற்காக நாம் உழைக்க வேண்டும் என்பதை நாம் மறந்துவிட்டோம். ஆனால் நமக்கு எல்லாம் உடனடியாக வேண்டும். யாராவது அதை நமக்குக் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் எதுவும் செய்ய வேண்டியிருக்கக்கூடாது. ஆனால் கனவுகள் சம்பாதிக்கப்பட வேண்டியவை. அது இன்னும் நிகழ்ந்திருக்கவில்லை என்றால், தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.

**ஒருபோதும், ஒருபோதும், ஒருபோதும் முயற்சியைக் கைவிட்டுவிடாதீர்கள்**

**லைர்டு ஹாமில்டன்**



முயற்சியைக் கைவிட்டுவிடுவது சுலபமானது. அது கோழைத்தனமானது, "எனக்கு வயதாகிவிட்டது, அது சரியில்லை, இது மோசம்," என்று கூறுவது பேடித்தனம், தேவையான முயற்சிகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்காகக் கூறப்படும் சாக்குப்போக்குகள் அவை.

**பீட் கேரல்**



இதற்கு மேல் முடியாது என்று உங்களுக்குத் தோன்றிவிட்டது என்றால் அவ்வளவுதான். எல்லாம் முடிந்துவிட்டது என்று அர்த்தம். ஏனெனில் அது நம்பிக்கையற்ற நிலை. ஒட்டுமொத்த நம்பிக்கையற்ற நிலையை அடைவதை நாம் ஒருபோதும் விரும்ப மாட்டோம். எப்போதும் நம்பிக்கைக்கு இடமிருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, நமக்குச் சாதகமான விஷயங்கள் எப்போதும் நடக்கும் என்று நான் நம்புகிறேன்.

## லிஸ் முர்ரே



உங்களிடம் அள்ள அள்ளக் குறையாத மன உறுதி இருந்தாலும், எப்போதாவது சுரத்து இழந்து உங்கள் கனவைக் கைவிட்டுவிட நீங்கள் முடிவு செய்யக்கூடும். நான் எண்ணற்ற முறை விரக்தி அடைந்துள்ளேன். அது என்னைக் கடுமையான மன உளைச்சலில் கொண்டுபோய் நிறுத்தியது. ஒரு குறிப்பிட்ட நாளில் நான் மிகவும் நொந்து போயிருந்தேன். நான் விண்ணப்பித்திருந்த பல பள்ளிகள் என்னை நிராகரித்திருந்தன. என்னைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருந்த பள்ளிகளின் எண்ணிக்கைக் குறைந்து கொண்டே வந்தது. அக்கணத்தில் நான் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருந்தது. என் கையில் இருந்த சில்லறைகளைக் கொண்டு, ஒன்று, நான் அடுத்தப் பள்ளியில் நடக்கவிருந்த நேர்முகத் தேர்விற்குச் செல்லலாம் அல்லது பள்ளியில் சேர்ந்து படிக்கும் திட்டத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டு, அருகில் இருந்த பீட்சா கடைக்குச் சென்று பீட்சா வாங்கிச் சாப்பிடலாம். பீட்சாவா, நேர்முகத் தேர்வா? எதைத் தேர்ந்தெடுப்பது? "பசியோ வயிற்றைக் கிள்ளுகிறது. அடுத்தப் பள்ளியும்

என்னைக் கண்டிப்பாக நிராகரிக்கத்தான் போகிறது," என்று நான் நினைத்தேன். திடீரென்று, கனவு கண்டு கொண்டிருந்த என்னுடைய மறுபக்கம், " அடுத்தப் பள்ளி என்னைத் தேர்ந்தெடுத்தால்?" என்று யோசித்தது. நான் பீட்சா வாங்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, ரயில் பிடித்து அடுத்தப் பள்ளிக்குச் சென்றேன். அந்தப் பள்ளிதான் என்னைச் சேர்த்துக் கொண்டது. எப்போது உங்கள் கனவு கைக்கெட்டும் தூரத்தில் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் இன்னுமொரு முறை முயற்சிக்காமல் இருக்கக்கூடாது. அந்த முயற்சியில் நீங்கள் தோற்றாலும், ங்கள் இன்னுமொரு முறை முயற்சி செய்யலாம்.

நீங்கள் இருண்மை உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். இங்கு ஏற்ற இறக்கம் தவிர்க்க முடியாதது. சில சமயம் நீங்கள் ஏதாவது ஒரு காரணத்தால் மனச்சோர்வு அடைந்திருக்கலாம். அன்று சின்னச் சின்ன வேலைகள் கூட மலைப்பாகத் தெரியும், அதைச் செய்யப் பெருமுயற்சி தேவைப்படும். அந்த மாதிரி நாட்களில் உங்களிடம் பெருமளவுக்கு மன உறுதி இருக்காது.

அதேபோல, சில சமயங்களில் நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் துள்ளித் திரிந்து கொண்டும் இருக்கக்கூடும். அப்போது உலகமே உங்கள் காலடியில் இருப்பது போன்ற உணர்வு உங்களிடம் இருக்கும். உங்களால் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும் என்பது போன்ற உணர்வு உங்களுக்குள் பொங்கி வழியும். அந்த மகிழ்ச்சியான, பேரானந்தமயமான உணர்வுதான் மனித உணர்ச்சிகளிலேயே மிக உயர்ந்த, மிக அதிக சக்திவாய்ந்த ஒன்று. அப்போது, நீங்கள் தோற்கடிக்கப்பட முடியாதவர் என்ற உணர்வு உங்களிடம்

வியாபித்து இருக்கும். அப்போது உண்மையிலேயே நீங்கள் தோற்கடிக்கப்பட முடியாதவராக ஆகிவிடுகிறீர்கள். மகிழ்ச்சி உங்களிடம் தாண்டவமாடிக் கொண்டிருக்கும்போது, உங்கள் மன உறுதியும் உச்சகட்டத்தில் இருக்கும். மகிழ்ச்சியின் கண்ணோட்டத்தில் இருந்து பார்த்தால் எல்லாமே எளிதுதான். உங்களுடைய மகிழ்ச்சியைத் தேடுங்கள் — உங்கள் பேரானந்தத்தைப் பின்பற்றிச் செல்லுங்கள் — உங்களுடைய கனவைப் பின்தொடர்ந்து செல்வதற்கான மன உறுதி உங்களிடம் நிரம்பி வழிவதை நீங்கள் காண்பீர்கள்.



## பகுதி மூன்று

# தேடல்


THE LABYRINTH

# புதிர்ப்பாதை

## லைர்டு ஹாமில்டன்



கதாநாயகனின் பயணம் ஒருக்காலும் நீங்கள் ? நினைத்துள்ளதுபோல இருக்காது. எங்கு போய்ச் சேர வேண்டும் என்பது குறித்து உங்களுக்கு ஒரு யோசனை இருக்கலாம். ஆனால் எந்தப் பாதையில் சென்று அதை அடைய வேண்டும் என்பதை நீங்கள் ஒருபோதும் அறிய மாட்டீர்கள்.

பலர் தங்களுடயை கனவுகளைக் கைவிட்டுவிடுகின்றனர் அல்லது கனவு காணவே துணிவதில்லை. தங்கள் கனவைத் தாங்கள் எந்த வழியில் சென்று அடையப் போகிறோம் என்பதை அவர்களால் பார்க்க முடியாததே அதற்குக் காரணம். உங்களால் முழு வழியையும் ஒருபோதும் பார்க்க இயலாது. அதனால் உங்கள் கனவு எப்படி நனவாகப் போகிறது என்பதை உங்களால் அறிய முடியாது. தங்கள் கனவு எப்படிக் கைகூடி வரப் போகிறது என்பது எந்த வெற்றியாளருக்கும் ஒருபோதும் தெரிந்திருப்பது இல்லை. அது கண்டிப்பாக நடக்கும் என்று அவர்கள் நம்புகின்றனர். தங்களுடைய நம்பிக்கையை அவர்கள் கடைசிவரை கைவிடுவதே இல்லை.

**மாஸ்டின் கிப்**



இன்று என் வாழ்க்கை எப்படி இருக்கிறதோ அப்படி இருக்கும் என்று நான் ஒருபோதும் யோசித்ததே இல்லை. இங்கு வந்து சேர்ந்ததும் நான் இப்படித்தான் உணர்வேன் என்பதை நான் அறிந்திருந்தாலும், இந்த வழியில் வருவேன் என்று நான் ஒருக்காலும் அறிந்திருக்கவில்லை.

உங்கள் கனவுகளை அடைவதற்கான பாதை ஒரு புதிர்க்கட்டத்தில் உள்ள பாதையைப்போல இருக்கும். உங்கள் முன்னால் இருக்கும் ஓரிரு அடிகளை மட்டுமே உங்களால் பார்க்க முடியும். அடுத்த முனையில் திரும்பியதும் எப்படி இருக்கும் என்பது அங்கு போய்ச் சேர்வதுவரை உங்களுக்குத் தெரியாது. சில சமயங்களில் அங்கு வழி மூடியிருக்கும். அப்போது நீங்கள் வந்த வழியே மீண்டும் திரும்பி வர வேண்டியிருக்கும். சில சமயம் மாயாஜாலம்போலக் குறுக்கு வழிகள் உங்கள் முன் தோன்றும். அவை உங்கள் பயணத்தை விரைவுபடுத்தும். உங்கள் கனவிற்கான வழியும் இதேபோலத்தான் உங்கள் கண்முன் விரியும்.

**லேன் பீச்லீ**



முழு வழியையும் யாராலும் பார்க்க முடியாது, துணிந்து முதலடியை எடுத்து வைத்து அப்பயணத்தைத் துவக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

**மாஸ்டின் கிப்**



நீங்கள் கனவு காண்கின்ற வாழ்க்கையை வாழ்வது என்பது ஒரு சாகசம். அடுத்து என்ன வரப் போகிறது என்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் ஒரு சாகசம் அது. உங்களுக்கு உத்வேகம் அளிக்கின்ற, நீங்கள் பிரமிப்புடன் பார்க்கின்ற மனிதர்கள்கூட ஒரு குறிப்பிட்ட விளைவை எதிர்பார்த்துத் தங்கள் பயணத்தைத் துவக்கவில்லை. அவர்களுக்கு ஒரு யோசனை, ஓர் இலக்கு அல்லது ஓர் ஆழ்விருப்பம் இருந்திருக்கும்.

ஆனால் தாங்கள் அங்கு எப்படிச் சென்றடையவிருந்தோம் என்பதை அவர்கள் அறியவில்லை.

புதிர்க்கட்டத்தில் இருப்பது குறித்த சாகசத்தைத்தான் நீங்கள் விரும்பினீர்கள். எல்லாவற்றையும் முன்கூட்டியே பார்க்கவோ, எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்திருக்கவோ, ஒரு சொடுக்குப் போட்டால் உங்கள் கனவுகளை நனவாக்கவோ நீங்கள் விரும்பவில்லை. பயணத்தின் சவால்களை நீங்கள் விரும்பினீர்கள். ஏனெனில், சவால்களைச் சமாளித்து நீங்கள் உங்கள் கனவை அடைவதன் மூலமாக மட்டுமே, ஒவ்வொரு மனிதனும் தேடிக் கொண்டிருக்கின்ற உண்மையான மகிழ்ச்சியையும் மனநிறைவையும் நீங்கள் பெறுகிறீர்கள்.

**அனஸ்தேசியா சோரே**



சில விஷயங்கள் நீங்கள் விரும்புகின்றபடி நடக்காது. நடப்பு நிலவரத்திற்கு ஏற்ப உங்கள் திட்டத்தை மாற்றிக் கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுக்க நீங்கள் துணிய வேண்டும். அது ஒரு புதிர்க்கட்டத்தைப் போன்றது. சில சமயம் அதற்கு மேல் அந்தப் பாதையில் போக முடியாதபடி வழி மூடியிருக்கும். அப்போது, நீங்கள் வந்த வழியே திரும்பிச் சென்று வேறு ஒரு புதிய பாதையைக் கண்டுபிடிக்க

வேண்டியிருக்கும். ஆனாலும் கடைசியில், உங்கள் கனவு நிறைவேறுவதற்கு இட்டுச் செல்லும் பாதைக்கு நீங்கள் வந்து சேர்வீர்கள்.

நீங்கள் உங்கள் கனவுகளுக்கான பாதையில் போய்க் கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு தடைச்சுவர் தோன்றக்கூடும். உங்கள் கதை அவ்வளவுதான் என்று நீங்கள் முடிவுகட்டிவிடுவீர்கள். புதிர்க்கட்டத்தில் இருப்பதைப் போலவே, வெளிப் பார்வைக்கு வேறு மாதிரித் தோன்றினாலும், நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு எப்போதும் ஒரு மாற்றுப் பாதை நிச்சயமாக இருக்கும். உங்களுடைய கனவின் வெற்றியானது புதிர்க்கட்டத்தின் மத்தியில் இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பதால், வழியில் தோன்றும் எதிர்பாராத திருப்பங்களையும் தடைகளையும் கண்டு நீங்கள் அசர மாட்டீர்கள். ஏனெனில் உங்களுடைய கனவின் வெற்றி அடுத்தத் திருப்பத்தில் இருக்கலாம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கனவுகள் நிஜ வாழ்க்கையில் அப்படித்தான் நனவாகின்றன.

## ஜான் பால் டிஜோரியா



எல்லாம் ஒரே நேரத்தில் நிகழ்ந்துவிடுவதில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் ஒரு விஷயத்தைத் தீவிரமாக விரும்பினால், பெரிய பெரிய அடிகளாக எடுத்து வைத்துச் சென்றால் அது சிரமமாக

இருக்கலாம். ஆனால் சிறிய சிறிய அடிகளாக எடுத்து வைத்துச் சென்றால் அது சுலபமாக இருக்கும். எனவே, சிறு சிறு அடிகளாக எடுத்து வைத்து முன்னோக்கிச் செல்லுங்கள்.

## லிஸ் முர்ரே



மக்கள் பல தடைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை நான் அறிவேன். ஆனால் மிக நெருக்கடியான நேரங்களில்கூட உங்களால் ஒரு விஷயத்தைச் செய்ய முடியும். தியோடோர் ரூஸ்வெல்ட்டைவிட அதை அதிகத் தெளிவாக வேறு யாராலும் எடுத்துரைக்க முடியாது. "உங்களிடம் இருப்பதை வைத்துக் கொண்டு, நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு, உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்," என்று அவர் கூறியுள்ளார். நீங்கள் ஒரே ஒரு விஷயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அதற்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். அதற்கு நீண்ட காலம் ஆனாலும் பரவாயில்லை. அடி மேல் அடி எடுத்து வைத்து, ஒவ்வொரு விஷயமாகத் தேர்ந்தெடுத்து, உங்களுக்கென்று

ஒரு புதிய வாழ்க்கையை உங்களால் செதுக்கிக் கொள்ள முடியும். அது ஹாலிவுட் படங்களில் வருவதைப்போல மயிர்க்கூச்செறிய வைக்கும் ஒன்றாகவோ அல்லது கதைகளில் வருவதைப்போல ஒரு வியத்தகு முடிவாகவோ இருக்கத் தேவையில்லை.

## அடி மேல் அடி வைத்து

உங்கள் பயணத்தில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஒவ்வோர் அடியாக எடுத்து வைக்க வேண்டியது மட்டும்தான். உண்மையைக் கூற வேண்டும் என்றால், அதை மட்டும்தான் உங்களால் செய்ய முடியும். நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும் சரி, அல்லது எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் சரி, உங்களால் கண்டிப்பாக ஓரடி எடுத்து வைக்க முடியும். நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, அவற்றால் உங்கள் மனத்தை நீங்கள் குழப்பிக் கொள்வீர்களேயானால், நீங்கள் திக்குமுக்காடிப் போவீர்கள். உங்கள் கனவுகளுக்கு இட்டுச் செல்லும் பாதை ஒருக்காலும் நீங்கள் நினைத்தபடி இருக்காது. அதனால் "அடி மேல் அடி வைத்து" உங்கள் கனவுப் பாதையில் நடக்க உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளுங்கள், நாங்கள் **இரகசியம்** திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது, இந்த வார்த்தைகள் எனக்குப் பெரிதும் உதவின. என் கனவு வழிதவறிப் போவதுபோல நான் உணர்ந்தபோதெல்லாம், வெறுமனே அடுத்த அடியை எடுத்து வைப்பதில் மட்டுமே கவனம் செலுத்த என்னை நான் தயார்படுத்திக் கொண்டேன். இறுதியில் என் கனவு நனவானது.

## லிஸ் முர்ரே



ஒட்டுமொத்த வழியையும் உங்களால் பார்க்க முடியும் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. அது தேவையென்றும், அது சாத்தியமென்றும், நம்மால் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முடியுமென்றும் நாம் தப்புக் கணக்குப் போடுகிறோம். என் தாயார் போதை மருந்துப் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்காக நர்க்காட்டிக்ஸ் அனானிமஸ் என்ற அமைப்பிற்குச் சென்றார். அங்குள்ள மக்கள் அமைதிப் பிரார்த்தனை ஒன்றை மேற்கொள்கின்றனர்: "கடவுளே, என்னால் மாற்ற முடியாத விஷயங்களை ஏற்றுக் கொள்வதற்குரிய மனநிலையை எனக்குக் கொடு, என்னால் மாற்றக்கூடிய விஷயங்களை மாற்றுவதற்குத் தேவையான துணிச்சலை எனக்குக் கொடு, இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கண்டுபிடிப்பதற்கான ஞானத்தையும் எனக்குக் கொடு". அவ்வளவுதான். என் தாயாரை என்னால் திரும்பக் கொண்டுவர முடியவில்லை. என் தந்தையின் எய்ட்ஸ் நோய் குறித்து என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. என்னால் வானிலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உங்களால் கட்டுப்படுத்த முடியாத அனைத்து விஷயங்களையும் உங்களால் ஒரு பட்டியலிட முடியும்.

நீங்கள் உங்கள் ஆற்றலை இவற்றின்மீது செலவழித்தால், அது விழலுக்கு இறைத்த நீர்தான். அதற்குப் பதிலாக, "சரி, அடுத்து நான் என்ன செய்யலாம்?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



நான் அடி மேல் அடி வைத்து நடக்கிறேன். சில சமயங்களில், வந்த வழியே திரும்பி நடக்க வேண்டியிருக்கிறது, அல்லது ஒரு தடைச்சுவரை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. உங்களுடைய மாபெரும் முன்னோக்கு உங்கள் மனத்தில் இருக்கும்வரை, நீங்கள் கண்டிப்பாக அங்கு சென்றடைவீர்கள் என்று நீங்கள் நம்பும்வரை, அதை உங்களால் சாதிக்க முடியும்.

புதிர்க்கட்டத்தில் உள்ளதைப்போல, ஒரு நாள் நீங்கள் ஒரு முனையில் திரும்பும்போது, திடீரென்று, நீங்கள் வர வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்; அப்போது உங்கள் கனவு நனவாகியிருக்கும்.

நீங்கள் உங்கள் கனவைச் சாதித்தப் பிறகு, நீங்கள் மேற்கொண்ட பயணத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, உங்களை வழி மறித்த ஒவ்வொரு

சுவரும் நீங்கள் ஒரு மாற்றுப் பாதையில் பயணிக்க உங்களை உந்தித் தள்ளியது என்பதை உணர்வீர்கள். அந்த மாற்றுப் பாதை உங்களை உங்கள் கனவை நோக்கி அழைத்துச் சென்றதோடு மட்டுமல்லாது, உங்களால் கற்பனை செய்திருக்க முடியாத விதத்தில் உங்கள் கனவின் சிறந்த வடிவத்தை நீங்கள் பெறுமாறும் செய்தது. உண்மையில், தடைச்சுவர்கள் என்று எதுவும் கிடையாது. தடைச்சுவர்கள் இருப்பது போன்ற தோற்றம் மட்டும்தான் உண்டு. மூடியிருக்கும் வழிகள் என்று எதுவும் கிடையாது, வழிகள் மூடியிருப்பது போன்ற தோற்றம் மட்டும்தான் உண்டு. உங்கள் கனவின் சிறந்த வடிவத்தை நீங்கள் பெறுவதற்காக உங்களுக்குக் காட்டப்பட்ட மாற்று வழிகளே அவை.

## ஜி. எம். ராவ்



என் நாற்பதாண்டுகாலப் பயணத்தில், விஷயங்கள் நாங்கள் எதிர்பார்த்திருந்தபடி நிகழாமல் போனது பல முறை நடந்திருக்கிறது. அப்படி ஆனபோதெல்லாம், நாங்கள் நின்று நிதானித்து எங்கள் பாதையை மாற்றிக் கொள்ளவும் திறந்த மனத்துடன் இருக்கவும் தயங்கவேயில்லை. சமீபத்தில், மாபெரும் சர்வதேச ஆற்றல் நிறுவனம் ஒன்றின் 50 சதவீதத்தை 1.2 பில்லியன் டாலர்களுக்கு நாங்கள் வாங்கியபோது இதை நாங்கள் அனுபவித்தோம். விஷயங்கள் நாங்கள் எதிர்பார்த்தபடி நிகழவில்லை.

அதோடு, எங்களுடைய ஆழ்விருப்பங்கள் எங்கள் கூட்டாளிகளின் எதிர்பார்ப்புகளோடு ஒத்திசைவாக இருக்கவில்லை. அதனால் நாங்கள் அதிலிருந்து விலகிக் கொண்டோம். அதன் விளைவாக நாங்கள் தற்காலிகமாகப் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தது. ஆனால் பின்னர் நாங்கள் அதிகமான பலன்களை அடைந்தோம். உங்கள் நோக்கம் பரிசுத்தமானதாக இருந்தால், பிரபஞ்சம் உங்களுக்கு வெகுமதி அளிப்பதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்கும்.

உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில், ஏமாற்றத்தாலோ, விரக்தியாலோ, அல்லது ஏதோ ஒன்று நீங்கள் நினைத்தபடி நிகழாமல் போனதாலோ உங்களுடைய அர்ப்பணிப்பில் தடுமாற்றம் ஏற்பட்டால், மிகச் சிறப்பான விளைவுகளை நீங்கள் பெறும் விதத்தில் உங்கள் கனவுகளை நோக்கி நீங்கள் உந்தித் தள்ளப்படுவீர்கள் என்பதை உங்களுக்கு நீங்களே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## மாஸ்டின் கிப்



தொழில்முனைவோரின் அகராதியில், ஒத்துவராததை ஒதுக்கித் தள்ளுதல் என்ற ஒரு சொற்றொடர் உள்ளது. ஏதாவது ஒன்று சரிப்பட்டு வரவில்லை என்றால், நான்

கற்றுக் கொண்டதைப் பயன்படுத்திப் புதிதாக ஒன்றைச் செயல்படுத்துவது என்று அதற்குப் பொருள். கதாநாயகனின் பயணம் அதைப் பற்றியதுதான். எது வேலை செய்கிறது என்று தீர்மானித்துக் கொள்வது, எது வேலை செய்யவில்லையோ அதை மாற்றிக் கொள்வது, பின் மீண்டும் முயற்சிப்பது என்று சென்று கோண்டிருந்தால், இறுதியில், நீங்கள் சென்றடைய வேண்டி இடத்தை நீங்கள் அடைந்துவிடுவீர்கள்.

**ஜான் பால் டிஜோரியா**



கனவுகள் மாறிக் கொண்டே இருக்கும். 1980களில் நான் என் கூட்டாளியுடன் சேர்ந்து, ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ் நிறுவனத்தைத் துவக்கியபோது, எங்கள் கனவு, "நம்மால் ஒரு வருடத்திற்கு 5 மில்லியன் டாலர்கள் பெறுமானமுள்ள பொருட்களை விற்க முடிந்தால், நமக்குத் தலைக்கு 200,000லிருந்து 250,000 டாலர்கள் வரை கிடைக்கும். அது போதும். பொருளாதாரக் கவலைகள் இன்றி நாம் நிம்மதியாக இருக்கலாம்," என்பதாக இருந்தது. நாங்கள் அந்த இடத்தை அடைந்தபோது,

எங்கள் கனவுகள் மாறின, பெரிதாக ஆயின. நீங்கள் ஒரு கனவை அடைந்துவிட்டால், அதைவிடப் பெரியதொரு கனவைக் காணத் துவங்குவீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வது முக்கியம். அது ஒரு பரிணாம வளர்ச்சி.

உங்களுடைய கதாநாயகனின் பயணத்தின் வளைவு சுளிவுகள் நிறைந்த பாதைகள் வழியாகப் பயணித்து, நீங்கள் உங்கள் கனவைப் பின்தொடர்ந்து செல்லும்போது, ஒரு விஷயம் குறித்து நீங்கள் உறுதியாக இருக்கலாம். உங்களுடைய கனவு ஒருபோதும் நீங்கள் நினைத்ததைவிடச் சிறியதாக ஆகாது. அது எப்போதும் உங்களால் கற்பனை செய்ய முடியாத அளவுக்குப் பெரிதாகவே ஆகும்.


NAYSAYERS AND ALLIES

# அவநம்பிக்கையாளர்களும் ஆதரவாளர்களும்

**பீட்டர் ஃபோயோ**



நாம் எல்லோருமே அவநம்பிக்கையாளர்களை எதிர்கொள்கிறோம். பிரம்மாண்டமான அளவிலான இந்த வியாபாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, மிகப் பெரிய அவநம்பிக்கையாளர்கள் ஏராளமானோருடன் நான் போட்டிப் போட வேண்டியிருந்தது.

பீட்டர் ஃபோயோ எல்லாத் திசைகளிலிருந்தும் அவநம்பிக்கையாளர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முதலீட்டாளர்கள், போட்டியாளர்கள், அரசு அதிகாரிகள் போன்றோர் அதில் அடங்குவர். அவர் தன் கனவை அடைவதை அவர்கள் தடுத்திருக்கக்கூடும். இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தும், ஏராளமான சிரமங்கள் இருந்தும், அவர் நெக்ஸ்டெல் மெக்சிகோ நிறுவனத்தை 17,000 நபர்கள் வேலை பார்க்கின்ற, 40 லட்சம் வாடிக்கையாளர்கள் இருக்கின்ற ஒரு அதிநவீனத் தொலைத் தொடர்பு நிறுவனமாக வளர்த்திருக்கிறார். வேறொரு நாட்டிலிருந்து வந்து குடியேறிய, கடின உழைப்பிற்குப் பெயர் பெற்றப்

பெற்றோர்களுக்குப் பிறந்த அவர், தன்னுடைய பிரம்மாண்டமான கனவை வெறும் ஐந்து வருடங்களில் நிறைவேற்றினார். அப்போது அவருக்கு முப்பத்தெட்டு வயதுதான் ஆகியிருந்தது. பீட்டர் ஃபோயோவின் தலைமையின் கீழ், நெக்ஸ்டெல், கடந்த பத்து வருடங்களில் அகர வளர்ச்சியடைந்து பல கோடி டாலர்கள் பெறுமானமுள்ள ஒரு நிறுவனமாக ஆகியுள்ளது.

## மாஸ்டின் கிப்



அவநம்பிக்கையாளர்கள் நம் பயணத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக இருக்கின்றனர். நீங்கள் வெற்றியாளராக இருந்தால், மாபெரும் விஷயம் ஒன்றை நீங்கள் சாதித்திருந்தால், சிலர் உங்களை நேசிப்பார்கள், வேறு சிலர் உங்களை வெறுப்பார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நான் அதை வெற்றிக்கான அறிகுறியாகவே பார்க்கிறேன்.

முன்பு ஒருபோதும் செய்யப்பட்டிராத ஏதோ ஒன்றைச் செய்த ஒவ்வொருவரும், தங்கள் கனவு சாத்தியமில்லை என்று கூறி அதன்மீது சேற்றை வாரி இறைத்த நூற்றுக்கணக்கான அவநம்பிக்கையாளர்களைச் சந்தித்திருப்பர். இரவைப் பகலாக்கும் வெளிச்சத்தைத் தருகின்ற ஒரு கருவியைத் தான் கண்டுபிடிக்கப் போவதாகத் தாமஸ் ஆல்வா எடிசன் அறிவித்தபோது, மக்கள் என்ன கூறினார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஆயிரக்கணக்கான மைல்கள் இடைவெளியில் வாழும் இருவர், ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதைச்

சாத்தியமாக்கும் ஒரு கருவியைத் தான் கண்டுபிடிக்கப் போவதாக அலெக்சாண்டர் கிரகாம் பெல் கூறியபோது மக்கள் அதை எவ்வாறு எடுத்துக் கொண்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்களிடம் மிகப் பெரிய கனவு ஒன்று இருந்து, உங்களைச் சுற்றிலும் ஏராளமான அவநம்பிக்கையாளர்கள் இருந்தால், உங்களால் சாதிக்க முடியும் என்பதற்கு அவர்கள்தான் அத்தாட்சியாகத் திகழ்வார்கள்.

## அனஸ்தேசியா சோரே



1995ம் ஆண்டுவாக்கில் எனக்குக் கிராக்கி அதிகமாக இருந்ததால், "நான் பெவர்லி ஹில்ஸ் பகுதியில் சொந்தமாக ஓர் அழகு நிலையத்தைத் திறந்தாக வேண்டும்," என்று நான் நினைத்தேன். கடைகளை வாடகைக்கு விடும் ஒருவரை நான் அணுகியபோது, அவர் என்னிடம், "உனக்கு மறை கழன்றுவிட்டதா? வெறும் கண் புருவத்தைத் திருத்தும் வேலையை மட்டும் செய்து கடை வாடகையைக் கொடுக்கக்கூடிய அளவு உன்னால் சம்பாதிக்க முடியாது," என்று கூறினார். அந்த இடத்தை எனக்கு வாடகைக்குக் கொடுக்க அவர் விரும்பவில்லை. ஆனால் நான் என் தீர்மானத்தில் உறுதியாக இருந்ததை அவர் கண்டார். எனவே அவர், "நான் உனக்கு ஆறு

மாதங்களுக்குக் கடையை வாடகைக்குத் தருகிறேன்," என்று கூறினார். முதல் வாரமே என் கடைக்கு வெளியே ஒரு நீண்ட வரிசை காத்திருந்தது. ஒருநாள் அவர் என்னை அழைத்து, "நான் இது போன்ற ஒன்றை என் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. நீ உண்மையிலயே புருவங்களைச் சீராக்கும் வேலையைத்தான் செய்கிறாயா?" என்று கேட்டார்.

**லைர்டு ஹாமில்டன்**



அவநம்பிக்கையாளர்கள் எப்போதுமே இருப்பார்கள். நாம் உணர்வுபூர்வமானவர்களாக இருப்பதால், அவநம்பிக்கையாளர்களால் நாம் எப்போதும் பாதிக்கப்படுகிறோம். அதை நீங்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதுதான் முக்கியம். அவர்கள் விரித்த வலையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அப்படி நீங்கள் அதில் சிக்கிக் கொண்டால், அவர்கள் தங்கள் இலக்கில் வெற்றி பெற்றுவிட்டார்கள் என்று அர்த்தம்.

அவநம்பிக்கையாளர்கள் உங்கள்மீது ஏற்படுத்தும் தாக்கத்தின் வீரியத்தை நிர்ணயிக்கப் போவது நீங்கள்தான். அவர்களுக்கு எப்படிப் பதிலடி கொடுப்பது

என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் உங்கள்மீது தாக்கம் ஏற்படுத்த நீங்கள் அனுமதித்தால், அவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும். எனவே அவர்கள் உங்களைத் தொந்தரவு செய்ய நீங்கள் அனுமதிக்காதீர்கள். அவர்களுடைய வார்த்தைகள், நீங்கள் உங்கள் கனவை அடைவதைத் தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக, உங்களுக்கு உத்வேகம் கொடுப்பதாக நீங்கள் எடுத்துக் கொண்டால், அவர்கள் என்ன எதிர்பார்த்திருந்தார்களோ, அதற்கு நேரெதிரானது விளையும்.

**பீட்டர் ஃபோயோ**



அவநம்பிக்கையாளர்களின் வார்த்தைகளை உங்கள் வெற்றிக்கான உந்துசக்தியாக நீங்கள் எடுத்துக் கொண்டால், உங்களிடம் அற்புதமான உணர்வுகள் கிளர்ந்தெழும். அவர்கள் உங்களை வேகமாக மகிழ்ச்சிக் கடலில் தள்ளுவார்கள், உங்கள் வெற்றி பன்மடங்கு பெருக வழி வகுப்பார்கள்.

**லைர்டு ஹாமில்டன்**



அவநம்பிக்கையாளர்களின் வார்த்தைகளை என் முன்னேற்றத்திற்கான எரிபொருளாக எண்ணற்றச் சமயங்களில் நான் பயன்படுத்தியுள்ளேன். "உங்களால் செய்ய முடியாது," என்று அவர்கள் கூறியதை, "என்னால் கண்டிப்பாக முடியும்," என்று நான் எடுத்துக் கொண்டேன். அது என்னை உந்தித் தள்ளியது. நான் அதை வேகமாகச் சுழற்றி, எதிர்மறைச் சக்தியை நேர்மறைச் சக்தியாக மாற்றினேன். என் உலகில் அவநம்பிக்கையாளர்கள் எப்போதுமே அதிக எண்ணிக்கையில் இருந்தனர். இப்போதுகூட அவர்களுக்குக் குறைச்சல் இல்லை.

**பீட்டர் பர்வாஷ்**



நான் சரியான பாதையில்தான் போய்க் கொண்டிருந்தேன் என்ற உணர்வு என்னிடம் மேலோங்கி இருந்ததால்,

என்னை நோக்கி வீசப்பட்ட விமர்சனங்கள் என்னைப் பாதிக்கவில்லை.

"இதை என்னால் செய்ய முடியாது என்று பல முறை என்னிடம் கூறப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும், என்னிடமிருந்த ஒவ்வொரு துளி விடாமுயற்சியையும் பயன்படுத்தி நான் என் கனவுகளை நனவாக்க வேண்டியிருந்தது."

**ஹோவர்டு ஷல்ட்ஸ்**

ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை நிர்வாகி

உங்களை விமர்சிப்பவர்கள், வேறொரு நல்ல பாதைக்கு உங்களை வழிநடத்தக்கூடும். உங்கள் கனவு இப்படித்தான் நனவாகப் போகிறது என்று நீங்கள் உங்கள் மனத்தில் ஒரு கணக்குப் போட்டு வைத்திருக்கலாம். அதன்படி நீங்கள் பயணிக்கும்போது, உங்களைத் தீவிரமாக விமர்சிப்பவர்களை நீங்கள் எதிர்கொள்ளக்கூடும். அவர்கள் உங்கள் கனவை நிலைகுலைய வைக்கக்கூடும். அதே பாதையில் உங்களால் மேற்கொண்டு பயணிக்க முடியாமல் போய்விடுவதால், நீங்கள் வேறு மாற்றுப் பாதையைத் தேடக் கட்டாயப்படுத்தப்படுவீர்கள். நீங்கள் முன்பு பயணித்துக் கொண்டிருந்த பாதையைவிடப் பல வழிகளில் மேலான ஒரு பாதையை அப்போது நீங்கள் கண்டுபிடிப்பீர்கள் — உங்களைத் தடுக்க முயற்சித்த அவநம்பிக்கையாளர்கள்தான் அதற்குக் காரணம். அவர்களை ஆசீர்வதியுங்கள்!

**பீட்டர் ஃபோயோ**



தீவிரமான எதிர்மறைத்தன்மை கொண்ட மக்களை நான் எதிர்கொள்ளும்போது, உண்மையில், நான் எங்கே போய்க் கொண்டிருக்கிறேன் என்பதற்கு அவர்கள் துப்புக் கொடுக்கின்றனர். அவர்கள் என்னை இழுத்துப் பிடிப்பதற்குப் பதிலாக, நான் சரியான திசையில் அதிக விரைவாகப் பயணிக்க என்னை உந்தித் தள்ளுகின்றனர்.

**பீட்டர் பர்வாஷ்**



நான் கனடாவில் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தபோது, அச்சமயத்தில் அங்கு டென்னிஸ் குழுவின் தலைவராக இருந்தவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், "நீங்கள் படுமோசமாக விளையாடுவதால், விளையாடுவதை நீங்கள் நிறுத்திவிடுவது நல்லது," என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

நான் அதை ஒரு தடைக்கல்லாகப் பார்க்காமல், ஒரு சவாலாக எடுத்துக் கொண்டேன். தேசிய டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் விளையாட நான் மீண்டும் கனடாவிற்குத் திரும்பிச் சென்றேன். வெற்றியை நிர்ணயிக்கும் கடைசிப் பந்தை அடிப்பதற்கு முன்பு நான் இடம் மாற வேண்டியிருந்தது. அச்சமயத்தில் அவருடைய கடிதத்தை நான் மீண்டும் ஒரு முறை எடுத்துப் பார்த்தேன். நான் ஓர் உதவாக்கரை என்று அவர் அதில் கூறியிருந்தார். ஆனால் அந்தப் போட்டியில் நான்தான் தேசிய சாம்பியன்ஷிப் பட்டத்தை வெல்லவிருந்தேன்.

## அற்ப விஷயங்களை அலட்சியம் செய்துவிடுங்கள்

உங்களுக்கு உங்கள்மீது நம்பிக்கையும் உறுதியும் பிறக்கும்வரை அடுத்தவர்களிடம் உங்கள் கனவுகளைப் பற்றி வாயைத் திறந்துவிடாதீர்கள். உங்கள் பயணத்தைப் பொறுத்தவரை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு மதிப்புமிக்க அறிவுரை அது. உங்கள் கனவுகளைப் பற்றி நீங்கள் அவசரப்பட்டு அடுத்தவர்களிடம் உளறிவிட்டால், அதற்கு அவர்கள் அளிக்கும் பதில்களைக் கேட்டு நீங்கள் மனமொடிந்து போவீர்கள். உங்கள் கனவு முளைவிடும் முன்னரே அதை நீங்கள் கிள்ளி எறிந்துவிடுவீர்கள். இது பலருக்கு நிகழ்ந்துள்ளது. இது உங்களுக்கும் நிகழ்ந்திருக்கலாம். உங்களுக்கு ஓர் அருமையான யோசனை உதித்திருக்கும். அது உங்களுடைய வழக்கமான திறமையோடு பொருந்தாத ஒன்றாக இருந்திருக்கும். அப்போது நீங்கள் மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்து கொண்டிருப்பீர்கள். அவர்கள் உங்கள் மனத்தைச் சந்தேகங்களால் நிரப்பியிருப்பர். உங்கள் கனவு துளிர்க்கும் முன்பே மடிந்துவிட்டிருக்கும். ஆனால் அதற்குக் கொஞ்ச காலம் கழித்து, உங்களுக்குத் தோன்றிய அதே

அற்புதமான யோசனை வேறொருவர் வழியாக இவ்வுலகில் யதார்த்தமாகியிருப்பது உங்களுக்குத் தெரிய வரும் — அது மாபெரும் வெற்றி பெற்றிருப்பதையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்,

## ஜான் பால் டிஜோரியா



முக்கியமான ஒருசில விஷயங்களில் உங்கள் கவனத்தைக் குவியுங்கள். அற்ப விஷயங்களை அலட்சியம் செய்துவிடுங்கள்.

## லிஸ் முர்ரே



உங்கள் விஷயங்களில் அடுத்தவர்கள் தங்கள் மூக்கை நுழைப்பது குறித்து எச்சரிக்கையாக இருங்கள். மக்கள் தங்களுக்கென்று சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளனர். எது சாத்தியம், எது சாத்தியமில்லை என்பது குறித்தத் தங்களுடைய அபிப்பிராயங்களை அவசர

அவசரமாக உங்களிடம் கூற அவர்கள் தயங்க மாட்டார்கள். அவர்கள் அதை ஆணித்தரமாகக் கூறுவதுதான் இதிலுள்ள கொடுமை. ஒரு விஷயம் சாத்தியமா இல்லையா என்பது, அதைச் செய்து பார்க்காதவரை யாருக்குமே தெரியாது. யாருக்குமே.

"உங்களுடைய லட்சியங்களைச் சிறுமைப்படுத்தி எள்ளி நகையாடுபவர்களிடம் இருந்து விலகியே இருங்கள். அற்ப மனிதர்கள் அதை எப்போதும் செய்து வருவர். ஆனால் பெரிய மனிதர்கள், உங்களாலும் ஒருநாள் பெரிய மனிதராக ஆக முடியும் என்ற உணர்வை உங்களுக்கு ஏற்படுத்துவார்கள்."

**மார்க் டுவைன்**
எழுத்தாளர்

நான் **இரகசியம்** திரைப்படத்தை எடுக்கத் தீர்மானித்ததும், அது என் மனத்தில் முழுமையாக உருவாகும்வரை வேறு எவரிடமும் அது குறித்து நான் மூச்சுவிடவில்லை. நான்கு மாதங்கள் அது குறித்துத் திட்டமிட்டு, ஆராய்ச்சிகள் செய்து, அதை என்னுடைய ஒரு பகுதியாக நான் ஆக்கிக் கொண்டேன். என் கனவு சாத்தியமற்றது என்று எத்தனை ஆயிரம் அவநம்பிக்கையாளர்கள் கூறினாலும் சரி, அவர்களுடைய பேச்சு என்னை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதையும், யாராலும் என்னை ஊக்கமிழக்கச் செய்துவிட முடியாது என்பதையும் நான் உறுதி செய்து கொண்ட பிறகுதான் என் கனவை நான் பிறருடன் பகிர்ந்து கொண்டேன்.

உங்கள் கனவை நன்றாகச் செதுக்கிச் செப்பனிடுங்கள். அது குறித்த உங்களுடைய நம்பிக்கையை உறுதி செய்து கொள்ளுங்கள். அக்கனவு குறித்தப் படத்தை உங்கள் மனத்தில் தெள்ளத் தெளிவாகப் பதிவாக்கிக் கொள்ளுங்கள். அதன் பிறகு வேண்டுமானால் அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**லேன் பீச்லீ**



என் இளமைப்பருவத்தில் மேன்லி பீச்சில் நான் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டச் சமயங்களில், என் வலது புறம் இருவர் வந்து, கடலில் இருந்து வெளியேறுமாறு என்னிடம் கூறுவர். என் இடது பக்கமாக வேறு இருவர் வந்து, "நீ மிக அருமையாக சறுக்கிச் செல்கிறாய். உன்னுடன் சேர்ந்து சறுக்குவதை நாங்கள் மிகவும் ரசித்து அனுபவிக்கிறோம்," என்று கூறுவர். நான் யார் கூறியதைக் காது கொடுத்து கேட்டேன் என்று நினைக்கிறீர்கள்? என் இடது புறமாக வந்தவர்களின் பேச்சைத்தான்.

**பீட் கேரல்**



வேலையிலிருந்து தூக்கியெறியப்பட்டதிலிருந்து மீண்டு வந்து, ஒரு வெற்றிகரமான பயிற்றுவிப்பாளராக ஆவதற்கு எனக்கு வலிமையைக் கொடுத்தது, என்னைப் பற்றி அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்க மறுத்ததுதான். அவர்களுடைய கருத்து சரியாக இருக்கக்கூடும் என்று நான் எண்ணுவதற்கு நான் இடமளிக்கவில்லை. அதை ஏற்றுக் கொள்ள மறுத்த என் உணர்வுதான் சரி என்பதை நான் அறிந்திருந்தேன்.

அவநம்பிக்கையாளர்கள் பொதுவாகத் திறந்த மனத்துடன் இருப்பதில்லை. அதோடு, அவர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்தாதவர்களாகவும் உள்ளனர். அவர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொள்பவர்களாக இருந்திருந்தால், எல்லாமே சாத்தியம் என்பதைத் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து அறிந்திருப்பார்கள்.

## ஜான் பால் டிஜோரியா



நான் பதினோராவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது, என் வணிக ஆசிரியர், நானும் என் தோழி மிச்சேலும் ஒருக்காலும் உருப்பட மாட்டோம் என்று ஒட்டுமொத்த வகுப்பின் முன்னால் வைத்துக் கூறினார்.

அவருடைய கருத்துத் தவறு என்பதையும், எங்கள் வாழ்க்கையில் நாங்கள் எதையாவது கண்டிப்பாகச் சாதிக்கப் போகிறோம் என்பதையும் நாங்கள் அறிந்திருந்தோம். மிச்சேல் ஒரு சூப்பர்ஸ்டாராக ஆகிவிட்டாள். மாமாஸ் அன்ட் பாப்பாஸ் இசைக்குழுவில் ஒருத்தியான மிச்சேல் பிலிப்ஸ்தான் அவள்.

நாங்கள் **இரகசியம்** திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருந்தபோது, அவநம்பிக்கையாளர்களுடன் எனக்குப் பல அனுபவங்கள் ஏற்பட்டன. அவற்றில் ஒன்று எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு நிற்கிறது. அத்திரைப்படத்தின் முதல் உருவாக்கத்தை நான் பல தொலைக்காட்சி நிர்வாகிகள் அடங்கிய ஒரு கூட்டத்தாருக்குப் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தேன். அதற்குப் பின்னால் ஒரு வருடகாலக் கடின உழைப்பு இருந்தது. அதோடு, நான் அதற்காக என் வாழ்வில் இருந்த அனைத்தையும் பணயம் வைத்திருந்தேன். அத்திரைப்படம் நிறைவடைந்தபோது, அங்கிருந்த நிர்வாகிகளில் ஒருவர்கூட அதைப் புகழ்ந்து எதுவும் பேசவில்லை. மாறாக, அவர்கள் அதைக் கடுமையாக விமர்சித்தனர். அப்படத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் அவர்கள் குற்றங்குறைகளைக் கண்டுபிடித்தனர். நான் அதிர்ச்சியுடன் அந்த அறையிலிருந்து வெளியேறினேன். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் என் கால் போன போக்கில் நான் அலைந்தேன். பிறகு ஒருவழியாகச் சுதாரித்துக் கொண்டு, ஒரு மணிநேர விமானப் பயணத்திற்குப் பின்பு வீடு வந்து சேர்ந்தேன். நான் அந்த விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, அந்த நிர்வாகிகள் கூறிய எல்லாக் குற்றங்குறைகளுக்கும் என்னால் தீர்வு காண முடியாது என்பதை நான் உணர்ந்தேன். அதற்குத் தேவையும் இருக்கவில்லை. விமானம் தரையைத் தொட்டபோது, அத்திரைப்படத்தை மேம்படுத்தும் விதத்தில் ஒருசில மாற்றங்களை மட்டும் மேற்கொள்வதற்கு எனக்கு உத்வேகம் கிடைத்திருந்தது. நாங்கள் அதை மட்டும் செய்தோம். அந்தத் திரைப்படம் அவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றதற்கு அவைதான் காரணமாக அமைந்தன.

## ஆதரவாளர்கள்

நீங்கள் உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில் அவநம்பிக்கையாளர்களை நிச்சயமாக எதிர்கொள்வீர்கள் என்றாலும், பலப்பல ஆதரவாளர்களையும் நீங்கள் கண்டிப்பாகச் சந்திப்பீர்கள். அவர்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளவர்களாகவோ அல்லது நீங்கள் உங்கள் கனவை அடைய உங்களுக்கு ஆதரவும் உதவியும் செய்ய மிகக் குறுகிய காலத்திற்கு உங்கள் வாழ்வில் தோன்றுகிறவர்களாகவோ இருப்பர்.

### மாஸ்டின் கிப்



சுயமாக முன்னேறிய வெற்றியாளன் அல்லது சுயமாக ஏற்பட்ட வெற்றி என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில் எல்லாருக்கும் வழி நெடுகிலும் ஏகபட்ட உதவிகள் கிடைத்துள்ளன.

### லேன் பீச்லீ



வெற்றி பெற்றுள்ள எல்லோரும் அடுத்தவர்களுடைய தோளின்மீது ஏறி நின்றுதான் அதைச் சாதித்துள்ளனர். நீங்கள் எவ்வளவுதான் வெற்றி பெற்றிருந்தாலும், உங்கள் பயணத்தில் உங்களுக்கு உதவியவர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதும் உணர்ந்து கொள்வதும் மிகவும் முக்கியம்.

எவருமே தங்களுடைய கனவைத் தனியொரு நபராகச் சாதிப்பதில்லை. உங்கள் கனவுப் பாதையில் உங்களைக் கொண்டு சேர்க்கக் கணக்கு வழக்கில்லா நபர்கள் தங்கள் உதவியை நல்குவர். கதாநாயகனின் பயணத்தில் நாம் எதிர்கொள்ளும் விஷயங்களிலேயே மிகவும் அற்புதமானது என்னவென்றால், உங்களுக்கு நன்றாகத் தெரிந்த மற்றும் உங்களுக்கு ஓரளவுக்கு மட்டுமே பரிச்சயமான எண்ணற்ற நபர்கள் உங்கள் பயணம் நெடுகிலும் தங்கள் ஆதரவையும் உதவியையும் உங்களுக்கு வழங்குகின்றனர் என்பதுதான்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



ஒரு பெரிய ஆதரவுக் கும்பலுடன்தான் நான் வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆதரவு அளித்துள்ள என் குடும்ப உறுப்பினர்கள், என் வியாபாரத்தில் தங்களுடைய பணத்தைக் கொட்டிய முதலீட்டாளர்கள், என் நிறுவனம் குறித்த யோசனை ஒரு காகிதத்தில் வரையப்பட்டிருந்த ஒரு கிறுக்கலாக மட்டுமே இருந்த காலத்திலிருந்தே எனக்காக உழைத்து வந்துள்ள என் பணியாளர்கள் ஆகியோர் அதில் அடங்குவர்.

**லேன் பீச்லீ**



ஓர் உலகச் சாம்பியனாக ஆக வேண்டும் என்று எட்டு வயதாக இருக்கும்போதே ஓர் இலக்கு வைத்துக் கொள்வது மிகவும் சவாலானது. நான் என் கனவைக்

கைவிட்டுவிட எண்ணற்றச் சமயங்களில் விரும்பியுள்ளேன். "இது மிகவும் சிரமமாக இருக்கிறது," என்று வானத்தை நோக்கிக் கத்திவிட்டு, இதிலிருந்து தப்பித்து ஓடிவிட வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். அதிர்ஷ்டவசமாக, அச்சமயங்களில் எல்லாம் என்னைத் தூக்கி நிறுத்தி, "உன்னால் முடியும், நான் உன்னை நம்புகிறேன்," என்று கூறிய பல தனிநபர்கள் என் வாழ்வின் அந்தக் கடினமான காலகட்டங்களில் எனக்கு ஆதரவாக இருந்தனர். உங்கள் வாழ்வில் நீங்கள் பெரிதும் மதிக்கின்ற, பெரிதும் பாராட்டுகின்ற நபர்கள், உங்கள்மீது தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகக் கூறும்போது, அது உங்களிடம் ஏகப்பட்ட நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது. இப்படிப்பட்ட நபர்கள் உங்கள் வாழ்வில் உங்களைச் சூழ்ந்திருப்பது மிகவும் முக்கியம்.

**இரகசியம்** திரைப்படம் தயாராகிக் கொண்டிருந்தபோது, ஏகப்பட்ட நபர்கள் எங்கள் வாழ்வில் தோன்றி, நாங்கள் எடுக்க வேண்டியிருந்த அடுத்தக் கட்ட நடவடிக்கை தொடர்பாக எங்களுக்கு உதவினர். இத்தகைய ஆதரவாளர்களோடு கூடவே, அப்படத்தை உருவாக்குவதில் எனக்கு உதவிய ஒரு குழுவினரும் எனக்கு வாய்த்திருந்தனர். அவர்களுடைய அர்ப்பணிப்பும் ஆதரவும் இல்லாமல் போயிருந்தால், என் கனவு ஒருபோதும் சாத்தியமாகியிருக்காது.

சில சமயங்களில் என் குழுவினருக்குச் சம்பளம் கொடுக்கக்கூட என்னிடம் பணம் இருக்கவில்லை. நான் என் வீட்டை அடமானம் வைத்திருந்தேன். வங்கிகள் அளித்த ஓவர்டிரா∴ப்ட் வசதியை முழுமையாகப் பயன்படுத்தியிருந்தேன். திரைப்படத் தயாரிப்பு எந்தத் தடையும் இல்லாமல்

செல்ல வேண்டும் என்பதற்காக என் கடனட்டைகளையும் முழுக்க முழுக்கப் பயன்படுத்தியிருந்தேன். ஆனால் என் சொந்தக் குழுவினருக்குச் சம்பளம் கொடுக்கக்கூட முடியாத நிலை குறித்து நான் மிகவும் மன வேதனை அடைந்திருந்தேன். என் குழுவினர் என்ன செய்தனர் தெரியுமா? என் குழுவில் இருந்த மூத்த உறுப்பினர்கள் ஓரிருவர் தங்களுடைய கடனட்டைகளில் கடன் வாங்கி, சம்பளத் தொகை இல்லாமல் சமாளிக்க முடியாத நிலையில் இருந்த பிறருக்குச் சம்பளம் கொடுத்தனர். என் குழுவில் இருந்தவர்கள்தான் என்னுடைய மிகச் சிறந்த ஆதரவாளர்களாக இருந்தனர் என்பதில் துளிகூடச் சந்தேகம் இல்லை.


THE ROAD OF TRIALS & MIRACLES

# சோதனைகளும் அற்புதங்களும் அடங்கிய பயணப் பாதை

**அனஸ்தேசியா சோரே**



வாழ்க்கை ஒரு சவால். வாழ்க்கை இலகுவானது, கச்சிதமானது என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. நீங்கள் மருட்சி அடைந்துள்ளீர்கள் என்று அர்த்தம்.

**பீட்டர் பர்வாஷ்**



ஒவ்வொரு நாளும் சோதனைகள் மிக்கது. உடல்ரீதியாக, மனரீதியாக, உணர்ச்சிரீதியாக அல்லது ஆன்மீகரீதியாக ஏதாவது பிரச்சனை இல்லாமல் யாருக்கும் ஒருநாள்கூட

விடிவது இல்லை. நீங்கள் நிச்சயமாகச் சோதனைகளை எதிர்கொள்வீர்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள். சோதனைகள் இல்லாதவர்கள் எவருமில்லை. "எனக்கு மட்டும் ஏன் இந்தச் சோதனை?" என்று மக்கள் கேட்கின்றனர். "உங்களுக்கு ஏன் இருக்கக்கூடாது?"

"உங்கள் இலக்கு நோக்கிய உங்கள் பயணப் பாதை எப்போதும் இலகுவாக இருக்கத் தேவையில்லை. தடைகள் தோன்றும், பிரச்சனைகள் முளைக்கும். ஆனால் நீங்கள் எதற்காக உங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது . . . உங்கள் இலக்கு எது என்பதை மறக்காதீர்கள். சிறு பிரச்சனைகளோ அல்லது சிறிய தோல்விகளோ உங்களைத் தடுத்து நிறுத்த அனுமதிக்காதீர்கள்."

**டொரக் பீட்டர்**
அமெரிக்க பேஸ்பால் சாம்பியன்

## சவால்களும் முட்டுக்கட்டைகளும்

கதாநாயகனின் பயணத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவாலும் ஒவ்வொரு முட்டுக்கட்டையும், அந்தச் சவால்களையும் முட்டுக்கட்டைகளையும் கடந்து வருவதற்கு உங்களுக்குத் தேவைப்படுகின்ற வலிமையான பண்புநலன்களையும் திறன்களையும் நீங்கள் சுவீகரித்துக் கொள்வதால், உங்களிடம் வெகுவான மாற்றங்களை விளைவிக்கின்றன. இந்தப் பண்புநலன்களும் திறன்களும், உங்கள் கனவை நனவாக்குவதற்கு நீங்கள் எப்படிப்பட்ட நபராக உருவாக வேண்டுமோ அப்படிப்பட்ட நபராக நீங்கள் உருவாகும் விதத்தில் உங்களைச் செதுக்கிச் சீராக்கும். அந்த விதத்தில் பார்த்தால், நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் முட்டுக்கட்டைகளும், நீங்கள் உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில்

சீராகப் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை எடுத்துரைக்கும் மாபெரும் அறிகுறிகளாகும். உங்களுடைய சவால்களும் முட்டுக்கட்டைகளும் எவ்வளவு பெரிதாக இருக்கின்றனவோ, உங்களுடைய வெற்றியும் அவ்வளவு பெரிதாக இருக்கும், அதை நீங்கள் மிகவும் நெருங்கியிருப்பீர்கள்.

### மாஸ்டின் கிப்



சவால்களிலிருந்து மக்களுக்குக் கிடைக்கின்ற மிகப் பெரிய பலன், அவர்களுக்குக் கிடைக்கின்ற விளைவுகள் அல்ல, மாறாக, அவர்கள் யாராக ஆகிறார்களோ அதுதான். நீங்கள் ஒரு சவாலை எதிர்கொண்டு, அதை வெற்றிகரமாகச் சமாளிக்கும்போது, உங்களுக்கு உங்கள்மீதான நம்பிக்கை அதிகரிக்கிறது, உங்கள் திறமைமீதான நம்பிக்கை அதிகரிக்கிறது, தெய்வீகச் சக்தியின்மீதான விசுவாசம் அதிகரிக்கிறது. எனவே, உங்களால் மிகப் பெரிய விஷயங்களைச் சாதிக்க முடியும். முட்டுக்கட்டைகளைத் தாண்டி வருவது என்பது ஒரு மிகப் பெரிய பரிசு — உங்களுக்குக் கிடைக்கும் விளைவைவிடப் பல மடங்கு பெரியது அது. ஏனெனில், அதை உங்களிடமிருந்து யாராலும் பறித்துக் கொள்ள முடியாது.

## பீட்டர் பர்வாஷ்



சவால்கள், மன வேதனைகள், முட்டுக்கட்டைகள், இடர்பாடுகள் போன்றவற்றை அடுத்தடுத்து நீங்கள் எதிர்கொள்ள நேர்ந்தால், நீங்கள் அவற்றிலிருந்து மீண்டு வரும்போது மேம்பட்டவராக ஆகியிருப்பீர்கள். ஏனெனில் உங்களுடைய தன்னம்பிக்கை விண்ணளாவ உயர்ந்திருக்கும்.

கட்டாயம் எதிர்கொண்டு சமாளித்துத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு சூழலை நீங்கள் உங்கள் வாழ்வில் எப்போதேனும் சந்தித்திருந்தால், அதுவரை உங்களுக்கே தெரியாமல் உங்களிடம் மறைந்து கிடந்த வலிமைகளை அப்போது நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். நீங்கள் புதிதாகக் கைவசப்படுத்துகின்ற இந்த வலிமைகள் உங்களுடைய நடத்தையை உருவாக்கி, உங்களையும் நீங்கள் முன்பிருந்ததைவிட மேம்பட்ட ஒருவராக ஆக்கும். குழந்தைகளைப் பெற்றுள்ள தாய்மார்கள் இதை நன்றாகவே அறிவர். தங்களுடைய குழந்தைகளைப் பேணி வளர்க்க அவர்கள் வலிமையானவர்களாக இருக்க வேண்டும். பொறுமை, சகிப்புத்தன்மை, மன உறுதி, உடல்ரீதியான பலம் ஆகியவையும் அவர்களுக்குத் தேவைப்படும். தங்கள் குழந்தையை ஈன்றெடுக்கும் அனுபவம் அவர்களைத் தாய்மைப்பருவத்திற்குத் தயார்படுத்துகிறது. அதற்குத் தேவையான வலிமையையும் குணாம்சங்களையும் அப்போது அவர்கள் பெற்றுவிடுகிறார்கள். மிகச் சிரமமான

காலகட்டங்களில் அவர்கள் இத்தகைய வலிமையை வெளிப்படுத்துவதால்தான் நம்மில் பலர் நம் தாயாருக்குக் கதாநாயகி அந்தஸ்தைக் கொடுக்கிறோம்.

**மாஸ்டின் கிப்**



நீங்கள் துணிந்து உங்கள் சவால்களை எதிர்கொண்டு ,அவற்றை வெற்றிகரமாகச் சமாளித்துவிடும்போது உங்களின் ஒரு பகுதி, "அட, இதை நான் செய்து முடித்துவிட்டேனா!" என்று வியக்கும். நீங்கள் வெறுமனே காலை ஆட்டியபடி உட்கார்ந்து கொண்டு, "நான் என்னை நேசிக்கிறேன்," என்று கூறிக் கொண்டிருக்க முடியாது. சுயமதிப்பு என்பது நீங்கள் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய ஒன்று.

**லேன் பீச்லீ**



சவால்களும் முட்டுக்கட்டைகளும், நாம் வளர்வதற்கும், கற்றுக் கொள்வதற்கும், நம்மை மேம்படுத்திக் கொள்வதற்குமான வாய்ப்பை நம் ஒவ்வொருவருக்கும் வழங்குகின்றன. நாம் நம்முடைய சௌகரிய வட்டத்திற்கு வெளியே காலெடுத்து வைத்து, வாழ்க்கை உண்மையிலேயே நமக்கு வழங்கவிருக்கின்ற அனைத்தையும் அனுபவிக்கவும் அவை நமக்கு உதவுகின்றன.

கதாநாயகனின் பயணத்தில் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முட்டுக்கட்டைகளின் உண்மையான நோக்கம், நம்முடைய கனவு நனவாகும்போது, அதற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் நம்முடைய திறமைகள் மற்றும் குணநலன்களை நாம் வளர்த்துக் கொள்ள நம்மைத் தயார்படுத்துவதுதான். வெற்றியைக் கையாள்வதற்கான திறன்கள் இல்லாவிட்டால், கவனவுகள் நனவாகத் துவங்கும்போதே புஸ்வானமாகிவிடும். சவால்களும் முட்டுக்கட்டைகளும் வெற்றிக்கு நம்மைத் தயார்படுத்தும் விஷயங்களே.

## ஜி. எம். ராவ்



என் வியாபாரத்தில் என் பயணம் ஒரு நதியின் நீரோட்டத்தைப்போலவே இருந்தது. நான் சந்தித்த

ஒவ்வொரு முட்டுக்கட்டையும், நான் என் பயணப் போக்கை மாற்றிக் கொண்டு இறுதியில் என் லட்சியத்தை அடைய உதவியது. என் வாழ்க்கை முழுவதும் சவால்களால் நிறைந்து வந்துள்ளது. ஆனால் நான் எதிர்கொண்ட ஒவ்வொரு சவாலும் ஓர் அர்த்தமுள்ள தற்செயல் நிகழ்வாக விளங்கி, மேலும் ஒரு பெரிய வாய்ப்பிற்கான ஒரு கதவைத் திறந்துவிட்டது.

**ஜான் பால் டிஜோரியா**



சவால்கள் மற்றும் முட்டுக்கட்டைகளில் இருந்து நமக்கு ஒரு முழுமையான கல்வி கிடைக்கிறது. அது நம் வெற்றியின் பிரிக்க முடியாத ஓர் அம்சம். என் வாழ்வில் எண்ணற்ற முறைகள் விஷயங்கள் நான் எதிர்பார்த்ததுபோல நடைபெறவில்லை. ஆனால் இந்த அனுபவம் எனக்குக் கிடைக்காமல் போயிருந்தால், நான் இன்று பெற்றிருக்கும் வெற்றியைப் பெற்றிருக்க மாட்டேன், இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கமாட்டேன் என்பதை நான் அவற்றிலிருந்து புரிந்து கொண்டேன். வாழ்க்கையில்

## நிச்சயமாக நடைபெற்றே தீரும் விஷயங்கள் அவை. ஆனால் இவற்றில் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடங்கள் உங்களுடைய உச்சகட்ட வெகுமதிக்கு உங்களைக் கூட்டிச் செல்லும்.

என் பயணத்தை நான் திரும்பிப் பார்க்கும்போது, நான் எதிர்கொண்ட சவால்களும் முட்டுக்கட்டைகளும், நான் என் கனவைப் பின்தொடர்ந்து செல்வதென்று தீர்மானிப்பதற்கு முன்பு என் வாழ்வில் நான் எதிர்கொண்ட சவால்களோடும் முட்டுக்கட்டைகளோடும் ஒப்பிடப்படும்போது ஒன்றுமே இல்லை. உங்களுக்கு ஒரு பிறவி நோக்கம் இருந்து, நீங்கள் ஒரு கனவைப் பின்பற்றிச் செல்லும்போது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் முட்டுக்கட்டைகளும், பிறவி நோக்கமோ அல்லது கனவோ இல்லாதிருக்கும்போது இருப்பதைப்போலக் கடினமாக இருப்பதில்லை. ஒரு பிறவி நோக்கம் இல்லாமல் இருக்கும்போது நீங்கள் சவால்களையும் முட்டுக்கட்டைகளையும் சந்தித்தால் அதற்கு அர்த்தம் ஏதும் இருப்பதுபோலத் தெரியாது என்பதால் அவை வெறும் துரதிர்ஷ்டம் என்றே தோன்றும். ஆனால் அவற்றுக்கென்று ஒரு நோக்கம் இருக்கிறது. ஏனெனில் நீங்கள் பரிணாம வளர்ச்சி அடைய வேண்டியுள்ளது. அவை உங்கள் பரிணாம வளர்ச்சிக்கு உதவுகின்றன. எனவே, நீங்கள் வாழ்க்கையிடமிருந்து ஓடி ஒளிந்து கொண்டாலும் சவால்களும் முட்டுக்கட்டைகளும் உங்கள் வாழ்வில் தோன்றுவதை உங்களால் தவிர்க்க முடியாது.

**பீட்டர் பர்வாஷ்**



என் வாழ்க்கைத் தத்துவம் இதுதான் ஒரு நல்ல விஷயம் நிகழ்ந்தால், நான் அதைப் பாராட்டுகிறேன். ஒரு கெட்ட விஷயம் நிகழ்ந்தால், நான் அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறேன்.

சவால்களையும் முட்டுக்கட்டைகளையும் நாம் முதன்முதலாகச் சந்திக்கும்போது அவை எவரொருவருக்கும் கடினமாகவே இருக்கும். அவற்றுக்கான தீர்வையும் அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டு வருவது என்பதற்கான வழியையும் கண்டுபிடிக்காமல் இருக்கும்வரை மட்டுமே அவை கடினமாக இருக்கும். உங்களால் தீர்வு காண முடியாத சவால்களோ அல்லது முட்டுக்கட்டைகளோ உங்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படுவது இல்லை. ஒருபோதும் கொடுக்கப்படுவது இல்லை.

**பீட்டர் ஃபோயோ**




முட்டுக்கட்டைகளை முறியடிப்பதற்கு நல்ல மனநிலை தேவை. மகிழ்ச்சியாக இருப்பதும் நன்றியுணர்வோடு இருப்பதும்தான் என் மனநிலையாக இருந்து வருகிறது. அது எப்போதுமே அப்படித்தான் இருந்து வந்துள்ளது. நான் பொருளாதாரரீதியாகப் பிறருக்கு அதிகமாகக் கொடுத்து உதவுவதென்று ஒரு தீர்மானம் மேற்கொண்டேன். நீங்கள்

உங்கள் வளத்தைப் பிறருடன் எவ்வளவு அதிகமாகப் பகிர்ந்து கொள்கிறீர்களோ, உங்கள் முட்டுக்கட்டைகள் அவ்வளவு அதிக வேகமாக மறைந்துவிடுகின்றன.

தன் கனவை நனவாக்குவதற்காக, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில கொள்கைகளைத் தான் தவறாமல் கடைபிடித்து வந்ததுதான் தன் வெற்றிக்குக் காரணம் என்று பீட்டர் ஃபோயோ குறிப்பிடுகிறார். அவர் எதிர்கொள்கின்ற எந்தவொரு தடையும் அவரை ஒருபோதும் அச்சுறுத்துவதில்லை. அவர் எப்போதும் நன்றியுணர்வைக் கடைபிடிப்பதன் மூலம் ஒரு நேர்மறையான, மகிழ்ச்சியான மனநிலையுடன் இருந்து வருகிறார். தன்னால் முடியும்போதெல்லாம் அவர் மற்றவர்களுக்கு உதவி செய்கிறார். சிரமங்கள் தன்முன் தோன்றும்போதெல்லாம், கதாநாயகனின் மிகச் சிறந்த குணநலன்களில் ஒன்றை அவர் பயன்படுத்துகிறார் — மனக்காட்சிப்படைப்புதான் அது.

## பீட்டர் ஃபோயோ



என் போட்டியாளர்கள், விதிமுறையாளர்கள், ஊழல் பேர்வழிகள் ஆகியோரிடமிருந்து எனக்குத் தொடர்ந்து முட்டுக்கட்டைகள் வந்து கொண்டிருந்தாலும், நான் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. எனக்கு வேண்டிய விளைவுகளின்மீது நான் என் கவனத்தைக் குவிக்கிறேன்.

நான் எங்கு சென்றடைய வேண்டும் என்பதில் முழு மூச்சாக இறங்குகிறேன். சில சமயங்களில், நீங்கள் சென்று கொண்டிருக்கும் பாதையில் முட்டுக்கட்டைகள் தோன்றும்போது, சிறிது சுற்றிக் கொண்டு வேறு வழியாகச் செல்ல வேண்டியிருக்கும். "சரி, இதைச் சமாளிக்க இப்போது வேறு என்ன செய்யலாம்?" என்று நான் யோசிப்பேன். வித்தியாசமான ஒன்றை நான் மனக்காட்சிப்படுத்துவேன்.

இறுதியில் உங்களுக்கு எது வேண்டுமோ அதை மனக்காட்சிப்படுத்துங்கள். உங்களுடைய பிரச்சனைக்கு ஒரு தீர்வு தோன்றும் அல்லது உங்களுடைய சவாலைச் சமாளிப்பதற்கான வழி பிறக்கும். ஆனால் உங்களுக்குக் கொடுக்கப்படும் தீர்வுகள் உங்கள் காதுகளில் விழ வேண்டுமானால், உங்களுடைய மனம் கவலையிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும்.

நீங்கள் வழி தவறிப் போய்விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் ஒருவரிடம் வழி கேட்கிறீர்கள். அவர் உங்களுக்கு உதவ முற்பட்டுக் கொண்டிருக்கும்போது, வழி தவறிவிடுவது எவ்வளவு பெரிய பிரச்சனை என்றும், அதிலிருந்து மீள்வதற்கு நீங்கள் எவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்றும், உங்களால் ஒருபோதும் உங்களுடைய வழியைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும் என்று நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் நீங்கள் அவரிடம் புலம்பிக் கொண்டிருந்தால், அவர் உங்களுக்குச் சரியான வழியைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தாலும் உங்களால் அதைக் கேட்க முடியாது! உங்களுடைய மனம் கவலைகளாலும் மனவேதனைகளாலும் குமுறிக் கொண்டிருந்தால், பிரபஞ்சம் கூறும் தீர்வுகளை உங்களால் செவிமடுக்க முடியாது.

**லிஸ் முர்ரே**



சில சமயங்களில் நான் என் நண்பர்களின் வீட்டில் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பேன். காலையில் பள்ளி துவங்குவதற்கு முன்னால் நடைபெறும் ஒருசில சிறப்பு வகுப்புகளுக்கு நான் செல்ல வேண்டியிருக்கும். அதற்குச் செல்ல என்னை நான் ஊக்குவித்துக் கொள்வதற்கு எனக்கு ஏதாவது தேவைப்படும்.ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நபரை நான் என் மனத்தில் காட்சியாகப் பார்ப்பேன். அது நானாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் நான் அந்த உருவத்தை எப்போதும் பின்னால் இருந்துதான் பார்த்தேன். அவள் ஒரு மைதானத்தில் தனியாக ஓடிக் கொண்டிருப்பாள். அவளுடைய வழியில் அவளுக்கு முன்னால் ஆங்காங்கே தடைக்கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அவள் அவற்றைத் தாண்டிக் குதித்துச் சென்று கொண்டிருப்பாள். நான் படுக்கையைவிட்டு எழுந்து பள்ளிக்குத் தயாராவதற்கு என்னை உத்வேகப்படுத்திக் கொள்வதற்காக, படுக்கையில் படுத்தபடியே இந்த ஓட்டக்காரியை நான் என் மனத்தில் காட்சிப்படுத்திக் கொண்டிருப்பேன். "சரி, உனக்குக் களைப்பாக இருக்கிறது. அது ஒரு தடைக்கட்டை நீ நேற்று இரவு வேலை பார்த்தாய், அப்போது ஒரு

தடைக்கட்டையை நீ தாண்டிக் குதித்துவிட்டாய், இப்போது உனக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. காலை உணவு உண்ணாமல் ரயில் பிடித்துச் செல்ல வேண்டும். அது ஒரு தடைக்கட்டை. தடைக்கட்டை. தடைக்கட்டை. தடைக்கட்டை," என்று எனக்கு நானே கூறிக் கொள்வேன். காலை வெயிலில் முதுகில் வியர்வை வழிந்தோட அவள் அத்தடைக்கட்டைகளைத் தாண்டிக் குதித்துச் சென்று கொண்டிருப்பதை நான் பார்ப்பேன். எனவே, ஏதோ ஒன்று என் வழியில் குறுக்கிடும் ஒவ்வொரு முறையும், அது இன்னொரு தடைக்கட்டையாக இருந்தால்? ஏனெனில், தடைக்கட்டைகள் ஓடுகளத்தின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக விளங்குவதால், நான் என் பாதையிலிருந்து விலகிவிடவில்லை என்று நான் அர்த்தப்படுத்திக் கொள்வேன். என் ஓடுபாதையில் இடம்பெறும் தடைக்கட்டைகள் அதன் பிரிக்க முடியாத அம்சங்களாக விளங்குவதால், நான் வேண்டிய அளவு தடைக்கட்டைகளைத் தாண்டிக் குதித்துவிட்டால், என் எல்லைக்கோட்டை நான் அடைந்துவிடுவேன்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



எப்படி என்று எனக்குத் தெரியாது. ஆனால் மிக இருண்ட காலகட்டங்களில், நான் உருவாக்கிய பொருளின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்ததால், இறுதியில் எப்படியாவது வென்றுவிடுவேன் என்பதை நான் அறிந்திருந்தேன். நீங்கள் நம்பும் ஒன்றில் தொடர்ந்து நீடித்து, விடாமுயற்சியுடன் அதைக் கேட்டால், பிரபஞ்சம் அதை உங்களுக்கு வழங்கும்.

**ஜான் பால் டிஜோரியா**



நிராகரிப்புகள் வரும்போது முயற்சியைக் கைவிட்டுவிட நினைப்பதுதான் வெற்றியை நோக்கிப் பயணிக்கும் எவரொருவரும் எதிர்கொள்ளும் மிகப் பெரிய முட்டுக்கட்டையாகும். எதில் வெற்றி பெற வேண்டுமானாலும், ஏராளமான நிராகரிப்புகளுக்கு நீங்கள்

உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும், அது உங்களைப் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எதையாவது துவக்கும்போது, பெரும்பாலான மக்கள் இதற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதில்லை என்பதால், தங்களைத் தோல்வியாளர்களாக வரித்துக் கொள்கிறார்கள், அதிலிருந்து விலகிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிராகரிப்புகள் இல்லாமல் இருந்திருந்தால், நான் ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ் நிறுவனத்தைத் துவக்கியிருக்கவே மாட்டேன்.

## தவறுகளும் தோல்விகளும்

"நாம் நிறையத் தவறுகளைச் செய்கிறோம். தவறுகள் இல்லையென்றால் எந்தக் குதூகலமும் இருக்காது. நான் கோல்ஃப் விளையாடச் செல்லும்போது, அங்குள்ள பதினெட்டுக் குழிகளிலும் நான் துல்லியமாகப் பந்தைப் போட்டுவிட்டால், நான் நீண்ட காலம் தொடர்ந்து கோல்ஃப் விளையாட மாட்டேன். அவ்வப்போது பந்து தாறுமாறாக எங்காவது போனால்தான் சுவாரசியமாக இருக்கும். ஆனால் அது அடிக்கடியும் நிகழக்கூடாது."

**வாரன் பஃபே**

தொழிலதிபர் மற்றும் முதலீட்டாளர்

## லேன் பீச்லீ



கடந்தகாலத்தில் உங்களுக்கு ஏற்பட்டத் தோல்விகள் மற்றும் தவறுகள், அல்லது பின்னடைவுகள் மற்றும் ஏமாற்றங்களை நீங்கள் திரும்பிப் பார்த்தால், அவை உங்களுடைய பயணத்தின் இன்றியமையாத அம்சங்கள் என்பது உங்களுக்குப் புலப்படும்.

**பால் ஆர்.ஃபாலியா**



ஒரு குழந்தை மீண்டும் மீண்டும் கீழே விழுந்தாலும் எவ்வாறு எழுந்து நிற்கிறது? அதற்கு ஏராளமான துணிச்சல் வேண்டும். பூஜ்யத்திலிருந்து துவக்கி ஐந்து கடைகள்வரை திறப்பது எண்ணற்ற முட்டுக்கட்டைகளை

உள்ளடக்கியிருந்தது. ஆனால் நீங்கள் உங்களுடைய தவறுகளிலிருந்து கற்றுக் கொள்கிறீர்கள்.

**லைர்டு ஹாமில்டன்**



தோல்விக்கு உங்களை உட்படுத்திக் கொள்வதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, எனக்குக் கிடைக்கின்ற மாபெரும் படிப்பினைகள், என் தோல்விகளில் இருந்துதான் வருகின்றனவே அன்றி என் வெற்றிகளில் இருந்து அல்ல என்பதை நான் அறிவேன் அவைதாம் நம்மை நம் கனவுகளுக்கு அருகாமையில் கூட்டிச் செல்கின்றன.

உங்கள் கனவை நனவாக்கத் தேவையான விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கின்ற திறமையை நீங்கள் வளர்த்துக் கொள்ளாவிட்டால், உங்களுக்கு ஏற்படும் தோல்விகளும், நீங்கள் செய்யும் தவறுகளும், நீங்கள் அத்திறமையை வளர்த்துக் கொள்வதை உறுதி செய்யும். யாரோ ஒருவர் கூறிய ஏதோ ஒன்றை நம்பி நீங்கள் ஒரு காரியத்தில் இறங்கினால், நீங்கள் தோல்வியைச் சந்திக்க நேரிடலாம். தீவிரமாக யோசித்துப் பார்க்காமல் எதிலாவது குதித்துவிட்டு, பின்னர் பெரும் தவறு செய்துவிட்டதை நீங்கள் உணரக்கூடும். ஆனால் உங்கள் தோல்வி அல்லது தவறை நீங்கள் பின்னோக்கிப் பார்த்து ஆய்வு செய்யும்போது, ஏதோ சரியில்லை என்ற

எச்சரிக்கைச் சமிக்கைகள் அப்போது உங்களுக்குக் கிடைத்திருந்தும்கூட நீங்கள் அவற்றை அலட்சியம் செய்துவிட்டிருப்பது உங்களுக்குப் புலப்படும். வேறு வார்த்தைகளில் கூறினால், நீங்கள் உங்கள் உள்ளுணர்வை அலட்சியம் செய்துவிட்டீர்கள்.

## லேன் பீச்லீ



உண்மையில், தவறுகள் என்பவை கற்றுக் கொள்வதற்கான சரியான வாய்ப்புகளே. முதல் முறையிலேயே பாடம் கற்றுக் கொள்ளாமல் இருப்பதுதான் மிகப் பெரிய தவறு. நீங்கள் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளும்வரை, பிரபஞ்சம் அதே பாடத்தை உங்களுக்கு மீண்டும் மீண்டும் கொடுத்துக் கொண்டே இருக்கும் என்பதுதான் இதிலுள்ள சுவாரசியமான விஷயம்.

அடுத்தவர்களுடைய அபிப்பிராயங்களைக் கண்மூடித்தனமாக அப்படியே நம்பாமல், நீங்கள் சொந்தமாக ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டிய தேவை இருந்தது என்பது உங்களுக்குப் புரியும். அல்லது ஒரு முக்கியமான செயலில் இறங்குவதற்கு முன்பு நீங்கள் இன்னும் தீவிரமாகவும் அதிக எச்சரிக்கையோடும் சிந்தித்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் பார்க்கக்கூடும்.

"வெற்றி பெற்ற அனைத்து உணவகங்களிலிருந்தும் நான் கற்றுக் கொண்டதைவிட, தோல்வியில் முடிந்த ஒரே ஓர் உணவகத்திலிருந்து நான் அதிகமாகக் கற்றுக் கொண்டேன்."

**உல்ஃப்கேங்க் பக்**

உணவக உரிமையாளர் மற்றும் தொழிலதிபர்

## ஜி. எம். ராவ்



நாம் தோல்விகளைக் கொண்டாட வேண்டும். ஏனெனில் நாம் செயலில் குதிப்பதால்தான் அவை ஏற்படுகின்றன. அவற்றிலிருந்து நாம் அதிகமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். நாம் அதே தவறே மீண்டும் செய்யாதிருக்கும் விதத்தில், அதன் பாடங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். புதிய யோசனைகள், புதிய அணுகுமுறைகள், புதிய பரிசோதனைகள், புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றை ஊக்குவிக்கும்போது, தவறாகப் போகும் விஷயங்களைப் பெரிதுபடுத்தக்கூடாது.

உங்கள் தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் யார்மீதும் பழி போடாமல், அவற்றுக்கு நீங்களே பொறுப்பேற்றுக் கொண்டு, அவற்றில் மறைந்து கிடக்கும் பாடங்களை நீங்கள் தேடும்போது, உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில்

நீங்கள் முன்னேறுவதற்கான சக்திவாய்ந்த கருவிகளாக அவை உருவாகின்றன. தவறுகளும் தோல்விகளும் தவிர்க்க முடியாதவை. ஆனால் அவற்றில் ஒளிந்திருக்கும் மாயாஜாலத்தை நீங்கள் பிரித்தெடுத்துக் கொள்வதும் கொள்ளாததும் உங்களைச் சார்ந்தது.

## லைர்டு ஹாமில்டன்



அசைக்க முடியாத செயல்முறை ஒன்று இருக்கிறது. முதலில் இது சாத்தியம் என்று நீங்கள் நம்ப வேண்டும். அடுத்து, தோற்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும். கீழே விழுந்தவுடன் வேகமாகத் துள்ளி எழ வேண்டும். வெகு விரைவில், "நான் போகத் துவங்கிவிட்டேன்," என்று நீங்கள் கூறத் துவங்குவீர்கள். அதற்குப் பின், "நான் முன்பைவிடச் சிறிது முன்னேறி இருக்கிறேன்" என்று உங்களுக்குத் தோன்றும். பின், "நான் இதில் சிறப்பாகச் செயல்படுகிறேன்," என்று நீங்கள் உணர்வீர்கள். வெகு விரைவில் நீங்கள் உச்சத்தில் இருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால் உச்சத்தை அடைந்ததைவிட, அந்தச் செயல்முறைதான் இங்கு முக்கியம் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். பின் அந்தச் செயல்முறைக்கு நீங்கள் அடிமையாவீர்கள்.

## மாயாஜாலங்கள்

### பீட்டர் பர்வாஷ்



என் வாழ்வில் நிகழ்ந்த சில கணங்களுக்காக நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். நாம் தனியாக இயங்குபவர்கள் அல்ல என்பதையும் நான் உணர்ந்துள்ளேன். நாம் ஆக்ஸிஜனை மட்டுமல்லாமல், நல்ல அதிர்ஷ்டம், நல்ல நேரம் ஆகியவற்றையும் பிற மக்களையும் சார்ந்துள்ளோம்.

கதாநாயகனின் பயணத்தில் நீங்கள் சோதனைகளை மட்டும் சந்திப்பது இல்லை, கூடவே மாயாஜாலங்களையும் சந்திப்பீர்கள். இன்னும் சொல்லப் போனால், நீங்கள் சோதனைகளைவிட அதிகமாக மாயாஜாலங்களைச் சந்திப்பீர்கள் என் வாழ்வில் என் கனவு நனவானபோது ஏற்பட்டச் சிலிர்க்க வைக்கும் உணர்வு, நான் அக்கனவை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தபோதும், மாயாஜாலங்களை நான் எதிர்கொண்டபோதும் ஏற்பட்டது. எந்த ஒரு மனிதனாலும் கற்பனை செய்ய முடியாத விதத்தில், பிரபஞ்சம் உங்களுக்காக மாயாஜால நிகழ்வுகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பத் துவங்கும்போது, நீங்கள் ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போவீர்கள். "அது எப்படி நீகழ்ந்தது," என்று மீண்டும் மீண்டும் நீங்கள் கேட்டுக் கொண்டே இருப்பீர்கள்.

## லிஸ் முர்ரே



நான் தெருவில் படுத்து உறங்கினேன், பொருட்களைத் திருடித் தின்றேன். அது உலகின் மிகச் சிறந்த பழக்கம் இல்லை என்றாலும், நான் உயிர்வாழ வேண்டியிருந்தது. நான் பார்ன்ஸ் & நோபிள் புத்தகக் கடைக்குச் சென்று, அங்கிருந்து சுயமுன்னேற்றப் புத்தகங்களைத் திருடி, மாடிப்படிகளுக்குக் கீழே உட்கார்ந்து அவற்றைப் படித்து முடிப்பேன். பின்னர் என் வாழ்க்கைக் கதை பிரபலமானவுடன், ஸ்டீபன் கவி நிறுவனத்திலிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. நான் அங்கு போய் ஒரு சொற்பொழிவாற்றினேன். நான் அவருடைய புத்தகத்தையும் திருடியிருந்தேன் என்பது நான் அவர் முன்னால் போய் நிற்கும்வரை எனக்கு உறைக்கவே இல்லை. "முன்பு நான் உங்கள் புத்தகத்தை ஒரு கடையிலிருந்து திருடினேன்," என்று நான் அவரிடம் கூறினேன். அது இலவசமாக எனக்குக் கொடுக்கப்பட்டதாக நினைத்துக் கொள்ளுமாறு அவர் பெருந்தன்மையாகக் கூறினார்.

லிஸ் முர்ரே தன் வாழ்க்கைக் கதையைக் கூறுவதற்குத் தன்னுடன் மேடையைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஸ்டீபன் கவியிடமிருந்து அவருக்கு

அழைப்பு வந்தபோது, லிஸ் முர்ரேக்கு வெறும் பதினெட்டு வயதுதான். அது லிஸ் முர்ரேயின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாயாஜாலமான தருணங்களில் ஒன்று. ஏனெனில் தன் கதையைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பிறரை ஊக்குவிக்கும் ஒரு மேடைச் சொற்பொழிவாளராக அவர் ஆவதற்கு அது அடிக்கல் நாட்டியது. பிறகு, விற்பனையில் பெரும் சாதனை படைத்த ஒரு புத்தகத்தையும் அவர் எழுதினார். சிறிது காலத்தில், மிக்காயில் கோர்பசேவ், தலாய் லாமா, டோனி பிளேர் போன்றவர்களுடன் மேடையைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது.

## பீட்டர் பர்வாஷ்



1968ல் டென்னிஸ் போட்டிகளுக்காக நான் பயணம் செய்து கொண்டிருந்தபோது, என்னிடம் இருந்த பணம் அவ்வளவும் தீர்ந்துவிட்டது. ஃபோர் ஸீசன்ஸ் ஹோட்டல்களை நிறுவிய இஸ்ஸி ஷார்ப்புடன் நான் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவர் என்னிடம், "நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நான், "எனக்குத் தெரியவில்லை. நான் மீண்டும் பள்ளி ஆசிரியர் வேலைக்குச் செல்ல வேண்டியதுதான்." என்று பதிலளித்தேன். அவர், "நீங்கள் இப்போட்டியில் தொடர்ந்து பங்கேற்க வேண்டும் என்றால், உங்களுக்கு

எவ்வளவு தேவைப்படும்?" என்று கேட்டார். "உலகின் பல இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதிக்கும் இரண்டு விமானப் பயணச் சீட்டுகள் தேவைப்படும். பயணச்சீட்டுகளுக்குத் தலா 1,800 டாலர்கள் வீதம் 3,600 டாலர்கள் செலவாகும்," என்று நான் கூறினேன். அடுத்த நாள் நான் அவருடைய அலுவலகத்திற்குச் சென்றேன். அவர் என்னிடம் 3,600 டாலர்களுக்கான காசோலை ஒன்றைக் கொடுத்துவிட்டு, "நீங்கள் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்," என்று கூறினார். அது என் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியது. நான் அப்போட்டித் தொடரில் தொடர்ந்து பங்கேற்க அது மிகவும் உதவியாக இருந்தது. அதில் பங்கேற்றதால், சர்வதேச அளவில் விளையாடும் தொழில்முறை ஆட்டக்காரர்களின் தரவரிசைப் பட்டியலில் என் நிலை உயர்ந்தது. அதற்குப் பிறகு நடந்த கதை எல்லோருக்கும் தெரியும்.

**மாஸ்டின் கிப்**



அப்போது நான் என்னுடைய பழைய தோழி ஒருவரின் பெற்றோரின் வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் போட்டு

வைக்கும் 8க்கு 8 அடி நீள அகலமுள்ள ஓர் அறையில் அடைக்கலம் புகுந்திருந்தேன். நான் எப்போதும் இணையத்தளத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். என் வலைப்பூவான 'த டெய்லி லவ்'வை நான் பொழுதுபோக்கிற்காகவே பயன்படுத்தி வந்தேன். ஆனால் அதை முழுநேரத் தொழிலாக ஆக்குவதென்று நான் தீர்மானித்தேன். மின்னஞ்சல், டுவிட்டர் என்று ஒரு மாதகாலம் பொழுது ஓடியது. அதோடு அதன் வருங்காலம் பற்றிய பயமும் என்னைக் கவ்விக் கொண்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு, கிம் கர்தாஷியன், என் வலைப்பூவிற்கு விஜயம் செய்யுமாறு தன்னுடைய 20 லட்சம் ரசிகர்களுக்குத் தன் டுவிட்டர் மூலம் அழைப்பு விடுத்தார். என்னால் அக்கணத்தை ஒருபோதும் மறக்க முடியாது. என் ரசிகர்களின் எண்ணிக்கை ஒரே இரவில் 1,000லிருந்து 10,000ஆக அதிகரித்தது. நான் என் வலைப்பூவைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற ஒரு தெய்வீகத் தூண்டுதல் என்னுள் பிறந்ததை நான் உணர்ந்தேன்.

உலகிலேயே மிகச் சிறந்த அலைச்சறுக்கு வீராங்கனையாக ஆக வேண்டும் என்பது லேன் பீச்லீயின் கனவாக இருந்தது. அவர் அக்கனவைச் சாதிக்க வேண்டுமென்றால், அப்போது இன்னொரு வீராங்கனை தொடர்ந்து நான்கு முறை உலகச் சாம்பியன் பட்டத்தை வென்று உருவாக்கியிருந்த சாதனையை அவர் முறியடித்தாக வேண்டும். ஒரு வருடம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும் வெவ்வெறு போட்டிகளில் யார் அதிகப் புள்ளிகளைப் பெறுகிறார்களோ அவர்களுக்கு அந்த வருடத்திற்கான சாம்பியன் பட்டம் வழங்கப்படும் லேன் பீச்லீ அதுவரை மூன்று முறை தொடர்ந்து உலகச்

சாம்பியன் பட்டத்தை வென்றிருந்தார். நான்காவது வருடத்தின் கடைசிப் போட்டிக்குச் சென்றபோது, லேன் பீச்லீ அதிகப் புள்ளிகளுடன் களம் இறங்கினார். அவருடைய கனவு அவருடைய கைக்கெட்டும் தூரத்தில்தான் இருந்தது.

### லேன் பீச்லீ



அது 2001ம் வருடம். அந்த வருடத்தின் கடைசிப் போட்டி நடந்து கொண்டிருந்தது. கால் இறுதிப் போட்டியின்போது, கடைசி அலையில் நான் விழுந்துவிட்டேன். அதனால் போட்டியில் பங்கு கொள்ளும் தகுதியை நான் இழந்துவிட்டேன். அதன் மூலம் தொடர்ச்சியாக நான்காவது வருடம் பட்டம் பெற எனக்கு இருந்த வாய்ப்பை நான் கிட்டத்தட்ட நாசமாக்கிவிட்டேன். உலகளாவிய என் ரசிகர்கள் பட்டாளத்தை நான் ஏமாற்றிவிட்டதாக உணர்ந்து, நான் மனமுடைந்து போனேன். ஏனெனில் முதலில் நான்கு முறை தொடர்ந்து வெற்றி பெற்றுவிட்டு, அதன் பிறகு அந்தச் சாதனையையும் முறியடிக்க வேண்டும் என்பது என் கனவாக இருந்தது.

லேன் பீச்லீ அந்த வருடம் வெற்றி பெற வேண்டுமானால் ஒரு மாயாஜாலம் தேவைப்பட்டது. லேன் பீச்லீயின் போட்டியாளர்கள் அக்கடைசிப் போட்டியில் அதிகப் புள்ளிகளை எடுத்து அவரை முந்திச் சென்று, அவ்வருடச் சாம்பியன் பட்டத்தை வெல்ல நல்ல வாய்ப்பு இருந்தது.

## லேன் பீச்லீ



அப்போட்டிகளின் அடுத்தக் கட்டத்தில், 1993ம் வருடத்திய சாம்பியனும் என் தோழியுமான பாலின் மென்ஸர் என்னைக் கடந்து சென்றபோது, "கவலைப்படாதே, எல்லாம் உன் விருப்பப்படியே நடக்கும்," என்று கூறிச் சென்றாள். நான் அந்த ஆண்டிற்கான பட்டத்தை வெல்ல வேண்டும் என்று அவள் விரும்பினாள். அவள் ஆவேசம் வந்தவள்போல அலைச்சறுக்கில் ஈடுபட்டு, அன்றைய போட்டியில் என் போட்டியாளர்கள் அனைவரையும் வென்று, அவர்கள் எவரும் என்னைவிட அதிகப் புள்ளிகள் எடுக்க முடியாதவாறு செய்தாள். மொத்தத்தில் அவ்வருடத்தில் நான்தான் அதிகப் புள்ளிகளை எடுத்திருந்ததால், அவ்வருடத்திய சாம்பியன் பட்டம்

எனக்குத்தான் கிடைத்தது. பாலின் அப்போட்டியில் தான் வென்றதன் மூலம் சாம்பியன் பட்டத்தை எனக்குப் பெற்றுக் கொடுத்தாள். அவளுடைய கண்பார்வை மிகவும் மோசமாக இருந்தது. ஆனால் அதற்குத் தேவையான அறுவை சிகிச்சையைச் செய்து கொள்ளப் போதுமான பணம் அவளிடம் இருக்கவில்லை. நான் உலகச் சாம்பியன் பட்டத்தை வெல்ல அவள் எனக்கு உதவியதற்கு அவளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, அவளுடைய அறுவை சிகிச்சைக்கான செலவை நான் ஏற்றுக் கொண்டேன்.

லேன் பீச்லீ அதற்கு அடுத்த இரண்டு வருடங்களும் தொடர்ந்து சாம்பியன் பட்டத்தை வென்று தொடர்ச்சியாக ஆறு முறை சாம்பியன் பட்டத்தை வென்ற சாதனையாளராக உருவெடுத்தார்.

## லிஸ் முர்ரே



நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் என் கதை பிரசுரிக்கப்பட்டதும், ஒரு கதாநாயகனாக இருந்தால் எப்படி இருக்கும் என்பதை நான் புரிந்து கொண்டேன். நான் வசித்து வந்த பகுதியில் இருந்த மக்கள் என் பள்ளிக்கு

வந்தனர். அவர்கள் எனக்கு உதவி செய்ய விரும்பினர். எனக்கு அவர்களை முன்பின் தெரியாது. தாங்களே தயாரித்தக் கேக்குகள், தங்கள் அலமாரிகளில் இருந்து எடுக்கப்பட்ட உடைகள், என் கல்லூரிப் படிப்பிற்குத் தேவையான பொருட்கள் அடங்கிய பரிசுப் பெட்டிகள் ஆகியவற்றைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு, தேவதைகளைப்போல அவர்கள் அங்கு நின்று கொண்டிருந்தனர். நடுத்தெருவில் வசித்து வந்த எனக்கு வாடகைக்கு ஒரு வீடு பார்த்துக் கொடுத்து அதற்கு வாடகையையும் அவர்களே செலுத்தினர். நான் படுப்பதற்குக் கட்டிலை நிர்மாணித்துக் கொடுத்தனர். குளிர்சாதனப் பெட்டியில் உணவுப் பொருட்களை வாங்கி அடுக்கினர். எல்லோரும் அவரவர் வழியில் அற்புதமாக உதவினர். நான் ஒரு பெண்மணியைப் பற்றித் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அவர் மூன்று வாரங்கள் கழித்து வந்தார் என் பள்ளி வாசலில் வைத்து என்னுடன் கைகுலுக்கித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அவர், என்னிடம் மன்னிப்புக் கேட்டார். அவர் எதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டார் என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், "நான் உன்னைப் பற்றி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் படித்தேன். அக்கட்டுரையைக் கத்தரித்து என் குளிர்சாதனப் பெட்டியின்மீது ஒட்டியும் வைத்திருக்கிறேன். உனக்கு உதவ வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் எனக்கு நானே

கூறிக் கொள்வேன். ஆனால் அதன் பிறகு, "நம்மிடம் பணமும் இல்லை, நேரமும் இல்லை — நம்மால் உதவ முடியாது," என்று நினைத்துக் கொள்வேன். இன்று காலையில் நான் துணி துவைத்துக் கொண்டிருந்தபோதுதான், உனக்கும் துவைப்பதற்குத் துணி இருக்குமே என்று எனக்கு உறைத்தது. அவர் ஒரு சிறிய வேனின் முன்னால் நின்று கொண்டிருந்ததை அப்போதுதான் நான் கவனித்தேன். அவர் என்னை நேராகப் பார்த்து, "துவைப்பதற்கு உன்னிடம் துணிகள் ஏதும் இருக்கிறதா?" என்று கேட்டார். நான் போய் என் துணிகளை எடுத்து வந்து அவரிடம் கொடுத்தேன். அவர் என் துணிகளை ஒவ்வொரு வாரமும் தவறாமல் துவைத்துக் கொடுத்தார். அவர் என்னிடம், "என்னால் நிறையச் செய்ய முடியாது. ஆனால் என்னால் இதைச் செய்ய முடியும்," என்று கூறினார். நம் உலகில் உள்ள ஒவ்வொருவரும், இதேபோல — என்னால் நிறையச் செய்ய முடியாது, ஆனால் என்னால் இதைச் செய்ய முடியும் — என்று நினைத்தால் எப்படி இருக்கும்? உங்களிடம் இப்போது இருக்கும் வளவசதிகளை வைத்துக் கொண்டே உங்களால் பிறருக்கு உதவ முடியும் என்பதை நான் கற்றுக் கொண்டேன். நாம் எல்லோரும் இப்படி நினைத்தால், இந்த உலகில் உள்ள மக்களின் சிந்தனையில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்படும்.


THE SUPREME ORDEAL

# உச்சகட்டச் சோதனை

**அனஸ்தேசியா சோரே**



தினமும் காலையில் எழுந்து, ஒவ்வொரு நாளும் அதே வேலையைச் செய்து கொண்டிருக்க நீங்கள் விரும்பாவிட்டால், நீங்கள் ஒரு போராளியாக இருக்க வேண்டும். நீங்கள் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த விரும்பினாலோ, முக்கியத்துவமிக்க ஒருவராக இருக்க விரும்பினாலோ, நீங்கள் ஒரு போராளியாக இருக்க வேண்டும். நான் ஒரு முக்கியத்துவமிக்க நபராக இருக்க விரும்பினேன். என் வாழ்க்கையையும் பிறருடைய வாழ்க்கையையும் மாற்றக்கூடிய செயல்களை நான் செய்ய விரும்பினேன். என்னால் ஒரு சாதாரணப் பெண்ணாக இருக்க முடியாது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



அது மிகவும் சிரமமாக இருந்தது. என் வியாபாரத்தைத் தூக்கி நிறுத்த நான் பல மாதங்களைச் செலவு செய்திருந்தேன். ஆனாலும் குறிப்பிடும்படியான பணத்தை எங்களால் சம்பாதிக்க முடியவில்லை. 1998ல் இணையத்தளம் பற்றி எவருக்கும் அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. எனவே, எங்கள் பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்களும் அதிகம் பேர் இருக்கவில்லை. எங்களை ஊக்குவிப்பதற்காக எங்களுடைய நண்பர்களில் யாராவது ஒருவர் போலியானஒரு பெயரில் எங்களிடம் இருந்து பொருட்களை வாங்குவார். நாங்கள் கிட்டத்தட்ட எங்களுடைய திட்டத்தைக் கைவிடும் நிலையில் இருந்தோம்.

கதாநாயகனின் பயணத்தில் வெற்றிக் கனி உங்களுக்குக் கிடைப்பதற்கு முன்னால், ஒரு கடைசிச் சவாலை நீங்கள் எதிர்கோள்ள வேண்டியிருக்கும். அதன் அளவு உங்களுடைய கனவின் அளவைப் பொறுத்து அமைந்திருக்கும். அந்தக் கடைசிச் சவாலை உச்சகட்டச் சோதனை என்று அழைக்கலாம். அது உங்களுடைய கனவுக்குச் சாவுமணி அடிப்பதுபோலத் தோன்றக்கூடும். ஆனால் நீங்கள் அதிலிருந்து மீண்டு வரும்போது, உங்களுடைய கனவு பிறந்திருக்கும்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



அதுதான் ஓர் அருமையான கதாநாயகனின் பயணம், இல்லையா? வழி மூடியிருக்கும் ஒரு பாதையை நீங்கள் அடைகிறீர்கள், எல்லா நம்பிக்கையும் கரைந்து போய்விடுகிறது, பின் நிலைமை தலைகீழாகிறது. உங்கள் கனவை எந்தவிதமான சவால்களும் சங்கடங்களும் இன்றி நீங்கள் அடைந்துவிட்டால், அது உப்புச் சப்பில்லாமல் போய்விடும்.

**லேன் பீச்லீ**



ஒன்றிலிருந்து மீண்டு வெளிவருவதற்கு முன்பாக, நீங்கள் ஓர் அதளபாதாளத்தை அடைந்து, உங்கள் சவால்களை எதிர்கொண்டாக வேண்டும்.

உச்சகட்டச் சோதனைகளை நீங்கள் திரைப்படங்களில் பார்த்திருக்கலாம். அதில் கதாநாயகன் பல போராட்டங்களைச் சந்தித்துத் தன் லட்சியத்தை நெருங்கிவிடுவான். அவன் ஓர் இளவரசியைக் காப்பாற்றுவதற்குச் சற்று முன்பாகவோ அல்லது விலைமதிக்க முடியாத ஒரு பரிசைக் கைப்பற்றுவதற்கு முன்பாகவோ, ஓர் இறுதிச் சவாலைச் சந்தித்தாக வேண்டியிருக்கும்.

## மாஸ்டின் கிப்



ஒவ்வொரு கதாநாயகனும், ஒன்று, கிட்டத்தட்டச் செத்துவிடுவான் அல்லது செத்தப் பிறகு மீண்டும் உயிர் பெற்று எழுந்து வருவான். மனரீதியான உணர்ச்சிரீதியான, ஆன்மீகரீதியான அல்லது உடல்ரீதியான மரணம் மக்களை வாட்டி வதைக்கும். சிலுவையை முதுகில் சுமந்து கொண்டு, தன் கைகளை அகலத் திறந்தவாறு நடந்த இயேசு கிறிஸ்துவைப்போல நாமும் அதை நோக்கி நடக்க வேண்டும்.

"வேறு எதிலாவது நான் வெற்றி பெற்றிருந்தால், உண்மையிலேயே என் மனத்திற்குப் பிடித்த ஒரு விஷயத்தில் வெற்றி பெறுவதற்கான மன உறுதியை நான் ஒருபோதும் பெற்றிருக்க மாட்டேன். என்னுடைய மாபெரும் பயம் உண்மையாகி இருந்ததாலும், நான் உயிரோடு இருந்ததாலும், என் பிரியமான மகள் என்னுடன் இருந்ததாலும், ஒரு பழைய தட்டச்சு இயந்திரமும் ஒரு பிரம்மாண்டமான யோசனையும் என்னிடம் இருந்ததாலும், நான்

விடுவிக்கப்பட்டதுபோல உணர்ந்தேன். நான் சென்றடைந்த அதளபாதாளம், நான் என் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பிக் கொள்ள ஒரு வலுவான அடித்தளமாக ஆனது."

**ஜே.கே. ரோலிங்**
ஹாரி பாட்டர் புத்தகங்களின் ஆசிரியர்

## ஜான் பால் டிஜோரியா



நான் ஒரு நிறுவனத்திற்காக வேலை செய்து வந்தேன். அதில் எனக்கு இரண்டு பதவிகள் இருந்தன. அந்நிறுவனம் முன்னேறிக் கொண்டிருந்தபோதிலும், நான் அவர்களுக்குப் பொருத்தமான நபர் அல்ல என்று கூறி அவர்கள் என்னை வேலை நீக்கம் செய்தார்கள். நான் வேறொரு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். ஒரு வருடத்திற்குப் பிறகு அவர்களும் என்னை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர். வார இறுதி நாட்களில் நான் அவர்களுடன் சேர்ந்து சுற்றிக் கொண்டிருக்கவில்லை என்பதால்தான் அது நிகழ்ந்தது. அடுத்து நான் வேலைக்குச் சேர்ந்த நிறுவனத்தின் விற்பனை மும்மடங்காகியது. ஒரு நாள் அதன் முதலாளி என்னிடம், "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான்

உங்களை வேலையைவிட்டுத் தூக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் உங்கள் வேலையை உங்கள் சம்பளத்தில் பாதிச் சம்பளத்திற்குச் செய்ய இன்னொருவர் தயாராக இருக்கிறார்," என்று கூறினார். அதன் பிறகுதான் ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ் நிறவனத்தை நான் துவக்கினேன். அதைத் துவக்கி இரண்டு வருடங்களுக்குப் பிறகு எனக்கு ஒரு விஷயம் புலப்பட்டது: என்னை வேலையைவிட்டுத் துரத்தியிருந்த மூன்று நிறுவனங்களிலும் நான் வேலை செய்திருக்காவிட்டால், நான் என் சொந்த நிறுவனத்தைத் துவக்கியிருக்கவே மாட்டேன். ஏனெனில் அந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றும் எனக்கு வெவ்வேறு விஷயங்களைக் கற்றுக் கொடுத்திருந்தன. நான் வேலையைவிட்டு நீக்கப்பட்டிருந்தபோதிலும், பிரபஞ்சம் என்னை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு மாற்றி, பல்வேறு விஷயங்களை நான் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்திருந்ததுபோல இருந்தது அது.

ஜான் பால் டிஜோரியாவும் அவருடைய தொழிற்கூட்டாளி பால் மிட்செலும், தங்களுடைய நிறுவனத் தயாரிப்பான தலைமுடிப் பராமரிப்புப் பொருட்களை அறிமுகப்படுத்தவிருந்த நேரத்தில், அவர்களுக்கு நிதியுதவி செய்வதாக வாக்களித்திருந்த முதலீட்டாளர் ஒருவர் திடீரென்று பின்வாங்கிவிட்டார். அவர்கள் இருவரும் செலுத்த வேண்டிய கட்டணங்கள் தலைக்கு மேல் இருந்தன. ஏற்கனவே தருவதாக ஒப்புக் கொண்டுவிட்டப் பொருட்களைத் தயாரித்து வினியோகம் செய்யவும் அவர்களுக்கு ஏகப்பட்டப் பணம் தேவைப்பட்டது. அவர்களுடைய வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் வருவதற்கு எப்படியும் நாற்பத்து ஐந்து நாட்களாவது ஆகும் என்ற நிலை

இருந்தது. அதுவரை சமாளிப்பது கிட்டத்தட்ட இயலாத காரியமாக இருந்தது. அவர்களுடைய கதை கிட்டத்தட்ட முடிந்துவிட்டிருந்ததுபோலத்தான் தோன்றியது. அப்போது ஜான் பால் டிஜோரியாவுக்கு ஓர் அற்புதமான யோசனை உதித்தது — பணம் கொடுத்து வாங்குபவர்களுக்குத் தள்ளுபடி கொடுப்பதுதான் அது. கிட்டத்தட்ட எல்லா வாடிக்கையாளர்களும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களுடைய நிறுவனமும் காப்பாற்றப்பட்டது.

## லேன் பீச்லி



1995ல் அலைச்சறுக்கு விளையாட்டில் நான் உலகில் இரண்டாவது இடத்தில் இருந்தேன். என்னுடைய முதல் சாம்பியன் பட்டத்திற்கான போட்டியில் நான் குதித்திருந்தேன். என்னால் முடிந்த அளவுக்குக் கடினமாக உழைத்தேன். பின் 1996ல் கடுமையான சோர்வால் நான் அவதிப்பட்டேன். உடல்ரீதியாக எந்தப் பிரச்சனையும் இருந்ததுபோலத் தெரியவில்லை. ஆனால் மனரீதியாக, உணர்ச்சிரீதியாக, மற்றும் ஆன்மீகரீதியாக நான் அதளபாதாளத்தைத் தொட்டிருந்தேன். அப்போது தற்கொலை எண்ணங்களும் என்னிடம் தலைதூக்கின.

வாழ்க்கையை மிகவும் கொண்டாடும் என்னைப் போன்ற ஒருவருக்கு அப்படிப்பட்ட எண்ணங்கள் தோன்றியது மனமுடைய வைப்பதாக இருந்தது. நான் எல்லாவற்றிலிருந்தும் விலகி ஓடிவிட விரும்பினேன். ஆனாலும் ஏதோ ஒன்று என்னை இழுத்துப் பிடித்தது. நான் அலைச்சறுக்கின்மீது கவனத்தைக் குவிக்கத் தீர்மானித்தேன். அதில் பங்கேற்கத் தேவையான உடல் வலிமை என்னிடம் இருக்கவில்லை. ஆனால் மீண்டும் அதைச் செய்யத் தேவையான மன வலிமை என்னிடம் இருந்தது. என்னிடம் போதுமான வலு இல்லை என்று அறிந்திருந்தும் ஹவாயில் நடக்கவிருந்த போட்டியில் கலந்து கொள்ள நான் முடிவு செய்தேன். "நான் அங்கு சென்று மகிழ்ச்சியாக அனுபவிக்கப் போகிறேன்," என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன். அந்த வருடம் ஹவாயில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் நான் வெற்றி பெற்றேன். அதற்கடுத்த வருடம் நான் என்னுடைய முதல் உலகச் சாம்பியன் பட்டத்தைப் பெற்றேன். அந்தக் கடுமையான சோர்வு எனக்கு ஒரு மதிப்புவாய்ந்த படிப்பினையைக் கற்றுக் கொடுத்தது.

**பீட் கேரல்**



பயிற்சியாளராக இருந்த காலத்தில் நான் பல முறை வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தேன். என் தொழிலில் யாராவது ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், ஒட்டுமொத்த விளையாட்டு உலகத்திற்கும் அது தெரிந்துவிடும். அது செய்திப் பத்திரிகையில் வெளிவந்துவிடும். தொலைக்காட்சிச் செய்தியில் ஒளிபரப்பாகிவிடும். அது ஒரு பெரிய விஷயம். பொதுவாக யாராவது ஒருவர் திடீரென்று பதவி நீக்கம் செய்யப்பட்டால், அவருக்கு உள்ள தலையாய பிரச்சனை, வீட்டிற்குப் போய், தான் வேலை இழந்த விஷயத்தைத் தன் மனைவியிடம் எப்படிச் சொல்வது என்பதாகத்தான் இருக்கும். ஆனால் இங்கு அப்படியில்லை. மற்ற எல்லோரையும் இங்கு நீங்கள் சமாளிக்க வேண்டியிருக்கும். இது ஒரு மாபெரும் சவால். ஆனால், நடந்தது நடந்துவிட்டது. இதில் கற்றுக் கொள்வதற்கு ஏதாவது இருக்கும். நீண்டகால நோக்கில் நான் வலுப் பெறுவதற்கு இது எனக்கு உதவியாக இருக்கும். வரப் போகின்ற விஷயத்தை முன்கூட்டியே தெளிவாகப் பார்க்க ஒரு வாய்ப்பு இருந்தது. நான் நீண்டகாலமாக இதில்

ஈடுபட்டு வந்திருந்தும், அதில் ஆழமாகக் குதித்து எனக்கு உண்மையிலேயே என்ன வேண்டும் என்பதை அறிந்து கொண்டு, அடுத்தத் திட்டத்தில் அதை வெளிக்கொண்டு வரும் விதத்தில் நான் அதில் இறங்கவில்லை. நான் சுவரோரமாக ஒதுக்கப்பட்டிருந்தேன். எனக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்படுமா என்பது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்தால் நான் அதற்காகத் தயாராக இருக்க வேண்டியிருந்தது. தெற்குக் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிப்பாளராகச் சேர எனக்கு ஒரு வாய்ப்பு வந்தது. முன்பு செய்திருந்ததைக் காட்டிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற முன்னோக்குடன் நான் அங்கு சென்றேன்.

**மாஸ்டின் கிப்**



விஷயங்கள் தவறாகப் போய் நீங்கள் ஓரிடத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்படும்போது, வாழ்க்கை உங்களைப் பாரபட்சமாக நடத்துவதாக உணர்கிறீர்களா? அக்கணங்கள் உண்மையில் ஒரு தெய்வீகப் புயலின்

விளைவாக ஏற்பட்டிருந்தால்? அக்கணங்கள் உங்களைத் தண்டிப்பதற்காக அல்லாமல், உங்கள் நலனுக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால்? உங்களுடைய மிக மோசமான நாளோ அல்லது உங்களுடைய மிக மோசமான வாரமோ தெய்வீக அருளால் அனுப்பப்பட்டு, அது உண்மையிலேயே உங்களுடைய மிகச் சிறப்பான நாளாகவோ அல்லது உன்னதமான வாரமாகவோ ஆகியிருந்தால்?

புருவத்தைச் சீராக்குவது தொடர்பான பல பொருட்களை அனஸ்தேசியா சோரே அறிமுகப்படுத்தவிருந்த வேளையில், அவருடைய முதலீட்டாளர் திடீரென்று பின்வாங்கினார். அதனால் அவருக்கு உடனடியாக 2 மில்லியன் டாலர்கள் பணம் தேவைப்பட்டது. தன்னுடைய கிட்டங்கியில் நிரம்பி வழிந்த தன்னுடைய பொருட்களை அவர் ஒரு வாரகாலத்திற்குள் விற்கவோ அல்லது வினியோகம் செய்யவோ வேண்டியிருந்தது. அல்லது அவர் தன் கனவை மூட்டைக் கட்டி வைத்துவிட வேண்டியதுதான். தன் கனவைக் கைவிடுவதற்குப் பதிலாக, விற்பனை, வினியோகம், சந்தைப்படுத்துதல் ஆகியவை தொடர்பான அனைத்து விஷயங்களையும் அவர் கற்றுக் கொண்டார். அவருடைய விடாமுயற்சியாலும் தனித்துவமான அணுகுமுறையாலும், அவருடைய பொருட்கள் அந்தக் கிட்டங்கியிலிருந்து விரைவாக வெளியேறின. அமெரிக்காவிலும் பின்னர் சர்வதேச அளவிலும் அவருடைய பொருட்கள் பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்றன.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



என்னுடைய கணினி விளையாட்டு நிறுவனமான மைன்ட் கேன்டியை நான் 2004ல் துவக்கினேன். நாங்கள் முதலில் உருவாக்கிய கணினி விளையாட்டு மிகவும் புதுமையாக இருந்தபோதிலும் வியாபாரரீதியாக அது படுதோல்வியைத் தழுவியது. எங்களுடைய கடைசி முயற்சியான மோஷி மான்ஸ்டர்ஸை நாங்கள் பெரிதும் நம்பியிருந்தோம். நாங்கள் அதை உருவாக்கி முடித்திருந்தபோது, அது எங்களுடைய அனைத்து நிதியையும் விழுங்கி இருந்தது. 2008ம் ஆண்டின் முடிவில், எங்களிடமிருந்த பணம் முற்றிலுமாகக் கரைந்து போயிருந்தது. இங்கு ஒரு மாயாஜாலம் இருக்கிறது, இதில் தனித்துவமான ஏதோ ஒன்று உள்ளது என்று என் உள்ளுணர்வு பெருங்குரல் எடுத்துக் கத்திக் கொண்டிருந்தது. ஆனால் அதில் முதலீடு செய்ய யாரும் முன்வரவில்லை. அக்காலகட்டம்தான் என் வாழ்வில் மிகவும் சோதனையான காலகட்டம். ஏனெனில் என்னை நம்பி ஒரு பெரிய பட்டாளமே இருந்தது. அவர்களுக்கு நான் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. நாங்கள் கிட்டத்தட்ட திவாலாகும் நிலைக்கு வந்திருந்தோம். வியாபாரத்தை இழுத்து மூட வேண்டிய

நிலைமையில் இருந்தோம். அந்த நீண்ட இரவுகளில், அதிகாலை 4 மணிவரைக்கும், இந்தப் பூதாகாரமான பிரச்சனையை எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் நான் என் படுக்கையில் புரண்டு கொண்டிருப்பேன். அதிர்ஷ்டவசமாக நான் வேறொரு முதலீட்டாளரைக் கண்டுபிடித்தேன். அவர் கொஞ்சம் பணத்தை முதலீடு செய்தார். கிறீஸ்துமஸுக்குச் சற்று முன்பு, என் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் அலுவலகக் கதவுகளைத் திறந்து வைத்திருக்கவும் போதுமான அளவு பணம் எனக்குக் கிடைத்தது. அதற்கடுத்த மாதமே, கட்டணம் செலுத்தி விளையாடும் ஒரு முறையை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். இன்றுவரை எங்கள் நிறுவனம் லாபத்தில்தான் போய்க் கொண்டிருக்கிறது.

**பால் ஆர்.ஃபாலியா**



"நெருக்கடிதான் வாய்ப்பு," என்றொரு சீனப் பழமொழி இருக்கிறது. ஒவ்வொரு தோல்வியிலும் வெற்றி

வாய்ப்பிற்கான ஒரு விதை ஒளிந்திருக்கிறது என்பது முழுக்க முழுக்க உண்மைதான்.

என்னுடைய **இரகசியம்** திரைப்படத்தை உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒரே சமயத்தில் வெளியிட வேண்டும் என்பது என் கனவாக இருந்தது. 24 மணி நேரத்திற்குள் உலகிலுள்ள பல தொலைக்காட்சி நிறுவனங்கள் மூலமாக அதை ஒளிபரப்புவதுதான் அதைச் செய்வதற்கான ஒரே வழி என்பதில் நான் உறுதியாக இருந்தேன். **இரகசியம்** திரைப்படத்திற்கான யோசனை உருவானபோது, பல சர்வதேசத் தொலைக்காட்சி நிறுவனங்கள் அதில் தீவிர ஆர்வம் காட்டியிருந்தன. ஆனால் அத்திரைப்படம் நிறைவடைந்ததும், அந்த நிறுவனங்கள் அதைப் பார்க்காமலேயே ஒன்றன்பின் ஒன்றாகப் பின்வாங்கின. நாங்கள் அத்திரைப்படத்தை எடுத்து முடித்திருந்தபோது, நான் 3 மில்லியன் டாலர்கள் கடனில் இருந்தேன். அத்திரைப்படத்தை உலகெங்கும் வெளியிடுவதற்கான வழி எதுவும் அப்போது எங்களுக்குப் புலப்படவில்லை.

பின்னர், இணையத்தளத்தில் விளம்பரங்களைத் தங்குதடையின்றி வெளியிடும் தொழில்நுட்பத்தை உருவாக்கியிருந்த ஒரு நிறுவனத்தைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டோம். எங்கள் திரைப்படத்தை வெளியிடுவதற்கான ஒரு புதிய வாய்ப்பு உருவாகியிருந்தது. எங்கள் குழு அந்த நிறுவனத்தோடு இணைந்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை இணையத்தளத்தில் வெளியிடுவதற்காக முழு மூச்சாக வேலை செய்தது. **இரகசியம்** திரைப்படம் இணையத்தளத்தில் நேரடியாக வெளியிடப்பட்டது — இம்முறையில் பார்க்கப்பட்ட முதல் திரைப்படமும் அதுதான். நான் முதலில் கனவு கண்டிருந்ததைப் போலவே, 24 மணிநேர இடைவெளிக்குள் உலகில் உள்ள அனைவரும் **இரகசியம்** திரைப்படத்தைப் பார்க்க அந்தத் தொழில்நுட்பம் வழி கோலியது.

"சரணடைவதைவிடப் பட்டினி கிடந்து சாவதே மேல். நீங்கள் உங்கள் கனவைக் கைவிட்டுவிட்டால், வாழ்க்கையில் என்ன மிச்சமிருக்கும்?"

**ஜிம் கேரி**

நடிகர்

உச்சகட்டச் சோதனை என்பது பயங்கரமான ஒன்றாகத் தோன்றினாலும் நீங்கள் அதை எதிர்கொள்ளும்போது, அதன் வீரியத்தை அவ்வளவாக உணர மாட்டீர்கள். நீங்கள் இந்தக் கடைசிக் கட்டச் சோதனையை வந்தடைந்திருக்கும்போது, நீங்கள் அதற்கு உங்களை நன்றாகவே தயார்படுத்தியிருப்பீர்கள். நீங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள் என்றால், உங்களுக்குள் இருக்கும் உங்கள் சக்தியை நீங்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். அதோடு, அதை — அந்த உச்சகட்டச் சோதனையை — எதிர்கொண்டு சமாளித்து, வெற்றி தேவதையை அரவணைக்கத் தேவையான அனைத்தும் அப்போது உங்கள் வசம் இருக்கும்.



பகுதி நான்கு

# வெற்றி


THE REWARD

# வெகுமதி

உலகச் சாம்பியன் பட்டத்தை வெல்லும் அணிகளும், தங்கப் பதக்கங்களைத் தட்டிச் செல்கின்ற, புதிய சாதனைகளைப் படைக்கின்ற விளையாட்டு வீரர்களும் தலைகால் புரியாமல் மகிழ்ச்சிக் கூத்தாடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்களிடம் வெளிப்படும் ஆற்றல் உங்களை அப்படியே ஆட்கொள்வதையும் நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அது உங்களுக்குப் பரவசத்தையும் சமயங்களில் ஆனந்தக் கண்ணீரையும் வரவழைத்திருக்கும். ஆனால் அந்த வெற்றிக் கணத்தில் அந்த விளையாட்டு வீரர்கள் அனுபவிக்கும் உணர்ச்சிகளை உங்களுடைய உணர்வுகளோடு ஒருக்காலும் ஒப்பிட முடியாது. பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் வெற்றிகரமாகக் கடந்து, எதிர்கொண்ட அனைத்துச் சவால்களையும் முட்டுக்கட்டைகளையும் முறியடித்துத்தான் அந்த உச்சகட்ட வெற்றியை அவர்கள் அடைந்திருப்பதால் அவர்களுடைய உண்மையான உணர்வுகள் எப்படி இருக்கும் என்பதை உங்களால் கண்டுகொள்ள இயலும்

## பீட் கேரல்



2005ல் ஓக்லஹோமா போட்டிக்கு முந்தைய நாள் அது. நான் என் அணியுடன் பேசிக் கொண்டிருந்தேன். அந்த விளையாட்டுப் பருவம் முழுவதும் தொடர்ந்து வெற்றி

பெற்று வந்திருந்த எங்கள் அணி, அதுவரை தோற்கடிக்கப்பட்டிராத ஓர் அணியுடன், கல்லூரிக் கால்பந்தாட்ட வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒரு போட்டியில் விளையாடவிருந்தது. இந்த நிலையில், அன்றிரவு எதைப் பேசுவது பொருத்தமாக இருக்கும்? நான் என் அணியினரை நோக்கி நடந்து சென்று, நாங்கள் எதைச் சாதிக்க முனைந்திருந்தோமோ அதை ஏற்கனவே நாங்கள் சாதித்திருந்ததாக அவர்களிடம் கூறினேன். அதற்கு முன்பு ஒருபோதும் செய்யப்பட்டிராத விதத்தில் பிரம்மாண்டமாக அதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். இதை அடைவதற்கான பாதையில் ஏகப்பட்ட வெற்றிகளை நாங்கள் குவித்திருந்தோம். எங்கள் விளையாட்டு வாழ்க்கையில் நாங்கள் அன்று ஒரு மாபெரும் போட்டியில் பங்கு கொள்ளவிருந்தோம். நாங்கள் இந்த முன்னோக்கை உருவாக்கி, அதற்காகக் கடுமையாக உழைத்திருந்தோம். அதனால் எங்கள் எதிரணியால் எங்களை ஒருக்காலும் வெல்ல முடியாது. ஆனால் படிப்பினை அதுவல்ல. ஒரு பாதையை நிர்ணயித்து, ஒரு முன்னோக்கை உருவாக்குவதன் மூலம், நீங்கள் எதைச் சாதிக்க விரும்புகிறீர்களோ அதை அப்படியே உங்களால் சாதிக்க முடியும் என்பதுதான் எங்களுக்குக் கிடைத்தப் படிப்பினை. மறுநாள் நாங்கள் அப்போட்டியில் பிரம்மாண்டமாக வெற்றி பெற்றோம்.

**பீட்டர் பர்வாஷ்**



நான் ஒரு மிகச் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்துள்ளேன். முதலில் துவக்கப்பட்டப் பதினேழு நிறுவனங்களில் இன்று நாங்கள் மட்டும்தான் இயங்கிக் கொண்டிருக்கிறோம். இன்று நாங்கள் டென்னிஸ் விளையாட்டை 134 நாடுகளுக்கு எடுத்துச் சென்றுள்ளோம்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



என் தொழில்வாழ்க்கையில் ஏற்பட்ட அருமையான தருணங்களில் ஒன்று 2009ல் சந்தா முறையை நாங்கள் அறிமுகப்படுத்தியபோது நிகழ்ந்தது. இலவசமாக வினியோகிப்பதற்காக நாங்கள் தயாரித்திருந்த ஒரு கணினி விளையாட்டை, மாதச் சந்தா 5 பவுண்ட் என்று விலை வைத்து, குழந்தைகளின் பெற்றோர்களிடம் நாங்கள் விற்க

முனைந்தோம். நாங்கள் எங்களுடைய சந்தாத் திட்டத்தை இணையத்தளத்தில் நேரடியாக அறிமுகம் செய்துவிட்டு, எங்களுடைய சிறிய குழுவைச் சேர்ந்த அனைவரும் எங்கள் கணினியைச் சுற்றி நெருக்கியடித்து நின்று கொண்டு, கணினித் திரையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஐந்து நிமிடங்களுக்குள்ளாக எங்களுக்கு முதல் ஆர்டர் கிடைத்தது. நாங்கள் எங்களுடைய முதல் 5 பவுண்டுகளைச் சம்பாதித்தோம். நாங்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து வானத்திற்கும் பூமிக்குமாகக் குதித்தோம். நாங்கள் எங்களைச் சுதாரித்துக் கொள்வதற்கு முன்பு இரண்டாவது ஆர்டர் வந்தது. பின் மூன்றாவது, அடுத்தது நான்காவது ஆர்டர்கள் வந்தன. நாங்கள் எங்கள் இதயத்தையும் ஆன்மாவையும் ஆற்றலையும் கொட்டி உருவாக்கியிருந்த அந்தப் படைப்பிற்கு அம்மாக்களும் அப்பாக்களும் காசு கொடுக்கத் தயாராக இருந்தது குறித்து நாங்கள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தோம். அது ஓர் அசாதாரணமான உணர்வு.

**லிஸ் முர்ரே**



நான் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தபோது எனக்கு அற்புதமான உணர்வு ஏற்பட்டது. நான் படிப்பதற்கு எனக்கு உதவித் தொகை கிடைத்தது. பின்னர் நான் என் முதல் கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டேன். நான் என் தோழிகளிடம், "இது திரைப்படத்தில் வருவதுபோல இருக்கிறது. ஒரு புத்தகத்தில் வருவதுபோல இருக்கிறது," என்று கூறினேன். பின்னர் என் பயணத்தை அடிப்படையாக வைத்து ஒரு திரைப்படம் நிஜமாகவே உருவாக்கப்பட்டது. பிறகு நான் ஒரு புத்தகமும் எழுதினேன். இந்த உலகில் மாயாஜாலம் நிஜமாகவே உள்ளது என்ற என் நம்பிக்கையை அது உறுதி செய்தது.

**லேன் பீச்லி**



தொழில்வாழ்க்கையைப் பின்னால் திரும்பி அசைபோட்டுப் பார்த்து, "அதை நான்தான் செய்தேனா? என்னாலேயே நம்ப முடியவில்லை!" என்று நினைத்துப் பார்க்கும் உணர்வு அற்புதமானது. உலகச் சாம்பியன் பட்டங்களை

வென்ற அந்த நபர் நான்தான் என்று இன்றும் சில சமயங்களில் என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் அது குறித்து நான் பெரிதும் நன்றியுணர்வுடன் இருக்கிறேன். வெறுமனே என் கனவைப் பின்தொடர்ந்து சென்றதன் மூலம் பிறருடைய வாழ்வில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த எனக்கு வாய்ப்புக் கிடைத்தது எனக்கு அற்புதமான திருப்தியை அளிக்கிறது.

**லைர்டு ஹாமில்டன்**



இந்த அளவு பிரம்மாண்டமான ஒரு கனவைக் கண்டு, அதை நிஜ வாழ்வில் நனவாக்கியது என் இதயத்தை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கிறது. அது மாயாஜாலக் கதைகளில் வருவதுபோல இருந்தது. இப்பயணத்தின்போது நான் எதிர்கொண்ட சவால்கள், சோதனைகள், தவறுகள், காயங்கள் எல்லாமே மதிப்பு வாய்ந்தவையாக இருந்தன. இவற்றில் ஏதேனும் ஒன்று இப்போது நான் வந்து சேர்ந்திருக்கும் இடத்தை மாற்றும் என்றால், அவற்றில் ஒன்றைக்கூட நான் மாற்ற மாட்டேன்.

**ஜி. எம். ராவ்**



நான் கனவு கண்டதைவிட வாழ்க்கை எனக்கு மிக மிக அதிகமாகவே கொடுத்திருக்கிறது. நான் என் கனவைப் பின்தொடராமல் இருந்திருந்தால், என் வாழ்க்கை மிகச் சாதாரணமான ஒன்றாகவே இருந்திருக்கும்.

**அனஸ்தேசியா சோரே**



மிகச் சிறப்பான ஒரு வாழ்க்கை எனக்கு வாய்த்திருக்கிறது — திரைப்படங்களில் வருவதைப்போல, நான் செய்து கொண்டிருப்பதை நான் மிகவும் நேசிக்கிறேன். நீங்கள் நேசிப்பதையே நீங்கள் செய்யும்போது நீங்கள் எவ்வளவு பெரிய பாக்கியசாலிகள் தெரியுமா? நான் என் பயணத்தை மிகவும் ரசித்து மகிழ்ந்தேன். இன்றும் ஒவ்வொரு நாளையும் ஒரு புதிய நாளாகக் கருதி நான் மிகவும்

மகிழ்ச்சியாக ரசித்து அனுபவிக்கிறேன். வாழ்வின் முடிவில் பின்வருத்தங்கள் ஏதும் இல்லாமல் இருக்க நாம் விரும்பினால், அதற்காக நாம் உருவாக்கிக் கொள்ளக்கூடிய மிகச் சிறந்த உணர்வு இதுதான்.

உங்கள் கனவு வெற்றி பெறும்போது உங்களுக்குக் கிடைக்கின்ற உச்சகட்ட வெகுமதி உங்கள் பயணத்தின் முடிவைக் குறிப்பதில்லை, மாறாக, இன்னொரு பயணத்தின் துவக்கத்தையே குறிக்கிறது. பொருளாதார வெகுமதிகளும், உங்கள் கனவை நீட்டிப்பதற்கான அல்லது அதை மேலும் கட்டியெழுப்புவதற்கான எண்ணற்றச் சந்தர்ப்பங்களும் திடீரென்று உங்கள் வாழ்வில் வந்து குவியத் தொடங்கும். செல்வம், சந்தர்ப்பங்கள், வெற்றி ஆகியவை அற்புதமான சுதந்திர உணர்வைக் கொண்டு வருகின்றன. ஆனால் நீங்கள் அதைச் சாதித்திருக்கிறீர்கள் என்ற தித்திக்கும் ஆனந்த உணர்வுக்கும் மனநிறைவுக்கும் அது ஒருக்காலும் ஈடாகாது — ஒன்றுமே இல்லாத சூழ்நிலையிலிருந்து அற்புதமான ஒன்றை நீங்கள் படைத்திருக்கிறீர்கள்.

**பால் ஆர்.ஃபாலியா**



இன்று நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்ற கேள்வியோடு நான் என்னுடைய ஒவ்வொரு நாளையும் துவக்குகிறேன். சுதந்திரம் என்றால் இதுதான்.

**மாஸ்டின் கிப்**



நினைத்த இடத்திற்குப் பயணம் செய்வதற்கான சுதந்திரமும், நான் எப்படி விரும்புகிறேனோ அப்படி என் வாழ்க்கையை வடிவமைத்து உருவாக்கிக் கொள்வதற்கான சுதந்திரமும் எனக்கு இருக்கின்றன. நான் ஒரு குறிப்பிட்ட இடத்தோடு என்னைக் கட்டிப் போட்டுக் கொள்வதில்லை. அதனால் என் தொழிலை, பாலி, ஹவாய், இந்தியா, தென்னாப்பிரிக்கா, நியூயார்க் என்று எங்கிருந்து வேண்டுமானாலும் என்னால் நடத்திக் கொள்ள முடியும். அந்தச் சுதந்திரத்திற்கு ஈடு இணையே இல்லை. நான் பயணம் செய்து கொண்டிருந்தாலும்கூட, தொடர்ந்து என்னால் பணத்தைச் சம்பாதிக்க முடிகிறது, ஒரு வியாபாரத்தை நடத்த முடிகிறது. அது மிகவும் பரவசமூட்டுவதாக இருக்கிறது. இது எல்லாவற்றையும்விட அற்புதமானது என்னவென்றால், நான் விரும்பும் நேரத்தில் என்னால் தூங்கியெழ முடிகிறது. நான் சிறுவனாக இருந்தபோது, பள்ளிக்குச் செல்வதற்காகக் காலையிலேயே எழுந்திருக்க வேண்டிய கட்டாயத்தை

நான் வெறுத்தேன். அதுதான் இருப்பதிலேயே கொடுமையானது.

**அனஸ்தேசியா சோரே**



கனவு பிரம்மாண்டமாக இருந்தால், உங்களுக்குக் கிடைக்கும் செல்வமும் அதிகமாக இருக்கும். எந்தவொரு கனவிற்கும் கண்டிப்பாக ஒரு பொருளாதார வெகுமதி இருக்க வேண்டும்.

வெற்றி உங்களுக்குக் கைகூடி வரும்போது, உங்கள் வாழ்க்கையில் முதன்முறையாக, நீங்கள் எப்போதும் வாங்க ஆசைப்பட்டப் பொருட்களை உங்களால் வாங்க முடிகின்ற ஓர் இடத்திற்கு நீங்கள் வந்து சேர்ந்திருப்பீர்கள். நீங்கள் எப்போதும் போக விரும்பிய இடத்திற்கு உங்களால் போக முடியும். நீங்கள் எப்போதும் செய்ய விரும்பிய விஷயங்களை உங்களால் செய்ய முடியும். அதோடு, உங்கள் வெற்றியை உங்கள் குடும்பத்தார் மற்றும் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ள முடிகின்ற ஓர் அருமையான வாய்ப்பும் உங்களுக்கு வாய்த்திருக்கும். அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கையும் மேம்பாடு அடையும்.

**மாஸ்டின் கிப்**



இரண்டு விஷயங்கள் அதிக வெகுமதி அளிக்கக்கூடியவை. சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுக்க முடிகின்ற நிலையில் இருப்பதும், பிறருக்கு உதவி செய்வதற்குத் தேவையான வளங்களைப் பெற்றிருப்பதும்தான் அவை. எந்த பிரம்மாண்டமான அளவில் மக்களுக்குக் கொடுக்க நான் எப்போதும் ஆசைப்பட்டு வந்திருந்தேனோ, அந்த அளவில் இப்போது என்னால் கொடுக்க முடிகிறது.

**லிஸ் முர்ரே**



நான் வீடு வாசலின்றி அல்லாடிக் கொண்டிருந்தபோது எனக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள்தான் இன்றுவரை என் குடும்பத்தினர். அவர்களை எனக்குப் பதினாறு, பதினேழு வருடங்களாகத் தெரியும். என்னிடம் சொல்லிக் கொள்ளும்படியாகக் கொஞ்சம் பணம் வந்ததும் நான் மிகவும் அற்புதமாக உணர்ந்தேன். அதைக் கொண்டு

எங்கள் அனைவருக்கும் அற்புதமான அனுபவங்களை என்னால் உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதுதான் அதற்குக் காரணம். நாங்கள் எங்களுடைய அடிப்படைத் தேவைகளிலிருந்து துவக்கினோம். நாங்கள் அனைவரும் பல் மருத்துவரிடம் சென்று எங்கள் பற்களைப் பரிசோதித்துக் கொண்டோம். என்னுடைய நண்பர்களில் சிலருக்கு வாடகை வீடு தேவைப்பட்டது. வாடகையை நாங்கள் பார்த்துக் கொண்டோம். என் நண்பனின் தந்தைக்குப் புற்றுநோய் இருந்தது. அதற்குத் தேவைப்பட்ட அறுவை சிகிச்சைக்கான செலவை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். நானும் என் தலைக்கு மேல் ஒரு கூரையை உருவாக்கிக் கொண்டேன். நான் நேசித்த மக்களைப் பேணிக் கொள்ளவும், மக்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் பங்களிப்பை வழங்கவும் என்னால் முடிந்தது எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சியை அளித்தது. என் வாழ்வில் எனக்கு அதிக வெகுமதி அளித்த அனுபவங்களில் அதுவும் ஒன்று.

நான் மிகவும் எளிமையான ஒரு குடும்பத்தில் பிறந்தவள். எங்களிடம் பணம் இல்லாமல் இருந்தாலும், நாங்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்தோம். அன்பால் சூழப்பட்ட, பாதுகாப்பான ஒரு சூழலில் வளர நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். என் பெற்றோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் கடினமாக உழைத்தபோதிலும் அவர்களிடம் பணம் இருக்கவில்லை. என் தந்தை இறந்தபோது, என் தாயார், தன்னை வாழ்நாள் முழுதும் நேசித்த ஒருவரின் அன்பை மட்டும் இழக்கவில்லை. அவரிடம் பணமும் இருக்கவில்லை. அவருக்கென்று தனியான வருமானமும் இல்லை. என் தந்தை, **இரகசியம்**

திரைப்படம் வெற்றி அடைவதற்கு முன்பே இறந்துவிட்டதால், என் கனவு நனவானதை அவர் பார்க்கவே இல்லை. என் தாயாருக்கு அந்த வாய்ப்புக் கிட்டியது. அவர் தன் வாழ்நாள் முழுதும் கைக்கும் வாய்க்கும் போராட்டமான ஒரு வாழ்க்கையை நடத்தி வந்தார். **இரகசியம்** திரைப்படத்தின் வெற்றி அனைத்தையும் மாற்றியது.

ஒரு குறிப்பிட்ட நாளன்று என் தாயார் என்னைத் தொலைபேசியில் அழைத்துப் பேசியபோது, அவர் அழுது கொண்டிருந்தார். அன்று அவர் ஒரு கடைக்குச் சென்று, தனக்கென்று பல ஆடைகளை வாங்கியிருந்தார். அவர் தன்வாழ்வில் முதன்முறையாக, விலை என்னவென்று கேட்காமல் ஆடைகளை வாங்கியிருந்ததுதான் அவருடைய ஆனந்தக் கண்ணீருக்குக் காரணம்.

உங்கள் வளர்ச்சிக்கும் நலனுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பெற்றோர் உங்களுக்கு வாய்த்திருந்தால், அந்தக் குறிப்பிட்ட நாளன்று நான் எப்படி உணர்ந்திருப்பேன் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். நான் என் தாயாருக்குக் கொடுக்கும் எதுவும், என் வாழ்வில் என் தாயார் எனக்குக் கொடுத்திருந்தவற்றுக்கு ஒருபோதும் ஈடாகாது.

## பீட்டர் ஃபோயோ



"நீங்கள் இன்னும் ஏன் வேலை பார்க்கிறீர்கள்?" என்று பலர் என்னிடம் கேட்கிறார்கள். அதற்கு நான், "ஏனெனில், நான் பிறருடைய வாழ்வில் ஒரு நேர்மறையான தாக்கத்தையும் வித்தியாசத்தையும் ஏற்படுத்திக்

கொண்டிருக்கிறேன். நான் இவ்வுலகில் இருக்கும்வரை அதைத் தொடர்ந்து செய்ய விரும்புகிறேன்," என்று பதிலளிக்கிறேன்.

## ஆனந்தத்திற்காக மட்டும் வேலை செய்வது

உங்கள் கனவு என்ன என்பதைக் கண்டுபிடித்து அதை வாழ்ந்து வருவதைக் காட்டிலும் மேலான உணர்வு வேறு எதுவும் இருக்க முடியாது. அதற்காகக் காலையிலேயே துள்ளிக் குதித்து எழுந்திருப்பது, அது தரும் ஆனந்தத்திற்காக மட்டுமே வேலை செய்வது, திங்கட்கிழமை காலையில் பரவசமாக உணர்வது, வேலையிலிருந்து ஒரு நீண்ட விடுமுறை எடுப்பது எட்டிக்காயாய்க் கசக்கும் அளவுக்கு உங்களுக்கு உங்கள் வேலையில் ஈடுபாடு இருப்பது — இதுதான் வாழ்க்கை!

### பீட்டர் பர்வாஷ்



1970களின் இறுதியிலும், 1980களின் துவக்கத்திலும், நான் ஹவாயில் வசித்து வந்தேன். அதிகாலை 6 மணிக்கு நான் வீட்டிலிருந்து புறப்பட்டிருப்பேன். 6.30 மணிக்கு டென்னிஸ் பயிற்சி இருக்கும். நான் என்னைச் சுற்றிலும் பார்த்து, "பரிதாபத்திற்குரிய இந்த மக்கள் இந்த நேரத்தில் வேலைக்குப் போயே ஆக வேண்டிய நிலையில்

இருக்கிறார்கள்," என்று நினைத்துக் கொள்வேன். நான் என் வாழ்நாளில் ஒரு முறைகூட வேலைக்குப் போனதாகவோ அல்லது வேலை எதுவும் செய்ததாகவோ நினைத்ததே இல்லை.

**ஜான் பால் டிஜோரியா**



நான் செய்து கொண்டிருப்பதை நான் மிகவும் நேசிக்கிறேன். நான் என் அலுவலகத்திற்குப் போவதற்கு எப்போதும் ஆவலோடு இருப்பேன். என்னுடன் இணைந்து பணியாற்றும் மக்களைச் சந்திப்பதற்கு நான் துடித்துக் கொண்டிருப்பேன். இது நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு வாழ்க்கை. இது பிரமாதமானதும்கூட.

**பீட் கேரல்**



நான் இப்போது செய்து கொண்டிப்பதைச் செய்வதற்கு எனக்கு ஊதியம் கொடுக்கப்பட்டாலும் சரி, கொடுக்கப்படாவிட்டாலும் சரி, அதைச் செய்யத்தான் நான் விரும்புவேன். எங்கள் அணியில் உள்ள வீரர்களில் பெரும்பாலானோரும் இதையேதான் கூறுகின்றனர் என்பது சுவாரசியமானது. நாங்கள் தொழில்முறை ஆட்டக்காரர்கள் என்பதும் நாங்கள் செய்து கொண்டிருக்கும் விஷயங்களுக்காக எங்களுக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது என்பதும் அற்புதமானது. எப்படியிருந்தாலும் நாங்கள் அதைத்தான் செய்திருப்போம். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ அது குறித்து இவ்வாறு உணர்வதற்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



பலர், "என்னிடம் மட்டும் நிறையப் பணம் இருந்தால், நான் என் வியாபாரத்தில் வெற்றிகரமாக விளங்கினால், முப்பது வயதில் நான் ஓய்வு பெற்றுவிடுவேன்," என்று கூறுகின்றனர். ஆனால் அது அபூர்வமாகவே நிகழ்கிறது. ஏனெனில்,

அற்புதமான ஒன்றை உருவாக்கத் தேவையான முன்னோக்கும், பெரிய கனவும், செயல்வீரியமும் கொண்டிருக்கும் மனிதர்கள், சாய்வு நாற்காலியில் கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆசுவாசமாக உட்கார விரும்பும் மனிதர்களாக இருப்பதில்லை.

**இரகசியம்** திரைப்படத்தை நான் தங்களுக்கு விற்பதற்காக எனக்கு ஏராளமான பணத்தைக் கொடுக்கப் பலர் தயாராக இருந்தனர். அச்சமயத்தில் நான் பெரும் கடனில் மூழ்கியிருந்ததோடு, அத்திரைப்படத்தை உலகளாவிய அளவில் வெளியிடுவதற்கான வழியையும் அறிந்திருக்கவில்லை. ஆனால் என் கனவை விற்க எண்ணுவதை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. என் பேரானந்தத்தையும் நான் உயிர் வாழ்வதற்கான காரணத்தையும் விற்க முயற்சிப்பதைப் போன்றது அது. பணத்தால் அந்த மகிழ்ச்சியை ஒருபோதும் வாங்க முடியாது.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



மிக மிக அதிகமான விலைக்கு — நூற்றுக்கணக்கான லட்சம் டாலர்களுக்கு — என் வியாபாரத்தை விற்க எனக்கு வாய்ப்புகள் வந்தன. ஆனால் ஓர் உல்லாசப் படகில் ஏறி அந்திச் சூரியனை நோக்கிப் பயணம் மேற்கொண்டு, அப்படகின் மேற்தளத்தில் உட்கார்ந்து

மெதுவாக மதுவை உறிஞ்சிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. நான் செய்து கொண்டிருப்பதை நான் வெகுவாக நேசிக்கிறேன். நான் தொடர்ந்து விளையாட்டுக்களை உருவாக்கவும் அசாதாரணமான மக்களுடன் வேலை செய்யவும் விரும்புகிறேன். அதுதான் ஒவ்வொரு நாள் காலையிலும் படுக்கையிலிருந்து என்னைத் துள்ளியெழ வைக்கிறது.

ஒரு கனவு நனவாகும்போது கிடைக்கும் வெகுமதிகளை அனுபவிப்பது அற்புதமானது. தங்களுடைய கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒவ்வொரு மனிதரும் அப்படிப்பட்ட வெகுமதிகள் ஒவ்வொன்றையும் பெற முழுக்க முழுக்கத் தகுதியானவர்கள்தான். நீங்கள் நினைக்கும் எதையும் சாதிக்கத் தேவையான அனைத்துத் திறமைகளும் பண்புநலன்களும் உங்களிடம் இருக்கின்றன என்பதை இப்போது நீங்கள் அறிந்திருப்பதால், நீங்கள் தொடர்ந்து உங்களுடைய கனவைப் பெரிதாக்கவும் வெற்றியை விரிவாக்கவும் தேவையான உற்சாகத்தையும் பரவசத்தையும் நீங்கள் உணர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இது உங்கள் கதையின் முடிவு அல்ல. இது இப்பயணத்தின் முடிவும் அல்ல. கதாநாயகனின் பயணத்தை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்கு நீங்கள் மேற்கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான நடவடிக்கையும் உள்ளது — இந்த இறுதி நடவடிக்கைதான் ஓர் எளிய மனிதனை ஒரு கதாநாயகனாக மாற்றுகிறது.


A LIFE WORTH LIVING

# வாழத் தகுதியான ஒரு வாழ்க்கை

**பீட்டர் பர்வாஷ்**



நம் உடலைத் திருப்திப்படுத்துவதற்கு ஓர் எல்லை உண்டு.ஒரு நேரத்தில் ஓரளவுக்கு மேல் நம்மால் சாப்பிட முடியாது. ஓரளவுக்கு மேல் நம்மால் குடிக்க முடியாது. ஆனால் அடுத்தவர்களுக்குச் சேவை செய்வதற்கு நமக்கு எல்லையே கிடையாது. பிறருக்கு உதவுகின்ற மக்கள்தான் உலகிலேயே மிக அதிக மகிழ்ச்சி கொண்டவர்களாக இருக்கின்றனர்.

உங்கள் கதாநாயகனின் பயணத்தில் உங்களுக்குப் பிரம்மாண்டமான ஒன்று நிகழ்கிறது. உங்களிடம் ஒரு பரிபூரண மாற்றம் ஏற்படுகிறது. அந்த மாற்றம் உங்கள் பயணத்தில் நீங்கள் இன்னுமோர் அடியெடுத்து வைக்க உங்களை உந்தித் தள்ளுகிறது. அதுதான் இறுதி அடி.அந்த இறுதி அடியை எடுத்து வைப்பதன் மூலம் நீங்கள் ஓர் உண்மையான கதாநாயகனாக ஆகிவிடுகிறீர்கள். அத்துடன் கதாநாயகனின் பயணம் இனிதே நிறைவடைகிறது.

உங்கள் கனவை நனவாக்க உங்களுக்குள் துடித்தெழுந்த ஆழ்விருப்பக் கனல், கருணை என்னும் சுடராக உருமாறுகிறது. வேறு விதமாகக் கூறினால், நீங்கள் ஒரு முழுச் சுற்றைச் சுற்றி முடித்துவிட்டு, மீண்டும் வீடு திரும்புகிறீர்கள். ஒரு காலத்தில் நீங்கள் எப்படி இருந்தீர்களோ, அதே அனுகூலமற்ற நிலையில் இருக்கும் மற்றவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய விரும்புகிறீர்கள். அவர்களுடைய துயரத்தை நீங்கள் அறிவீர்கள். அவர்களுடைய நம்பிக்கையின்மையை நீங்கள் அறிவீர்கள். ஏனெனில் நீங்கள் அதை அனுபவித்திருக்கிறீர்கள். உங்கள் பயணத்தில் நீங்கள் சேகரித்து வைத்துள்ள அனைத்தையும் கொண்டு, உங்களால் முடிந்த விதத்தில், உங்களால் இயன்ற அளவுக்கு ஏராளமான பேருக்கு உதவுவதற்கும் உத்வேகம் அளிப்பதற்கும் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு உங்களுக்கு ஒரு தெய்வீக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மாஸ்டின் கிப்



ஒரு கதாநாயகன் இரண்டு இடங்களில் தடுமாறுகிறான். முதலில், சாகசத்திற்கான அழைப்பு வரும்போது அவன் தடுமாறுகிறான். அந்த அழைப்பை மறுக்கும் ஒரு கட்டத்தை ஒவ்வொரு கதாநாயகனும் எதிர்கொள்கிறான். அது எல்லோரும் அறிந்ததுதான். ஆனால் அவன் தன் பரிசை வென்று, அது கொடுக்கும் ஆனந்ததையும் மகிழ்ச்சியையும் விட்டு வெளிவர மனமின்றி, திரும்பி வருவதற்குத் தனக்கு விடுக்கப்படும் அழைப்பை அவன்

ஏற்க மறுப்பது அவ்வளவாக யாருக்கும் தெரியாத ஒரு விஷயமாகும். ஆனால் உங்களுக்கு வெகுமதியாகக் கிடைத்தக் காயகல்பத்தை எடுத்துக் கொண்டு நீங்கள் உங்கள் தாயகம் திரும்பி அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாதவரை உங்கள் பயணம் நிறைவடையாது. அது ஒரு சுயநலமான பயணமாக இல்லாதபோதுதான் ஒரு கதாநாயகன் உண்மையிலேயே ஒரு கதாநாயகனாக ஆகிறான். தன் வாழ்க்கையைத் தன்னைவிட அதிக பிரம்மாண்டமான ஒன்றாக ஆக்கிக் கொள்ளும் ஒருவன்தான் கதாநாயகன்.

"நம்மைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பதை நாம் நிறுத்தும்போது, நம்மை மட்டுமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை நாம் நிறுத்தும்போது, நாம் உண்மையிலேயே ஒரு கதாநாயகனின் அகவிழிப்புணர்வு நிலையை அகவயப்படுத்திக் கொள்கிறோம்."

**ஜோசப் கேம்பைல்**

தொன்மவியலாளர்

நீங்கள் அனைத்து வெற்றிகளையும் அனைத்து வெகுமதிகளையும் அடைந்துள்ள நிலையில், உங்களைவிடப் பெரியதொரு முன்னோக்கு உங்கள் இதயத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்போதுதான் உங்களுக்குள் இருக்கும் கதாநாயகன் வெளிப்படுகிறான். "வாழ்வின் மாயாஜாலமான காயகல்பத்தை" — அதாவது, நீங்கள் உங்கள் பயணத்தில் கற்றுக் கொண்டவற்றை — எண்ணற்றோரின் வாழ்வில் உங்களால் முடிந்த அளவு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பிறருடன் பகிர்ந்து கொள்ள நீங்கள் கட்டாயப்படுத்தப்படுவீர்கள்.

**பீட்டர் பர்வாஷ்**



உங்கள் வாழ்வில் நீங்கள் அடையக்கூடிய அதிகபட்ச உயர்ந்த நிலை ஒரு சேவகனின் நிலைதான் என்பதைப் புரிந்து கொள்ளும் நிலையை எட்டும்போதுதான் நீங்கள் பக்குவமடைந்துள்ளீர்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள் என்று லாரன்ஸ் ராக்கஃபெல்லர் கூறியுள்ளார். அது குறித்துச் சௌகரியமாக உணர்பவர்களால் மட்டுமே வெற்றிகரமான வாழ்க்கையை நடத்த முடியும். எல்லோருக்கும் சேவகனாக இருக்க முடிவதற்கு அடிப்படை, மிக மிக அடக்கமாக இருப்பதுதான். அதுதான் உங்கள் மணிமகுடம். அதுதான் உங்களுடைய இறுதிச் சாதனை. இதுதான் இருப்பதிலேயே மிக மிக முக்கியமான படிப்பினையாகும்.

**லிஸ் முர்ரே**



இன்னொரு மனிதனின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நான் என் வாழ்க்கையைப் பயன்படுத்தும்போதுதான் நான் உயிர்த்துடிப்புடன் இருக்கிறேன்.

**ஜி. எம். ராவ்**



என்னிடம் இன்று இருக்கும் அனைத்தையும் எனக்கு இச்சமுதாயம்தான் வழங்கியது. என் நன்றியைத் திருப்பிச் செலுத்துவதும் சமூகப் பொறுப்பை நடைமுறைப்படுத்துவதும் என் கடமை என்று நான் உணர்கிறேன்.

கதாநாயகனின் பயணத்தை நீங்கள் நிறைவு செய்திருக்கும்போது, உங்களுக்கு உதவு செய்த மக்களுடைய ஆதரவு இல்லாமல் உங்களால் உங்கள் கனவை அடைந்திருக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் பெற்றுள்ள அனைத்திற்காகவும் உங்களிடம் நிரம்பி வழியும் நன்றியுணர்வும், இன்னும் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவ வேண்டும் என்று உங்களிடம் பொங்கி வழியும் கருணையும், அடுத்தவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற தணியாத தாகத்தை உங்களிடம் ஏற்படுத்துவதை, நீங்கள் நினைத்தாலும் உங்களால் தடுக்க முடியாது. உங்களிடம் பொங்கி வழியும் இந்தக் கருணைத் தாகம், நீங்கள்

என்ன செய்து கொண்டிருந்தாலும், நீங்கள் எவ்வளவு அதிகம் கொடுத்திருந்தாலும், மேலும் மேலும் கொடுக்க வேண்டும் என்று உங்களைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

**பீட்டர் பர்வாஷ்**



சமுதாயத்திற்குப் பங்களிக்க வேண்டும், சொல்லிக் கொள்ளும்படியாக எதையாவது சாதிக்க வேண்டும் ஆகியவை எனக்கு எவ்வளவு முக்கியம்? அதுதான் என் வாழ்விற்கான அர்த்தம். அதற்காகத்தான் நான் காலையில் கண் விழிக்கிறேன். அதுதான் இரவில் என் தலையணையில் நான் என் தலையைச் சாய்த்ததும் ஆத்ம திருப்தியான உணர்வை எனக்கு அளிக்கிறது.

**மைக்கேல் ஆக்டன் ஸ்மித்**



உங்களிடம் ஏராளமான பணம் இருந்து, அது வெறுமனே உங்கள் வங்கியில் தூங்கிக் கொண்டிருந்தால், அது அற்புதமான சாத்தியக்கூறுகளை வீணடிப்பதாக ஆகிவிடும். எதையாவது செய்வதற்கு அதை நீங்கள் பயன்படுத்த வேண்டும். தங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வதற்கும் பிறருக்கு உதவியும் ஆதரவும் அளிப்பது நல்லவிதமான உணர்வை ஏற்படுத்துகிறது.

**பீட்டர் ஃபோயோ**



நான் என் அலுவலகத்தில் உட்கார்ந்து, என் குழுவில் உள்ள ஒருவரைப் பார்த்துக் கொண்டும், அவருடைய குழந்தை அங்கு தாழ்வாரத்தில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டும் இருப்பதைவிட அக்கணத்தில் அதிகத் திருப்தியைக் கொடுப்பது வேறு எதுவும் இருக்க முடியாது. அக்குழந்தை நல்ல ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதைப் பார்ப்பதும், அக்குழந்தை ஒரு நல்ல பள்ளிக்குச் சென்று

கொண்டிருப்பதைப் பார்ப்பதும் . . நீங்கள் ஒரு காலத்தில் கொண்டிருந்த ஏதோ ஒரு யோசனையின் காரணமாக நீங்கள் ஒரு நபரின் வாழ்க்கையில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவதும் மட்டற்றத் திருப்தியைக் கொடுக்கிறது.

**பால் ஆர்.ஃபாலியா**



என் குழந்தைகள் ஓர் ஆடம்பரமான மாளிகையில் வாழ்வதற்காக நான் என் வாழ்க்கை முழுவதும் ராப்பகலாக உழைத்துக் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்குப் போதுமான அளவு கிடைக்கும். அவ்வளவுதான். மற்ற அனைத்தும் தர்ம காரியங்களுக்குத்தான் செல்லும். நான் இறப்பதற்கு முன்பு அனைத்தையும் பிறருக்குக் கொடுத்துவிடப் போகிறேன்.

**ஜி. எம். ராவ்**



இச்சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்குப் பிரபஞ்சம் எனக்கு ஒரு வாய்ப்பை அளித்துள்ளதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். என்னுடைய நிறுவனத்தில் உள்ள என் பங்கு முழுவதையும் நான் நடத்தி வரும் அறக்கட்டளைக்கு நான் எழுதி வைத்துள்ளேன்.

கதாநாயகனின் பயணத்தில் உள்ள இந்தக் கடைசி அடி, ஓர் அறக்கட்டளைக்கு ஒரு காசோலையை எழுதிக் கொடுப்பதைப் பற்றியது அல்ல. உங்கள் இதயத்தோடு ஒத்திசைந்து போகின்ற ஒரு விஷயத்திற்கு உங்களுடைய நேரம், ஆற்றல், ஆழ்விருப்பம் ஆகியவற்றை அர்ப்பணிப்பதற்கான வழியைக் கண்டுபிடிப்பதைப் பற்றியதுதான் அது. நீங்கள் முன்பு ஒரு காலத்தில் இருந்த அனுகூலமற்ற நிலையில் இப்போது இருக்கின்ற மக்களையோ அல்லது நீங்கள் சாதித்த விஷயங்களைச் சாதிக்கத் தேவையான வளவசதிகள் இல்லாதவர்களையோ கண்டுபிடிப்பதைப் பற்றியது அது. நீங்கள் இப்போது வசப்படுத்தியுள்ள திறமைகள் மற்றும் வளங்களைக் கொண்டு, உங்களால் முடிந்த விதத்தில் பிறருடைய வாழ்வில் ஒரு நேர்மறையான தாக்கத்தை எற்படுத்தி, நீங்கள் சாதித்ததுபோல அவர்களும் தங்களுடைய கனவுகளைச் சாதிக்கத் தேவையான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்க நீங்கள் புறப்பட்டிருக்கிறீர்கள்.

**அனஸ்தேசியா சோரே**



ஓப்ரா வின்ஃப்ரே தென்னாப்பிரிக்காவில் கட்டியிருந்த பெண்கள் பள்ளியின் திறப்பு விழாவிற்கு நானும் அவருடன் சென்றிருந்தேன். ஓப்ரா அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்து, அந்த அளவுப் பரிபூரண மாற்றமடைந்து நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவரிடம் குடிகொண்டிருந்த ஆற்றல் நம்ப முடியாதவாறு இருந்தது. ஏனெனில் அவர் அந்தப் பெண்குழந்தைகளின் வாழ்வில் நேர்மறையானதொரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். சமுதாயத்திற்குத் திருப்பிக் கொடுப்பதுதான் உங்கள் வாழ்வில் உங்களுக்குப் பெரும் திருப்தியை அளிக்கும் விஷயங்களில் தலையாயதாக விளங்கும். திருப்பிக் கொடுப்பதுதான் எல்லாவற்றையும்விட மிகச் சிறந்தது.

மக்களுக்கு உதவி செய்வதற்கான உச்சகட்ட வழி, வெறுமனே அவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பது மட்டுமல்ல என்பது வெற்றியாளர்களுக்கு நன்றாகவே தெரியும். தங்களுடைய பயணத்தை முடித்துள்ளவர்கள், ஒருவர் தன் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளத் தேவையான சந்தர்ப்பங்களை அவருக்கு வழங்கத் தாங்கள் அளிக்கும் பணம் உதவுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்வர்.

**ஜான் பால் டிஜோரியா**



ஓர் ஒட்டுமொத்த நாட்டையும் எடுத்துக்கொண்டு சூழலியலின் அடிப்படையில் அது வளர்ச்சியும் செழிப்பும் அடைய உதவி செய்ய வேண்டும் என்பது இப்போது என்னுடைய மாபெரும் கனவாக உள்ளது.

ஒன்று, சுத்தமான குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளை மக்களுக்குக்கு நிறைவேற்றிக் கொடுக்க அவர்கள் தங்கள் பணத்தைக் கொடுக்கின்றனர். அல்லது ஒரு திருப்திகரமான வாழ்க்கையை வாழத் தேவையான வழிகளையும் வாய்ப்புகளையும் மக்களுக்கு வழங்குவதற்காக அவர்கள் பண உதவி செய்கின்றனர். வெறுமனே மீனை மட்டும் கொடுக்காமல், மக்கள் தாங்களாகவே மீன்களைப் பிடித்துக் கொள்வதற்குத் தேவையான திறமைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற முதுமொழியைப் போன்றது அது. உங்களுடைய பணம், நேரம், அல்லது நீங்கள் கொடுக்க விரும்பும் வேறு எதையும் நீங்கள் எங்கே கொடுக்க வேண்டும் என்பதற்கு அது உங்களுக்கு வழிகாட்டும்.

**பீட் கேரல்**



லட்சக்கணக்கான வழிகளில் நீங்கள் பிறருக்கு உதவலாம். என்னால் அவர்கள் அனைவருக்கும் உதவ முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நான் நினைத்துக் கொள்வேன். நாங்கள் இருக்கும் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் உள்ள 'எ பெட்டர் எல்ஏ' என்ற அமைப்பு, நாங்கள் எங்கே இருந்து வந்தோமோ அதை நினைவுபடுத்தும் அமைப்பாகும். நாங்கள் வேலை செய்த பகுதிகளிலெல்லாம் அது இருந்தது. நாங்கள் தனிப்பட்ட முறையில் ஒரு நேரத்தில் ஒருவர் என்ற முறையில் உதவுகின்றோம். வாழ்வில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்கு அவர்களுக்கு உதவ நாங்கள் முயற்சிக்கிறோம். தங்களுக்கென்று ஒரு முன்னோக்கை உருவாக்கிக் கொண்டால், தங்களுடைய தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம் என்ற புரிதலை மக்கள் வளர்த்துக் கொள்ளவும் நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம். அதிர்ஷ்டவசமாக, சில குடும்பங்களையும் சில சிறுவர் சிறுமியரையும் காப்பாற்றுவதில் நாங்கள் முக்கியப் பங்காற்றியுள்ளோம். அந்த அமைப்புடன் தொடர்பு கொண்டிருப்பது குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இன்னும் அதிகமாகச் செய்யவும் கொடுக்கவும் முடிந்தால் நன்றாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும், ஊக்குவிப்பு, உத்வேகம், நம்பிக்கை ஆகியவற்றைப் பிறருக்கு உங்களால் கொடுக்க முடியும். பெரும்பாலான சமயங்களில், அவை,

நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் பணம் அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதைவிட அதிகமானவற்றைப் பெற்றுக் கொடுக்கின்றன.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்



என்னால் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்க முடிகிறது என்பது இக்கணத்தில் நான் பெருமை கொண்டிருக்கும் ஒரு விஷயம். தொழில்முனைவு என்றால் என்ன என்பதுகூட அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்றாலும், அவர்களுடன் பேசுவதன் மூலம் அவர்கள் ஊக்குவிக்கப்படுவதால், அவர்களில் பலர் ஒரு நாள் பெரிய பெரிய வியாபாரங்களைத் துவக்குவர், மனநிறைவு தரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்துவர்.

என்னுடைய இரகசியம் நிறுவனம் லாபம் ஈட்டுவதற்கு முன்பிருந்தே, மக்களுக்கு அதிகாரம் அளிக்கின்ற, அவர்கள் மனநிறைவுடன்கூடிய வாழ்வை வாழ உதவுகின்ற, உலகெங்கிலும் உள்ள லாப நோக்கற்ற அமைப்புகள் பலவற்றுக்குத் தன் வருவாயில் ஒரு குறிப்பிடத்தக்கப் பகுதியை அளித்து வருகிறது.

## பீட்டர் பர்வாஷ்



சக்கர நாற்காலியில் இருந்து கொண்டே டென்னிஸ் விளையாடும் ஒரு திட்டத்தை நாங்கள் துவக்கினோம். அது இன்று உலகெங்கும் பரவியுள்ளது. கடந்த முப்பத்தெட்டு வருடங்களாக, சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே டென்னிஸ் விளையாடுபவர்களுக்கு உலகெங்கும் நாங்கள் இலவசமாகப் பயிற்சியளித்து வருகிறோம். இதன் மூலம் நாங்கள் எண்ணற்ற நபர்களுக்கு ஆனந்தத்தையும் பெரும் மகிழ்ச்சியையும் அளித்து வருகிறோம்.

நீங்கள் உங்களுடைய கதாநாயகனின் பயணத்தில் எங்கு இருந்தாலும் சரி அல்லது அப்பயணத்தில் இன்னும் குதிக்காமல் இருந்தாலும் சரி, உங்களால் இப்போது கொடுக்க முடியும். வேறு ஒருவருக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகிறது என்றால், உங்களால் என்ன முடியுமோ அந்த உதவியைச் செய்யுங்கள். எப்போது உதவி செய்ய வேண்டும், எப்போது செய்யக்கூடாது என்பதை அறிந்து கொள்ள உதவும் ஒரு முக்கிய விதிமுறை உள்ளது. அந்த நபராலேயே எளிதாகச் செய்ய முடிகின்ற ஒன்றை நீங்கள் அவருக்காகச் செய்யக்கூடாது என்பதுதான் அது. அப்படி செய்வதன் மூலம் நீங்கள் அவருக்கு உதவப் போவதில்லை. மாறாக, அவர்களுடைய அதிகாரத்தை நீங்கள் தட்டிப் பறித்துவிடுகிறீர்கள். ஒருவருக்கு உதவுவதற்கும் அவருடைய அதிகாரத்தைத் தட்டிப் பறிப்பதற்கும் இடையே ஒரு மெல்லிய இடைவெளிதான் உள்ளது. அவர்களை ஊக்குவியுங்கள், அவர்களுக்கு உத்வேகம்

அளியுங்கள், அவர்கள் தங்கள் மீதே நம்பிக்கை கொள்ள உதவுங்கள், அவர்கள் தற்போது இருக்கும் சூழ்நிலையிலிருந்து தாங்களாகவே வெளியே வரத் தேவையான சந்தர்ப்பங்களை அவர்களுக்கு அளியுங்கள். நீங்கள் இப்படிச் செய்யும்போது, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறீர்கள். அதைவிட மேலான ஒன்றை ஒருவரால் மற்றொருவருக்குச் செய்ய முடியாது.

## மாஸ்டின் கிப்



நிலைமை எப்படி இருந்தாலும், கொடுப்பதற்கு இருக்கும் வாய்ப்புகளுக்குக் கணக்கு வழக்கே இல்லை. பொருளாதாரம் இப்போது இறங்குமுகத்தில் இருந்தாலும், கொடுப்பதற்கு எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் கொடுப்பதில் வல்லவராக ஆகும்போது, அபரிமிதம் உங்களை நோக்கிக் கரை புரண்டு ஓடி வரும்.

## லிஸ் முர்ரே



மக்கள் சில சமயங்களில், தாங்கள் ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்றோ அல்லது ஆயிரக்கணக்கானவர்கள் மத்தியில் பேச வேண்டும் என்றோ நினைப்பார்கள். அளவில் சிறியதாகவும் அர்த்தத்தில் பெரியதாகவும் இருக்கும் எண்ணற்ற வழிகளில் உங்களால் உதவ முடியும்.

**பீட்டர் ஃபோயோ**




நீங்கள் உங்களுடைய நேரத்தைக் கொடுக்கலாம் அல்லது உங்களுடைய வளவசதிகளைக் கொடுக்கலாம். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் மட்டுமே உங்களால் உங்கள் இருத்தலைச் செழுமைப்படுத்திக் கொள்ள முடியும்.

"நீங்கள் செய்து கொண்டிருக்கும் காரியம் ஒரே ஒரு நபருக்கு உதவியாக இருந்தால்கூட நீங்கள் அருமையானதொரு காரியத்தைச் செய்துள்ளீர்கள் என்று பொருள்."

**பிளேக் மைக்காஸ்கி**

டாம்ஸ் ஷூஸ் நிறுவனத்தின் நிறுவனர்

## ஜான் பால் டிஜோரியா



எங்களுக்கு ஆறு வயதாக இருந்தபோது, என் தாயார் என்னையும் என் சகோதரனையும் கிறிஸ்துமஸ் சமயத்தில் லாஸ் ஏஞ்சலீஸ் நகரின் மையப் பகுதிக்கு அழைத்துச் சென்றார், நாங்கள் அங்கு இருந்தபோது, எங்களிடம் ஆளுக்கு ஒரு பத்து சென்ட் நாணயத்தைக் கொடுத்து, கையில் ஒரு மணியை வைத்து ஆட்டிக் கொண்டிருந்த ஒருவனின் முன்னால் இருந்த அட்டைப் பெட்டிக்குள் அவற்றைப் போட்டுவிட்டு வருமாறு அவர் எங்களிடம் கூறினார். நாங்கள் அந்த நாணயங்களைப் போட்டுவிட்டு வந்து, எங்கள் தாயாரிடம், "அவனுக்கு எதற்காகப் பணம் கொடுக்கச் சொன்னீர்கள்?" என்று கேட்டோம். அந்தக் காலகட்டத்தில் எங்களிடம் மிகக் குறைவான பணமே இருந்தது. பத்து சென்ட் இருந்தால் மூன்று சாக்லேட்டுகள் வாங்கலாம். அதற்கு எங்கள் தாயார், "அவர் சால்வேஷன் ஆர்மி என்ற அமைப்பைச் சேர்ந்தவர். அந்த அமைப்பு, வீடுவாசல் இல்லாதவர்களைக் கவனித்துக் கொள்கிறது. இதை நீங்கள் இருவரும் நினைவில் வைத்துக்

கொள்ளுங்கள். நம்மிடம் எவ்வளவு இருந்தாலும், நம்மைவிடக் குறைவாக வைத்திருப்பவர்கள் நிறையப் பேர் எப்போதும் இருப்பார்கள். அதனால் உங்களால் முடிந்த அளவு அடுத்தவர்களுக்கு உதவி செய்யுங்கள்," என்று கூறினார். நம்மால் முடிந்ததை எப்போதும் அடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை அது என்னில் விதைத்தது. வெற்றியாளர்களாக ஆவதன் ஒரு பகுதி அது என்று நான் நினைக்கிறேன். பகிர்ந்து கொள்ளப்படாத வெற்றியானது தோல்விக்குச் சமானம்,

பெரியதோ அல்லது சிறியதோ, உங்களால் முடிந்ததை, உங்களால் முடிந்த வழியில் சமுதாயத்திற்கு நீங்கள் திருப்பிக் கொடுக்கும்போது, இன்னொரு மனிதனுக்கு நீங்கள் உதவியிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்வதால் எழும் மகிழ்ச்சி உங்களைவிட்டு ஒருபோதும் அகலாது. உங்களிடம் அப்போது எழும் மகிழ்ச்சியும் ஆனந்தமும், நீங்கள் உங்களுடைய கனவைப் பின்பற்றிச் செல்ல உங்களுக்கு வந்த அழைப்பு உண்மையிலேயே கதாநாயகனின் பயணத்தின் இந்த இறுதிக் கட்டத்தை நீங்கள் வந்தடைவதற்காக விடுக்கப்பட்ட அழைப்பாக இருக்குமோ என்று உங்களை வியக்க வைக்கும்.

**லீஸ் முர்ரே**



தங்கள் கனவு என்னவென்று கூறுமாறு நீங்கள் மக்களிடம் கேட்டால்,கடைசியில், "பிறருடைய வாழ்க்கை மேம்பாடு அடைய நான் உதவ விரும்புகிறேன்," என்ற ரீதியிலேயே இருக்கும். இது நமக்குள் ஊறிப் போயிருக்கும் ஓர் ஆசை. அது நம்முடன் ஒட்டிப் பிறந்தது என்றும், நம் பிறவி நோக்கத்தை நிறைவேற்றுவதன் ஒரு பகுதி என்றும் நான் நினைக்கிறேன்.

**லைர்டு ஹாமில்டன்**



அதிகமாகச் செய்து, இன்னும் பெரிய அளவில் மக்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவது எப்படி என்று நான் கண்டுபிடிக்க விரும்புகிறேன். நான் அத்திசையில் தொடர்ந்து பயணிக்கும்போது, மற்ற எல்லாவற்றையும்விட அதிகமாக, மக்களின் வாழ்க்கையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் என் இலக்காக இருந்தது என்று நான் உணர்ந்து கொள்ளக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.


THE HERO IN YOU

# உங்களுக்குள் இருக்கும் கதாநாயகன்

கதாநாயகனின் பயணத்தில் இறுதி அடியை எடுத்து வைத்தப் பிறகு, நீங்கள் பூரணத்துவம் பெற்ற ஒரு மனிதனாக, ஒரு புனிதமான மனிதனாக — ஓர் உண்மையான கதாநாயகனாக — மாறிவிடுகிறீர்கள். இப்பூவுலகில் நீங்கள் இந்தப் பயணத்தில் காலடி எடுத்து வைத்தபோது அதளபாதாளத்தில் இருந்த உங்களுடைய அகவிழிப்புணர்வு, இப்போது மிகப் பெரிய பரிணாம மாற்றத்தை அடைந்துள்ளது. முன்பு வாழ்வின் சூழல் குழப்பமானதாகவும் அர்த்தமற்றதாகவும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் வாழ்க்கை என்பது கனகச்சிதமான, எளிதாகப் புரிந்து கொள்ளத்தக்க வழிகளிலேயே இயங்குகிறது என்பதை இப்போது உங்களால் தெளிவாகப் பார்க்க முடியும். பிறர்மீதான உங்களுடைய இரக்க உணர்வின் மூலமாக உங்களுடைய மனம் பிரபஞ்ச மனத்துடன் ஐக்கியப்பட்டுவிடுகிறது. உங்கள் கருணை விரிவடையும்போது, குழப்பம், வேதனை, பயம் ஆகியவை மாயமாய் மறையத் துவங்குகின்றன. அந்த இடத்தை, புத்தகங்கள் படிப்பதன் மூலமாகவோ அல்லது ஏட்டுப்படிப்பின் மூலமாகவோ பெறப்படும் அறிவிற்கு அப்பாற்பட்டப் புரிதலும் ஞானமும் எடுத்துக் கொள்கின்றன. நீங்கள் யார் என்பதையும், இவ்வுலகில் உள்ள நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், பூரண அமைதி மற்றும் முழுமையான மகிழ்ச்சியால் நீங்கள் நிரப்பப்பட்டுள்ளீர்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூர்வீர்கள். இது உங்கள் கதை. இது உங்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கை

உங்களுக்குள் இருக்கும் திறமைகளை நான் அறிவேன். உங்களுக்குள் ஒளிந்திருக்கும் சக்தியையும் பண்புநலன்களையும் நான் அறிவேன். இது உங்கள் கதை. இதை உங்கள் ஒருவரால் மட்டுமே வாழ முடியும். இது உங்களுடைய கதாநாயகனின் பயணம். அதை உங்கள் ஒருவரால் மட்டுமே மேற்கொள்ள இயலும். உங்களிடம் இப்போது ஒரு திசைகாட்டியும் ஒரு

வரைபடமும் உள்ளன. உங்கள் பயணத்தின் ஒவ்வோர் அடியிலும் நாங்கள் எல்லோரும் உங்களுடன் இருக்கிறோம்.

### பீட்டர் ஃபோயோ



மனநிறைவை வழங்குகின்ற, மகிழ்ச்சி நிரம்பி வழிகின்ற ஒரு வாழ்க்கையை உங்களால் வாழ முடியும். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்களுடைய சூழ்நிலை என்னவாக இருந்தாலும் சரி, வெளியே பீறிட்டுக் கிளம்புவதற்காக அது உங்களுக்குள் காத்துக் கொண்டிருக்கிறது.

### லேன் பீச்லீ



எனக்கு உங்கள்மீது நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நீங்கள் உங்கள்மீது நம்பிக்கை வைக்காதவரை அதனால் எந்தப் பயனும் இல்லை. உங்கள்மீது நம்பிக்கை வையுங்கள். உங்கள் வாழ்க்கையில், எல்லாவற்றுக்கும் மேலாக, உங்களுக்கு எது வேண்டுமோ அதைச் சாதிக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள்.

**பீட் கேரல்**



எல்லோரிடமும் அந்தச் சக்தி இருக்கிறது. நம்மைச் சுற்றி அபிப்பிராயங்களுடன் இருக்கும் மனிதர்களிடம் அச்சக்தி சென்றுவிட நாம் அனுமதித்துவிடுகிறோம். அல்லது நாம் எங்கிருந்து வந்தோம் அல்லது நம்முடைய பின்புலம் என்ன என்பதை நாம் பார்க்கிறோம். நாம் விரும்புவதைப் படைக்கத் தேவையான சக்தி நமக்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுகிறோம். இதுதான் நான் எவரோருவருக்கும் தெரிவிக்கக்கூடிய முக்கியமான விஷயமாகும்.

**ஜி. எம். ராவ்**



உங்கள் கனவில் நம்பிக்கை வையுங்கள். அதைச் சிக்கென்று பிடித்துக் கொள்ளுங்கள். விடாமுயற்சியுடன் இருங்கள், நம்புங்கள், அது நடந்துவிடும். ஒவ்வொரு பயணமும் ஒரு கனவில்தான் துவங்குகிறது. உங்கள் கனவின்மீது நீங்கள் வைக்கும் பரிபூரண நம்பிக்கை, அக்கனவு நிறைவேற வழி வகுக்கும்.

**ஜான் பால் டிஜோரியா**



வெற்றியாளர்களுக்கும் தோல்வியாளர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவென்றால், வெற்றியாளர்கள் எதையும் எதிர்பார்ப்பதில்லை. நீங்கள் துணிந்து களத்தில் குதித்துச் செயலில் இறங்குங்கள். நீங்கள் வெற்றி பெறாவிட்டால், வெற்றி பெறும்வரை முயன்று கொண்டே

இருங்கள். எல்லோரிடமும் அந்தச் சக்தி இருக்கிறது — அது உங்களிடமும் உள்ளது.

**லிஸ் முர்ரே**



இறுதியில் இந்த வாழ்க்கைக் குறித்த எல்லாமே, அதை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதில் இருக்கிறது. நாம் யார், நாம் எதற்காக இங்கு வந்திருக்கிறோம் என்பது குறித்து நமக்கு நாமே கூறிக் கொள்ளும் கதைதான் நம்முடைய அனுபவத்தின் தரத்தைத் தீர்மானிக்கிறது. அக்கதையை எந்த நேரத்திலும் உங்களால் மாற்ற முடியும் என்பதுதான் இதிலுள்ள நல்ல விஷயம். ஏனெனில் உங்களுடைய வாழ்க்கைக் கதையின் ஒரே எழுத்தாளராக நீங்கள்தான் எப்போதும் இருப்பீர்கள்.

**பீட்டர் ஃபோயோ**



நீங்கள் ஒரு கதாநாயகன் என்பதை எல்லோரும் அறிய வேண்டுமானால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு உரக்கக் கத்த வேண்டும்? இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு கதாநாயகன்தான். உங்களுடைய சொந்த உலகில் நீங்கள் எப்போதுமே ஒரு கதாநாயகன்தான்.

நீங்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும், உங்கள் வாழ்க்கையில் எதையாவது சாதிக்க நீங்கள் ஒவ்வொரு முறை முயலும்போதும், உங்களுடைய ஒவ்வொரு கனவையும் நனவாக்க நீங்கள் முனையும்போதும், நீங்கள் நிலைபேறுடைய மகிழ்ச்சியைத் தேடுகிறீர்கள். அந்த மகிழ்ச்சியை, ஒவ்வொரு மலையின் ஏற்றத்திலும் ஒவ்வொரு பள்ளத்தாக்கின் இறக்கத்திலும் நீங்கள் தொடர்ந்து தேடிக் கொண்டே இருப்பீர்கள். கடைசியில், உங்களுடைய கதாநாயகனின் பயணத்தின் முடிவில், நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் அந்த நிலைபேறுடைய மகிழ்ச்சி, உண்மையில் நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்வதில் இருக்கிறது என்பதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள் .

இவ்வுலகில் உள்ள நம் ஒவ்வொருவரின் கதாநாயகனின் பயணத்தின் நிறைவு இதுதான். அக்கண்டுபிடிப்புக் குறித்த மாபெரும் பயணத்தை உங்கள் ஒருவரால்தான் மேற்கொள்ள முடியும். நீங்கள் உண்மையிலேயே யார் என்ற உண்மையை உங்கள் ஒருவரால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். உங்களினுள் உறைந்திருக்கும் கதாநாயகனை உங்கள் ஒருவரால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். அதுவரை, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நாளும், எல்லா யுகத்திலும் உங்களினுள் உறைந்திருக்கும் கதாநாயகன் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டே இருப்பான்.




## கதாநாயகனில் இடம்பெற்றுள்ளவர்கள்

இப்புத்தகத்திற்குக் கிடைக்கும் வருவாயில் இருந்து ஒரு பகுதியை, இரகசியம் அமைப்பு, கதாநாயகன் புத்தகத்திற்குப் பங்களித்தவர்களின் கீழ்க்கண்ட அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

## மைக்கேல் ஆக்டன் ஸ்மித்

[www.mindcandy.com](http://www.mindcandy.com)



மைக்கேல் ஆக்டன் ஸ்மித், மோஷி மான்ஸ்டர்ஸ் என்ற, உலகளாவிய சாதனை படைத்த, குழந்தைகளுக்கான இணையத்தள விளையாட்டுத் தளமான மைன்ட் கேன்டியின் முதன்மை நிர்வாகி மற்றும் கிரியேட்டிவ் இயக்குனர். மோஷி மான்ஸ்டர்ஸ் என்ற விளையாட்டு, இணையத்தளத்தில் பிற கணினி உபயோகிப்பாளர்களுடன் இணைந்து விளையாடும் ஒரு விளையாட்டு. அந்த நிறுவனம் இப்போது பொம்மைகள், வர்த்தகப் பரிமாற்ற அட்டைகள், பத்திரிகைகள், ஒரு புத்தகம், ஒரு திரைப்படம் ஆகியவற்றையும் தயாரித்து விற்பனை செய்கிறது. மைக்கேல் ஆக்டன் ஸ்மித், இந்த இணையத்தளத் தலைமுறையினருக்கு உலகிலேயே மிகப் பெரிய பொழுதுபோக்கு நிறுவனம் ஒன்றைக் கட்டியெழுப்பும் தன் கனவுடன் அதற்குத் தலைமையேற்று அதைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

## மோஷி அறக்கட்டளை

## www.thermoshifoundation.com

மைக்கேல் ஆக்டன் ஸ்மித், **மோஷி அறக்கட்டளை** அமைப்பை உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு உதவுவதற்காக மானியம் அளித்து வருகின்ற ஓர் அறக்கட்டளையாக நிறுவினார். குழந்தைகளின் மேற்படிப்பு,

ஆரோக்கியம், நலம் ஆகியவற்றுக்கும், அவர்கள் தங்கள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், சிறப்புத் தேவைகளும் உடற்குறைபாடுகளும் கொண்ட குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவ உதவிக்கும் இது மானியம் அளித்து வருகிறது.

## லேன் பீச்லீ

[www.laynebeachley.com](http://www.laynebeachley.com)



அலைச்சறுக்கு விளையாட்டின் வரலாற்றிலேயே மிகவும் வெற்றிகரமாக விளங்குகின்ற ஒரு வீராங்கனை லேன் பீச்லீ. அவர் உலகச் சாம்பியன் பட்டத்தை ஏழு முறை வென்று சாதனை படைத்துள்ளார். அவர் தற்போது இன்டர்நேஷனல் ஸர்ஃபிங் அசோசியேஷனின் உதவித் தலைவராக இருக்கிறார். ஸர்ஃபிங் ஆஸ்திரேலியா, ஸ்போர்ட்ஸ் ஆஸ்திரேலியா ஹால் ஆஃப் ஃபேம் ஆகிய அமைப்புகளின் நிர்வாகக் குழுவிலும் அவர் இடம்பெற்றுள்ளார். லேன் பீச்லி தினமும் அலைச்சறுக்கில் ஈடுபட்டு வருகிறார். எப்போதாவது மாஸ்டர்ஸ் நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார். அவர் ஓர் ஊக்குவிப்புப் பேச்சாளரும்கூட

## லேன் பீச்லீ எய்ம் ஃபார் த ஸ்டார்ஸ் அறக்கட்டளை

[www.aimforthestars.com.au](http://www.aimforthestars.com.au)

இளம் பெண்களும் யுவதிகளும் தங்களுடைய கனவுகளை நனவாக்கிக் கொள்ள அவர்களுக்கு உதவுவதற்காக **லேன் பீச்லீ எய்ம் ஃபார் த ஸ்டார்ஸ் அறக்கட்டளை** அமைப்பை லேன் பீச்லீ நிறுவினார். விளையாட்டு, கல்வி, சமுதாயம், மற்றும் கலாச்சாரத் துறைகளில் சாதிக்க விரும்புகின்ற அர்ப்பணிப்புமிக்க ஆஸ்திரேலியப் பெண்களுக்கு இந்த அறக்கட்டளை உதவுகிறது. மாபெரும் விஷயங்களைச் சாதிக்க விரும்புகின்ற பெண்களுக்கும் யுவதிகளுக்கும் உதவ வேண்டும் என்பதுதான் லேன் பீச்லீயின் நோக்கம்.

## பீட்டர் பர்வாஷ்

[www.peterburwash.com](http://www.peterburwash.com)



பீட்டர் பர்வாஷ் ஒரு முன்னாள் டென்னிஸ் ஆட்டக்காரர், மற்றும் பெரிதும் மதிக்கப்படுகின்ற டென்னிஸ் பயிற்றுவிப்பாளர். உலகின் மிகப் பெரிய டென்னிஸ் நிர்வாக நிறுவனமான பீட்டர் பர்வாஷ் இன்டர்நேஷனலின் நிறுவனர் மற்றும் தலைவர் அவர். உயர்தர டென்னிஸ் பயிற்சி, தனிப்பட்ட ஊக்குவிப்புப்

பயிற்சி போன்றவற்றை முப்பத்து இரண்டு நாடுகளில் அது அளித்து வருகிறது. சிறப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கும் புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். அவர் அதிகமாக விரும்பப்படுகின்ற ஓர் ஊக்குவிப்புப் பேச்சாளரும்கூட

## கேர் ஃபார் விருந்தாவன்

www.fflvrindavan.org

பீட்டர் பர்வாஷ் எப்போதும் உலகெங்கும் சுற்றிக் கொண்டிருப்பதால், **கேர் ஃபார் விருந்தாவன்** என்ற அமைப்புக் குறித்து அவருக்குத் தெரிய வந்தது. அவர் அதன் ஆதரவாளராக உள்ளார். அமெரிக்காவில் உள்ள இந்தத் தொண்டு நிறுவனம், இந்தியாவின் ஏழ்மை மிகுந்த பிருந்தாவன் பகுதியில் உள்ள மக்களுக்கு நன்கொடைகளைச் சேகரித்து வருகிறது. இம்மக்கள் சுயசார்புமிக்க ஒரு வருங்காலத்தை உருவாக்கிக் கொள்ள உதவுவதற்காக, உள்ளூர்ச் சமுதாயங்களுக்கு அடிப்படை உதவிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக, கண்டுகொள்ளாமல் விடப்படுகின்ற ஆயிரக்கணக்கான ஏழை இந்தியப் பெண் குழந்தைகளுக்கு கல்விக்கான நிதி உதவியை இந்தத் தொண்டு நிறுவனம் அளித்து வருகிறது.

## பீட் கேரல்

www.petecarroll.com



பீட் கேரல் அமெரிக்கக் கால்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளர். அவர் இரண்டு முறை தேசியச் சாம்பியன் போட்டிகளை வென்றுள்ளார். அதோடு, எண்ணற்ற முறை பிற போட்டிகளிலும் வெற்றிகளைக் குவித்துள்ளார். தற்போது அவர் சியாட்டில் ஸீஹாக்ஸ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராகவும் உதவித் தலைவராகவும் உள்ளார். அவர் சமீபத்தில் 'என்எஃப்சி கோச் ஆஃப் த இயர்' விருதைப் பெற்றுள்ளார்.

## எ பெட்டர் எல்ஏ மற்றும் எ பெட்டர் சியாட்டில்

## www.abetterla.org

## www.abetterseattle.com

பீட் கேரல் தன்னுடைய சமூகத் தொண்டுகளுக்குப் பெயர் பெற்றவர். குறிப்பாக, லாஸ் ஏஞ்சலீஸ் நகரிலும் சியாட்டில் நகரிலும் இளைஞர் வன்முறைகளையும் ரவுடிக் கும்பல் வன்முறைகளையும் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் அவர் பெரும் பங்காற்றியுள்ளார். **'எ பெட்டர் எல்ஏ,' மற்றும் 'எ பெட்டர் சியாட்டில்'** அமைப்புகளை அவர் நிறுவியுள்ளார். தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதும், பாதுகாப்பான வலுவான சமூகங்களை உருவாக்குவதும்தான் அவற்றின் நோக்கம். இவ்விரு அமைப்புகளும்,

உள்ளூர்ச் சமூகக் குழுக்களுடன் இணைந்து செயல்பட்டு, குடும்பங்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் முன்னேறுவதற்குத் தேவையான ஆதரவு, பயிற்சி மற்றும் பிற உதவிகளை அளித்து வருகிறது.

## ஜான் பால் டிஜோரியா

www.paulmitchell.com



ஜான் பால் டிஜோரியா ஒரு தொழிலதிபர். அவர் ஜான் பால் மிட்செல் சிஸ்டம்ஸ் நிறுவனத்தை நிறுவியவர்களில் ஒருவர். அது தலைமுடி பராமரிப்புத் தொடர்பான பொருட்களை விற்பனை செய்து வருவதுடன், அழகுப் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகிறது. ஜான் பால் டிஜோரியா அதன் முதன்மை நிர்வாகி. அந்த நிறுவனத்தின் வருடாந்திர விற்பனை 1 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது. 1989ல் அவர் பேட்ரன் ஸ்பிரிட்ஸ் நிறுவனத்தைத் துவக்கினார். சுற்றுச்சூழல் பிரச்சனைகள், சர்வதேச அரசியல் செயலாண்மை, சமூகத் தொண்டு ஆகியவற்றிலும் அவருக்கு ஈடுபாடு உண்டு.

## ஜேபீஸ் பீஸ், லவ் & ஹேப்பினஸ் அறக்கட்டளை

www.peacelovehappinessfoundation.org

தான் குழந்தையாக இருந்தபோது அனாதை விடுதிகளிலும், இளைஞனாக இருந்தபோது தெருவோரங்களிலும் வாழ்ந்து வந்ததால், ஜான் பால் டிஜோரியா, தன் வருவாயின் பெரும்பகுதியை **ஜேபிஸ் பீஸ், லவ் & ஹேப்பினஸ் அறக்கட்டளை** அமைப்பிற்கு அர்ப்பணித்துள்ளார். சுற்றுப்புறச்சூழல் பராமரிப்பு, சமூகப் பொறுப்பு, விலங்குகளின் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அந்த அமைப்பு ஆதரவு அளிக்கிறது. மக்கள் தங்கள் குடும்பத் தேவைகளுக்காகச் சம்பாதிக்கவும் தங்கள் சொந்த வியாபாரத்தைத் துவக்கவும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் விதத்தில், தோட்டக்கலை மற்றும் பயிரிடுதலை அவர்களுக்கு அந்நிறுவனம் கற்றுக் கொடுக்கிறது.

## பீட்டர் ஃபோயோ

[www.nextel.com.mx](http://www.nextel.com.mx)



பீட்டர் ஃபோயோ ஒரு நிர்வாகி மற்றும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்ப வல்லுனர். லத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த, புதுமைகளைப் படைக்கின்ற முதன்மை நிர்வாகியாக அவர் கருதப்படுகிறார். அவர் பல நிறுவனங்களின் நிர்வாகக் குழுக்களில் இடம்பெற்றுள்ளார். 17,000 ஊழியர்களைக் கொண்ட

நெக்ஸ்டெல் கம்யூனிகேஷன்ஸ் மெக்சிகோ நிறுவனத்தின் தலைவராக அவர் தொடர்ந்து நீடித்து வருகிறார்.

## நெக்ஸ்டெல் அறக்கட்டளை

## www.nextel.com.mx/nextelfundacion.html

நெக்ஸ்டெல் நிறுவனத்தின் முதன்மை நிர்வாகி என்ற முறையில், பீட்டர் ஃபோயோ, நிறுவனச் சமூகப் பொறுப்பு மற்றும் சமூகத் தொண்டு குறித்த ஓர் அற்புதமான கலாச்சாரத்தைத் தன் நிறுவனத்தில் உருவாக்கியுள்ளார். **நெக்ஸ்டெல் அறக்கட்டளை** சமூகத்தில் அதிகமான பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய நிலையில் உள்ள மக்களுக்குக் கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஆதரவு வழங்குகிறது. மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதன் மூலம் அவர்களை ஆதரிக்கிறது. இளைஞர்கள், சமூகத்தில் பின்தங்கி உள்ளவர்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கும் அது உதவி வருகிறது. அறிவியல் ஆய்வு மற்றும் உயர்கல்விக்கும் அது நிதியுதவி அளித்து வருகிறது.

## லைர்டு ஹாமில்டன்

## www.lairdhamilton.com



லைர்டு ஹாமில்டன் உலகப் பிரசித்தி பெற்ற அலைச்சறுக்கு வீரர், புதுமையாளர், அதிவேகப் படகு போன்றவற்றில் பின்னால் கட்டப்பட்டக் கயிறு மூலம் இழுத்துச் செல்லப்பட்டுப் பின் அதிலிருந்து விடுபட்டு அலைச்சறுக்கு விளையாடுபவர், மற்றும் நிமிர்ந்து நின்று கொண்டே சறுக்க உதவும் பலகைகளின்மீது நின்று அலைகளில் சறுக்குபவர். அவர் தன் நேரத்தை அலைச்சறுக்கில் ஈடுபடுவதிலும், அந்த விளையாட்டுத் தொடர்பான புதிய வடிவமைப்புகளில் ஈடுபடுவதிலும், தனக்குப் பிடித்த விஷயங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் செலவழித்து வருகிறார்.

## ரெயின்கேச்சர்

## www.raincatcher.org/laird

சமீபத்தில் லைர்டு ஹாமில்டனும் அவருடைய மனைவி காபிரியேல் ரீஸும் **ரெயின்கேச்சர்** என்ற லாப நோக்கற்ற அமைப்பின் நிர்வாகக் குழு இயக்குனர்களாக நியமிக்கப்பட்டனர். ரெயின்கேச்சர் அமைப்பானது உலகளாவிய நீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது. மழைநீர்ச் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம், அந்நிறுவனம், உலகெங்கிலும் 70,000க்கும் மேற்பட்ட மக்களுக்கு

உதவியுள்ளது. 2015க்குள் இன்னும் 1 கோடி மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அது செயல்பட்டு வருகிறது.

## மாஸ்டின் கிப்

www.thedailylove.com



மாஸ்டின் கிப் ஒரு தொழில்முனைவர், எழுத்தாளர், மற்றும் வலைப்பூப் பதிவர். ஊக்குவிப்புக் கருத்துக்களைச் சமூக இணையத்தளங்களின் மூலமாக அவர் பரப்பி வருகிறார். 'த டெய்லி லவ்' என்ற இணையத்தளம், தினசரி மின்னஞ்சல் சேவை, டுவிட்டர் சமூக இணையத்தளச் சேவை ஆகியவற்றை மாஸ்டின் கிப் நிறுவியுள்ளார். தினமும் 6,00,000 சந்தாதாரர்களுக்கு அவர் சேவை புரிந்து வருகிறார். அவரது எழுத்துக்களை த ஹஃபிங்டன் போஸ்ட் மறுபிரசுரம் செய்து வருகிறது. ஓப்ராஸ் லைஃப்கிளாஸ் என்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுள்ளார். அதோடு, ஓப்ரா வின்ஃப்ரேயின் 'சூப்பர் ஸோல் சன்டே' நிகழ்ச்சியில் அடுத்தத் தலைமுறை ஆன்மீகச் சிந்தனையாளராக அவர் பாராட்டப்பட்டார்.

## அந்தோனி ராபின்ஸ் அறக்கட்டளை

www.anthonyrobbinsfoundation.org

தன்னுடைய பரிபூரண மாற்றத்திற்கு ஊக்குவிப்புப் பேச்சாளரான அந்தோனி ராபின்ஸ்தான் காரணம் என்று மாஸ்டின் கிப் தெரிவிக்கிறார். அதற்குப் பிரதியுபகாரமாக, அந்தோனி **ராபின்ஸ் அறக்கட்டளை** அமைப்பிற்கு இவர் தன் ஆதரவை வழங்கி வருகிறார். லாப நோக்கற்ற இந்த அறக்கட்டளை, பெரும்பாலான சமயங்களில் சமுதாயத்தால் மறக்கப்பட்டுவிடுகின்ற ஜீவன்களுக்கு உதவியளித்து அவர்களுடைய வாழ்க்கையைச் செழுமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது: இளைஞர்கள், வயது முதிர்ந்தவர்கள், குடியிருக்க வீடுவாசல் அற்றவர்கள், சிறையில் வாடுகின்றனவர்கள் ஆகியோர்தான் அந்தப் பரிதாப ஜீவன்கள்.

## லிஸ் முர்ரே

www.homelesstoharvard.com



லிஸ் முர்ரே ஒரு நூலாசிரியர், எல்லோரும் பெரிதும் நாடுகின்ற ஓர் ஊக்குவிப்புப் பேச்சாளர். நடுத்தெருவில் வாழ்ந்த நிலையிலிருந்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்றது வரையிலான அவருடைய

நம்புதற்கரிய பயணம் அவரைப் பிரபலமாக்கியது. மிக்காயில் கோர்பசேவ், தலாய் லாமா, டோனி பிளேர் ஆகியோருடன் அவர் ஒன்றாக மேடையில் தோன்றியுள்ளார். வெள்ளை மாளிகையும் அவரைக் கௌரவித்துள்ளது. இளைஞர்களுக்கு உத்வேகமளித்து, அவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி, அவர்களை உத்வேகப்படுத்துவது தொடர்பாக அவர் மேற்கொண்டு வரும் அற்புதமான பணிக்காக ஓப்ரா வின்ஃபிரே அவரைப் பாராட்டியுள்ளார்.

## மொமென்டம் டீன்ஸ் ஃபார் லீடர்ஷிப்

## www.momentumteens.Org

பருவ வயதினருக்கான ஒரு நல்ல முன்மாதிரியாக விளங்கும் லிஸ் முர்ரே, இளைய சமுதாயத்தினரை ஊக்குவித்து, அவர்களுக்குத் தன்னம்பிக்கையளித்து, அவர்களுடைய தலைமைத்துவத் திறமைகளை வளர்த்தெடுப்பதை இலக்காகக் கொண்ட லாப நோக்கற்ற அமைப்பான **மொமென்டம் டீன்ஸ் ஃபார் லீடர்ஷிப்** அமைப்பிற்குப் பெருமையுடன் தன் ஆதரவை வழங்கி வருகிறார். இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் சமூகத்திற்கும் உலகிற்கும் உருப்படியான பங்களிப்புகளை அளிப்பவர்களாகவும் பொறுப்பானவர்களாகவும் உருவாக அவர்களுக்கு உதவுகின்ற விதத்தில், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலமாக அவர்களுக்குத் தேவையான கருவிகளையும் அனுபவங்களையும் வழங்குவதும் இந்த அமைப்பின் பணிகளில் ஒன்று.

## பால் ஆர்ஃபாலியா

## www.paulorfalea.com



பால் ஆர்ஃபாலியா, கிங்கோஸ் என்ற நிறுவனத்தை நிறுவியவர். அந்நிறுவனம், அலுவலகப் பொருட்கள் மற்றும் வியாபாரச் சேவைகள் வினியோகத்தில் உலகில் முன்னணியில் இருக்கும் ஒரு சங்கிலித்தொடர் நிறுவனம். கிங்கோளை விற்றுவிட்டு இப்போது ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியராக இருக்கும் பால் ஆர்ஃபாலியா, தன் அனுபவங்களையும் அறிவையும் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும், பல்வேறு சமூகத் தொண்டுகளைச் செய்வதிலும் தன் நேரத்தைப் பங்கிட்டுச் செலவழித்து வருகிறார்.

## ஆர்ஃபாலியா அறக்கட்டளை
## www.orfaleafoundation.org

பால் ஆர்ஃபாலியாவின் வழிகாட்டுதலின்கீழ், **ஆர்ஃபாலியா அறக்கட்டளை,** மக்கள் தங்களுடைய சொந்த வலிமையைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. குழந்தைப்பருவக் கல்விக்கு உதவி, ஊக்குவிக்கப்பட்டுள்ள சிறுவர் சிறுமியருக்கு உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்கு ஆதரவு, ஆயிரக்கணக்கில் மேற்படிப்பு உதவித் தொகை, சில குறிப்பிட்டக் கல்லூரிப் படிப்பிற்கான உதவித் தொகை ஆகியவை அந்த நிறுவனம் அளித்து வரும் உதவிகளில் அடங்கும். தனியொரு பெற்றோராகக்

குழந்தைகளை வளர்த்து வருபவர்களுக்கு உதவுவது, பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்க உதவுவது ஆகியவை பால் ஆர்ஃபாலியாவிற்குப் பிடித்த விஷயங்கள்.

## ஜி. எம். ராவ்

[www.gmrgroup.in](http://www.gmrgroup.in)



ஜி. எம். ராவ், ஜிஎம்ஆர் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர். ஆற்றல், கட்டுமானப் பணி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள மிகப் பெரிய ஒரு நிறுவனம் அது. அது பெங்களூருவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சமீபத்தில் அந்நிறுவனம், நகர்ப்புற வளர்ச்சியிலும், மின்நிலையங்கள், நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள் போன்ற தேசியச் சொத்துக்களை உருவாக்குவதிலும் பெரும் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளது.

## ஜிஎம்ஆர் வரலட்சுமி அறக்கட்டளை

[www.gmrgroup.in/foundation.html](http://www.gmrgroup.in/foundation.html)

ஜி. எம். ராவ், நிறுவனங்களின் சமூகப் பொறுப்பைப் பெரிதும் ஆதரிப்பவர். அவர் **ஜிஎம்ஆர் வரலட்சுமி அறக்கட்டளை** என்ற அமைப்பை நிறுவியுள்ளார். உள்ளூர்ச் சமூகங்களில் வறுமை ஒழிப்பு, அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றில் இந்த அறக்கட்டளை உதவி வருகிறது. எல்லோருக்கும் தரமான கல்வி வழங்கப்படவும் இந்த அறக்கட்டளை அரும்பாடுபட்டு வருகிறது. மருத்துவமனைகள், மருத்துவ மையங்கள், முதலுதவி வண்டிகள் ஆகியவற்றின் மூலமாக ஆரோக்கியப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சியிலும் அது இறங்கியுள்ளது. பயிற்சி நிலையங்கள், உத்வேகமிக்க இளைஞர்களுக்குத் தொழில்முனைவுத் திட்டங்களில் பயிற்சி ஆகியவற்றின் மூலம் சுய வேலைவாய்ப்பு வசதிகளை அது உருவாக்கி வருகிறது.

## அனஸ்தேசியா சோரே

www.anastasia.net



அனஸ்தேசியா சோரே, புருவங்களைச் சீராக்குவதில் ஒரு வல்லுனராகக் கருதப்படுகிறார். அதோடு, அழகுத் துறையில் பெரிதும் போற்றப்படும் ஒருவராகவும் அவர் திகழ்கிறார். அவருடைய தனித்துவமான புருவச் சீரமைப்பு

முறையினால் அவருக்குச் செல்வச் செழிப்பான, மிகப் பிரபலமான வாடிக்கையாளர்கள் கிடைத்தனர். அவர்கள் ஹாலிவுட்டில் மிகவும் பிரபலமாக இருப்பவர்கள். அவர் பெவர்லீ ஹில்ஸ் மற்றும் பிரென்ட்வுட் பகுதிகளில் தன்னுடைய அழகு நிலையங்களை நடத்தி வருகிறார். அதோடு, உலகெங்கும் உள்ள உயர்தரப் பல்பொருள் அங்காடிகளில், அவருக்குச் சொந்தமான, புருவங்களைச் சீராக்கும் கூடங்கள் இருக்கின்றன. புருவங்கள் மற்றும் பிற ஒப்பனைப் பொருட்களை அவர் சொந்தமாகத் தயாரித்தும் விற்பனை செய்து வருகிறார்.

## அனஸ்தேசியா பிரைட்டர் ஹொரைஸன் அறக்கட்டளை www.anastasiafoundation.org

அனாதை விடுதிகளில் வளர்ந்து வரும் குழந்தைகள், அவற்றிலிருந்து வெளியே வரும்போது, அழகு மற்றும் தோல் பராமரிப்புத் தொழிலில் ஈடுபட விரும்பினால், **அனஸ்தேசியா பிரைட்டர் ஹொரைஸன் அறக்கட்டளை** அமைப்பின் மூலமாக அவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அழகுப் பள்ளிகளில் கல்வி கற்றல், நிறுவனங்களில் நேரடிப் பயிற்சி, அழகு நிலையங்களில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றுக்கு நிதி உதவியையும் பிற ஆதரவுகளையும் இந்த அறக்கட்டளை வழங்கி வருகிறது. சுயசார்பு, வருங்காலத்திற்கான அடித்தளம் அமைத்தல் ஆகியவை இந்த அறக்கட்டளையின் நோக்கமாக இருந்து வருகின்றன.

## கதாநாயகனுக்குப் பங்களித்தவர்கள் எழுதி நூல்கள்

### லேன் பீச்லீ

புத்தகத்தின் பெயர்: Beneath the Waves
சுயநம்பிக்கையின் சக்திக்கு லேன் பீச்லீ அளிக்கும் நிரூபணம்தான் இந்நூல்.
பதிப்பாளர்: Random House Australia, 2009

### பீட்டர் பர்வாஷ்

புத்தகத்தின் பெயர்: Becoming the Master of Your D–A–S–H
பீட்டர் பர்வாஷின் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்ட உண்மைச் சம்பவங்களும் புரிதல்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. அதோடு, நம்முடைய வாழ்க்கைப் பயணத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்குகின்ற, ஞானமுதிர்ச்சி அடைந்துள்ள பன்னிரண்டு நபர்களின் அறிவார்ந்த அறிவுரைகளும் இதில் கொடுக்கப்பட்டுள்ளன.
பதிப்பாளர்: Torchlight Publishing, 2007

புத்தகத்தின் பெயர்: Dear Teenager
பருவ வயதினர் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஆரோக்கியமாகவும் முழுமையாகவும் வளர்வதற்குத் தேவையான விலைமதிப்பிட முடியாத வழிகாட்டுதலைப் பீட்டர் பர்வாஷ் இப்புத்தகத்தில் வழங்குகிறார்.
பதிப்பாளர்: Torchlight Publishing, 2008

### லைர்டு ஹாமில்டன்

புத்தகத்தின் பெயர்: Force of Nature: Mind, Body, Soul, And, of Course, Surfing
உலகிலேயே மிகச் சிறந்த அலைச்சறுக்கு வீரராக உருவெடுக்கத் தனக்கு உதவிய தனித்துவமான தத்துவங்களை லைர்டு ஹாமில்டன் இப்புத்தகத்தில் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

பதிப்பாளர்: Rodale Books, 2008

## மாஸ்டின் கிப்

புத்தகத்தின் பெயர்: Daily Love

பதிப்பாளர்: Hay House Publishing, 2014 ல் வெளிவரவுள்ளது

## லிஸ் முர்ரே

புத்தகத்தின் பெயர்: Breaking Night: A Memoir of Forgiveness, Survival, and My Journey from Homeless to Harvard

நடுத்தெருவில் வாழ்ந்து வந்த லிஸ் முர்ரே, ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்குப் படிக்கச் சென்ற உத்வேகமிக்கக் கதையை எடுத்துரைக்கும் நூல் இது.

பதிப்பாளர்: Hyperion, 2010

## பால் ஆர்ஃபாலியா

புத்தகத்தின் பெயர்: Copy This!: Lessons from a Hyperactive Dyslexic who Turned a Bright idea into One of America's Best Companies

சொற்பமாக எழுதப் படிக்கத் தெரிந்த, போராடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனாக இருந்த பால் ஆர்ஃபாலியா, கிங்கோஸ் நிறுவனத்தை உருவாக்கி, அதை 1.5 பில்லியன் கோடி டாலர்கள் வருவாய் ஈட்டுகின்ற ஒரு நிறுவனமாக மாற்றிய கதையை விளக்கும் புத்தகம் இது.

பதிப்பாளர்: Workman Publishing Co., Inc., New York

© The Orfalea Family Foundation 2005



[www.thesecret.com](http://www.thesecret.com)